இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)






தமிழ்நாடு மாநில 16வது மாநாடு

1997 டிசம்பர் 26 – 29
திருச்சி.






மாநிலக் குழுவின் அரசியல் ஸ்தாபன - வேலை அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)

தமிழ்நாடு மாநில 16வது மாநாடு

திருச்சி

டிசம்பர் 26 - 29, 1997

மாநிலக்குழுவின் அரசியல், ஸ்தாபன வேலை அறிக்கை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)
தமிழ்நாடு மாநில 16வது மாநாடு

மாநிலக்குழுவின் அரசியல், ஸ்தாபன வேலை அறிக்கை

அன்புள்ள தோழர்களே,

1995ம் ஆண்டு மார்ச் மாதம் கடலூரில் நடைபெற்ற கட்சியின் 15வது மாநில மாநாட்டிற்குப்பின் இப்பொழுது நடைபெறும் 16வது மாநில மாநாட்டில் பங்கேற்கும் பிரதிநிதிகளுக்கும், சிறப்பு அழைப் பாளர்களுக்கும் புரட்சிகர வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள் கிறோம். 34 மாவட்ட மாநாடுகளை நடத்தி முடித்து நாம் இந்த மாநில மாநாட்டில் சந்திக்கிறோம்.

சென்ற மாநில மாநாட்டிற்குப்பின் நடைபெற்ற அரசியல் இயக்கங்களையும், கட்சி ஸ்தாபன பணிகளையும், வர்க்க அமைப்பு களின் செயல்பாட்டையும் கட்சியின் மாநிலக்குழுவில் விவாதித்து இந்த நகல் அரசியல் - ஸ்தாபன அறிக்கையை உங்கள் முன்வைத் துள்ளோம். பிரதிநிதி தோழர்கள் இந்த நகல் அறிக்கையின் மீது ஆழ்ந்த விவாதத்தை நடத்தும்படியும், இந்த அறிக்கையை செழுமைப்படுத்தும் வகையில் சிறந்த ஆலோசனைகளை வழங்கும் படியும் கேட்டுக்கொள்கிறோம்.

1. இன்றைய சர்வதேச நிலைமை

1.1 கட்சியின் சென்ற மாநில மாநாட்டின்போது உலக அரங்கில் சோஷலிச சக்திகளுக்கு பின்னடைவு ஏற்பட்டிருந்ததை நாம் அறி வோம். ஆனால், கடந்த மூன்று ஆண்டுகளில் நிலைமைகளில் சற்று மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

1.2 சீனா, வியட்நாம், வடகொரியா, லாவோஸ், கியூபா ஆகிய சோஷ லிச நாடுகள் பல்வேறு சிரமங்களையும் சமாளித்துக்கொண்டு தங்கள் தங்கள் நாடுகளில் சோஷலிச சமுதாயத்தை கட்டி வளர்க்கும் நீண்டகாலப் பணியில் உறுதியுடன் ஈடுபட்டு வரு கின்றன. கம்போடிய நாட்டில், எதிர்ப்புரட்சி சக்திகளின் முயற் சிகள் முறியடிக்கப்பட்டுள்ளன.

1.3 புதிதாக விடுதலை அடைந்த நாடுகளின் பொருளாதாரத்தை தன் ஆதிக்கத்தில் கொண்டுவர உலக வங்கி, சர்வதேச நிதி நிறு

வனங்களின் மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்துவரும் முயற்சிகளுக்கு ஆசிய - ஆப்பிரிக்க - லத்தீன் அமெரிக்க நாடு களின் பல அரசுகள் மேலும் மேலும் அதிக எதிர்ப்பை தெரிவித்து வருகின்றன.

1.4 உலக முதலாளித்துவ அமைப்பினால், வளர்ச்சியடைந்த நாடு களின் பிரச்சனைகளைத் தீர்க்க முடியவில்லை. இந்நாடுகளின் தொழிலாளர்கள் வேலையின்மையையும், சமூக பாதுகாப்பு ஏற் பாடுகள் ரத்து செய்யப்படுவதையும் எதிர்த்து போராடி வரு கின்றனர். இத்தாலி, பிரான்ஸ் நாடுகளில் இந்தப் போராட்டங்கள் கடுமையாக நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

1.5 ஏகபோக முதலாளித்துவ நாடுகளுக்கிடையேயான முரண்பாடு களும் வளர்ந்து வருகின்றன. உலகச் சந்தையைப் பங்குபோட்டுக் கொள்வதில் அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கிடையில் கடும் போட்டி நடைபெற்று வருகிறது.

1.6 சோவியத் யூனியனில் சோஷலிசத்திற்கு ஏற்பட்ட பின்னடை வுக்குப் பிறகு ரஷ்யாவிலும், இதர முன்னாள் சோஷலிச நாடு களிலும் மீண்டும் கம்யூனிஸ்ட் மற்றும் இடதுசாரி கட்சிகள் பல்வேறு வடிவங்களில் பலம்பெற்று வருகின்றன.

17 நவீன உலக முதலாளித்துவ சமூகத்தின் இயல்பான நான்கு அடிப் படை முரண்பாடுகளும் குறிப்பாக ஏகாதிபத்தியத்திற்கும், புதிதாக விடுதலை அடைந்த நாடுகளுக்குமிடையில் உள்ள முரண்பாடும் செயல்பட்டு வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

1.8 இந்தியா - ரஷ்யா - சீனா ஆகிய நாடுகளுக்கிடையில் பல துறை களிலும் உறவுகள் பலமடைந்து வருவது ஒரு முக்கியமான அம்சமாகும்.

தேசிய நிலைமை

19 சண்டிகரில் நடைபெற்ற கட்சியின் 15வது அகில இந்திய மாநாட் டின் முடிவுகளை அமுல்படுத்தும் வகையில் மத்தியில் ஐக்கிய முன்னணி அரசு கடந்த 18 மாத காலமாக ஆட்சிபுரிந்தது. ஆனால், ஜெயின் கமிஷன் இடைக்கால அறிக்கையை, தன் கட்சியின் குறுகிய அரசியல் நோக்கங்களுக்குப் பயன்படுத்திட காங்கிரஸ் கட்சி முடிவெடுத்தது. அதன் மூலம் ஐக்கிய முன்னணி மந்திரி சபையில் இருந்து திமுக அமைச்சர்கள் நீக்கப்பட வேண்டு மென்றும், அவ்வாறு நீக்கப்படாவிட்டால் ஐக்கிய முன்னணி

அரசுக்குத், தான் கொடுத்து வந்த ஆதரவை திரும்பப் பெற்று விடுமென்றும் பிரகடனப்படுத்தியது.

1.10 திமுகவை ராஜீவ் படுகொலையுடன் இணைப்பது நியாயமற்றது என்று கூறி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், ஐக்கிய முன்னணியும், காங்கிரஸ் கட்சியின் கோரிக்கையை நிராகரித்தன. ஜெயின் கமிஷன் அறிக்கை மீது நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்துவதையும் காங்கிரஸ் கட்சி அனுமதிக்க மறுத்து பல நாட்கள் அமளி செய்தது.

1.11 ஐக்கிய முன்னணி தீர்மானமாக, காங்கிரஸ் கட்சியின் பயமுறுத்தலை ஏற்க மறுத்தது. காங்கிரஸ் கட்சி தன் ஆதரவை வாபஸ் வாங்கிக்கொள்வதாக குடியரசுத் தலைவரிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து ஐக்கிய முன்னணி மந்திரி சபை பதவியை ராஜினாமா செய்தது.

1.12 பாரதீய ஜனதா கட்சி மோசமான குதிரை வியாபாரத்தில் ஈடுபட்டது. ஆனால், வெற்றிபெற முடியவில்லை. காங்கிரஸ் கட்சியும் மந்திரி சபை அமைப்போம் என்று கூறி தோல்வியடைந்தது.

1.13 இந்த நிலையில், நாடாளுமன்றத்தைக் கலைக்கும்படி ஐக்கிய முன்னணி மந்திரிசபை சிபாரிசு செய்தது. இந்தப் பரிந்துரையை குடியரசுத் தலைவர் ஏற்று, நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு, இடைத்தேர்தலுக்கு உத்தரவிட்டுள்ளார்.

1.14 இந்த இடைத்தேர்தல் 98ம்ஆண்டு பிப்ரவரி இறுதி-மார்ச் மாத ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

1.15 இதுவே நம் நாட்டின் முன்னுள்ள மிக முக்கிய பிரச்சனை. பிஜேபியையும், காங்கிரஸ் கட்சியையும் எதிர்த்து ஐக்கிய முன்னணி ஒன்றுபட்டு போராடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2.0 புதிய பொருளாதாரக் கொள்கையும் தமிழ்நாடும்

2.1 புதிய பொருளாதாரத்தை அந்நியருக்குத் திறந்துவிடுவது, அனைத்துக் கட்டுப்பாடுகளையும் ரத்து செய்வது, உள்நாட்டு தொழில்கள் மீதான கட்டுப்பாட்டை நீக்குதல், இறக்குமதி மற்றும் அந்நிய முதலீடுகளை தாராளமயமாக்குதல், பொதுத்துறை நிறுவனங்களை தனியார்மயமாக்குதல், மானியங்கள் மற்றும் மக்கள் நலப் பொதுச்செலவினங்களை வெட்டிச் சுருக்குதல், பொது விநியோக முறை உள்ளிட்ட மக்கள் நலப் பணிகளை முறைப்படுத்துவது என்ற பெயரில் குறைத்தல், விவசாயத் துறையில் நில உச்சவரம்பை நீக்குதல், விளைபொருள் விலையை சந்தையுடன்

இணைத்தல், இடுபொருட்களுக்கு அரசு உதவியை மறுத்தல் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதுதான் .புதிய பொருளாதாரக் கொள்கை என்பதை நாமறிவோம்.

2.2 மத்தியில் கடந்த காலத்தில் காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த இத்தகைய பொருளாதாரக் கொள்கையை, ஐக்கிய முன்னணி அரசும் தொடர்ந்து கடைப்பிடித்து வருவதை நாம் அறிவோம். இந்தக் கொள்கைகள் நாடு முழுவதும் கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதையும் - அதன் தாக்கம் தமிழ்நாட்டிலும் இருப்பதும் தவிர்க்க முடியாதது. எனினும், கேரளம், மேற்குவங்கம், திரிபுரா மாநிலங்கள் தவிர இதர மாநிலங்களின் ஆளும்கட்சிகள் - மத்திய அரசின் இத்தகு தவறான கொள்கைகளை எதிர்க்க முன்வர வில்லை என்பது மட்டுமின்றி, வலுவாக ஆதரிக்கவும் செய் கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

2.3 தமிழகத்தில் கடந்த காலத்தில் ஆட்சி செய்த அதிமுக அரசும் சரி, இப்போது ஆட்சியில் உள்ள திமுக அரசும் சரி, மத்திய அரசின் மேற்படி புதிய பொருளாதாரத் திட்டத்தை அமலாக்கு வதில் போட்டி போட்டுக்கொண்டு முன்னுக்கு நின்றன என்பதே நமது அனுபவம்.

2.4 "1991ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் 1996ம் ஆண்டு வரை தமிழகத்தில் செய்யப்பட்ட அன்னிய முதலீடு ரூ. 3699 கோடியாகும். ஆனால், 1996ம் ஆண்டு ஜூன் முதல் 1997ம் ஆண்டு ஜூலை வரை ஒரே ஆண்டில் தமிழகத்தில் அன்னிய முதலீடு 4038 கோடி ரூபாய் ஆகியுள்ளது. அதாவது சராசரியாக மாதம் ஒன்றுக்கு ரூ.310 கோடி முதலீடு செய்யப்படுகிறது. இது மத்திய அமைச்சர் டி.ஆர்.பாலு சமீபத்தில் தெரிவித்திருக்கிற தகவல்.

2.5 இப்படி வருகின்ற அன்னிய மூலதனமோ, தொழில்நுட்பமோ நமக்குத் தேவையான துறையில் நமது வளர்ச்சிக்கு உதவும் என்றால் ஆட்சேபணை இல்லை. ஆனால் மாறாக, நடந்து கொண்டிருப்பது என்ன?

2.6 ஹூயுண்டாய் நிறுவனத்துடன் 2450 கோடி ரூபாயில் சொகுசு கார் உற்பத்தி, 350 கோடி ரூபாயில் கொரிய நாட்டு கும்கோ நிறு வனம் விமான டயர் உற்பத்தி ஆகியவை மேற்படி முதலீட்டில் பிரதான அம்சங்களாகும். ஆனால் அதேநேரத்தில் கார், பஸ் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள "அசோக் லேலண்ட்" உள்ளிட்ட நிறுவனங்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் அவர்கள் தங்களுக்குப் பொருட்கள் தயாரித்துக் கொடுக்கும் சிறுநிறுவனங்களுக்கு விலை குறைப்பு அறிவித்திருப்பதாலும், விற்பனையில் ஏற்பட்

டுள்ள விலைச் சரிவைக் காட்டி ஏராளமான பணம் பாக்கி வைத்துள்ளதாலும் ஆயிரம் சிறுதொழில் நிறுவனங்கள் மூடும் நிலைக்கு ஆளாகியிருப்பதாகவும், முப்பதாயிரம் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் விபரங்கள் தெரிவிக்கின்றன.

2.7 1997-98ம் ஆண்டுக்கான திமுக அரசு சமர்ப்பித்துள்ள நிதி நிலை அறிக்கையின் சில அம்சங்களைப் பரிசீலித்தாலே உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் கட்டுப்பாடற்ற ஊடுருவலை உணரமுடியும்.

		கோடிகளில்
1. கிருஷ்ணா நதி நீர்த்திட்டம்	உலக வங்கி	2046.90
2. நீர்வள ஆதார தொகுப்புத் திட்டம்	"	1140.00
3. சாலை விரிவாக்கம் மற்றும் மேம்பாடு	"	950.00
4. கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டம்	ஜப்பானிய பொருளாதார மற்றும் கூட்டுறவு நிதி	572.00
5. சிறு ஏரிகளை நவீனப்படுத்துதல்	"	270.00
6. தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம்	உலக வங்கி	103.79
7. ஏரிகள் நவீனப்படுத்தும் திட்டம்	ஐரோப்பிய பொருளாதாரக்குழு	115.00

2.8 இவை தவிர, கண்நோய் மருத்துவம், தொழில்நுட்ப பயிற்சி, கால்நடை வளர்ப்பு, குடிநீர் வழங்கல் ஆகியவற்றிற்காக மேற்படி நிறுவனங்கள் மூலம் 200 கோடி ரூபாய்க்கான திட்டங்களை உள்ளடக்கியதுதான் திமுக அரசின் நிதிநிலை அறிக்கை.

2.9 ஒட்டுமொத்தமாக மேற்படி திட்டங்களின் மொத்த மதிப்பீடு ரூ. 5,397.69 கோடி ஆகிறது. தமிழக அரசின் ஆண்டு வரவு - செலவு சுமார் 12,000 கோடி என்பதை கணக்கில் கொண்டு பரிசீலித்தால் உலக வங்கி மற்றும் பன்னாட்டு நிறுவனங்களில் ஊடுருவலின் ஆழத்தைப் புரிந்து கொள்ளமுடியும்.

2.10 அந்நிய மூலதனத்தை ஊக்குவிக்கவும், துறைமுகம், மின்சாரம் உள்ளிட்ட பகுதிகளில் தனியார் மூலதனத்தை பங்கேற்கச் செய்யவும், அதிமுக மற்றும் திமுக அரசுகள் பல சலுகைகளை அறிவித்துள்ளது. இதுதவிர, இத்தகைய மூலதனங்களை ஊக்குவிக்க வரிவிலக்குகள் மற்றும் உதவிகளை அறிவிப்பதில் மாநிலத்துக்கு மாநிலம் ஒரு போட்டியே நடந்து கொண்டிருக்கிறது. இப்படி தமிழக அரசு கடந்த சில ஆண்டுகளில் அளித்துள்ள சலுகைகள் குறிப்பிடத்தக்கவை.

2.11 முதலீட்டுக்கான ஊக்க மானியம் முதலீட்டின் தன்மையைப் பொறுத்து 5 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரை அளித்தல்;

பெரிய திட்டங்களுக்கு ஒரு கோடி ரூபாய் வரை இந்த மான்யம் அளிக்கப்படும்.

2.12 மின் கட்டணச் சலுகை முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40,30 மற்றும் 20 சதவீதமாக இருக்கும்.

2.13 விற்பனை வரியிலிருந்து முழு விதிவிலக்கு. தொழில் அமைக்கப்படும் இடம் மூலதனத்தின் அளவு மற்றும் தொழிலின் தன்மையைப் பொறுத்து பல்லாண்டு காலத்திற்கு அளிக்கப்படும்.

2.14 இதுவும் இன்ன பிற நீண்டகால நன்மை பயக்கும் சலுகைகளும் அறிவிக்கப்பட்டதாலேயே வெளிநாட்டு நிறுவனங்கள் தமிழகத்தில் தொழில் துவங்க உற்சாகமாக முன்வருகின்றன என தமிழக முதல்வர் சமீபத்தில் அறிவித்துள்ளார்.

2.15 அ) சேலத்தில் ஏராளமாகக் கிடைக்கும் மேக்னசைட்டைப் பயன்படுத்துவதற்குப் பதில் இறக்குமதி நிபந்தனைகளை தளர்த்தி சீனா மற்றும் கொரியாவிலிருந்து இறக்குமதி செய்வதால் மேக்னசைட் தொழில் பாதிப்பு.

ஆ) "பத்திரிகை" காகிதம் இறக்குமதி காரணமாக டிஎன்பிஎல். காகித ஆலையில் தரமான காகிதம் தயாரிக்கப்பட்டும் பாதிக்கப்படும் நிலை.

இ) பன்னாட்டு பகாசுர நிறுவனங்களிடம் இரண்டாந்தர எந்திரங்கள் இறக்குமதி செய்யப்படுவதால் ஜவுளித் துறைக்கு எந்திரங்கள் தயாரிக்கும் நிறுவனங்கள் பலவற்றிற்கு பாதிப்பு.

ஈ) உதகமண்டலத்திலும், சென்னையிலும் உள்ள மத்திய பொதுத் துறை நிறுவனமான இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது.

உ) கரூர், ஈரோடு, திருப்பூர், சேலம், நாமக்கல் கைத்தறி மற்றும் பனியன் தொழில் மற்றும் விசைத்தறி தொழில்களில் பல வகைகளில் ஏற்பட்டுள்ள கடும்பாதிப்பு.

ஊ) இறக்குமதி தாராளமயமாக்கப்படுவதால் 'டயர்' மற்றும் ரப்பர் தொழிற்சாலைகள் பெரும்பாதிப்புக்கு ஆளாகும் என முதலாளிகளே எச்சரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எ) தீப்பெட்டித் தொழிலில் ஏற்பட்டுள்ள கடும்பாதிப்பு,

இப்படி ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பட்டியல் இன்னும் நீளும்.

2.16 விவசாயத் துறையில் இத்தகு கொள்கைகளால் ஏற்பட்டுள்ள பாதிப்பு மேலும் கடுமையானது. இரண்டாம் பசுமைப் புரட்சியின்

பரிந்துரைகள் என்ற பெயரில் ஏற்றுமதி மற்றும் வணிக நோக்கிலான வேளாண்மைக்கு முதலிடம் தருவது என்பதே புதிய பொருளாதாரக் கொள்கையின் வேளாண் திட்டமாகும். தமிழக அரசு தனது 97-98க்கான நிதிநிலை அறிக்கையில் மலர் பயிரிடுதல், தோட்ட மரப்பயிரிடுதல், காளான் வளர்ப்பு போன்றவற்றிற்கு அதிக முன்னுரிமை தந்தது.

2.17 நிலச்சீர்திருத்தம், தரிசு நில ஒதுக்கீடு போன்றவை பற்றி தமிழக அரசு அவ்வப்பொழுது சில அறிவிப்புகளை வெளியிட்டுக் கொண்டிருந்தாலும் பெரிய பெரிய நிறுவனங்கள் மூலம் ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களை வணிகரீதியிலான மரம் வளர்ப்புத் திட்டங்களுக்கு ஒதுக்குவதே நடைமுறையாகியுள்ளது. இவ்வகையில் அறிவிக்கப்படாமலேயே நிலச்சீர்திருத்தங்களை முற்றாக கைவிட்டு, நிலக்குவிப்பை ஊக்குவிக்கும் நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

2.18 உர மானியம் வெட்டப்பட்டதன் விளைவாக பல்வேறு வகை உரங்களின் விலைகள் கணிசமாக உயர்ந்தன. உதாரணத்துக்கு டி.ஏ.பி. உரம் இக்காலத்தில் டன்னுக்கு 3600 ரூபாயிலிருந்து 11,600 ரூபாயாக உயர்ந்தது. எம்.ஓ.பி. உரம் 1300லிருந்து 5810 ஆக ஆனது. இப்படி அனைத்து வகை உரங்களும் கடுமையான விலையேற்றம் செய்யப்பட்டதால் சிறு - குறு விவசாயிகள் பெரும்பாதிப்புக்கு ஆளாகியுள்ளார்கள்.

2.19 உரவிலை கடும் ஏற்றம் காரணமாக உர உபயோகம் என்பது குறையத்தொடங்கியுள்ளது. 1993-94ல் செய்யப்பட்ட பொருளாதார ஆய்வு, "இந்தியாவில் உர உபயோகம் 127.5 லட்சம் டன்னிலிருந்து 121.5 லட்சம் டன்னாக 92-93ம் ஆண்டு குறைந்தது. 18 ஆண்டுகளுக்குப் பின் முதன்முறையாக உர உபயோகத்தில் குறைவு என்பது நிகழ்ந்துள்ளதாகவும்" அந்த ஆய்வு தெரிவிக்கிறது.

2.20 இடுபொருள் விலையேற்றத்தை சமாளிக்க விளைபொருட்களின் கொள்முதல் விலை கணிசமாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மத்திய - மாநில அரசுகள் பதிலளிக்கின்றன. ஆனால் விளைபொருட்களின் விலையேற்றம் சிறு-குறு விவசாயிகளுக்கு பயன்படவில்லை என்றும், பெரும்பாலும் அவர்கள் மார்க்கெட் விலைக்கு மிகக்குறைந்த விலையே பெறுகின்றனர் என்பதுடன், "உர உபயோகம்" குறைந்த நிலையில் அவர்கள் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படுவதால் அவர்கள் உற்பத்தி குறைவு. விளைபொருட்களுக்கு - விலை கிடைக்காமை, இடுபொருட்கள் விலை உயர்வு

என்று மூன்று கோணங்களிலும் தாக்கப்படுகின்றனர். தமிழகத்திலும் இதுதான் நிலைமை என்பதை சமீபத்தில் தஞ்சை மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செய்யப்பட்ட ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2.21 உர விலை உயர்வின் காரணமாக ஏற்பட்டுள்ள இன்னொரு பாதிப்பு சிறு - குறு விவசாயிகள் உள்ளிட்ட பலரும் உணவு தானிய உற்பத்தியிலிருந்து வணிகப் பயிருக்கான உற்பத்திக்கு மாறுவதாகும். அகில இந்திய அளவில் உணவுதானிய உற்பத்தி செய்யும் நில அளவு 1990-91, 1991-92 ஆகிய ஆண்டுகளில் 62 லட்சம் ஹெக்டேர் குறைந்தது என்றும், இந்தப் போக்கு தொடர்கிறது என்றும், ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன்விளைவாக உணவு தானிய உற்பத்தி என்பது 19.8 கோடி டன்னுக்கு மேல் ஏறாமல் தேங்கி நிற்கின்றன என்றும் விபரங்கள் தெரிவிக்கின்றன.

2.22 தமிழகத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளும் இதனை நிரூபிக்கிறது. சமீபகாலத்தில் தமிழகத்தில் பத்து லட்சம் ஹெக்டேர் நிலத்திற்கும் அதிகமான நிலத்தில் கரும்பு, பருத்தி போன்ற பயிர்களுக்கு மாறுவதுடன், இறால் பண்ணை, தோட்டப் பயிர்கள் என்று பெரும் நிறுவனங்கள் நிலத்தை அபகரித்ததும் உணவு தானிய உற்பத்தியை பெருமளவு பாதித்துள்ளது என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்நிலை தொடர்ந்தால் இன்று ஓரளவிற்கு சுய தேவைப் பூர்த்தி செய்யும் நிலையில் உள்ள தமிழகம் 2005ம் ஆண்டிற்குள் உணவுத் தேவையில் பெரும் பற்றாக்குறை உள்ள மாநிலமாக மாறும் என்றும் ஆய்வாளர்கள் எச்சரிக்கின்றனர்.

2.23 விவசாயத் தொழிலாளர்களுக்கு புதிய பொருளாதாரக் கொள்கைகள் ஏற்படுத்தியுள்ள பாதிப்பு மிகவும் கடுமையானது. தமிழ்நாட்டில் 85 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கின்றனர். அவர்களில் 55 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்டவர்கள், 45 சதவீதத்தினர் பிற்படுத்தப்பட்டவர்கள். விலை உயர்வு, வேலை நாட்கள் இழப்பு, மாற்று வேலையின்மை, ரேஷன் கடைகள் சரிவர செயல்படாமை போன்ற பல்வேறு காரணங்களால் விவசாய தொழிலாளர்கள் கடும்பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர்.

2.24 தமிழகத்தில் விலைவாசி உயர்வு பற்றிய ஆய்வில் 1995 ஏப்ரல் முதல் அக்டோபர் வரையிலான ஆறு மாதங்களில் மட்டும் ஏற்பட்ட விலை உயர்வு கீழ்க்கண்டவாறு இருந்ததாகவும் தெரிவிக்கிறது.

உருளைக்கிழங்கு -	40%	மிளகாய் -	60%
காப்பித்தூள் -	104%	கைத்தறித்துணி -	51%
மீன் வகைகள் -	19%	மாமிசம் -	18%
தேயிலை -	19%	வாழைப்பழம்	24%

2.25 இது ஆறு மாதத்தில் மட்டும் ஏறிய விலை உயர்வின் அளவு. சமீபத்தில் ஏறியுள்ள டீசல், பெட்ரோல், பஸ், லாரி கட்டண உயர்வு ஆகியவற்றைக் கணக்கிட்டால் விலைவாசி எவ்வளவு வேகமாக உயர்கிறது என்பதை உணர முடியும். நாள்தோறும் அனுபவத்தில் உள்ள விலை உயர்வு இந்தப் புள்ளி விபரங்களை எல்லாம் விட மிக அதிகமாகவே இருப்பதை நாம் அறிவோம்.

2.26 இதே நேரத்தில் கடந்த 4 ஆண்டுகளிலும் சேர்ந்து தமிழக விவசாயத் தொழிலாளிகளின் ஊதிய உயர்வு 17.8 சதவீதம்தான் உயர்ந்திருக்கிறது என்று அரசு புள்ளிவிபரங்களே தெரிவிக்கின்றன. இந்தக் கணக்கே தவறானது என்றாலும், இதுவேகூட விலைவாசி உயர்வை ஒப்புநோக்கும்போது எவ்வளவு கீழே உள்ளது என்பதைக் காணமுடியும்.

2.27 எனினும், இந்த உயர்வும் விவசாயத் துறையில் எந்திரம் புகுத்தப்படுவதையொட்டி பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளது. தமிழகத்தில் அறுவடை மற்றும் நடவு காலத்தில் தஞ்சை போன்ற மாவட்டங்களில் ஒரளவுக்கு ஆள் பற்றாக்குறை இருப்பது உண்மையே. ஆனால், பல்லாண்டுகாலமாக வெளிமாவட்டங்களில் இருந்து வரும் விவசாயத் தொழிலாளர்கள் மூலம் இந்தத் தேவை சமாளிக்கப்பட்டது. இப்பொழுதும் சமாளிக்க முடியும். ஆனால் இந்தப் பற்றாக்குறையைக் காட்டி அறுவடைக்கு எந்திரம், போரடிக்க எந்திரம், நடவு நட எந்திரம் என்று எந்திரங்களை புகுத்துவதில் திமுக அரசு தீவிரமாக இறங்கியுள்ளது. ஏற்கெனவே ஆண்டிற்கு120 நாட்கள்தான் சராசரி வேலை கிடைக்கும் நிலையில், இந்த எந்திரங்கள் கிராமப்புற ஏழை மக்கள் வாழ்வை பெரிதும் பாதித்துள்ளன.

2.28 குறிப்பாக, கிராமப்புற சிறுதொழில்கள் வளராத நிலையில் மாற்று வேலைவாய்ப்பும் இன்றி கிராமப்புற பெண்கள் இத்தகைய எந்திரம் புகுத்துவதால் கடுமையாகப் பாதிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே பெண்களை பொறுத்தவரை சராசரி நாள் கூலி ரூ.15 மட்டுமே. இப்பொழுது பெண்கள்பெருவாரியாக ஈடுபடும் நடவு வேலையில் எந்திரங்களைப் புகுத்துவதால் கிராமப்புற ஏழ்மை மேலும் அதிகமாகும் சூழல் ஏற்பட்டுள்ளது.

2.29 நமது போராட்டங்கள் காரணமாக அரசு மானியம் கொடுத்து நடவு எந்திரம் வாங்கும் ஏற்பாட்டை நிறுத்துவதாக அறிவித்திருக்கிறது என்றாலும், தனியார் இந்த எந்திரங்களைப் புகுத்துவதற்குத் தடை ஏதும் இல்லை.

2.30 புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக சாலைகள், துறைமுகம், மின்சார உற்பத்தி மற்றும் விநியோகம் தனியாரிடம் அளிப்பதும் வேகமாக நடைபெற்று வருகிறது. 1997-98க்கான வரவு - செலவு திட்டத்தில் 2280 மெ.வா. உற்பத்திக்கான 5 தனியார் நிறுவனங்களிடம் பேச்சுவார்த்தைகள் நடப்பதாகவும், மேலும் டெண்டர் அடிப்படையில் தனியாருக்கு அளிக்க 1788 மெ.வா.க்கான 17 திட்டங்கள் இறுதிப்படுத்தப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கிறது.

2.31 "அனைத்து கிராமங்களுக்கும் சாலை அமைக்க" என்ற பெயரில் உண்மையில் தேசிய நெடுஞ்சாலை மற்றும் மாநில நெடுஞ்சாலை ஆகியவைகளை தனியாருக்கு விடும் பணியும் வேகமாக நடந்து வருகிறது. இத்தகைய நெடுஞ்சாலை தனியாரால் எப்படி அமைக்கப்படும். அதில் எவ்வளவு லாபம் அவர்களுக்கு கிடைக்கும் என்பதற்கு தமிழக அரசுக்கும் லார்சன் அண்ட் ட்யூப்ரோ நிறுவனத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள ஒப்பந்தமே சான்றாகும்.

2.32 இந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தம் பற்றி மத்திய அமைச்சர் டி.ஜி.வெங்கட்ராமன் அறிவித்த விபரங்கள்:

27.2 கி.மீ. நீளமுள்ள கோயம்புத்தூர் புறவழிச்சாலை லார்சன் அண்ட் ட்யூப்ரோ நிறுவனத்தால் ரூ.95 கோடி செலவில் அமைக்கப்படும். இந்தச் சாலை 30 ஆண்டுகாலத்திற்கு அந்த நிறுவனத்தின் பொறுப்பில் இருக்கும். 30 ஆண்டுகாலமும் சாலையைப் பயன்படுத்துபவர்களிடம் ஒரு நாளைக்கு பஸ் மற்றும் லாரிகளுக்கு ரூ.56/-, வேன்களுக்கு ரூ.28/-, கார்களுக்கு ரூ.19/- என்ற அடிப்படையில் லார்சன் ட்யூப்ரோ நிறுவனம் கட்டணம் வசூலிக்கும்.

இந்தக் கட்டண விகிதம் விலைவாசி உயர்வுக்கேற்ற வகையில் மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தி அமைக்கப்படும்.

30 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த சாலை அரசின் வசம் ஒப்படைக்கப்படும்.

2.33 இந்தத் திட்டத்தின் மூலம் அரசு முக்கிய சாலைகள் அமைக்கும் பொறுப்பிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்வது ஒருபுற

மிருக்க, இதுதொடர்பான நிறுவனங்கள் தங்கள் இஷ்டத்திற்குக் கொள்ளையடிக்கவும் வழிசெய்கிறது.

2.34 இன்றைய நிலையிலேயே நாள் ஒன்றுக்கு 8 ஆயிரம் ஊர்திகள் இந்த சாலையில் பயணிக்கும் என்றும், அமைச்சர் அதேகூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

2.35 இப்படிப் பெருகிவரும் போக்குவரத்தின் அளவையும், நிர்ணயிக்கப்படும் தொகையையும் கணக்கிட்டால் இடப்படும் மூலதனத்தைவிட பற்பல மடங்கு கொள்ளையடிக்க வகை செய்யும் ஒப்பந்தத்தை தமிழக அரசு செய்திருப்பதை உணரமுடியும்.

2.36 கோவை புறவழிச்சாலை மட்டுமல்ல, மதுரை ரிங் ரோடு, சென்னை-பூந்தமல்லி நெடுஞ்சாலை மற்றும் பல்வேறு முக்கிய பாலங்கள் என பல நூறு கோடி ரூபாய்க்கான மேற்படி திட்டங்கள் பி.ஓ.டி. (Build, Operate and Transfer- கட்டி அமைத்தல், இயக்குதல், பின் அரசுக்குத் திருப்பிக்கொடுத்தல்) திட்டத்தின் மூலம் 30 ஆண்டுகாலம் தனியாரிடம் ஒப்படைக்கப்படும்.

2.37 திருப்பூரில் மேம்பாட்டுத் திட்டம் என்ற பெயரில், குடிநீர், பாதாள சாக்கடை, சாலை வசதிகள் போன்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் பொறுப்பை அரசு கைகழுவி விட்டது.

2.38 இந்தத் திட்டத்தை பன்னாட்டு நிறுவனங்கள் உள்ளிட்டு பங்கேற்கும் தனியார்துறையிடம் விட்டு செய்ய திட்டமிட்டிருக்கிறது தமிழக அரசு.

2.39 இத்திட்டத்தை நிறைவேற்றி 30 ஆண்டுகள் நிர்வகிப்பதன் மூலம் ரூ.569.2 கோடி மூலதனமிடும் இந்நிறுவனம் மொத்தம் 13,538.3 கோடி ரூபாயை வரியாகவும், கட்டணமாகவும் பொது மக்கள் மற்றும் தொழில் நடத்துவோர் மூலமாக பெறும் என்கிறது. இந்தத் திட்டம். வரி மட்டும் அரசுக்குக் கொடுக்கப்படும். இப்படிப்பட்ட திட்டங்கள் மூலம் எவ்வளவு பெரிய கொள்ளை அனுமதிக்கப்படுகிறது என்பது கவலைப்பட வேண்டிய விசயமாகும்.

2.40 புதிய பொருளாதாரக் கொள்கையின் ஒரு பகுதியாக "தனியார் நிதி நிறுவனங்கள்" பெருமளவு ஊக்கப்படுத்தப்பட்டதும், அதன் விளைவாக பொதுமக்களின் பணம் வலுவாக சூறையாடப்பட்டதையும் நாம் பார்த்தோம். இதேபோல் மூடப்பட்ட ஆலைகளைத் திறத்தல், தொழில் தகராறுகளில் தலையிடுதல், தீர்வு காணுதல் போன்ற பிரச்சனைகளில், 1989-91 ஆண்டுகளில் அதிமுக அரசு கடைபிடித்த அளவுக்குக்கூட இப்போதைய திமுக

அரசின் அணுகுமுறை இல்லை. வண்டலூர் மோட்டார் தொழிற் சாலை, சென்னை பி அண்ட் சி. மில் ஆகியவற்றை திறப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளில் திமுக அரசு மேற்கொள் ளும் தொழிலாளர் விரோத அணுகுமுறைகளைப் பார்க்க முடிகிறது.

2.41 பொதுவிநியோகமுறை சீரழிவும் எதிர்காலத்தில் பெரும் பிரச் சனையாக உருவாக உள்ளது. கேரளத்தைப் போல் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தையும் நியாய விலைக்கடைகள் மூலமாக விநியோகிக்கும் ஏற்பாடு தமிழகத்தில் இல்லையென்றாலும், ரேஷன் அரிசி விலை கடந்த பத்தாண்டுகளாக அதிகமாக விலை யேறாமல் இருந்ததை நாம் அறிவோம். ஊழல் உள்ளிட்ட பிரச் சனைகள் இருந்தாலும், அரிசி விலையில் கை வைத்தால் ஏற்படும் அபாயத்தை உணர்ந்து திமுக, அதிமுக ஆட்சிகள் விலையேற் றத்தை ஓரளவு தவிர்த்து வந்தது என்பது உண்மை.

2.42 ஆனால் . இப்பிரச்சனையிலும் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள பாதிப்பைக் கீழ்க்கண்ட பட்டியல் விளக்கும்.

காலம்	ரேஷன் அரிசி விலை உயர்வு (சதவிகிதத்தில்)
1971 முதல் 1981 வரை	1.6% (வருட சராசரி)
1981 முதல் 1990 வரை	5.9%
1990 முதல் 1994 வரை	
1994 முதல் 1997 வரை	18.2%

(புதிய பொருளாதாரக் கொள்கை காலம் 1990 - 1997)

2.43 துறைமுகங்களைத் தனியாரிடம் ஒப்படைக்கும் முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இதுகுறித்து மாநில துறைமுக அதி காரி ஐ.வி.ஜி. பிரசாத் கூறியுள்ளவை:

அ) தமிழகத்தின் துறைமுகங்களை மேம்படுத்தவும், நிர்வகிக்கவும் தனியார் நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படும்.

ஆ) அதிகபட்ச டெண்டர் கோரும் தனியார் நிறுவனங்கள் முப்ப தாண்டு காலத்திற்கு துறைமுகத்தைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இ) இத்தகைய நிறுவனங்கள் துறைமுகத்தை சுதந்திரமாய் அனுப வித்துக் கொள்வதுடன் இதர நிறுவனங்களுக்காக மேற்கொள் ளும் சேவைகளுக்கான கட்டணத்தையும் சுதந்திரமாக தீர்மா னித்துக் கொள்ளலாம்.

2.44 மேலே கூறப்பட்ட அடிப்படையில் அமையும் துறைமுகங்கள் மற்றும் தனியார் சாலைகள் இரண்டும் சேர்ந்து இன்றுள்ள விலை

வாசி உயர்வை மேலும் கூர்மையாக கடுமையாக உயர்த்தும் என்பது சொல்லாமலே விளங்கும்.

2.45 இத்துடன் சேர்ந்து பல்வேறு புதிய வழித்தடங்களில் தனியார் பஸ் மற்றும் மினி பஸ் விடவும் ஏற்பாடுகள் துரிதமாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

2.46 கல்வித்துறையைப் பொறுத்தவரையில் தனியார்மயம் என்பது மிக வேகமாக நடைபெறுகிறது. அதிமுக அரசு காலத்தில் தனியார் துறையில் சுயநிதிக் கல்லூரிகள், தொழில்நுட்பக் கல் லூரிகள், இன்ஜினீயரிங் கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சி பள்ளிகள் என்று ஏராளமாக ஆரம்பித்து கடும் ஊழலையும், கல்வித்துறை சீர்குலைவையும் செய்தனர்.

2.47 திமுக அரசு வந்த புதிதில் சுயநிதிக் கல்லூரிகளை முறைப்படுத் தப் போவதாக அறிவித்தது. ஒரு சில நடவடிக்கைகளையும் எடுத்தது. ஆனால் பெயரளவுக்கான இந்த நடவடிக்கைகள் சுயநிதிக் கல்லூரிகளின் கொள்ளையைத் தடுத்து நிறுத்தவில்லை.

2.48 ஆனால், பின்னர் இத்தகு நடவடிக்கைகளையும் கைவிட்டுவிட் டது மட்டுமின்றி, ஏராளமான புதிய சுயநிதிக் கல்லூரிகளுக்கு அனுமதியும் வழங்கத் துவங்கிவிட்டது. சமீபத்தில் மருத்துவக் கல்லூரிகள் உட்பட அனைத்தும் தனியார்மயமாக்கப்படும் என்ற திமுக அரசின் அறிவிப்பு இவர்களது கல்விக்கொள்கை, அதிமுக - காங்கிரஸ் அரசுகளின் கல்விக் கொள்கைக்கு எந்த வகையிலும் மாற்றல்ல என்பதைத் தெளிவுபடுத்துகிறது. "காசிருப்பவருக்கே கல்வி" என்ற இந்தக் கொள்கை அனைத்து ஏழைகளையும் பாதித் தாலும், பெண்களையும், தாழ்த்தப்பட்ட மக்களையும் பெரிய அளவு பாதிக்கிறது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

2.49 இத்துடன் சேர்த்து ஆண்டுக்காண்டு கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை மேலும் மேலும் குறைக்கப்படுவதும், அரசு ஆரம்பப் பள்ளிகள், மாநகராட்சி, நகராட்சி பள்ளிகள், நிர்வாகங்கள் மேலும் மேலும் சீர்குலைக்கப்படுவதும் நடந்து வருகின்றன.

2.50 பொது சுகாதாரம் மற்றும் மருத்துவமனை பிரச்சனைகளிலும் அரசு தன் பொறுப்பை சிறிது சிறிதாக கைவிட்டு குத்தகை அடிப் படையில் தனியாரிடம் ஒப்படைக்கும் போக்குகள் துவங்கி யுள்ளது. நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வரும் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக உயிர்காக்கும் மருந்துகள் உள்ளிட்ட மருந்துகள் விலை பலமடங்காக உயர்ந் துள்ள நிலையில் அரசு மருத்துவமனை மற்றும் பொதுச்சுகாதார

நடவடிக்கைகள் குறித்து அரசின் பங்குகுறைவது சாதாரண ஏழை மக்கள் வாழ்வை பெரிதும் பாதிக்கும் என்பதை விளக்க வேண்டியதில்லை.

2.51 மேலே விவரிக்கப்பட்ட அனைத்து அம்சங்களையும் கணக்கில் கொண்டால் தமிழகத்தில் புதிய பொருளாதாரக் கொள்கையின் அனைத்து அம்சங்களும் வேகமாகவே அமுலாக்கப்படுவதையும், அதன் பாதிப்புகளும் கடுமையாக இருப்பதையும் உணரமுடியும்.

3.0 அரசியல் இயக்கங்கள்

3.1 இந்தப் பின்னணியில் சண்டிகரில் 1995 ஏப்ரல் 3 முதல் 8 வரை நடைபெற்ற அகில இந்திய கட்சி மாநாட்டில் எடுக்கப்பட்ட முக்கியமான அரசியல் முடிவுகளை நாம் நினைவுகூர்வோம்.

1. இந்தியாவின் சுயாதிபத்தியத்தைச் சீர்குலைக்கும் அந்நிய ஏக போகங்களுக்கு நாட்டின் கதவைத் தாராளமாகத் திறந்துவிடும் நாசகரமான பொருளாதார கொள்கைகளை எதிர்ப்போம்.
2. இந்த புதிய பொருளாதாரக் கொள்கையை விடாப்பிடியாக அமல்படுத்தும் முதலாளித்துவ - நிலப்பிரபுத்துவ அமைப்பான காங்கிரசை ஆட்சிக்கு வரவிடாமல் முறியடிப்பது.
3. இதைப்போன்று மக்களின் ஒற்றுமையை சீர்குலைத்து, நாட்டின் நலனை நாசமாக்கும் வகுப்புவாத சக்திகளின் அபாயத்தை முறியடிப்பது;
4. அதோடு, சுதந்திரம் பெற்று இதுவரை இந்தியாவில் இவ்வளவு பெரிய ஊழல்கள் நடைபெறவில்லை. அமைச்சர்கள், அதிகாரிகள், சமூகவிரோதிகள் எனக் கூட்டாகச்சேர்ந்து கொள்ளை அடிக்கும் வகையில், ஊழல் ஒரு புதிய வடிவம் பெற்றுள்ளது. இதற்கு தாராளமயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கை அதிகமான வாய்ப்பை உருவாக்கித் தருகிறது. ஆக, நாட்டையே திவாலாக்கும் இப்படிப்பட்ட ஊழலை எதிர்த்துப்போராடுவதும் கட்சியின் முன்னால் உள்ள ஆகமிகப் பெரிய அரசியல் கடமைகள் என்பதை மாநாடு சுட்டிக்காட்டியது.

3.2 அதேபோல் கடலூரில் நடந்த கட்சியின் 15வது மாநில மாநாட்டில் தமிழகத்தில் நாம் கடைபிடிக்க வேண்டிய முக்கியமான மூன்று அரசியல் கடமைகள் பற்றி முடிவெடுத்தோம்.

1. நமது கட்சியின் அனைத்துமட்ட அமைப்புகளும், கிளைகளிலிருந்து மாநிலக்குழு வரையில் சுயேட்சையான இயக்கங்களுக்கு திட்டமிட வேண்டும்;

2. தமிழகத்தில் இடதுசாரி கட்சிகளின் ஒற்றுமையைப் பலப் படுத்தி இடதுசாரி கட்சிகளின் கூட்டு இயக்கங்களுக்கு முயற்சி எடுக்க வேண்டும்;

3. மாநிலத்தில் இடதுசாரி கட்சிகள் மற்றும் திமுக, மதிமுக, ஜனதாதளம் போன்ற மதச்சார்பற்ற ஜனநாயக கட்சிகளுக்கு அழைப்புவிடுத்து, கூட்டு இயக்கத்திற்கு முயற்சிக்க வேண்டும். நம்மோடு வருகின்ற கட்சிகளோடு சேர்ந்து மக்கள் பிரச்சனை கள் மீது வலுவான மக்கள் இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

3.3 தமிழகத்தில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய இந்த மூன்று அரசி யல் கடமைகளை, அகில இந்திய அரசியல் முடிவுகளுக்கு இணங்க தமிழகத்திலும் கடந்த மூன்றாண்டுகளாக நிறைவேற்ற முயற்சித்து வந்துள்ளோம். இதன் பகுதியாக நாம் நடத்திய இயக்கங்கள், போராட்டங்கள் பற்றி இங்கே சுருக்கமாகத் தந்துள்ளோம்.

கோரிக்கைகளை வலியுறுத்தி பிரச்சார இயக்கம்

3.4 கட்சியின் மத்தியக்குழு கீழ்க்கண்ட 9 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு பூராவும் பிரச்சாரம் செய்ய அறைகூவல்விட்டது.

1) 14 அத்தியாவசிய பண்டங்களை பொதுவிநியோக முறையில் வழங்க வேண்டும்; உணவு தானியங்களை 50% விலை குறைத்து வழங்க வேண்டும்.

2) கிராமப்புற பகுதிகளில் வேலைக்கான உணவு திட்டத்திற்கு உணவு தானியங்களை வழங்க வேண்டும்.

3) பொதுத்துறை நிறுவனங்களை மூடுவதையும், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பதையும் நிறுத்த வேண்டும்.

4) நில விநியோகம் நடைபெற வேண்டும். விவசாயத் தொழிலா ளர்களுக்கு கூலி உத்தரவாதமும், மத்திய சட்டமும் நிறைவேற்ற வேண்டும்.

5) கல்வியை தனியார்மயமாக்குவதை, கல்வி வியாபாரமய மாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்;

6) பொது சுகாதார முறைக்கு அதிக நிதி ஒதுக்க வேண்டும்;

7) பெண்களுக்கு சம ஊதியம் வழங்க வேண்டும். வீட்டு வேலை செய்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் சட்டம் நிறைவேற்ற வேண்டும்.

8) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாநிலங்களுக்கு முழு நிவாரணம் அளிக்கவும், புனர்வாழ்வு அளிக்கவும் உரிய நட வடிக்கை எடுக்க வேண்டும்.

9) சந்திராசுவாமியைக் கைது செய்து வழக்கு தொடுக்க வேண்டும். ஹவாலா வழக்கில் சிக்கிய குற்றவாளிகள் அனைவரையும் கைது செய்ய வேண்டும்.

3.5 மேற்குறிப்பிட்ட 9 கோரிக்கைகளுடன் தமிழகம் சம்பந்தமான மூன்று கோரிக்கைகளையும் இணைத்தோம்.

1) தமிழகத்தில் உள்ளாட்சி மன்றங்களுக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் உடனடியாக தேர்தல் நடத்த வேண்டும்;

2) லாக்கப் படுகொலை, கற்பழிப்பு போன்ற போலீஸ் அத்து மீறல்களுக்கு முடிவுகட்ட வேண்டும்.

3) அதிமுக அரசின் ஊழலுக்கு முடிவுகட்ட வேண்டும்.

3.6 மேற்குறிப்பிட்ட 12 கோரிக்கைகளை முன்வைத்து 1995 டிசம்பர் 27 முதல் 1996 ஜனவரி 2 வரை தமிழகம் பூராவும் பரவலாக பிரச் சார இயக்கம் நடைபெற்றது; இதில் தெருமுனைப் பிரச்சாரத்தின் மூலம் கணிசமான மக்களிடம் கோரிக்கைகளை எடுத்துச் செல்ல முடிந்தது.

3.7 தமிழகம் பூராவும் நடந்த இந்தப் பிரச்சாரத்தின் உச்சகட்டமாக ஜனவரி 19ம்தேதி சென்னையில் பேரணி நடத்தினோம். இப் பேரணியில் தென்சென்னை, வடசென்னை, செங்கை (வடக்கு), செங்கை (தெற்கு), வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், பாண்டிச்சேரி ஆகிய மாவட்டங்களிலிருந்து கணிச மான மக்கள் கலந்து கொண்டார்கள்.

3.8 இந்தப் பேரணியின் சிறப்பான அம்சம், நாம் சென்னையில் நடத்திய மத்தியக்குழு கூட்டத்தையொட்டி நடத்தியதுதான். பெரும் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் சுர்ஜித், ஜோதிபாசு ஆகி யோர் உரையாற்றினார்கள். பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி மூலம் சிறப்பான விளம்பரம் கிடைத்தது.

முழு கடையடைப்பு (பந்த்)

3.9 தமிழக முதல்வராக இருந்த ஜெயலலிதா மீது வழக்கு தொடுக்க ஆளுநர் அனுமதி அளித்தார். ஆளுநரின் இந்த அனுமதியை எதிர்த்து இடைக்கால தடை விதிக்கக்கோரி ஜெயலலிதா ரிட் மனு தாக்கல் செய்தார். உயர்நீதிமன்றம் இந்த ரிட் மனுவை தள்ளு படி செய்தது. இந்தச் சூழ்நிலையில் திமுகவும் அதன் தோழமைக் கட்சிகளும் சேர்ந்து ஜெயலலிதா பதவி விலகக்கோரி 1995 மே 4ம்தேதியன்று முழு கடையடைப்பு நடத்த அறைகூவல்விட்டன. நாமும் இந்த சூழ்நிலையில் இந்த கடையடைப்புக்கு அறைகூவல் விடுவது சரியான நடைமுறையாக இருக்கும் என முடிவெடுத்

தோம். நம்மோடு அரசியல் உறவு கொண்டிருந்த மதிமுகவுடன் பேசி, மாவட்டங்களில் கடையடைப்பு முழு வெற்றிபெற ஏற் பாடுகள் செய்ய இரண்டு கட்சி அணிகளுக்கும் அறைகூவல் விடப்பட்டது.

3.10 இதில் நம்முடைய தனித்தன்மையையும் வலியுறுத்தினோம். ஆளுநர்களை நியமிக்கும்போது, மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்துதான் நியமனம் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி னோம். இதற்கு ஏற்றார்போல் அரசியல் சட்டம் 155வது பிரிவைத் திருத்த வேண்டும் என அறிக்கை விட்டோம். தமிழகம் பூராவும் முழுகடையடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றது.

3.11 ஆனால் அதிமுக அரசு இந்த இயக்கத்தை முறியடிக்க மிகக் கடுமையான முறையில் அடக்குமுறைகளை ஏவியது. முழு கடை யடைப்பு நடப்பதற்கு நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்பே அனைத்து கட்சி ஊழியர்களையும் கைது செய்தது; நம் தோழர் களால் மே தின ஊர்வலத்தைக் கூட பல இடங்களில் நடத்த இயலவில்லை. தோழர் எஸ்.ஏ.பெருமாள் மே தின கூட்டத்தில் பேசி முடித்து மேடையை விட்டு கீழே இறங்கியபோது கைது செய்யப்பட்டார்.

3.12 முழு கடையடைப்பு நாளிலும் அதிமுக அரசு பலரைக் கைது செய்தது. இவ்வளவு அடக்குமுறைக்கு இடையிலும் 'பந்த்' வெற்றி கரமாக நடந்தது. மக்கள் மத்தியில் அதிமுக அரசு மீது கடுமை யான எதிர்ப்பு ஏற்பட்டது.

வாச்சாத்தி வழக்கு - அமைச்சர் செங்கோட்டையன் தலையீடு - கண்டனக்குரல்

3.13 தோழர் ஏ.நல்லசிவன் சார்பில் வாச்சாத்தி வழக்கு தொடுக்கப் பட்டது நாம் அறிவோம். அது நீண்ட நாட்களாக நடந்து வரு கிறது. இந்த வழக்கில் அதிமுக அமைச்சர் செங்கோட்டையனும், அதிமுகவினரும் தலையிட்டு, அப்பகுதி மக்களையும், நீதிபதி யையும் மிரட்டுவது குறித்து பத்திரிகைகளில் விரிவான அறிக்கை களும், கட்டுரைகளும் வெளியிட்டோம். அமைச்சர் செங்கோட் டையனை அமைச்சர் பொறுப்பிலிருந்து நீக்கக்கோரி அக்டோ பர் 5ம்தேதி தமிழகத்தில் முக்கிய மையங்களில் மக்கள் கூடும் இடங்களில் மாலைநேர தர்ணா நடத்தினோம்.

3.14 வாச்சாத்தி வழக்கினை நடத்தவும், ஊழியர்களைப் பாது காக்கவும் நிதி வசூலுக்கு அறைகூவல் விட்டோம். தோழர் கே.வரதராசன் பெயருக்கு நிதி அனுப்பி வைக்க வேண்டினோம்.

மறியல் போராட்டம்

3.15 மத்திய காங்கிரஸ் அரசின் மக்கள்விரோத பொருளாதாரக் கொள்கை, லஞ்ச ஊழல் ஆகியவற்றை எதிர்த்தும், மாநில அதிமுக அரசின் மக்கள்விரோதக் கொள்கை, லஞ்ச ஊழல் நடவடிக்கைகளை எதிர்த்தும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் உடனடியாகத் தேர்தல் நடத்தக்கோரியும் நம் கட்சியும், மதிமுக கட்சியும் சேர்ந்து 1995 ஆகஸ்ட் 16ம்தேதி கூட்டாக மாநிலம் பூராவும் மறியல் நடத்த முடிவெடுத்தன.

3.16 இந்த மறியல் வெற்றியடைய இரு கட்சிகளின் ஊழியர் கூட்டங்கள் மாவட்டங்களில் நடத்தப்பட்டன; ஊழியர் கூட்டங்களிலும் இரு கட்சிகளின் ஊழியர்களும் போட்டிபோட்டுக் கொண்டு கலந்துகொண்டனர். ஆனால் மறியலில் நம் கட்சி அணிகள்தான் அதிகமாக கலந்துகொண்டன.

மத்திய - மாநில அரசுகளை எதிர்த்து போராட்டம்

3.17 மத்திய - மாநில அரசுகளின் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து நமது கட்சியும், மதிமுகவும் இணைந்து ஒன்றிய- வட்ட அளவில் 1995 மார்ச் 27ம்தேதி ஆர்ப்பாட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டது.

3.18 இந்த ஆர்ப்பாட்டத்தில் நம் கட்சி சார்பில் மாநில செயற்குழு தோழர்கள் கலந்து கொள்ளும் பட்டியல் வெளியிட்டோம். அவ்வாறே மதிமுக சார்பிலும் பட்டியல் வெளியிடப்பட்டது.

3.19 மக்கள் பெரும் அளவில் கூடும் பொது இடங்களில் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. பல மாவட்டங்களில் இந்த ஆர்ப்பாட்டங்கள் சக்தியாக நடைபெற்றன. நம் அணிகள் ஆர்ப்பாட்டத்தில் மிகுந்த எண்ணிக்கையில் கலந்து கொண்டன. சென்னை போன்ற இடங்களில் இந்த ஆர்ப்பாட்டம் மிக எடுப்பாக இருந்தது.

1995 அக்டோபர் பேரணி

3.20 உள்ளாட்சி அமைப்புகளுக்கும் கூட்டுறவு அமைப்புகளுக்கும் உடனடி தேர்தல் நடத்தக்கோரியும் நியாய விலை கடைகளில் 14 அத்தியாவசிய பொருட்களை வழங்கக்கோரியும் 1995 அக்டோபர் 10ல் மாநிலமெங்கும் மாவட்ட தலைநகரங்களில் ஊர்வலங்கள் நடந்தன.

3.21 நமது கட்சியும் மதிமுகவும் இணைந்து இந்த ஊர்வலங்களை நடத்தின. மாவட்டங்களிலிருந்து வந்த தகவல்படி இந்த ஊர்வலங்கள் பல இடங்களில் சிறப்பாக இருந்தன.

இடதுசாரிகளின் அறைகூவல்

3.22 ஹவாலா ஊழலில் சிக்கியுள்ள பிரதமர் ராஜினாமா செய்யக் கோரி இடதுசாரி கட்சிகள் அறைகூவல்விட்டன. அந்த அறை கூவலுக்கு இணங்க தமிழகத்திலும் 1996 பிப்ரவரி 10ம்தேதி ஆர்ப் பாட்டம் நடந்தது. நமது கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், சில இடங்களில் பார்வர்ட் பிளாக் கட்சியும் சேர்ந்து இந்த ஆர்ப் பாட்டங்கள் நடைபெற்றன.

3.23 ஹவாலா மோசடி பற்றியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள பல அரசியல் கட்சித் தலைவர்களின் முகத்திரையைக் கிழிக்கவும் மத் தியக்குழு 'ஹவாலா ஊழல் - தேசத் துரோகிகளை கூண்டில் ஏற்று' என்ற புத்தகத்தை வெளியிட்டது. இதை மொழிபெயர்த்து நம் கட்சி சார்பில் வெளியிட்டோம்.

3.24 மீண்டும் கட்சியின் மத்தியக்குழு 'ஊழல் எதிர்ப்பு தினம்' கடை பிடிக்க வேண்டும் என்று அறைகூவல் விட்டது. முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் உட்பட ஊழல் செய்த அனைவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய அரசை வற் புறுத்தி 28.10.96 அன்று மத்திய அரசு அலுவலகங்கள் முன்பு ஆர்ப் பாட்டம் நடத்தப்பட்டது.

3.25 சர்க்கரை ஊழல், 'டெலிகாம் ஊழல், உர ஊழல், ரயில்வே இன்ஜின் வாங்கியதில் ஊழல், ஹவாலா ஊழல் என அடுக் கடுக்காக புற்றீசல்கள் போல் ஊழல்கள் வெளிவந்தக் காரணத் தால் ஊழல் செய்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்கக்கோரி இயக்கம் நடத்தியதால் இது மக்கள் அனைவரின் கவனத்தையும் வெகுவாக கவர்ந்து ஈர்த்தது. அதோடு, தமிழகத்தில் ஊழல் செய்த முன்னாள் அதிமுக அமைச்சர்கள், தமிழக உயர் அதிகாரிகள், நெய்வேலி நிறுவனத் தலைவர் மற்றும் இந்தியன் வங்கி ஊழலில் ஈடுபட்ட அதிகாரிகள் மற்றும் பிரமுகர்கள் எனப் பலர் மீதும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனக் கோரி மாவட்ட தலைநகரங்களில் மத்திய அரசு அலுவலகங்கள் முன்னால் ஆர்ப் பாட்டங்கள் நடத்திய காரணத்தால் இந்த இயக்கம் மக்களின் கூடுதல் கவனத்தை ஈர்த்தது.

3.26 இப்படி மக்களின் அடிப்படை பிரச்சனைகள் மீதும், ஜனநாயக நிறுவனங்களுக்கு தேர்தல் நடத்த வற்புறுத்தியும், ஊழல்களை அம்பலப்படுத்தியும், புதிய பொருளாதாரக் கொள்கைகளின் ஆபத்தை விளக்கியும், நமது கட்சி தனியாகவும், கூட்டாகவும் பல்வேறு இயக்கங்களை நடத்தியது.

3.27 இதுமட்டுமல்லாமல் நமது அரசியல் பிரச்சாரம் மக்கள் மத்தியில் நேரடியாக சென்றடைய வேண்டும் என்ற நோக்கோடு மூன்று பிரசுரங்களை வெளியிட்டோம். அதிமுக அரசின் ஜனநாயக விரோத நடவடிக்கைகளையும், அடக்குமுறைகளையும் விவரித்து ஒரு பிரசுரமும், மேற்குவங்க இடதுமுன்னணி அரசின் தொழில் கொள்கையை விளக்கி ஒரு பிரசுரமும், கட்சியின் மாற்றுப் பொருளாதாரத் திட்டம் பற்றி ஒரு பிரசுரமும் வெளியிட்டோம்.

3.28 சட்டமன்ற - நாடாளுமன்ற தேர்தல்கள் நடந்து முடிந்த பிறகு மத்தியிலும், தமிழகத்திலும் அரசியல் மாற்றம் ஏற்பட்டது.

3.29 நம் கட்சியின் கொள்கையின்படி, நாம் வகுத்த நடைமுறை அரசியல் கொள்கைப்படி மத்தியில் காங்கிரஸ் கட்சி தோற்கடிக்கப்பட்டது. பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வருவது தடுக்கப்பட்டது. ஐக்கிய முன்னணி ஆட்சி அமைந்தது. தமிழகத்தில் அதிமுக ஆட்சி தோற்கடிக்கப்பட்டு திமுக ஆட்சி ஏற்பட்டது.

3.30 ஆனால் நரசிம்மராவ் ஆட்சியில் நடந்தது போலவே, ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் நாசகரமான புதிய பொருளாதாரக் கொள்கை அமுல்படுத்தப்படுகிறது.

3.31 தமிழகத்திலும், திமுக ஆட்சி, அதிமுக ஆட்சி காலத்தில் இருந்தது போலவே மத்திய அரசின் புதிய பொருளாதாரக் கொள்கைகளை அமுல்படுத்துவதில் முன்னணியில் நிற்கிறது.

3.32 எனவே, மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டாலும் இந்த இரண்டு ஆட்சிகளும் கடைப்பிடிக்கும் புதிய பொருளாதாரக் கொள்கைகளை எதிர்த்து தொடர்ந்து போராடுவது மிக அவசியமாகிறது.

மாற்று பொருளாதாரக் கொள்கை – மாநில சிறப்பு மாநாடு

3.33 புதிய பொருளாதாரக் கொள்கையில் காங்கிரஸ் கட்சியின் அடிச்சுவட்டிலேயே ஐக்கிய முன்னணி அரசும் செல்லுவதால் நம் கட்சி சார்பில் இதற்கு மாற்றாக பொருளாதார கொள்கை வைத்து பிரச்சாரம் செய்வதற்கு ஏதுவாகவும்; நாட்டின் இறையாண்மையைப் பாதுகாக்கவும் 1996 டிசம்பர் 18ம்தேதி சென்னையில் சிறப்பு மாநாடு நடத்தினோம்.

3.34 பொருளாதார நிபுணர் டாக்டர் குரியன், சிபிஐ சார்பில் எஸ்.எஸ்.தியாகராஜன், பிரண்ட் லைன் ஆசிரியர் என்.ராம், டி.கே. ரெங்கராஜன், ஏ.சௌந்தரராசன், சுதாசுந்தரராமன், டி.ரவீந்திரன், என்.சங்கரய்யா, பிரகாஷ் காரத். ஆகியோர் பங்கேற்றனர். இம்

மாநாட்டில் பொருளாதார மாற்றுக்கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யும் இயக்கத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. குறுகிய அவகாசத்தில் இம்மாநாடு நடைபெற்றாலும் புயல் வெள் ளத்தால் பல இடையூறுகள் ஏற்பட்டிருந்த நிலையிலும், தமிழகத் திலும் பல்வேறு மாவட்டங்களிலிருந்து கட்சித் தோழர்கள் இதில் பங்கேற்றனர். இம்மாநாட்டிற்கு நல்ல விளம்பரமும் கிடைத்தது.

பெட்ரோல், டீசல் விலை உயர்வு-பேருந்து கட்டண உயர்வு

3.35 நம் கட்சி எவ்வளவு தூரம் எதிர்த்தும், மத்தியில் உள்ள ஐக்கிய முன்னணி ஆட்சி பெட்ரோல், டீசல் விலையை உயர்த்திவிட் டது. இது விஷயத்தில் நம் கட்சி வைத்த மாற்று திட்டத்தைக்கூட ஏற்க மறுத்துவிட்டது. இப்படி பெட்ரோல், டீசல் விலை உயர் வைக் கண்டித்து தமிழகத்தில் பல இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்தினோம்.

3.36 பெட்ரோல், டீசல் விலை உயர்வைப் பயன்படுத்தி திமுக அரசு பேருந்து கட்டண உயர்வை பல மடங்கு உயர்த்திவிட்டது. மக்கள் மத்தியில் கடும் கோபம் கிளர்ந்தெழுந்தது.

3.37 நாம் பேருந்து கட்டண உயர்வை எதிர்த்து எல்லா மாவட்டங் களிலும் ஆர்ப்பாட்டம் நடத்தினோம். சென்னையில் மட்டும் 6.10.97 அன்று மறியல் நடத்தினோம். இந்த மறியலில் சுமார் 3000 பேர் கலந்துகொண்டனர். நூற்றுக்கணக்கான பெண்கள் கலந்து கொண்டார்கள். இந்த மறியலுக்கு பத்திரிகைகளும், தொலைக் காட்சியும், வானொலியும் நல்ல விளம்பரங்கள் தந்தன.

3.38 நாம் கட்சியின் மாநாட்டு பணிகளில் ஈடுபட்டுக் கொண்டி ருந்ததால் தமிழகம் பூராவும் மறியலுக்கு அறைகூவல் விட வில்லை. இருப்பினும் மாநிலம் முழுவதும் மறியலுக்கு அறை கூவல் விட்டிருக்க வேண்டும் என்ற விமர்சனம் சரியானதுதான்.

விலைவாசி உயர்வைக் கண்டித்து இயக்கம்

3.39 அரசியல் தலைமைக்குழு, விஷம்போல் ஏறிவரும் விலைவாசி உயர்வைக் கண்டித்து நாடு முழுவதும் இயக்கம் நடத்த வேண்டு மென அறைகூவல் விட்டது. கட்சியின் தமிழ் மாநிலக்குழு சார் பிலும் மக்களின் நலன் காக்க மாற்று பொருளாதாரக் கொள்கை களை மக்களிடம் எடுத்துச்செல்ல திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

3.40 இதற்கு ஏற்ற வகையில் 1997 ஜனவரி 26 முதல் 31 வரை தமிழகத் தில் பரவலாக மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை முன் வைத்து பிரச்சாரம் செய்தோம்.

- நியாய விலைக் கடைகளின் மூலம் மக்கள் அன்றாடம் பயன் படுத்தும் அத்தியாவசியப் பொருட்களைக் குறைந்த விலையில் வழங்க வேண்டும்.
- உள்நாட்டு சந்தையில் போதிய அளவில் உணவுப்பொருட்களின் இருப்புக்கு உத்தரவாதம் உருவாகும் வரை, உணவுப் பொருட் களை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதை நிறுத்த வேண்டும்.
- அரசாங்கம் உணவுப் பொருட்களை போதிய அளவில் சேமிக்கும் திட்டத்தைப் பலப்படுத்த வேண்டும். உணவுப் பொருட்களைப் பதுக்கி வைக்கும் கள்ள வியாபாரிகள் மீது கடுமையான நட வடிக்கைகளை எடுக்க வேண்டும். பதுக்கல் பொருட்களை அர சாங்கம் வெளிக்கொணர வேண்டும்.
- அத்தியாவசியப் பொருட்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

3.41 மேற்குறிப்பிட்ட இந்தக் கோரிக்கைகளை முன்வைத்து தமிழகத் தில் 6 நாட்கள் பிரச்சாரம் செய்தபின், அரசியல் தலைமைக்குழு வின் அறைகூவல்படி பிப்ரவரி 1ம்தேதி மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஒன்றிய பகுதிகளில் மக்கள் கூடுகின்ற இடங்களில் தர்ணா நடத்தினோம்.

உழைக்கும் மக்களின் நலன்காக்க, சுயசார்பு தன்மை பேண நாடுதழுவிய மக்கள் இயக்கம்

3.42 ஐக்கிய முன்னணி அரசு கடைப்பிடிக்கும் கொள்கையால் உழைக்கும் மக்களின் உரிமைகள் பறிபோகும் நிலையும், நாட் டின் சுயசார்பு தன்மைக்கு ஊறுவிளையும் ஆபத்தும் இருப்பதால் அக்கொள்கைகளைக் கண்டித்து 1997 ஜூலை 25 முதல் 31 வரை வெகுஜன இயக்கம் நடத்த மத்தியக்குழு அறைகூவல்விட்டது.

3.43 அதனடிப்படையில் தமிழகத்தில் 1997 ஜூலை 24ல் கோவை யிலும், ஜூலை 22ம்தேதி தஞ்சையிலும், ஜூலை 26ம்தேதி சென் னையிலும், ஜூலை 27ம்தேதி மதுரையிலும் பெரிய அளவில் பேரணி நடத்துவதென முடிவு எடுக்கப்பட்டது.

கோவை பேரணியில் பங்கெடுத்த மாவட்டங்கள் -

கோவை (மேற்கு),
கோவை (கிழக்கு), நீலகிரி,
பெரியார், சேலம், தருமபுரி

தஞ்சை பேரணியில் பங்கெடுத்த மாவட்டங்கள் -

தஞ்சை, திருச்சி,
புதுக்கோட்டை, கரூர்,
பெரம்பலூர், திருவாரூர், நாகை.

சென்னை பேரணியில் பங்கெடுத்த மாவட்டங்கள்

வடசென்னை, தென்சென்னை
காஞ்சிபுரம், திருவள்ளூர்,
வேலூர், திருவண்ணாமலை,
விழுப்புரம், கடலூர்,
பாண்டிச்சேரி.

மதுரையில் தென்மாவட்டங்களிலிருந்து மக்கள் கலந்து கொண்டனர்.

3.44 சென்னையிலும், மதுரையிலும் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் சுர்ஜித் கலந்து கொண்டார்.

- தஞ்சையில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் சீத்தாராம் யெச்சூரி கலந்து கொண்டார்.
- கோவையில் அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் பிரகாஷ் காரத் கலந்து கொண்டார்.

கிளர்ச்சி – பிரச்சாரம்

3.45 இப்படி நாம் கடந்த 33 மாதங்களில் மக்களின் கோரிக்கைகள் மீது பல்வேறு இயக்கங்களை நடத்தியுள்ளோம். ஆயினும் நாம் பரிசீலிக்க வேண்டிய விஷயம், நாம் நடத்திய போராட்டங்கள், பிரச்சார இயக்கங்கள் மக்களிடம் எவ்வளவு தூரம் சென்றடைந்துள்ளன; நம் அணிகள் இதுபோன்ற போராட்டங்களில் எவ்வளவு பேர் பங்கு பெறுகிறார்கள் என்பதையெல்லாம் உடனுக்குடன் பரிசீலிக்க வேண்டும். குறைபாடுகள் இருந்தால் அவற்றைக் களைய முயற்சிகள் எடுக்க வேண்டும்; சம்பிரதாயபூர்வமாக இயக்கங்கள் முடிந்துவிடக்கூடாது; மக்கள் பிரச்சனைகளுக்காக நாம் நடத்தும் இயக்கங்களில் பொதுமக்களும் பங்குபெற தனி முயற்சிகள் எடுக்க வேண்டும்; இதில் கவனக்குறைவு உள்ளது.

3.46 நம்முடைய அனுபவத்தில் தெருமுனைப் பிரச்சாரம்தான் மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது என தெரியவந்தது. மக்கள் கூடும் இடங்களில் நாமாகச் சென்று கிளர்ச்சி பிரச்சாரம் செய்ய வேண்டும். இதில் செலவு குறைவது மட்டுமல்ல; பரவலாக மக்களிடம் நம் கொள்கைகள் செல்ல வழிவகுக்கிறது.

3.47 அண்மைக்காலங்களில் நம் கட்சியின் கருத்துக்களை, செய்திகளை பத்திரிகைகள் ஓரளவு முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. நம் தலைவர்களின் கருத்துக்களை, கட்டுரை களை வார, மாத பத்திரிகைகள் வெளியிடுகின்றன. இதை மேலும் தொடர வேண்டும். முதலாளித்துவப் பத்திரிகைகள், வானொலி மற்றும் தொலைக்காட்சியில் நம் செய்திகள் மேலும் மேலும் வரு வதற்கு அவைகளைப் பயன்படுத்த வேண்டும்.

3.48 மக்கள் பிரச்சனைகள் சம்பந்தமாக நாம் வெளியிடும் பிர சுரங்களை நமக்குள்ளேயே விற்பது - விநியோகிப்பது என்ப தோடு, பொதுமக்களிடம் பரவலாக விற்பனை - விநியோகம் செய்ய வேண்டும். இதை ஓர் இயக்கமாகவே நடத்த வேண்டும். முதலாளித்துவ கட்சிகளிடம் உள்ள பிரச்சார வசதிகள் நம்மிடம் கிடையாது என்பதைக் கருத்தில் கொண்டு உணர்வுபூர்வமாக கிளர்ச்சிப் பிரச்சாரத்தை நடத்துவது பிரதான அரசியல் கடமையாகும்.

சுதந்திர பொன்விழா

3.49 மத்தியக்குழுவின் முடிவின்படி தமிழகத்திலும் நம் கட்சி சார்பில் 50ம் ஆண்டு சுதந்திரப் பொன்விழாவினைக் கொண் டாடினோம். 97 ஆகஸ்ட் 15ம்தேதி மாநிலக்குழு அலுவலகத்திலும், மாவட்டங்களில் கட்சி அலுவலகங்களிலும் தேசியக்கொடியும், கட்சிக்கொடியும் ஏற்றி பொன்விழா கொண்டாடப்பட்டது.

3.50 மாவட்டங்களில் இந்த விழாவை ஒட்டி சுதந்திர 'பொன்விழா' பொதுக்கூட்டங்கள் நடந்தன. சில இடங்களில் 'ஹால் கூட் டங்கள்' நடந்தன.. சுதந்திரப் போராட்டங்களில் கம்யூனிஸ்டு களின் பங்கு பற்றியும், மக்களின் அளப்பரிய தியாகங்கள் பற்றி யும் அனைத்து மக்களின் போராட்டம்தான் சுதந்திரப் போராட் டம் என்றும் பேசினோம்; கட்டுரைகளை எழுதினோம்.

3.51 தீக்கதிர், சுதந்திரப் பொன்விழா சிறப்பு மலர் ஒன்றை வெளியிட் டது. மலர் சிறப்பாக இருந்தது. இருப்பினும், இந்த விழாவினை, மேலும் பரவலாகவும், சிறப்பாகவும் நாம் கொண்டாடியிருக்க வேண்டும். இனி, ஒவ்வொரு ஆண்டும் கட்சி, சுதந்திர விழா வினைக் கொண்டாட வேண்டும். பொன்விழாவின் நிறைவு விழாவை விரிவாக கொண்டாட திட்டமிட வேண்டும். நிறைவு விழாவிற்கு முன் தலித்துகளுக்கு 'தனி தம்ளர்' எனும் பாரபட் சம் ஒழிக்கப்பட வேண்டும் என்ற கோஷம் முன்வைக்கப்பட வேண்டும்.

3.52 கட்சி சார்பில் தோழர் சங்கரய்யா தலைமையில் ஒரு குழு, தமிழக முதலமைச்சரை சந்தித்து இந்த சுதந்திரப் பொன்விழா ஆண்டை, ஆண்டு முழுவதும் 'தீண்டாமை ஒழிப்பு' ஆண்டாகக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டது.

3.53 மாநில அரசு அமைத்துள்ள சுதந்திரதின பொன்விழாக் குழுவில் தோழர் என்.சங்கரய்யா, கட்சியின் சார்பில் உறுப்பி னராக உள்ளார். இந்தக் குழுவின் முதற்கூட்டத்தில், இந்த ஆண்டை பயனுள்ள முறையில் நடத்துவதற்கான பல ஆலோ சனைகளை கட்சியின் செயற்குழுவின் சார்பில் தோழர் என். சங்கரய்யா முன்மொழிந்தார். நாம் கூறிய ஆலோசனைகள் சிலவற்றை அரசு செயல்படுத்தியுள்ளது.

- பொன்விழா ஆண்டு "தீண்டாமை ஒழிப்பு" ஆண்டாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.
- சாதிக்கலவரங்களுக்கான அடிப்படை காரணங்களை ஆய்வு செய்ய நாம் கோரிய வகையில் நீதிபதி மோகன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.
- பள்ளிகளில் மாணவ, மாணவியர் தீண்டாமை ஒழிப்பு உறுதி மொழி ஏற்க வகை செய்யப்பட்டுள்ளது.

கட்சி வளர்ச்சி நிதி - உண்டியல் வசூல்

3.54 கட்சி நிதி திரட்டுவதில் ஒரு பகுதியாக 1997 மே 14, 15 தேதிகளில் தமிழகம் முழுவதும் கட்சி அணிகள் உண்டியல் வசூல் செய்து, மாநில மையத்துக்கு அனுப்பிவைக்க முடிவு எடுக்கப்பட்டது. இந்த நிதி வசூல் இயக்கத்தில் கட்சி அணிகளுக்கு நல்ல அனுப வங்கள் ஏற்பட்டன. எங்கெல்லாம் திட்டமிட்டு, குழுக்கள் அமைத்து, ஆர்வத்தோடு உண்டியல் வசூல் நடந்ததோ, அங்கெல் லாம் நல்ல நிதி வசூல் நடந்தது. மக்கள் மனமுவந்து நிதி வழங்கி னார்கள். எங்கெல்லாம் இப்படி திட்டமிட்ட பணி இல்லையோ அங்கெல்லாம் நிதி வசூலில் தொய்வு ஏற்பட்டது. திட்டமிட்டு வசூல் செய்த மாவட்டக்குழுக்களுக்கும், கட்சி அணிகளுக்கும் ஒரு தெம்பும் நம்பிக்கையும் ஏற்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சி கருத்தரங்கு

3.55 தமிழகத்தில் துறைகள்தோறும் தமிழுக்கு முதலிடம் தர வேண்டும்; ஆரம்பக் கல்வி முதல் தொழில்நுட்ப, அறிவியல் கல்வி வரை தமிழ் மொழியில் பயிற்றுவிக்க வேண்டும். சட்டத் துறையில் தமிழ் வழக்கு மொழியாக்கப்பட வேண்டும் - என்ற கொள்கைகளை முன்நிறுத்தி தமிழகம் முழுவதும் ஏப்ரல் 14ம்

தேதி தமிழ் வளர்ச்சி கருத்தரங்குகளை தமிழகம் முழுவதும் நடத்த வேண்டுமென கட்சியின் 15வது மாநாட்டில் முடிவெடுத்தோம். அம்முடிவினை கட்சி அணிகள் மிகச் சிறப்பாகவே அமல்படுத்தின. சில இடங்களில் இது பொதுக்கூட்டமாகவே நடத்தப்பட்டது. நம் கருத்துக்களுக்கு மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது.

3.56 சில மாவட்டங்களில் நமது கருத்தோடு இணைந்து வரும் கலை - இலக்கிய வல்லுநர்களையும், தமிழ் அறிஞர்களையும் இந்தக் கருத்தரங்குகளில் பயன்படுத்தினர். மொழிப்பிரச்சனையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை விளக்கிக் கூற நல்ல வாய்ப்பு கிடைத்தது. இங்கே ஒன்றை நாம் நினைவுகூர வேண்டும்! திமுகவும், அதிமுகவும் கடந்த 30 ஆண்டுகளாக ஆட்சியில் இருந்தாலும், அக்கட்சிகள் தாய்மொழியாம், தமிழ் வளர அதிகமாக சேவை செய்துவிட்டதாகச் சொன்னாலும், உண்மை நிலை அவ்வாறு இல்லை. ஒவ்வொரு புத்தாண்டு அன்றும் தமிழ் வளர்ச்சி தினம் நம்மால் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

இலங்கைப் பிரச்சனை

3.57 இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைகளை சுமூகமாக தீர்த்து வைக்கவும், யுத்தத்தை நிறுத்தி அமைதி உருவாக்கவும், அதிபர் திருமதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்ட அனைத்து முயற்சிகளையும் சீரழிக்கும் முறையில் எல்டிடிஇயினர் தொடங்கிய தாக்குதல்களின் விளைவாக இலங்கையில் மீண்டும் போர் துவங்கி தமிழ் மக்கள் பெரும் துயரத்துக்கு ஆளானார்கள். இது சம்பந்தமாக அரசியல் தலைமைக்குழுவும் மாநில செயற்குழுவும் தீர்மானம் நிறைவேற்றின.

3.58 ஆகவே, இந்தப் பிரச்சனையில் நம் கட்சியின் அரசியல் நிலையை கட்சி அணிகளுக்கு விளக்க, மாவட்டங்களில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சிக்கலான இந்தப் பிரச்சனையில் நம் அணிகள் மத்தியில் தெளிவு ஏற்பட இந்த பேரவைக் கூட்டங்கள் பெரிதும் உதவின.

3.59 1983 முதல் இலங்கைப் பிரச்சனையில் நாம் ஒரு தெளிவான நிலை எடுத்தோம். எனவேதான் இந்த விஷயத்தில் மற்ற கட்சிகள் தடுமாறியபோதும், ஒன்றுபட்ட இலங்கையில் தக்க சுயாட்சி அடிப்படையில் ஈழத் தமிழர்கள் வாழ வேண்டுமென்ற நம் கொள்கையில் நாம் உறுதியாக இருந்தோம். மற்ற கட்சிகளிடமிருந்து நம் நிலையை வேறுபடுத்திக் காட்டினோம்.

இலங்கைப் போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மருந்து அனுப்பி வைத்தல்

3.60 இலங்கைப் பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம்தான் தீர்வு காண முடியும். இதற்கு எல்டிடிஇயினரும் செவிமடுக்க வேண்டும். இலங்கை அரசும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முன்வர வேண்டும். இராணுவ நடவடிக்கை தீர்வாகாது என வலியுறுத்தும் அதேநேரத்தில் போரில் கடுமையாக பாதிக்கப்பட்ட இலங்கை தமிழ் மக்களுக்கு மருந்துகள் சேகரித்து வழங்க முடிவு எடுத்தோம். மாவட்டக் குழுக்கள் இதில் தனி அக்கறை செலுத்தி ஏராளமான மருந்துகள் சேகரித்து மாநில மையத்துக்கு அனுப்பி வைத்தன. ஆனால் நாம் பல முயற்சிகள் எடுத்தும் மருந்துகளை இலங்கைக்கு அனுப்பிவைக்க அனுமதி கிடைக்கவில்லை. கடைசியாக அம்மருந்துகளை செஞ்சிலுவை சங்கத்துக்கு கொடுத்துதவினோம்.

அரசியல் வன்மங்கள் - கொலைகள்

3.61 ஜெயலலிதா தலைமையில் ஆட்சி அமைத்த ஐந்தாண்டுகளில் அரசியல் காரணங்களுக்காக பழிதீர்க்கும் போக்கு, வன்முறை மூலம் நபர்களைத் தாக்குவது, கொல்வது என்பது அதிகமாக நடந்தன.

3.62 அதிமுக அரசை விமர்சனம் செய்யும் பத்திரிகைகள் மீது தாக்குதல் தொடுப்பது, பத்திரிகை அலுவலகத்திலேயே புகுந்து ஆட்களை வெட்டி சாய்ப்பது, வழக்கறிஞர்களையும் கொடுமையான முறையில் தாக்கி வஞ்சம் தீர்ப்பது, எதிர்க்கட்சிகள் நடத்தும் பொதுக்கூட்டங்களுக்கு வந்த ஆட்களை இரும்புக்குழாய்களாலும், சவுக்கு கட்டைகளாலும் தாக்கி ரணகளமாக்குவது, கூட்ட மேடையில் உள்ள தலைவர்கள் மீது கல் வீசுவது, சோடா பாட்டில்களால் தாக்குவது, மேடைகளை அடித்து நொறுக்குவது, பத்திரிகை நிருபர்கள், புகைப்படக்காரர்கள் மீது பாய்வது, அரசுக்கு எதிராக தீர்ப்பு சொல்லும் நீதிபதிகளையே மிரட்டுவது, அவர்களின் உறவினர்கள் மீது பொய் வழக்கு போடுவது போன்ற வன்மங்கள் தொடர்ந்து நடந்து வந்தன.

3.63 நம் கட்சித் தோழர் தங்கய்யன் குடவாசல் காவல்நிலைய வாயிலில் காவல்துறையினரின் முன்னாலேயே அதிமுகவின் கொலைவெறி கொண்ட ராஜேந்திரன் கும்பலால் கொலை செய்யப்பட்டார்.

3.64 சட்டமன்றத்திலேயே மரபுகளை மீறி எதிர்க்கட்சியினரைத் தாக்கிய நிகழ்ச்சிகளும் பல. அதிமுகவின் இப்படிப்பட்ட

அரசியல் வன்முறைகள், கொலைகள் மக்கள் மத்தியில் கடுமை யான கோபத்தையும், அதிருப்தியையும் உருவாக்கி இருந்தன.

3.65 ஆனால் இப்போது திமுக ஆட்சிக்கு வந்த பிறகும், அரசியல் வன்முறைகள், கொலைகள் என்பது அதிமுக ஆட்சியில் இருந்தது போல் தலைவிரித்து ஆடவில்லை என்றாலும், அதேபாணியில் தொடரவே செய்கிறது.

3.66 1996ம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் நடந்தபோதே மதுரையில் நம் கட்சித் தோழர் "கருப்பு" திமுக் குண்டர்களால் கொலை செய் யப்பட்டதை நாம் அறிவோம்.

3.67 நியாயத்திற்காகவும், நேர்மைக்காகவும், பொதுவாழ்வில் தூய் மைக்காகவும் போராடிய நம் கட்சித் தோழர் லீலாவதி திமுக குண்டர்களால் பட்டப்பகலில் வெட்டி சாய்க்கப்பட்டது அப்பட் டமான கொடூர கொலையாகும்.

3.68 உள்ளாட்சிமன்ற தேர்தல்களுக்குப் பிறகு திமுக அணிகள் மத்தி யிலேயே அதிருப்தியாளர்களுக்கும், பதவி பெற்றவர்களுக்கும் இடையில் போட்டி, பொறாமையின் காரணத்தால் ஒருவரை யொருவர் தீர்த்துக் கட்டும் நடவடிக்கைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இதுவரை 10 நபர்களுக்கு மேல் கொல்லப்பட்டுள் ளனர். உள்ளாட்சிமன்ற தேர்தல்களில் மற்ற கட்சியினரும் திமுக வினரால் தாக்கப்பட்டுள்ளனர்.

3.69 சமூகவிரோதிகள் அரசியலில் கால் ஊன்றி தங்களின் சொந்த நலன்களுக்காக பலாத்காரத்தில் ஈடுபடுவதும், பழிதீர்த்துக் கொள்ள, கொலைகளைச் செய்வதும் அதிகரித்து வருகின்றன. ஒன்று திரண்ட மக்கள் சக்தியினால்தான் வன்முறை அரசியலுக்கு முடிவுகட்ட முடியும்.

காவல்துறையினரின் அராஜகம்

3.70 ஜெயலலிதா ஆட்சிகாலத்தில் காவல்துறையினரின் அராஜக செயல்கள், விசாரணை என்ற பெயரால் சித்ரவதை, லாக்கப் சாவுகள் என்பது ஏராளமாக நடந்து கொண்டிருந்தன. இவை களை எதிர்த்து போராடியதில், அம்பலப்படுத்தியதில் நம் கட்சி யின் பங்கு சிறப்பானது. பலமுறை கண்டனக் கூட்டங்கள், தர் ணாக்கள், ஆர்ப்பாட்டங்கள் என நடத்தினோம். அதிமுகவின் ஆட்சி காலத்தில் நடந்த சிதம்பரம் நந்தகோபால் கொலை முதற் கொண்டு அனைத்துக் கொடுமைகளையும் விளக்கி ஒரு சிறு பிரசுரம் வெளியிட்டோம்.

371 அதிமுக ஆட்சி காலத்திலும் இந்த காவல்துறை கொடுமைகள் நடந்தது என்றால், ஆட்சி மாறி திமுக அதிகாரத்தில் அமர்ந்தும் இப்போதும் காவல்துறை கொடுமைகள் தொடர்ந்து நீடிக்கின்றன.

372 திமுக ஆட்சியில் இதுவரை 14 லாக்கப் கொலைகள் நடந்துவிட்டன. மக்களின் மத்தியில் கடுமையான எதிர்ப்பு கிளம்பி காவல் நிலையத்தை முற்றுகை இடுவது, காவல்துறையினரை திருப்பித் தாக்குவது போன்ற சம்பவங்கள் நடந்து வருகின்றன. மாவட்டங்களில் நம் கட்சித் தோழர்கள் இதுபோன்ற பிரச்சனைகளை முன்னெடுத்து பல இடங்களில் இயக்கம் நடத்தி வருகின்றனர்.

373 காவல்நிலையத்தில் சித்ரவதை மரணம் என்பது மனித உரிமையை மீறும் செயலாகும், இதுசம்பந்தமாக நீதிமன்றம் கூறியுள்ள கருத்துக்களை தமிழக அரசு அமுல்படுத்த வேண்டுமென்று கோரி வருகிறோம்.

1) விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் ஒரு நபரின் நெருங்கிய உறவினரிடம் கையெழுத்திட்டு கடிதம் கொடுத்துவிட்டு அழைத்து செல்ல வேண்டும்.

2) விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படும் நபர் எங்கு வைக்கப்பட்டுள்ளார் என்கிற தகவலை உறவினருக்கு கொடுக்க வேண்டும்.

3) விசாரணையில் உள்ள அந்த நபரை உறவினர்கள் சென்று பார்க்க அனுமதிக்க வேண்டும்.

4) காவல்நிலையத்தில் மரணம் ஏற்பட்டுவிட்டால் மேல் அதிகாரிகள் பொறுப்பு என்ற கட்டாயம் உருவாக்க வேண்டும்.

5) காவல்நிலையத்தில் மரணம் நடந்துவிட்டால், சம்பந்தப்பட்ட காவல்துறையினர் கொலைக்குற்றத்தில் கைது செய்யப்பட வேண்டும்.

6) காவல்துறையினருக்கு மனித உரிமைகள் குறித்து தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும்;

374 மேற்குறிப்பிட்ட ஆலோசனைகள் நடைமுறைக்கு வரவேண்டுமானால், மக்கள் இயக்கங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும். நம் கட்சியும் தொடர்ந்து இதுபற்றி பிரச்சாரம் செய்ய வேண்டும்.

பெண்கள் மீது தாக்குதல்கள்

375 சமுதாயத்தில் ஆண் ஆதிக்கத்துக்கு பெண்கள் அன்றாடம் ஆட்பட்டு வருகிறார்கள் என்பது ஒரு பக்கம்; சமூகத்தில் உள்ள சில நெறிகெட்ட வெறியர்களால் பாதிக்கப்பட்டு வருவதும் மறு

பக்கம். இவை இரண்டுக்கும் மேலாக சட்டம் - ஒழுங்கை காப்பாற்ற வேண்டிய காவல்துறையினரின் கொடுமைக்கும், வெறிக்கும் பலியாகி நாசப்படுத்தப்படும் பெண்களின் நிலை மற்ற எல்லாவற்றையும்விட இதயம் பிழியும் நிகழ்ச்சிகளாகும். பெண் குழந்தைகள் கூட விட்டுவைக்கப்படுவதில்லை. அக்குழந்தைகள் பாலியல் பலாத்காரத்திற்கு பலியாகும் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. இவை மனித உரிமைகள் மீறப்படுவது என்பது மட்டுமல்ல; பெண்மையின் மீது தொடுக்கப்படும் காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளாகும்.

3.76. பெண் முதலமைச்சராக இருந்த காலத்தில் இந்தக் காட்டுமிராண்டித்தனமான செயல்கள் அதிகபட்சமாகவே நடந்துவிட்டன. சிதம்பரம் பத்மினி பாலியல் பலாத்காரத்துக்கு.பலியானது, சின்னாம்பதி காவல்நிலையத்தில் பெண்கள் பட்ட அவமானம், இராமேஸ்வரத்தில் மீனவ பெண்கள் பட்ட துயரம், தூத்துக்குடியில் மகளிர் காவல்நிலையத்தில் பார்வதி மரணம் இப்படி கொடுமைகள் தொடர்ந்து நடந்து வந்தன.

3.77 இந்தக் கொடுமைகளை எதிர்த்து சமரசமற்ற முறையில் போராடியது நம் கட்சிதான் என்பதைப் பெருமையாக கூறமுடியும். பத்மினி வழக்கில் காவல்துறையினருக்கு கிடைத்த தண்டனை குறிப்பிடத்தக்கது.

3.78 அவ்வாறே வாச்சாத்தியில் ஆதிவாசிப் பெண்கள் வன இலாக்கா அதிகாரிகளால், காவல்துறையினரால் அவமானப்படுத்தப்பட்டதை, பாலியல் பலாத்காரத்துக்கு உள்ளானதை நம் கட்சி தான் வெளிக்கொணர்ந்தது. நீதிமன்றத்தில் வழக்காடி வருகிறது. வீதிமன்றத்தில் போராடியது!

3.79 வாச்சாத்தி வழக்கில் அதிமுக அமைச்சராக இருந்த செங்கோட்டையனும், அதிமுகவினரும் தலையிட்டு அப்பகுதி மக்களையும், நீதிபதியையும் மிரட்டுவது குறித்து பத்திரிகைகளில் விவரமான அறிக்கைகளும், கட்டுரைகளும் வெளியிட்டோம். அமைச்சராக இருந்த செங்கோட்டையனை பதவியிலிருந்து நீக்க வேண்டுமென தமிழகம் முழுவதும் தர்ணா நடத்தினோம்.

3.80 வாச்சாத்தி வழக்கினைத் தொடர்ந்து நடத்திட நிதி வசூலுக்கு அறைகூவல் விட்டோம்.

3.81 கட்சி இதுபோன்ற விஷயங்களில் முன்கை எடுத்து போராடி வருவதால் தமிழகத்தில் நம் கட்சியின் மரியாதையும் கவுரவமும் மக்கள் மத்தியில் உயர்ந்து வருகிறது.

தோழர் லீலாவதியின் தியாகம்

3.82 தோழர் லீலாவதியின் படுகொலை தமிழகத்தையே உலுக்கியது. தமிழகத்தைத் தாண்டியும் அதிர்வு அலைகளை உருவாக்கியது.

3.83 மக்கள் நலனுக்காகப் போராடிய இவரின் மரணம் - படு கொலையின் செய்தி கேட்டு மதுரை நகரமே ஸ்தம்பித்தது. எல்லா ஜனநாயக சக்திகளும் இந்தக் கொடுமையை வன்மையாகக் கண் டித்தன. தோழர் என்.வரதராஜன் மதுரை விரைந்து அங்கிருந்த சூழ்நிலையில் மதுரை நகர் கமிட்டிக்கு வழிகாட்டினார்.

3.84 மதுரை வில்லாபுரத்தில் திமுகவினர் ரேஷன் கடைகளில் செய்த ஊழல்களையும், தண்ணீர் வழங்க லஞ்சம் வாங்கியதையும், வியாபாரிகளிடம் ரௌடித்தனம் செய்வதையும் தோழர் லீலாவதி நேரிடையாக எதிர்த்துப் போராடியதற்காகவே அவர் படுகொலை செய்யப்பட்டார்.

3.85 இத்தகைய கொடுமையைக் கண்டிக்கும் வகையில் 1997 மே 23 முதல் 29 வரை ஒரு வாரம் கண்டன இயக்கம் மேற்கொண்டோம். இந்தக் கண்டன இயக்கத்தை கட்சி அணிகள் உணர்வுபூர்வ மாகவும், விரிவாகவும் நடத்தின.

2.86 மேலும் மே 23ம்தேதி தமிழகம் பூராவும் லீலாவதியின் படத்தை வைத்து அவரது தியாகத்தைப் போற்றி கட்சி அணிகள் அஞ்சலி செலுத்தின. துண்டு பிரசுரங்கள் லட்சக்கணக்கில் வெளியிட்டன.

3.87 தமிழகம் பூராவும் உள்ள கட்சியின் மாவட்ட அலுவலகங் களில், பல இடைக்கமிட்டி அலுவலகங்களில் அவரது திருவுரு வப்படம் வைக்கப்பட்டுள்ளது. தோழர் லீலாவதிக்கு அஞ்சலி செலுத்தும் முகத்தான் வாலிபர் சங்கத்தின் சார்பாக மதுரை வில்லாபுரத்தில் 1997 ஏப்ரல் 27ம்தேதி பெரும் ஊர்வலமும், பொதுக்கூட்டமும் நடைபெற்றன. அதில் தோழர் என்.எஸ். கலந்துகொண்டு உரையாற்றினார். முன்னதாக தோழர் லீலாவதி யின் இல்லம் சென்று மலர் அஞ்சலி செலுத்தினார். பல கட்சி கள் சார்பில் தலைவர்கள், பிரமுகர்கள் அவரது இல்லம் சென்று அஞ்சலி செலுத்தினர்.

3.88 மதுரையில் தோழர் லீலாவதி படுகொலையைத் தொடர்ந்து நடந்த சம்பவங்களினால் ஆத்திரமடைந்த திமுகவினர் நம் கட்சி யின் அலுவலகம் மீது தாக்குதல்களை நடத்தினர். அதனால் திமுக மீது பெரிய அவப்பெயர் ஏற்பட்டது. சட்டமன்றத்தில் முதல் வரின் பேச்சு, மதுரையில் அக்கட்சியினர் வன்முறையில் ஈடுபடத் தூண்டியது. நம் கட்சி இந்த வன்முறையை வன்மையாகக் கண்

டித்தது. விசாரணை ஒழுங்காக நடைபெற நம் கட்சி சிபிஐ விசாரணைக் கோரியது.

3.89 மதுரையில் ஜனநாயக மாதர் சங்கம் சார்பில் காவல்துறையின் தடையையும் மீறி நடந்த கண்டன ஊர்வலம் அனைவரின் கவனத்தையும் கவர்ந்தது.

3.90 தோழர் லீலாவதியின் குடும்பத்திற்கு திமுக சார்பில் தமிழக முதலமைச்சர் தோழர் லீலாவதியின் கணவர் தோழர் குப்புசாமியிடம் வற்புறுத்திக் கொடுத்த ரூ.50 ஆயிரத்தை ஒரு கடிதத்துடன் திருப்பி அனுப்பிவிட்டார். அந்தக் கடிதமும் பத்திரிகையில் வெளியிடப்பட்டது. அனைத்துப் பத்திரிகைகளும் இந்தச் செய்தியை மிகவும் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டன. கட்சியின் கவுரவம் இதனால் உயர்ந்து நின்றது.

3.91 தோழர் லீலாவதி மரணமடைந்ததால் வில்லாபுரம் வார்டுக்கு நடைபெற்ற உபதேர்தலில் நம் கட்சியின் வேட்பாளர் தோழர் செல்லம் வெற்றிபெற்றார். மற்ற கட்சிகள் நம் கட்சியை எதிர்த்துப் போட்டியிடப் போவதில்லை என முடிவு எடுத்தன. ஏராளமான வாக்காளர்கள் வாக்களித்து தோழர் லீலாவதியின் தியாகத்திற்கு அஞ்சலி செலுத்தும் வகையில் கட்சிக்கு பெரும் வெற்றியை அளித்தனர். தோழர் லீலாவதியின் சேவையும், அவரது வீர மரணமும் சகல பகுதி மக்களிடத்திலும் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

தோழர் லீலாவதி குடும்ப நிதி-நினைவு சின்ன அமைப்பு நிதி

3.92 தோழர் லீலாவதி குடும்ப நிதி, நினைவு சின்ன அமைப்பு நிதி வசூலிக்க மாநிலக்குழு வேண்டுகோள் விட்டது. கட்சி அணிகள் மத்தியிலும், பொதுமக்கள் மத்தியிலும் பெருத்த ஆதரவு கிடைத்தது. மாநிலக்குழு உறுப்பினர்களே கிட்டத்தட்ட ரூ.30,000 தந்தார்கள். வெகுஜன அமைப்புகள், தனி அரங்கங்கள் ஆயிரக் கணக்கில் நிதி வழங்கினார்கள். கட்சிக்கு அப்பாற்பட்ட மக்கள் - பணத்தை தாராளமாக கொடுத்தார்கள். இதுவரை மாநில மையத்துக்கு ரூ.15,15,500 வந்துள்ளது.

3.93 ஒவ்வொரு கட்சித் தோழரும் தன் பங்காக ரூ.10/- கொடுக்க வேண்டும் என்ற வேண்டுகோள் எவ்வளவு தூரம் அமலாகியுள்ளது என்பதைப் பரிசீலிக்க வேண்டும். தோழர் லீலாவதி குடும்ப பாதுகாப்பு நிதியாக வங்கியில் நிரந்தர வைப்பு நிதி கணக்கில் தோழர் குப்புசாமி பெயரில் ரூ.2 லட்சம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் வரும் வட்டி குடும்ப செலவுக்கு ஏற்பாடு செய்

யப்பட்டுள்ளது. மூன்று மகள்களுக்கும் அவர்களின் எதிர்காலத்திற்காக தலா ரூ50 ஆயிரம் என நிரந்தர வைப்பு நிதியில் செலுத்தப்பட்டுள்ளது.

394 1997 ஜூன் 17ம்தேதியன்று மதுரையில் தோழர் லீலாவதி குடும்ப உதவி நிதி அளிப்பு விழா சிறப்பாக நடைபெற்றது. தோழர் ஆர்.உமாநாத் கட்சியின் அரசியல் தலைமைக்குழு சார்பில் கலந்து கொண்டு நிதியை வழங்கினார்.

395 அக்குடும்பத்துக்கு வீடு ஒன்று கட்டவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. தோழர் லீலாவதிக்கு நினைவுசின்னமும், மணி மண்டபமும் கட்ட வில்லாபுரத்தில் ரூ.4 லட்சத்துக்கு இடம் வாங்கப்பட்டுள்ளது. கட்டிடம் கட்ட ஆரம்ப வேலைகள் துவக்கப்பட்டுள்ளன.

396 தோழர் சுர்ஜித் 1997ம் ஆண்டு ஜூலை 27ம்தேதியன்று கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில் கட்சி அணிகளும், பொதுமக்களும் மதுரை வந்து பெருமளவில் கலந்து கொண்டனர். தோழர் லீலாவதியின் உருவப்படம் வெளியிடப்பட்டது. தோழர் லீலாவதியின் கொலை வழக்கை, மத்திய புலனாய்வுத்துறையிடம் ஒப்படைக்க தமிழக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது.

தோழர் குமரன் குடும்ப பாதுகாப்பு நிதி

397 கட்சியின் விழுப்புரம் மாவட்டக்குழு உறுப்பினரும், மாணவர் சங்க மாவட்ட செயலாளருமான தோழர் குமரன் சாலை விபத்தில் மரணம் அடைந்தார். அந்தக் குடும்பத்துக்கு நிதி உதவி செய்ய முடிவெடுத்து கட்சியின் விழுப்புரம் மாவட்டக்குழு ரூ.75 ஆயிரம் நிதி திரட்டியது. மற்ற மாவட்டக் குழுக்களுக்கும்கோட்டா நிர்ணயித்து நிதி வசூல் செய்து அக்குடும்பத்துக்கு வழங்கப்பட்டது.

தோழர் ஜெயக்குமார் குடும்ப பாதுகாப்பு நிதி

398 ஜனவரி 19 அன்று சென்னையில் நடந்த பேரணி, ஊர்வலத்தின் போது அதில் கலந்துகொள்ள வந்த வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த ஜெயக்குமாரின் மனைவியும், குழந்தையும் விபத்தில் சிக்கி ஸ்தலத்திலேயே மாண்டனர். தோழர் ஜெயக்குமாருக்கு இரண்டு கால்களும் துண்டிக்கப்பட்டுவிட்டன.

3.99 இவரது குடும்பத்துக்கு பாதுகாப்பு நிதியாக ரூ.1,10,000 வழங்கப்பட்டது.

தோழர் கருப்பு குடும்ப நிதி

3.100 மதுரை மாவட்டம் திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மாடக்குளத்தைச் சேர்ந்த தோழர் கருப்பு, தேர்தல் முடிவுகள் வந்து கொண்டிருந்த சமயத்தில் வெறிகொண்ட திமுக வினர் சிலரால் கொலைசெய்யப்பட்டார். இவரது குடும்பத்துக்கு பாதுகாப்பு நிதியாக ரூ1,00,000 தரப்பட்டது.

3.101 கட்சித் தோழர்கள் "விபத்திலோ, அரசியல் காரணங்களுக்காக சமூகவிரோதிகளால் மற்ற கட்சி குண்டர்களால் கொலை செய்யப் பட்டாலோ, முடமாக்கப்பட்டாலோ கட்சி அவர்களது குடும்பங் களைப் பாதுகாக்கும்" என்கிற நம்பிக்கை கட்சி அணிகளிடம் உருவாக்கியுள்ளது. இது உறுதி செய்யப்பட்டுள்ளது. கட்சி அணி களும் இதை உணர்ந்து, புரிந்து ஆர்வத்தோடு சலிப்பின்றி நிதி உதவி செய்கின்றனர்.

3.102 முழுநேர ஊழியர்கள் மரணமடைந்தபோது அக்குடும்பங் களைக் காக்க கட்சி நிதியுதவி செய்துள்ளது. சிவகங்கை மாவட் டத்தில் தோழர் பாண்டி, புதுக்கோட்டை மாவட்டத்தில் தோழர் லெனின் ஆகியோர் குடும்பங்களுக்கு பாதுகாப்பு நிதி திரட்டி வழங்கப்பட்டுள்ளது.

ஆந்திர வெள்ள நிவாரண நிதி

3.103 கடுமையான வெள்ளத்தால் ஆந்திர மாநிலம் பெரும் உயிர் சேதாரத்தையும், பொருள் சேதாரத்தையும் சந்தித்தது. இம்மாநிலத் துக்கு உதவ, தமிழகத்தில் நம் கட்சி சார்பில் நிதி வசூல் செய் தோம். அதை நம் கட்சியின் ஆந்திர மாநில செயலாளர் மூலம் வெள்ள நிவாரண நிதியாக ரூ.3,35,540 ஆந்திர முதலமைச்சரிடம் வழங்கப்பட்டது.

தமிழக வெள்ள நிவாரண நிதி

3.104 தமிழகத்தில் பெரு மழையாலும், பெருவெள்ளத்தாலும் சில மாவட்டங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டன. பயிர்கள் நாசமா யின. கால்நடைகள் கூட மாண்டுபோயின. பல இடங்களில் வீடுகள் இடிந்துவிட்டன.

3.105 எனவே, வெள்ள நிவாரண நிதி வசூல் செய்து தமிழக அர சிடம் வழங்க முடிவு செய்து மாவட்ட குழுக்களுக்கு வேண்டு கோள் விடப்பட்டது. வசூலான ஒரு லட்ச ரூபாய் கட்சி சார்பில் நேரில் முதலமைச்சரை சந்தித்து வழங்கினோம்.

அன்புத் தோழர் ஏ.என்.மறைவு

3.106 தோழர் ஏ.என். அவர்கள் கடந்த இரண்டாண்டுகளாக நோய் வாய்ப்பட்டிருந்தார். அவரது சிகிச்சைக்காக கட்சி தொடர்ந்து உதவி செய்துவந்தது. சென்னையிலும், புனலூரிலும், திருவனந்த புரத்திலும் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

3.107 மாநிலக்குழு அலுவலகத்தில் வைத்து அவரை கவனிக்கவும், அவர் சிகிச்சைக்காக சென்ற மருத்துவமனைகளில் உடனிருந்து அவரைத் தொடர்ந்து கவனிக்க தனியாக தோழர்கள் ஏற்பாடு செய்யப்பட்டது. தோழர்கள் சலிப்பின்றி அவருக்கு உதவி னார்கள். அதிலும் நெல்லை மாவட்ட தோழர் மகாலிங்கத்தின் சேவை பாராட்டுதலுக்கு உரியது.

3.108 இருப்பினும், இரண்டாண்டு கால சிகிச்சை பலனளிக்க வில்லை. அவர் 20.7.97ல் திருநெல்வேலியில் காலமானார். அவரது உடல் நெல்லை மாவட்டக்குழு அலுவலகத்தில் மக்களின் பார் வைக்காக வைக்கப்பட்டது. கட்சி அணிகளும், மற்ற கட்சி பிர முகர்களும், பொதுமக்களும் ஏராளமாகத் திரண்டு அஞ்சலி செலுத்தினர்.

3.109 21.7.97 அன்று நடைபெற்ற இறுதி ஊர்வலத்தில் தமிழ்நாடு பூராவுமிருந்து கட்சி அணிகள் ஏராளமாக திரண்டனர். சுடுகாட் டில் நடந்த அஞ்சலி கூட்டத்தில் பல கட்சித் தலைவர்களும் கலந்து கொண்டனர். அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் அச்சுதானந்தன் கலந்து கொண்டார். கர்நாடக மாநிலத்தி லிருந்து தோழர் நாகராஜன் கலந்துகொண்டார்.

3.110 தோழர் நல்லசிவன் புகழை அவர்பாலுள்ள மரியாதையை அவருக்கு செலுத்திய இறுதி அஞ்சலி எடுத்துக்காட்டியது.

தோழர் தனுஷ்கோடி மறைவு

3.111 விவசாயத் தொழிலாளர் இயக்கத்தின் முன்னோடித் தலை வரும், நம் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான தோழர் தனுஷ்கோடி சென்னை மருத்துவமனையில் மாரடைப்பால் மரணமடைந்தார். அவரது உடல் கட்சியின் மாநிலக்குழு அலு வலகத்துக்கு கொண்டுவரப்பட்டது. நம் கட்சியின் சார்பிலும், சிபிஐ சார்பிலும் மற்றும் வர்க்க அமைப்புகளின் சார்பிலும் மலரஞ்சலி செலுத்தப்பட்டது; இரங்கல் தெரிவிக்கப்பட்டது. பின் அவரது உடல் அவரது சொந்த ஊரான பாங்கலுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. உடன் தோழர்கள் டி.கே.ரங்கராஜன்,

தி(ாவுக்கரசு, செல்வசிங், வி.ஏ.கருப்புசாமி, கே.கிருஷ்ணன் ஆ யோர் செ ன்றனர்.

3.112 அவரது இறுதி அஞ்சலி 1997 ஆகஸ்ட் 20ம்தேதி பாங்கலில் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் அதில் பங்குபெற்றா ர்கள். இரங்கல் கூட்டத்தில் தோழர்கள் என்.வரதராஜன், டிகே. ர ஙகராஜன் மற்றும் மாநிலக்குழு உறுப்பினர்களும், இதர கட்சித் தலைவர்களும் கலந்துகொண்டார்கள்.

3.113 1997 செப்டம்பர் 3ம்தேதி கச்சனத்தில் நடைபெற்ற அவரது படத் திறப்புவிழா நிகழ்ச்சியில் மாநில செயற்குழு சார்பில் டி. லட்சுமணன் கலந்து கொண்டார். அவரது குடும்பத்துக்கு நிதி உதவி ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

மாமேதை லெனின் 125வது பிறந்த நாள் விழா

3.114 கட்சியின் அகில இந்திய 15வது மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தமிழகத்தில் இதை ஓராண்டு காலம் நடத்துவது என முடிவெடுத்தோம். ஆனால் இந்த பிறந்த நாள் விழா நாம் திட்டமிட்ட அடிப்படையில் நடைபெறவில்லை. கோவையில் மாவட்ட சிறப்பு பேரவை நடந்தது. மற்ற மாவட்டங்களில் நவம்பர் புரட்சி தினத்தை இணைத்து இவ்விழாவினை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது.

பாசிச முறியடிப்பு 50வது ஆண்டுவிழா 1995 மே 9

3.115 15வது கட்சி காங்கிரஸ் முடிவுப்படி பாசிச முறியடிப்பு 50வது ஆண்டு விழாவினை தமிழகத்திலும் சிறப்பாக கொண்டாட திட்டமிட்டோம். இந்த வெற்றி என்பது சோசலிச நாட்டு மக்களின் வெற்றிமட்டுமல்ல; ஓர் சோஷலிச உலக முகாம் தோன்றிய நாளாகும்.

3.116 மாவட்டத்தில் ஓர் இடத்தில் 'ஹால்' கூட்டம் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. சாத்தியமான இடங்களில் பொதுக்கூட்டங்களாகவும், தெருமுனைக் கூட்டங்களாகவும் நடந்தன. பல மாவட்டங்களில் தோழர்கள் இதை சிறப்பாக நடத்தினார்கள். தீக்கதிரில் இதுபற்றி கட்டுரைகள் எழுதப்பட்டன. தோழர் பி.ஆர்.பி. எழுதிய தனி பிரசுரம் ஒன்று வெளியிடப்பட்டது..

நவம்பர் புரட்சி தினம்

3.117 15வது கட்சி காங்கிரசுக்கு பிறகு மூன்று முறை நவம்பர் புரட்சி தினத்தைக் கொண்டாடினோம். இரண்டு முறையும் மாவட்டக் குழுக்கள் ஆங்காங்கே பல இடங்களில் கொடிகளை ஏற்றி, சாத்தியமான இடங்களில் பேரவைக் கூட்டங்களையும் நடத்தி

சிறப்பித்தார்கள். ஆயினும் சில மாவட்டங்களில் இந்த விழா சம்பிரதாய பூர்வமாகவே நடத்தப்பட்டன. இது தவிர்க்கப்பட வேண்டும். உலகில் சோசலிசத்தின் முதல் வெற்றி என்கிற அரசியல் உற்சாகத்தோடு இவ்விழாவினை நாம் கொண்டாட வேண்டும்.

1995 நவம்பர் 27 கியூபா ஆதரவு தினம்

3.118 மத்திய கமிட்டியின் முடிவுப்படி தமிழகத்திலும், கியூபா ஆதரவு தினம் கடைப்பிடிக்கப்பட்டது. மாவட்டங்களில் இதையொட்டி அரங்கக் கூட்டங்கள் நடந்தன. சென்னையில் அமெரிக்க துணைத் தூதுவர் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடந்தது.

ஸ்தல இயக்கங்கள்

3.119 கட்சியின் வளர்ச்சிக்கு மக்களின் மத்தியில் செல்வாக்கு பெறுவதற்கு மக்களின் பிரச்சனைகள் மீது ஸ்தல இயக்கங்கள் நடத்துவது ஓர் அடிப்படையான அரசியல் கடமையாகும். நாம் இதில் கவனம் செலுத்தினாலும், இதை ஒரு தொடர்பணியாக கவனிப்பதில்லை.

3.120 கட்சி உறுப்பினர் எண்ணிக்கை, பத்திரிகை விற்பனை, இயக்கங்களில் பங்குபெறுவது, பொதுமக்களின் ஆதரவு - எனப் பல விஷயங்களில் ஸ்தல இயக்கங்களின் பிரதிபலிப்பை பார்க்க முடிகிறது. ஆகவே, இந்த முக்கிய அரசியல் பணியை திட்டமிட்டு எதிர்காலத்தில் நடத்த விடாமுயற்சி தேவை.

சட்டமன்ற - நாடாளுமன்ற தேர்தல்:

3.121 நம் கட்சியைப் பொறுத்தவரை சட்டமன்ற - நாடாளுமன்ற தேர்தல்களில் தமிழகத்திலும் காங்கிரசை, அதிமுகவை, பி.ஜே.பி.யை எதிர்த்து இடதுசாரி - ஜனநாயக - மதச்சார்பற்ற கூட்டை உருவாக்க விரும்பினோம். ஆனால் திமுக ஏற்கெனவே காங்கிரசுடன் உறவு வைத்துக்கொள்ள முயன்றதையொட்டி நாம் நடத்திய அரசியல் விமர்சனம், அதையொட்டி ஏற்பட்ட விவாதங்கள், பிறகு கடைசியில் திருச்சியில் பத்திரிகையாளர்கள் கூட்டத்தில் திமுக தலைவர், தான் காங்கிரசுடன் உறவு வைத்துக்கொள்ள இருப்பதைப் பகிரங்கமாக அறிவித்தது, இவை பற்றியெல்லாம் நாம் அறிவோம். திமுக தலைமை நம்முடன் இருந்த உறவை துண்டித்துக்கொள்ள வெளிப்படையாக அவர்களின் கட்சிக் கூட்டத்தில் அறிவித்ததையும் நாம் அறிவோம்.

3.122 இந்தச் சூழலில் சட்டமன்ற - நாடாளுமன்ற தேர்தல்களைச் சந்திப்பதில் மதிமுகவுடன் தொகுதி உடன்பாடு கொள்ள முடி

வெடுத்தோம். மதிமுக காங்கிரசையும், அதிமுகவையும், வகுப்பு வாத சக்தியான பி.ஜே.பி.யையும் பொதுவாக எதிர்த்து நின்றதால் இதோடு உடன்பாடு கொள்வது தேவைப்பட்டது. இதனடிப் படையில், சிபிஐ(எம்), மதிமுக ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசியல் நோக்கங்களுடன் உடன்பாட்டுக்கு வருகிற இடதுசாரி மற்றும் ஜனநாயக கட்சிகளுடன் உடன்பாடு கொள்ள முடிவு எடுத்தோம். நாமும் நம் தரப்பில் முயன்றோம். மதிமுகவும் ஒரு பக்கம் முயற்சிகள் எடுத்தது.

3.123 நாம் பா.ம.க. ஸ்தாபகத் தலைவர் ராமதாசுடன் தொடர்பு கொண்டு பேசினோம். இரண்டு முறை பேசினோம். அந்தக் கட்சி யின் மற்ற தலைவர்களைச் சந்தித்தும் பேசினோம். வாழப்பாடி ராமமூர்த்தியிடமும் பேசினோம். ஜனதாதளத் தலைவர்களைச் சந்தித்தும் பேசினோம். ஆனால் மதிமுக தலைமை மற்ற கட்சிகளு டன் கூட்டு வைக்கும் இந்த உடன்பாடு விஷயத்தில் முழுமையான அக்கறை காட்டவில்லை. தொகுதி பங்கீடு விஷயத்தில் தன் கை ஓங்க வேண்டும்; தான் எவ்வளவு அதிகபட்சமான தொகுதிகளை ஒதுக்கிக்கொள்ள வேண்டுமோ, அவ்வளவையும் வலியுறுத்து வதையே குறிக்கோளாக கொண்டு செயல்பட்டது. ஒரு கட்டத்தில் தி.மு.க.வுக்கும், பா.ம.க.வுக்கும் இடையில் வெளிப்படையாக முரண்பாடு வந்த நேரத்தில் இதை திறமையாகப் பயன்படுத் திக்கொண்டு பா.ம.க.வுக்கு தொகுதிகள் ஒதுக்குவதில் ம.தி.மு.க. சரியாக நடந்துகொள்ளவில்லை. இதனால் உடன்பாடு உருவாக இருப்பதுபோல், இருந்த சூழ்நிலை பின்னுக்கு போய்விட்டது.

3.124 ஆகையால் நம் கட்சி எவ்வளவு முயற்சிகள் எடுத்தும் மற்ற கட்சிகளை இணைக்க முடியவில்லை. கடைசியில் சி.பி.ஐ. (எம்), ம.தி.மு.க., ஜனதாதளம் மட்டுமே உடன்பாட்டுக்கு வர முடிந்தது.

3.125 நாம் ம.தி.மு.க.வுடன் உடன்பாடு கண்டாலும் தொகுதி உடன் பாடு கொள்வதில் மிகக் கடுமையாகப் போராட வேண்டி இருந் தது. ம.தி.மு.க.வைப் பொறுத்தமட்டில் நாம் எங்கு பலமாக இருக்கி றோமோ அந்த இடங்களில் அவர்கள் பலத்தையும் சேர்த்துப் போட்டியிட மிகவும் வற்புறுத்தியது. நமக்குச் சாதகமான இடங் களை விட்டுக்கொடுப்பதில்கூட அக்கட்சி முன்வரத் தயாரில்லை. பல கட்ட பேச்சுவார்த்தை நடந்த பிறகுதான் தொகுதி உடன்பாடு காண முடிந்தது. ம.தி.மு.க.வின் இந்த போக்கினால் நம் கட்சி பல மாக உள்ள தொகுதி, நாம் பலமுறை வெற்றி பெற்ற தொகுதி என இருந்த திருப்பூர், குடியாத்தம், அம்பை, ராதாகிருஷ்ணநகர் போன்ற இடங்களை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. உறவு

முறிந்து விடக்கூடாது என்ற நிலையில்தான் இந்தத் தொகுதி களை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று.

3.126 கடைசியாக நாம் 40 சட்டமன்ற தொகுதிகளிலும், 7 நாடாளு மன்ற தொகுதிகளிலும் போட்டியிடுவது என உடன்பாடு கண் டோம். நம்முடன் உடன்பாடு கண்டு கையெழுத்து போட்ட பின் னும், நமக்கு ஒதுக்கப்பட்ட தளி தொகுதியை திரும்பப் பெற்று ஜனதா தளத்துக்கு ஒதுக்க ம.தி.மு.க. நிர்ப்பந்தம் கொடுத்தது. நாம் மறுத்துவிட்டோம்.

3.127 இவ்வளவு சிரமங்களுக்கு இடையிலும் நம் அணிகள் தேர்தல் பிரச்சாரத்தை வலுவாக எடுத்துச்சென்றன. ஜெயலலிதாவின் மீது ஏற்பட்ட எதிர்ப்பு அலையை தி.மு.க., த.மா.கா. கூட்டு - ரஜினி காந்த் உதவியுடன் வலுவாகப் பயன்படுத்திக்கொண்டது.

3.128 அ.தி.மு.க.வை முறியடிப்பது என்ற ஓர் அம்ச தேர்தல் குறிக் கோளை அடைய தி.மு.க. - த.மா.கா. அணி ஜெயலலிதா எதிர்ப்பை பத்திரிக்கைகள், தொலைக்காட்சிகளின் ஆதரவுடன் முடுக்கிவிட்டு பெரும் வெற்றி பெற்றரார்கள்.

3.129 எனினும், நம் அரசியல் நிலையை, ஒரு மாற்றுக்கொள்கையை மக்கள் மத்தியில் எடுத்துச்செல்ல இந்தத் தேர்தல் ஒரு வாய்ப்பாக இருந்தது. தேர்தல் பிரச்சாரத்துக்கு ஒரு 'பாடல் கேசட்' வெளி யிட்டோம். தேர்தல் அறிக்கையை கோவையில் நடந்த பெரும் பொதுக்கூட்டத்தில் வெளியிட்டோம். மத்தியக்குழுவின் தேர்தல் அறிக்கையையும் தமிழில் வெளியிட்டோம். மத்தியக் குழு வெளி யிட்ட 12 பிரசுரங்கள் தமிழாக்கம் செய்யப்பட்டு தேர்தல் பிரச் சாரத்துக்கு பயன்படுத்தப்பட்டது.

3.130 பல்வேறு கட்சிகளையும் அம்பலப்படுத்தி அரசியல் பிரச்சாரம் செய்தோம். அ.தி.மு.க. எதிர்ப்பு அலையில் நம் கட்சிக்கு ஒரே சட்டசபை தொகுதியில் (விளவங்கோடு) வெற்றி கிடைத்தது.

3.131 ம.தி.மு.க.வுக்கு ஓர் இடமும் கிடைக்கவில்லை. ஜனதாதளத்துக்கு ஓர் இடம் மட்டும் கிடைத்தது. ஜனதாதளம் நம்முடன் பெயரள விற்கே ஒத்துழைத்தது.

தேர்தல் பரிசீலனை:

3.132 1996ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தல்கள் குறித்து '96 ஜூன் 2, 3 தேதிகளில் சென்னையில் நடந்த மாநிலக்குழு கூட்டம் விவா தித்தது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் பரிசீலனை அறிக்கைய கட்சியின் அணிகளுக்கு விளக்கிக்கூறப்பட்டது.

(வெற்றி பெற்ற தொகுதிகள், பெற்ற வாக்குகள் அனுபந்தத்தில் குறிக்கப்பட்டுள்ளன).

3.133 தேர்தல் பரிசீலனை அறிக்கையில்:

"ம.தி.மு.க. - சி.பி.ஐ.(எம்), ஜனதாதளம், சமாஜ்வாதி கட்சிகளைக் கொண்ட அணிக்கு 'மக்கள் முன்னணி' என்ற பெயரை தெரிவித்தோம். ம.தி.மு.க. ஒப்புக்கொண்டது. ஆனால் ஜனதா தளம் மக்கள் ஜனநாயக முன்னணி என்று பெயரிட வேண்டும் என வற்புறுத்தியது. இதை ஒரு பிரச்சனையாக்கக்கூடாதென்று நாம் ஏற்றோம். இதன் சார்பில் ஒரு தேர்தல் வேண்டுகோள் வெளியிடப்பட்டது. இருப்பினும், மக்கள் ஜனநாயக முன்னணி என்ற பெயரை தவிர்த்திருக்க வேண்டும்.

(மாநிலக்குழு தேர்தல் பரிசீலனை பக். - 8)

3.134 நமது கட்சி பெற்ற வாக்குகள்:

"நாம் போட்டியிட்ட தொகுதிகளில் நமக்கு ஓரளவிற்கு ஸ்தாபன பலம் உள்ள திருவட்டாறு, நாகை, திருவாரூர், திருத்துறைப் பூண்டி, வாசுதேவநல்லூர் ஆகிய தொகுதிகளில் கணிசமான வாக்குகளைப் பெற்றோம். இத்தொகுதிகளில் நாம் பெற்ற வாக்குகள் பிரதானமாக நமது செல்வாக்கினாலும், ஓரளவிற்கு ம.தி.மு.க.வின் செல்வாக்கினாலும் சேர்ந்து கிடைத்த வாக்கு களாகும்.

3.135 விளவங்கோட்டில் வெற்றி பெற்றதும், திருவட்டாறில் இரண்டாவது இடத்தைப் பிடித்ததும், நாகை நாடாளுமன்றத்தில் லட்சத்திற்கு மேல் வாக்குகள் பெற்றிருப்பதும் வலுவான ஸ்தாபனமும், செல்வாக்கும் இருந்தால் எந்த அரசியல் அலையையும் எதிர்த்து நிற்க முடியும் என்பதற்கு சில உதாரணங்கள்.

3.136 நாம் போட்டியிட்ட 7 நாடாளுமன்ற தொகுதிகளிலும், 40 சட்டமன்ற தொகுதிகளிலும் பதிவான மொத்த வாக்குகளில் சராசரி 9% பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இது பா.ம.க., ம.தி.மு.க. சராசரி வாக்குகளைவிட அதிகம்.

(மாநில்க்குழு தேர்தல் பரிசீலனை பக். 10)

3.137 "நமது கட்சி 40 சட்டமன்ற பேரவைகள் போக, நமது 7 நாடாளுமன்ற தொகுதிகளில் 28 சட்டப்பேரவை தொகுதிகளில் நம் நாடாளுமன்ற வேட்பாளருக்காக தேர்தல் இயக்கத்தை நடத்தியது. எனவே, நமது கட்சி 40+28= 68 சட்டப்பேரவை தொகுதி களில் தேர்தல் பணியாற்றியது."

(மாநிலக்குழு தேர்தல் பரிசீலன்ன பக். 11)

3.138 தேர்தல் அனுபவங்களும் படிப்பினைகளும்:

- அதிமுக அரசிற்கு எதிராக மக்களின் எதிர்ப்பலை வீசியது.
- அதிமுக எதிர்ப்பலையை திமுக அணி தனக்கு சாதகமாக பயன் படுத்தியது.
- மூன்றாவது அணி வலுவானதாக உருவாக்கப்படவில்லை. இதற்கு பா.ம.க., திவாரி காங்கிரஸ் ஒத்துழைக்கவில்லை. ம.தி.மு.க.வும் இதில் அக்கறைகாட்டவில்லை.
- நமது அணியில் இருந்த ம.தி.மு.க., ஜனதாதளம் ஆகிய கட்சிகளும் பலமாக இல்லை.
- மூன்றாவது அணி பலமடையாததால் ஓரளவிற்கே ஓட்டுக்களை வாங்க முடிந்தது.
- தேர்தல் முடிவிற்கு அரசியலே அடிப்படையாக இருந்தாலும் சில பகுதிகளில் ஜாதிய ரீதியிலும் வாக்களிக்கப்பட்டுள்ளது.
- தேர்தல் களத்தில் நமது கட்சிதான் மத்திய - மாநில அரசுகளை எதிர்த்து பிரச்சாரம் செய்தது.
- ம.தி.மு.க.வின் பெரும் பகுதி அணிகள், நமது அணிக்கு, நம்முடன் இணைந்து பணியாற்றியது. இருப்பினும், சில இடங்களில் தங்கள் சின்னத்திற்கு மட்டும் வாக்கு கேட்கும் நிலையை எடுத்தார்கள்.
- நமது கட்சி 40 சட்டப்பேரவைத் தொகுதிகளிலும், 7 நாடாளு மன்றத் தொகுதிகளிலும், அத்தொகுதிகளுக்குட்பட்ட மேலும் 28 தொகுதிகளிலும் மொத்தம் 68 சட்டப்பேரவைத் தொகுதிகளில் நாம் தேர்தல் பிரச்சாரத்தையும், நமது அரசியலையும் வலுவாக எடுத்துச்சென்றோம்.
- நமக்கு செல்வாக்குள்ள தொகுதிகளில் கூடுதல் வாக்குகளும் பெற் றோம்.
- நமது கட்சி தேர்தல் தயாரிப்பு பணிகளில் இன்னும் கூடுதலாக முன்கூட்டியே கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.
- தேர்தல் பிரச்சாரத்தில் தனியார் தொலைக்காட்சிகள், கேபிள் டி.வி.கள் பெரும் பங்காற்றின. எதிர்காலத்தில் இவைகளை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியுள்ளது.
- நமது வர்க்க, வெகுஜன அமைப்புகளில் உள்ள உறுப்பினர்கள் மத்தியில் இன்னும் கூடுதலாக நமது அரசியலை எடுத்துச் செல் லும் பணியை நிறைவேற்ற வேண்டியுள்ளது.

கட்சி பேரவைக் கூட்டங்கள்;

3.139 கட்சி மாநிலக்குழுவின் தேர்தல் பரிசீலனை அறிக்கை, ஐக்கிய முன்னணி அரசு பற்றிய மத்தியக்குழு தீர்மானம் இரண்டையும் கட்சி அணிகளுக்கு விளக்க மாவட்டங்களில் பேரவை நடத்தி விரிவாக விளக்கப்பட்டது.

அரசியல் சட்டம் 356

3.140 அரசியல் சட்டம் 356ஐ பயன்படுத்தி மாநில அரசுகளைக் கவிழ்க்கும் மத்திய அரசுக்குள்ள அதிகாரத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற நிலையைத்தான் நம் கட்சி எடுத்துள்ளது.

3.141 மத்திய அரசு இச்சட்டத்தை குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தாத வகையில் பல்வேறு சட்ட பாதுகாப்பு விதிகளை உருவாக்கிட வேண்டும் என்ற நிலையை கட்சி மேற்கொண்டுள்ளது. தி.மு.க. போன்ற கட்சிகள் இந்தச் சட்டத்தை முழுமையாக ரத்து செய்ய வேண்டுமெனக் கோருகின்றன. இதில் நமக்கு உடன்பாடில்லை. தேசத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் அவசியம் ஏற்பட்டால் இதைப் பயன்படுத்த வேண்டியிருக்கும் என்பது நம் நிலை.

கட்சியின் மாவட்ட மாநாடுகள்

3.142 கடந்த இரண்டு மாதங்களாக மாவட்டக்குழுக்கள், கிளை மாநாடுகள், இடைக்கமிட்டி மாநாடுகள் என நடத்தி முடித்து மாவட்ட மாநாடுகளையும் வெற்றிகரமாக நடத்தின. இடையில் கடுமையான மழையின் காரணமாக சில மாவட்டங்களில் ஊர் வலங்கள் பொதுக்கூட்டங்கள் சிறப்பாக நடைபெற இயல வில்லை.

3.143 எனினும் 34 மாவட்டங்களிலும் இடைக்கமிட்டி மாநாடுகள் நடத்திட, மாவட்ட மாநாடுகள் நடத்திட, ஒட்டுமொத்தமாக மக்களிடம் பல லட்ச ரூபாய் வசூலித்துத்தான் இந்த மாநாடுகள் நடைபெற்றன. மக்களும் தாராளமாக நிதி உதவி தந்திருக்கிறார்கள். கட்சி அணிகளும் மிக உற்சாகமாக மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டன. இடைக்கமிட்டி மாநாடுகளில் பிரதிநிதிகளின் வருகை என்பது மேலும் முன்னேற வேண்டும். ஆனால் மாவட்ட மாநாடுகளில் பிரதிநிதிகளின் வருகை என்பது 75% முதல் 99% வரை இருந்தது. 15 மாவட்டங்களில் பிரதிநிதிகள் வருகை 90%க்கும் மேல் இருந்தது குறிப்பிடத்தக்கது. மாநாடுகளில் பெண்களின் பங்கேற்பு சென்ற மாநாட்டைவிட கூடுதலாக இருந்தது.

கூட்டுறவு சங்கத் தேர்தல்;

3.144 கூட்டுறவு சங்க தேர்தலில் நாம் கீழ்க்கண்ட வகையில் முடிவுகள் எடுத்தோம்.

3.145 கூட்டுறவு சங்க தேர்தலில் கட்சிகளின் அடிப்படையில் தொகுதி உடன்பாடு என்பது இல்லை. நாம் போட்டியிட வாய்ப் பில்லாத இடங்களில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளர் தேர்வு செய் யப்பட்டால் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறும் என்று நாம் கருதினால் அவரை ஆதரிக்கலாம்.

3.146 தொழிலாளர் கூட்டுறவுக்கான தேர்தலில் நிலைமைக்கு ஏற்ற வாறு நமது சங்கம் முடிவு எடுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட சங்கத்துடன்தான் உடன்பாடு என்ற நிலைப்பாடு எடுக்கத் தேவை யில்லை. தொழிலாளர்களின் நலன்களைக் காக்க எந்த சங்க அணியுடன் சேர்ந்தால் சிறப்பாக இருக்கும் என்று பரிசீலித்து முடிவினை மேற்கொள்ள முடிவெடுத்தோம்.

3.147 இந்த வழிகாட்டுதலின் அடிப்படையில் நம் தோழர்கள் கூட் டுறவு சங்கத் தேர்தலில் பங்குபெற்றார்கள். தி.மு.க.வினரும், அ.தி.மு.க. செய்தது போலவே போலி உறுப்பினர்களை சேர்த்து தேர்தலில் பல இடங்களில் மோசடி செய்தார்கள். சில இடங் களில் அராஜகமும் நடத்தினார்கள். சென்னை தியாகராயநகர் கூட்டுறவு வங்கி தேர்தலில் நடந்த பலாத்காரம், அந்த எதிர்த்து நம் தோழர்கள் நடத்திய போராட்டம் - இவையாவும் தெரிந்த விஷயங்களே.

3.148 பால் கூட்டுறவு சங்கங்களைப் பிடிக்க தி.மு.க. அரசு போலி உறுப்பினர்களை சேர்க்க அரசாணையைத் திருத்தியது.

3.149 இதுபோன்ற பல்வேறு சங்கடங்களையும், தடைகளையும் மீறி நம் தோழர்கள் கூட்டுறவு சங்க தேர்தலில் போட்டியிட்டு ஓரளவு வெற்றிகளைப் பெற்றார்கள். நிர்வாகம் ஊழலற்ற முறையில் நடக்க நாம் எங்கு பணியாற்றியிருக்கிறோமோ அங்கு மக்கள் நம்மைத்தான் தேர்ந்தெடுக்கிறார்கள். தொழிலாளர் கூட்டுறவு சங்கங்களில் இதை நாம் பார்க்க முடிந்தது.

3.150 தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் மக்களின் எதிர்பார்ப்பு களுக்கு ஏற்ற வகையில் நம் தோழர்கள் கூட்டுறவு சங்க நிர்வா கத்தை நடத்துவது அவசியமாகும்.

உள்ளாட்சி மன்ற தேர்தல் – பரிசீலனை;

3.151 நடைபெற்ற உள்ளாட்சி மன்ற தேர்தல்களை நம் கட்சியின் மாநிலக்குழு 96ம் ஆண்டு நவம்பர் 12, 13,14 தேதிகளில் கோவில்

பட்டியில் கூடி விவாதித்தது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் பரிசிலனை அறிக்கை, கட்சிக் கடிதம் - 2ன் மூலமாக கட்சி உறுப்பினர்களுக்கு விளக்கப்பட்டது.

தி.மு.க. அணி

3.152 அனைத்து (6) மாநகராட்சிகளிலும், மாநகராட்சி வார்டுகளில் 80%, மாவட்ட பஞ்சாயத்து வார்டுகளில் 80%, நகராட்சி தலைவர் களில் 77%, நகராட்சி வார்டுகளில் 53%, பேரூராட்சித் தலைவர் களில் 50%, ஊராட்சி ஒன்றியங்களில் 30% இடங்களில் வெற்றி பெற்றது.

அ.தி.மு.க.

3.153 பொதுத்தேர்தலில் இருந்த அதிமுக எதிர்ப்பு அலை அதே அளவிற்கு இருக்கவில்லை. உள்ளாட்சித் தேர்தலில் மாநில அளவில் பெற்றுள்ள வாக்குகளில் இரண்டாம் இடத்தை இக்கட்சி பெற்றுள்ளது. இக்கட்சி கிராமப்புறங்களில் மேலும் செல்வாக் கோடுதான் இருக்கிறது என்பது தெரியவருகிறது. சில இடங்களில் ஊராட்சி ஒன்றிய தலைவர்களாகவும், பேரூராட்சித் தலைவர் களாகவும் வெற்றி பெற்றுள்ளார்கள்.

பி.ஜே.பி.

3.154 குமரி மாவட்டம், தருமபுரி மாவட்டங்களில் கணிசமான இடங்க்ளைப் பெற்றது. ஆங்காங்கே சில ஜாதித் தலைவர்களை வேட்பாளர்களாக ஆக்கி பி.ஜே.பி. போர்வையில் வாக்குகள் பெற்றுள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

3.155 தி.மு.க. அணியில் இருப்பதால் போட்டியிட்ட பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்றது.

ம.தி.மு.க.

3.156 தி.மு.க.விற்கு எதிராக எக்கட்சியுடனும் தொகுதி உடன்பாடு செய்துகொள்வது என்ற நிலையை எடுத்தனர். நம் கட்சியுடன் தேர்தல் உடன்பாடு செய்ய துவக்கத்தில் கூட்டறிக்கை வெளியிட் டனர். நமக்கு வலுவாக உள்ள தொகுதிகளில் ம.தி.மு.க. போட்டி யிட வற்புறுத்தியதால், மாநில அளவில் தொகுதி உடன்பாடு குறித்து கூட்டறிக்கை வெளியிட முடியவில்லை.

3.157 அதேசமயம் ம.தி.மு.க., அ.தி.மு.க.வுடன் மறைமுகமாகவும், சில இடங்களில் நேரடியாகவும் இணைந்து நின்று தேர்தலை சந்தித் தது. இக்கட்சித் தலைமையே சில இடங்களில் காங்கிரஸ் கட்

சியை ஆதரித்தும் பிரச்சாரம் செய்தது. இப்படிப்பட்ட அரசியல் சந்தர்ப்பவாத நிலைமையையே அக்கட்சி மேற்கொண்டது.

3.158 நமது கட்சியுடன் சில மாவட்டங்களில்தான் தொகுதி உடன்பாடு செய்தார்கள். அந்த மாவட்டங்களிலும் நமக்கு செல்வாக்குள்ள நமக்கு ஒதுக்கிய சில தொகுதிகளிலும் போட்டியிட்டார்கள்.

3.159 இதற்கிடையிலும் மதிமுக சில இடங்களில் ஒத்துழைத்தது. இக்கட்சி நம்முடன் உடன்பாடு கண்ட இடங்களில் உணர்வு பூர்வமாக நடந்திருந்தால், நாம் இன்னும் சில இடங்களில் வெற்றி பெற்றிருக்க முடியும்.

3.160 இக்கட்சி 6 ஊராட்சி ஒன்றிய தலைவர்கள், 6 நகராட்சித் தலைவர்கள், 50 பேரூராட்சித் தலைவர்கள் பதவிகளில் வெற்றி பெற்றுள்ளது. நகர்ப்புறத்திலும், கிராமப்புறத்திலும் உள்ள நடுத்தர வர்க்கத்தினரின் ஓட்டுக்களை ஓரளவு பெற்றுள்ளனர். இக்கட்சியில் வெற்றி பெற்றவர்கள் சிலர் தி.மு.க.விற்கு கட்சி தாவுவதைப் பார்க்க முடிகிறது.

தனி அமைப்புகள்

3.161 குடியிருப்போர் சங்கங்களின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தி வைத்து வெற்றி பெற்றுள்ளனர். இதுபோன்ற அமைப்புக்களின் மீது கட்சியும் கவனம் செலுத்த வேண்டும்.

சுயேட்சைகள்

3.162 இத்தேர்தலில் சுயேட்சைகள் கணிசமான அளவு வெற்றி பெற்றுள்ளனர். பேரூராட்சி வார்டுகளில் சுமார் 50% சுயேட்சைகள் வெற்றி பெற்றுள்ளனர். ஊராட்சித் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களில் 50%க்கும் மேற்பட்டோர் எந்தக்கட்சியையும் சேராதவர்களாகவே இருப்பார்கள் என்று தெரிகிறது. நகராட்சி வார்டுகளில் 4ல் 1 பங்கும், ஊராட்சி ஒன்றிய வார்டுகளில் 5ல் 1 பங்கும் சுயேட்சைகள் வெற்றி பெற்றுள்ளனர்.

3.163 சமூக விரோதிகளும் வெற்றி பெற்றுள்ளனர். சட்டமன்ற தேர்தலில் செலவு கட்டுப்பாடு இருந்தது போல் இத்தேர்தலில் அப்படிப்பட்ட கட்டுப்பாடு இல்லை.

சி.பி.ஐ.(எம்)

3.164 ஏறக்குறைய தனியாக நின்றே போட்டியிட்டோம் என்பதே நிலைமை. ஊழலற்ற நிர்வாகத்தை உருவாக்குவோம் என்ற கோஷத்துடன் 12 அம்ச திட்டத்தை வைத்து பிரச்சாரம் செய்தோம்.

3.165 பொதுத்தேர்தலைவிட இத்தேர்தலில் நம் கட்சி அணிகள் கூடுதலாக கலந்துகொண்டு பணியாற்றினார்கள். பரவலாக நாம் போட்டியிட்டதால், நம் அணிகள் ஸ்தல அளவிலும் தானாக இயங்கி பணி செய்யும் ஆர்வம் உருவானது.

3.166 தமிழகத்தில் முதன்முறையாக இப்போதுதான் 2687 இடங்களில் கட்சி சின்னத்திலும் 1356 இடங்களில் பஞ்சாயத்துக்களிலும் போட்டியிட்டது; பல புதிய இடங்களில் கட்சியின் சின்னமும், கட்சி வேட்பாளர்களும் அறிமுகமானார்கள்.

3.167 நாம் பெற்றுள்ள வெற்றி தன்னந்தனியாக பெற்ற வெற்றி என்பது கவனத்தில்கொள்ள வேண்டியுள்ளது.

3.168 குமரி மாவட்டத்தில் குறிப்பிடத்தக்க வெற்றி பெற்றோம். மதுரை நகர், தூத்துக்குடி, விருதுநகர், நாகப்பட்டினம், கோவை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரளவு வெற்றி பெற்றோம்.

3.169 பொதுத்தேர்தலில் 1.68% வாக்குகளை பெற்றிருந்த நம் கட்சி உள்ளாட்சித் தேர்தல்களில் கட்சி சின்னத்தில் போட்டியிட்ட இடங்களில் 3.43% வாக்குகள் பெற்றது.

3.170 மிகப் பலவீனமான சில இடங்களிலும் போட்டியிட்டு குறைந்த வாக்குகளைப் பெற்றுள்ளோம். இதர பலவீனங்களையும் கண்டறிந்து களைவது அவசியமாகும்.

3.171 உள்ளாட்சி மன்றங்களின் தலைவர், உப தலைவர் தேர்தல்களில் பி.ஜே.பி. வெற்றி பெறாமல் தடுக்க முன்முயற்சி எடுத்தோம். நமக்கு ஆதரவு அளித்த ஜனதாதளம், பா.ம.க. போன்ற கட்சியினருக்கும், நாணயமிக்க சுயேட்சைகள் நம் ஆதரவை நாடினால் ஆதரவு அளிப்பது என்றும், மாவட்டக்குழுக்கள், மாநிலக்குழுவின் ஒப்புதலைப் பெற்று இதில் செயல்பட முடிவு செய்தோம்.

3.172 தி.மு.க., த.மா.க., அ.தி.மு.க. காங்கிரஸ் கட்சியினருக்கு ஆதரவு அளிப்பதில்லை என்றும், தி.மு.க. - அ.தி.மு.க. மட்டும் போட்டியிடும்போது நமது தோழர்கள் தேர்தலில் பங்கெடுக்க வேண்டாமென்றும் முடிவு செய்யப்பட்டது.

3.173 இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர்கள் போட்டியிட்டு நமது ஆதரவைக் கேட்ட சில இடங்களில் ஆதரவு அளிக்கும்படி வழிகாட்டப்பட்டது.

3.174 இத்தேர்தல்களின்போது நாடாளுமன்ற சந்தர்ப்பவாதம் தலை தூக்கியது. கட்சி முடிவுகளை மீறுவது, கட்சி முடிவுகளை நிறை

வேற்ற மறுப்பது, அரசியல் பிரச்சாரம் செய்தால் ஓட்டு கிடைக்காது என்ற தயக்கம், தேர்தலில் வெற்றி பெற குறுக்கு வழிகளை கையாளுதல் போன்றவை இதன் போக்குகளாகத் தோன்றின. இவற்றை கட்சியின் அமைப்பு விதிகளுக்கு ஏற்ப விசாரித்து தக்க நடவடிக்கைகள் எடுக்க மாவட்டங்களுக்கு வழி காட்டப்பட்டது. நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

3.175 வெற்றி பெற்றவர்கள், உள்ளாட்சி மன்றங்களில் செயல்படுவது குறித்தும், நாம் போட்டியிட்ட இடங்களில் கட்சி அமைப்பையும், வர்க்க அமைப்புக்களையும் கட்டி வளர்க்கவும் ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

3.176 உள்ளாட்சி மன்றங்களுக்கான தேர்தலில் 123 மாநகராட்சி வார்டுகளில் போட்டியிட்டு 12ல் வெற்றி பெற்றோம். மாவட்ட பஞ்சாயத்து வார்டுகளில் 117ல் போட்டியிட்டு 5 இடங்களிலும், நகராட்சித் தலைவர்களுக்கு 22ல் போட்டியிட்டு 1 இடத்திலும், நகராட்சி வார்டுகளில் 483ல் போட்டியிட்டு 57லும், ஊராட்சி ஒன்றிய வார்டுகளில் 899ல் போட்டியிட்டு 85லும், நகர பஞ்சாயத்து தலைவர்களுக்கு 146ல் போட்டியிட்டு 18 இடங்களிலும், 951 நகர பஞ்சாயத்து வார்டுகளில் போட்டியிட்டு 304 இடங்களிலும், 1193 ஊராட்சித் தலைவர்களுக்கு போட்டியிட்டு 206 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளோம். மேலும் ஒரு பஞ்சாயத்து ஒன்றிய பெருந்தலைவர் பொறுப்பிற்கும், ஒரு மாவட்ட பஞ்சாயத்து துணைத் தலைவர் பொறுப்பிற்கும் நம் கட்சித் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

புதுக்கோட்டை இடைத்தேர்தல்

3.177 புதுக்கோட்டை இடைத்தேர்தலில் நம் கட்சி சார்பில் போட்டியிடுவது குறித்து புதுக்கோட்டை மாவட்டத்தின் கருத்தறிந்தோம். போட்டியிடுவதோடு தோழர் பெரி.குமாரவேலை கட்சியின் வேட்பாளராக நிறுத்தவும் முடிவு செய்தோம்.

3.178 புதுக்கோட்டையில் நம் கட்சியின் மாற்று அரசியல் கொள்கைகளை மக்களிடம் எடுத்துச்செல்ல இந்த இடைத்தேர்தலையும் பயன்படுத்தினோம். புதுக்கோட்டை மாவட்டக்குழு தன் சக்தியைத் திரட்டி தேர்தல் பணியில் ஈடுபட்டது. மாநில செயற்குழு சார்பில் தோழர்கள் கே.வரதராசன், என்.வரதராஜன், டி.லட்சுமணன், பி.சம்பத் போன்றோர் தேர்தல் பணி, பிரச்சாரம் என பணியாற்றினர். தஞ்சை சீனிவாசன் தேர்தல் அலுவலகத்தில் தேர்தல் பணியாற்றினார்.

3.179 தோழர் என்.சங்கரய்யா பல தேர்தல் பொதுக்கூட்டங்களில் பேசினார். மாவட்டக்குழுக்களும் தேர்தல் பணிக்கு தோழர்களை அனுப்பி வைத்தன. தூத்துக்குடி, ஈரோடு, திருச்சி, நாகப்பட்டினம் போன்ற மாவட்டங்கள் வேன், ஜீப் அனுப்பிவைத்தன.

3.180 இடைத்தேர்தலில் தி.மு.க., அ.தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும், ம.தி.மு.க.வும் தங்கள் முழு சக்திகளை இங்கு குவித்தார்கள். நாம் அரசியல் கொள்கைகளை முன்வைத்து முறையாக பிரச்சாரம் செய்தோம். இதை பத்திரிக்கைகள் பாராட்டின.

3.181 ஆளுங்கட்சியான தி.மு.க. அனைத்து நிர்வாகப் பலத்தையும் பயன்படுத்தியது. அத்துமீறி செயல்பட்டது. ஜாதியைப் பயன்படுத்தியது. இருப்பினும், 12 ஆயிரம் வாக்கு வித்தியாசத்தில்தான் வெற்றி பெற முடிந்தது. அ.தி.மு.க.வுக்கு இன்னமும் மக்கள் மத்தியில் பிடிப்பு உள்ளதை இந்த இடைத்தேர்தலும் காட்டியது. போட்டி அ.தி.மு.க. வாக்குகளைப் பிரிக்காமல் போயிருந்தால் தி.மு.க.வுக்கு நிலைமை சிக்கலாகி இருக்கும். ம.தி.மு.க.வும் 13 ஆயிரம் வாக்குகளைப் பெற்றது.

3.182 நாம் 5 ஆயிரம் வாக்குகள் பெற்றோம் என்றாலும், ஆடம்பரம் இல்லாமல், மற்ற கட்சிகள் போல் பணத்தை வாரி இறைக்காமல் தேர்தல் முறைகளுக்கு உட்பட்டு, நம்முடைய சுயேட்சையான அரசியல் கொள்கைகளை முன்வைத்து இந்த வாக்குகளைப் பெற்றோம். இருப்பினும் நாம் பெற்ற வாக்குகள், மக்களுக்கும் நமக்கும் உள்ள இடைவெளியைத் தெற்றெனக் காட்டுகிறது. மக்களோடு நாம் இன்னும் நெருக்கமாக இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துகிறது.

சாதிய மோதல்களை எதிர்த்தும் தீண்டாமை ஒழிப்பிற்காகவும்

3.183 கடந்த 3 ஆண்டுகளாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மாறிமாறி நடைபெற்ற சாதிக் கலவரங்கள் மக்கள் மத்தியில் பதட்டத்தையும், பீதியையும் உருவாக்கும் வகையில் இருந்தன. முதலில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் துவங்கிய கலவரம் பின்னர் விருதுநகர் மாவட்டத்தை பெருமளவு பாதித்து அதன் பின்னர் மதுரை புறநகர், மதுரை மாநகர், தேனி, இராமநாதபுரம், சிவகங்கை போன்ற மாவட்டங்களிலும் வன்முறைகள் உருவாயின.

3.184 சிவகாசி, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், கோவில்பட்டி ஆகிய நகரங்களில் பல நாட்கள் கடைகள் அடைக்கப்பட்டிருந்தன. தீப்பெட்டி தொழில் உட்பட பல சிறு தொழில்கள் முடங்கின. ஆலைகள் இயங்கவில்லை. விவசாயப் பணிகள் கலவரப்

பகுதிகளில் கடும் பாதிப்பை சந்திக்க நேர்ந்தது. அரசு நிர்வாகம் திணறியது. காவல்துறையால் நிலைமையை கட்டுப்படுத்த முடிய வில்லை என்பதோடு பல இடங்களில் நடுநிலையுடனும் செயல் படவில்லை. பல அரசியல் கட்சிகள் செய்வதறியாது திகைத்தன. மொத்தத்தில் இத்தகைய சாதிய மோதல்கள் ஜனநாயக இயக்கங் களுக்கு பெரும் சவாலாக விளங்கின.

3.185 இத்தகைய ஜாதிய மோதல்கள் வெடித்த போதெல்லாம் அவசர கடமையாக மக்களிடம் அமைதியை உருவாக்க முயற்சிகள் எடுத் தோம். சமாதான சுவரொட்டிகள், துண்டு பிரசுரங்கள், மனித சங்கிலி, அமைதிக்குழு என முடிவெடுத்தோம். பிறகு இத்தகைய மோதல்களுக்கு அடிப்படைக் காரணம் என்ன என்று விவாதித் தோம்; அந்தக் காரணத்தைக் களைய முடிவு எடுத்தோம்.

தீண்டாமையே அடிப்படைக்காரணம்

3.186 கட்சியின் மாநில செயற்குழு சாதிய மோதல்கள் - அதனால் ஏற்பட்ட நிலைமைகள் - அதற்கான காரணங்களை விரிவாக விவாதித்தது. கடந்த 3 ஆண்டுகாலத்தில் பல மாநில செயற்குழு கூட்ட விவாதங்களில் இப்பிரச்சனை பிரதான இடம்பெற்றது. சாதிய மோதல்களுக்கு பல உடனடிக் காரணங்கள் இருந்த போதும் இதற்கான அடிப்படைக் காரணம் தீண்டாமை உட்பட சாதியக் கொடுமைகளே என நமது கட்சி கணித்தது.

3.187 தமிழகம் முழுவதும் கிராமங்களில் பரவலாகவும், நகரங்களில் ஓரளவும் பல்வேறு வடிவங்களில் தீண்டாமை உள்ளது. மேல் சாதி மக்கள் குடியிருக்கும் தெருக்களை பயன்படுத்துவது, பொதுக்குழாய்கள், கிணறுகள், சுடுகாடுகள் பயன்படுத்துவது, பொது கோவில்களில் வழிபடுவது போன்ற பல்வேறு அம்சங் களில் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் உள்ளது. தமிழகத்தில் 7000 கிராமங்களில் தீண்டாமை உள்ளதாக தமிழக அரசின் புள்ளி விபரம் தெரிவிக்கிறது.

3.188 மதுரை மாவட்டம் மேலவளவு பஞ்சாயத்து தலைவர் உட் பட 6 பேர் படுகொலை, இராமநாதபுரம் மாவட்டம் கீழ்ப்பெருங் கரை கிராமத்தில் தலித் இளைஞர் மேல்சாதி தெருவில் செருப்பு போட்டு நடந்ததால் ஏற்பட்ட மோதல்கள், கோவில்பட்டியில் கோவில் திருவிழாவின்போது தலித் மக்களுக்கு காட்டப்பட்டு வரும் பாரபட்சத்தால் ஏற்பட்ட மோதல்கள், தலித் சமூகத்தைச் சார்ந்த விடுதலைப் போராட்ட வீரன் சுந்தரலிங்கம் பெயரில் போக்குவரத்துக்கழகம் அமைக்கப்பட்டதை எதிர்த்து சாதி வெறி யர்கள் தூண்டிவிட்டு நடைபெற்ற கலவரங்கள் போன்றவை

தமிழகத்தில் தீண்டாமை காரணமாக எவ்வாறு மோதல்கள் நிகழ்கின்றன என்பதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

3.189 சாதிய மோதல்கள் ஏற்பட்டபோது அரசு நிர்வாகமும், காவல் துறையும், பாரபட்சமாக செயல்பட்டதை பல சம்பவங்களில் காண முடிந்தது. தலித் மக்கள் ஓரளவு பொருளாதார முன்னேற்றம் அடைந்த கொடியங்குளம்கிராமத்தில் போலீசாரின் அத்து மீறிய தாக்குதல்கள் - கொடுமைகள் தமிழகத்தை உலுக்கிய சம்பவங்களாகும். விருதுநகர் மாவட்டம் மங்காபுரம், தேசிகாபுரம், சேத்தூர், இராமநாதபுரம் மாவட்டம், காட்டு பரமக்குடி மற்றும் பல பகுதிகளில் போலீசார் தலித் மக்கள் மீது கொடூரமான தாக்குதல்களை நடத்தினர். 1989ல் கொண்டுவரப்பட்ட வன் கொடுமை தடுப்பு சட்டத்திற்கு 1995ல்தான் விதிகளை அரசு உருவாக்கியது என்றபோதிலும், இதுவும்கூட இதுவரை முறையாக அமல்படுத்தப்படவில்லை. இருப்பினும், இந்த விதிகள் சில தலித் பிரிவினரால் தவறாக பயன்படுத்தப்படுவதாகவும் புகார்கள் உள்ளன.

மாநிலக் குழுவின் தலையீடுகள்

3.190 இத்தகைய நிலைமைகளை விவாதித்த நமது கட்சியின் மாநில செயற்குழு சாதிய மோதல்களுக்கு எதிராகவும், தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராகவும் செயல்படுமாறு கட்சி அணிகளுக்கு தொடர்ந்து அறைகூவல் விடுத்துவந்தது. இச்சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கட்சித் தலைமையோடு அவ்வப்போது விவாதித்து வழிகாட்டவும் செய்தது.

3.191 சாதிய மோதல்கள் - தீண்டாமையைக் கண்டித்தும் மாநில அரசு உடன் தலையிட வலியுறுத்தியும் நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களில் 100 இடங்களில் உண்ணாவிரதம் மேற்கொள்ள முடிவு செய்து, இந்த உண்ணாவிரதம் பரவலாக நடைபெற்றது. நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர் மாவட்டங்களிலிருந்து மக்களை திரட்டி நெல்லையில் 5000 பேர் பங்கேற்ற ஒற்றுமைப் பேரணி நடைபெற்றது.

3.192 சுந்தரலிங்கம் போக்குவரத்துக்கழகம் துவக்கப்பட்டதையொட்டியும், டாக்டர் கிருஷ்ணசாமி கைது செய்யப்பட்டதையொட்டியும், விருதுநகர் மாவட்டத்தில் பரவலாகவும், இதர தென்மாவட்டங்களில் ஓரளவும் கலவரம் ஏற்பட்டது. இதையொட்டி மாநில மையம் தென் மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தை மதுரையில் நடத்தியது. இதில் மாநில மையம் சார்பாக தோழர்கள் ஜி.ராமகிருஷ்ணன், பி.சம்பத் பங்கேற்றனர். இதில் விவாதிக்கப்பட்ட

அடிப்படையில் மாநில மையமும் விவாதித்து 14.5.97ல் தமிழக முதல்வர் கூட்டிய அனைத்துக் கட்சி, அனைத்து சமுதாய தலைவர்கள் கூட்டத்தில் நமது கட்சி பங்கேற்றது. இக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய நமது கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் என்.சங்கரய்யா, சுந்தரலிங்கம் போக்குவரத்துக்கழகம் பெயரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நமது கட்சி ஏற்கவில்லை என்றும், சாதியக் கலவரங்களை தடுப்பதற்கு தமிழக அரசு பிரதானமாக தீண்டாமை ஒழிப்பில் கவனம் செலுத்த வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

3.193 இக்கூட்டத்தில் நமது கட்சியின் கருத்து இதர கட்சித் தலைவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்தியது. கூட்ட முடிவில் சுந்தரலிங்கம் போக்குவரத்துக்கழகம் நீடிக்குமென தமிழக முதல்வர் அறிவித்தார். ஆனால் இதன் பிறகு புலித்தேவன் போக்குவரத்துக்கழகம் அமைக்க வேண்டும் எனவும், இதர பல சாதிய கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன.

3.194 இதனைத் தொடர்ந்து குழப்பம் அதிகரித்தது. எல்லா பெயர்களையும் எடுத்துவிட வேண்டுமென்ற கோரிக்கை மீண்டும் முன்னுக்கு வந்தது. சில அரசியல் கட்சித் தலைவர்கள் மட்டுமல்ல, அறிஞர்கள், கலைஞர்கள், நடுநிலையாளர்கள் என பல்வேறு தரப்புகளிலிருந்தும், அமைப்புகளிலிருந்தும் இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இது குறித்து நமது கட்சியின் மாநில மையம் மீண்டும் விவாதித்தது. இதன்பிறகு தமிழக முதல்வர் இப்பிரச்சனைக்காக மீண்டும் கூட்டிய அனைத்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நமது கட்சியின் சார்பாக தோழர் என்.வரதராஜன் பங்கேற்றுப் பேசினார்.

3.195 இக்கூட்டத்திலும் நமது கட்சியின் அடிப்படை நிலைபாட்டை மீண்டும் வலியுறுத்தினோம். மேலும் பெயர்களை எடுத்துவிடுவதால் மட்டும் சாதிய மோதல்கள் தீர்ந்துவிடாது; தீண்டாமை கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதே இப்பிரச்சனைக்கு சரியான தீர்வு. இருப்பினும், பெயர்களை எடுத்துவிடுவதன் மூலம் பிரச்சனைகள் தீர்ந்துவிடுமென பரவலாக கருதப்படுமானால் அதற்கு எங்கள் கட்சி குறுக்கே நிற்காது என கட்சியின் நிலை தெளிவுபடுத்தப்பட்டது.

3.196 இவ்வாறு இப்பிரச்சனையில் தீண்டாமைக்கு எதிராக உறுதியாக நின்றுகொண்டும், கட்சியின் அடிப்படைக் கோட்பாடுகளை விட்டுக்கொடுக்காமலும், அதே நேரத்தில் நிலைமைகளில் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக்

கொண்டும், நமது கட்சி செயல்பட்டது. முதல்வர் கூட்டிய இரு கூட்டங்களிலும் தோழர் ஜி.ராமகிருஷ்ணன் பங்குபெற்றார்.

மாவட்டக்குழு நடவடிக்கைகள் - மாநில மையம் உதவி

3.197 இக்காலத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் கட்சியின் மாவட்டக்குழுக்களும் கீழ்மட்ட அமைப்புகளும் மிகுந்த சிரமங்களை சந்தித்து செயல்பட்டன. சாதி வெறி சக்திகளின் பிரச்சாரம் - வன்முறைகள் ஒருபுறம், பல அரசியல் கட்சிகளின் தடுமாற்றம் மறுபுறம் என்ற நிலையில் நமது கட்சியின் செயல்பாடு சுலபமானதாக இருக்கவில்லை. இருப்பினும், நமது கட்சிப் பாதையை முன்னிறுத்தி பல இயக்கங்களும், தலையீடுகளும் நடந்தன.

3.198 தூத்துக்குடி மாவட்டம், நாலுமூலைக்கிணறு போலீஸ் தாக்குதலில் நமது நடவடிக்கைகள் - நீதிமன்றத் தீர்ப்பு (தலித் மக்களுக்கு ரூ. 23 லட்சம் நஷ்ட ஈடு, பல லட்சம் செலவில் நல்வாழ்வுப் பணிகள், தவறு செய்த 82 போலீசார் சஸ்பெண்ட் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டது உட்பட) கொடியங்குளம் பிரச்சனையில் நமது இயக்கங்கள் உயர்நீதிமன்ற வழக்கால் சி.பி.ஐ. விசாரணை போன்றவை மாநில அளவில் நமது அந்தஸ்தையும், செல்வாக்கையும் உயர்த்தியது. விருதுநகர் மாவட்டம், மங்காபுரம், தேசிகாபுரம்,. சேத்தூர் பகுதிகளில் தலித் மக்கள் தாக்கப்பட்டபோது, மாநில மையத்தின் ஆலோசனையுடன் தோழர் பி.சம்பத் நேரில் சென்று வழிகாட்டி உதவியது.

3.199 இதே மாவட்டத்தில் நமது தோழர்கள் இருளப்பன் - தமிழ்ச்செல்வி சாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்டபோது தோழர் டி.லட்சுமணன் நேரில் சென்று ஆறுதல் கூறியது, காட்டு பரமக்குடியில் தலித் மக்கள் மீது தேவையற்ற துப்பாக்கிச்சூடு நடந்தபோது மாநில மையத்தின் சார்பாக தோழர்கள் என்.வரதராஜன், பி.சம்பத், எஸ்.ஏ.பெருமாள், கருப்புராஜா ஆகியோர் நேரில் சென்று ஆறுதல் கூறியது, நெல்லைமாவட்டம், தேவிபட்டிணத்தில் சாதி வெறியர்களால் 8 பேர் படுகொலை செய்யப்பட்டபோது தோழர்கள் பி.சம்பத், வி.பழனி உட்பட நேரில் சென்று ஆறுதல் கூறியது, பின்னர் இப்பிரச்சனையில் கிராம மக்களிடையே சமரசம் ஏற்பட நமது கட்சித் தோழர்கள் உதவியது, கோவில்பட்டியில் சாதி மோதலுக்கு எதிராக நடைபெற்ற பேரணியில் தோழர்கள் கே.வரதராசன், பி.சம்பத் ஆகியோர் பங்கேற்று உதவியது, சாதிய மோதல் காலத்தில் விருதுநகர், கோவில்பட்டி ஆகிய இடங்களில் நடைபெற்ற பல நூற்றுக்கணக்கானோர் பங்கேற்ற பேரவைக்கூட்டங்களில் மாநிலச் செயலாளர்

தோழர் என்.சங்கரய்யா, மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் பி.சம்பத் பங்கேற்று உதவியது போன்றவை நமது தனித்தன்மையை வெளிப்படுத்தவும், அந்தஸ்தை உயர்த்தவும் பயன்பட்டன.

3.200 சாதிய கலவரங்கள் நடைபெற்ற சூழலிலும், மாநில செயற்குழு ஆலோசனைப்படி தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் மாவட்டங்களில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளில் மாநில மையத்தின் சார்பாக தோழர்கள் கே.வரதராசன், பி.சம்பத், டி.லட்சுமணன், மைதிலி சிவராமன், பாலபாரதி பங்கேற்று உதவினர். இம்மாநாடுகள் இம்மாவட்டங்களில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியதோடு நமது அணிகள் மத்தியில் நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஏற்படுத்தியது.

3.201 இக்காலத்தில் மேற்குறிப்பிட்ட மாவட்டங்கள் மட்டுமின்றி மதுரை மாநகர், மதுரைபுறநகர், தேனி, சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலும் பல பிரச்சனைகளில் நமது கட்சி மாவட்டக்குழுக்கள் தலையிட்டு நடவடிக்கைகள் மேற்கொண்டது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

3.202 நமது கட்சியின் மாநில செயற்குழு ஆலோசனைப்படி இந்திய ஜனநாயக வாலிபர் சங்க மாநில மாநாட்டையொட்டி நெல்லையில் நடைபெற்ற இறுதிநாள் பேரணி மக்கள் ஒற்றுமை - தீண்டாமை ஒழிப்பை பிரதான நோக்காக கொண்டு நடத்தப்பட்டது. பல்லாயிரக்கணக்கானோர் பங்கேற்ற இப்பேரணியில் மாநிலச் செயலாளர் தோழர் என்.சங்கரய்யாவும், வாலிபர் சங்கத் தலைவர்களும் பங்கேற்று உரையாற்றினர். பின்னர் இம்மாநாட்டு முடிவுப்படி மக்கள் ஒற்றுமையை வலியுறுத்தி தென்மாவட்டங்களில் 7 முனைகளிலிருந்து சைக்கிள் அணி பிரச்சாரம் புறப்பட்டு இறுதியாக திருவில்லிபுத்தூரில் பேரணி பொதுக்கூட்டம் நடைபெற்றது. மாநில மையத்திலிருந்து தோழர் கே.வரதராசன் மற்றும் வாலிபர் சங்க மாநிலத் தலைவர்களும் பங்கேற்று உரையாற்றினர். வாலிபர் சங்கத்தின் இந்த இரு இயக்கங்களும் மக்கள் ஒற்றுமை - தீண்டாமை ஒழிப்புக்கான இயக்கத்தில் முக்கிய பங்களிப்பாக இருந்தன. அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் அக்டோபர் 2ல் இதே பிரச்சனைக்காக மகளிர் சங்கிலி இயக்கத்தை தென்மாவட்டத் தலைநகரங்களில் நடத்தியது.

மேலவளவு படுகொலை

3.203 மேலவளவு படுகொலை சம்பவம் நடந்தவுடன் நமது கட்சியின் மாநில செயற்குழு உடனடியாக தனது கடுமையான கண்டனத்தை வெளியிட்டதோடு, மாநில அளவில் கண்டன இயக்

கத்திற்கு வேண்டுகோள் விடுத்தது. இச்சம்பவம் நடந்த சில தினங்களுக்குள் நமது கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் என்.சங்கரய்யா, மாநிலக்குழு உறுப்பினர்கள் ஏ.லாசர், பி.மோகன், ஏ.அப்துல் வஹாப் மற்றும் மதுரை மாநகர், மதுரை புறநகர் மாவட்ட தலைவர்களுடன் மேலவளவு கிராமம் சென்று பாதிக்கப்பட்ட மக்களை சந்தித்தனர். பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசு கொடுத்த நிவாரணத் தொகைகளை உயர்த்தும்படியும், பாதுகாப்பைப் பலப்படுத்தும்படியும், வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தும்படியும் முதலமைச்சரை வற்புறுத்தினோம். தொடர்ந்து அப்பிரச்சனையில் கவனம் செலுத்தினோம். மேலும், இப்பிரச்சனை பற்றிய விபரங்கள் பிரதிநிதி தோழர்களுக்கு விளக்கப்படும்.

மாநில மையத்தின் அரசியல் முயற்சிகள்

3.204 இவ்வாறு பாதிக்கப்பட்ட தென்மாவட்டங்களில் நமது தலையீடுகளுக்கும், இயக்கங்களுக்கும் மாநில செயற்குழு உதவியது. மேலும் இப்பிரச்சனையில் மாநில செயற்குழு அரசியல் ரீதியான பல முன்முயற்சிகளையும் மேற்கொண்டது. சென்னையில் 8.6.97ல் நமது கட்சி சார்பாக நடத்தப்பட்ட தீண்டாமை ஒழிப்பு மாநாடு இதில் முக்கிய நிகழ்ச்சியாகும். தோழர்கள் என்.சங்கரய்யா, என்.வரதராஜன், கே.வரதராசன், அ.சௌந்தரராசன், பி.சம்பத், பி.சண்முகம், மைதிலிசிவராமன், வி.தம்புசாமி ஆகிய நமது கட்சித் தலைவர்கள் மட்டுமின்றி சி.பி.ஐ. மாநிலச் செயலாளர் ஆர்.நல்லகண்ணு, சர்வோதய இயக்கத் தலைவர் ஜெகநாதன், மனித உரிமைக் கட்சி தலைவர் எல்.இளையபெருமாள், பத்திரிக்கையாளர் என்.ராம் ஆகியோரையும் இதில் பங்கேற்க வைத்தோம்.

3.205 மாநிலம் முழுவதும் இருந்து நமது கட்சி உறுப்பினர்களும், ஆதரவாளர்களுமாக சுமார் 3000 பேர் பங்கேற்றனர். இம்மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், இதில் பங்கேற்ற தலைவர்களின் உரைகளும் இப்பிரச்சனையில் நமது அணிகளுக்கு தெளிவையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தின. தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் ஜனநாயக இயக்கங்களிடம் இம்மாநாடு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியது. இம்மாநாட்டிற்குப்பின் நமது கட்சியின் முன்முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் கூடுதலான ஆதரவும் வரவேற்பும் இருப்பதைக் காண முடிந்தது.

3.206 15.7.97ல் நமது கட்சியின் மாநிலச் செயலாளர் தோழர் என்.சங்கரய்யா தலைமையில் நமது கட்சியின் மாநிலத் தலைவர்கள் தமிழக முதல்வரைச் சந்தித்து சாதிய மோதல்கள் பற்றி

விவாதித்தோம். நமது கட்சியின் நிலைபாடு அடிப்படையில் ஒரு கடிதத்தையும் கொடுத்தோம். தமிழகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றுவரும் சாதியக் கலவரங்களுக்கான சமூக, அரசியல், பொருளாதாரக் காரணங்களைக் கண்டறியவும், தீண்டாமைக் கொடுமைகள் நிலவும் பகுதிகளைக் கண்டறிந்து அதனைக் களைவதற்கான ஆலோசனைகள் பெறவும் உயர்நீதிமன்ற நீதிபதி தலைமையில் ஒரு குழுவை நியமனம் செய்வது உட்பட பல ஆலோசனைகளை அதில் தெரிவித்திருந்தோம். நமது கருத்துக்களை கேட்டறிந்த தமிழக முதல்வர் நமது சில ஆலோசனைகளுக்கு உடனடியாக ஒப்புதல் தெரிவித்தார். நாம் சந்தித்த ஒருவார காலத்தில் நீதிபதி மோகன் தலைமையில் ஒரு குழுவை தமிழக அரசு நியமனம் செய்தது. அக்குழு தற்போது தமிழகத்தின் தென்மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து பல்வேறு அமைப்புகள் மற்றும் மக்களின் கருத்துக்களையும் கேட்டறிந்து வருகிறது. இதுமட்டுமின்றி நாம் கேட்டுக்கொண்டபடி மதுரையில் தமிழக முதல்வர் தலைமையில் பல்வேறு கட்சித் தலைவர்கள் பங்கேற்ற தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடந்தது. இம்மாநாட்டில் தோழர் என்.சங்கரய்யா பேசும்போது கூறிய சில ஆலோசனைகளை அம்மாநாட்டிலேயே ஏற்றுக்கொண்டு அமுல் செய்வதாக தமிழக முதல்வர் அறிவித்தார்.

3.207 ஆரம்பத்தில் இப்பிரச்சனையில் தயக்கத்துடன் செயல்பட்டாலும், பின்னர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் தீண்டாமை ஒழிப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தத்தொடங்கியுள்ளது. நாம் பல மாவட்டங்களில் நடத்திய தீண்டாமை ஒழிப்பு மாநாடுகளில் அக்கட்சியின் மாவட்டத் தலைவர்கள் பங்கேற்றதோடு, அக்கட்சியும் சில மாவட்டங்களில் தனியாக தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்தி நம்மை பங்கேற்கவைத்தது.

3.208 நமது கட்சி தொடர்ச்சியாக எடுத்துக்கொண்ட முயற்சிகளின் பலனாக நமது கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இணைந்து 97 அக்டோபர் 2ல் கும்பகோணத்தில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு சிறப்பாக நடத்தினோம். பல்லாயிரம் பேர் பங்கேற்ற இம்மாநாடு இப்பிரச்சனையில் நடைபெற்ற மற்றொரு முக்கிய நிகழ்ச்சியாக அமைந்தது. தி.மு.க. மாநாட்டில் தீண்டாமை பற்றி தீர்மானம் நிறைவேற்றியது மற்றொரு முக்கிய அம்சமாகும்.

3.209 தற்போது த.மா.கா. தலைவர் ஜி.கே.மூப்பனாரும், தீண்டாமை ஒழிப்பு பற்றியும், தலித் மக்கள் பிரச்சனைகள் பற்றியும் பேசி வருவதைக்காண முடிகிறது.

3.210 இவ்வாறு நமது சுயேச்சையான முயற்சிகள் ஒருபுறமும், இதர கட்சிகளையும் தமிழக அரசையும் இப்பிரச்சனையில் தலையிட எடுத்த முயற்சிகள் மறுபுறமுமாகச் சேர்ந்து தீண்டாமை ஒழிப்பு என்பது தமிழகத்தில் முக்கிய பிரச்சனையாக முன்னுக்கு கொண்டுவரப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

பிரசுரம் - கட்டுரைகள்

3.211 இக்காலத்தில் இப்பிரச்சனை பற்றி சில பிரசுரங்களை கட்சியின் மாநில செயற்குழு வெளியிட்டது. தீண்டாமை ஒழிப்பு மாநாடு நிகழ்ச்சிகள் - தீர்மானங்கள் தொகுத்தும், அரசியல் தலைமைக்குழு உறுப்பினர் தோழர் சீத்தாராம் யெச்சூரி எழுதிய கட்டுரையை இணைத்தும் தோழர் கே.வரதராசன் எழுதிய "தீண்டாமை தீயணைப்போம்" என்ற பிரசுரம் வெளியிடப்பட்டது.

3.212 இருப்பினும், இந்த பிரசுரத்தை பல மாவட்டக்குழுக்கள் வாங்கி பயன்படுத்தாமல் இருந்தது பலவீனமாகும். தீண்டாமைக்கு எதிராக தோழர் என்.சங்கரய்யா எழுதிய கட்டுரை தினமணியில் வெளியிடப்பட்டது.

3.213 இக்காலத்தில் தோழர்கள் கே.வரதராசன், பி.சம்பத், டி.லட்சுமணன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் தீக்கதிரில் வெளியாயின.

சமூக சீர்திருத்த இயக்கம் - நமது நிலை

3.214 சாதிய மோதல்களை தடுப்பது, தீண்டாமை ஒழிப்பு என்பது இன்றைய சூழ்நிலையில் நமது கட்சி பலத்தால் மட்டும் தீர்வு காணக்கூடிய பிரச்சனையல்ல. இதில் அனைத்து ஜனநாயக இயக்கங்களையும் தலையிட வைப்பது என்ற பாதையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இது எளிதில் தீர்வுகாணக்கூடிய பிரச்சனையல்ல. 2000ம் ஆண்டு காலமாக நீடித்துவரும் சாதிய கொடுமைகளுக்கு முடிவு கட்டுவது என்பது மிகவும் சிக்கலான, சிரமங்களை எதிர்கொள்ளக்கூடியதுமான பணி என்பதை குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது.

3.215 தீண்டாமை, சாதியக் கொடுமைகளுக்கு எதிரான சமூக சீர்திருத்த இயக்கம் தமிழகத்திலும் இந்தியாவின் இதரப் பகுதிகளிலும் நடந்துள்ளது. இதனால், இக்கொடுமைகளின் தீவிர தன்மையிலும், வடிவத்திலும் மாறுதல் ஏற்பட்டிருப்பது உண்மை. என்றாலும், இக்கொடுமைகளை ஒழிக்க முடியவில்லை. சமூக சீர்திருத்த இயக்கங்களுக்குத் தலைமை தாங்கிய அமைப்புகளும், தலைவர்களும் இந்தியாவில் சாதியம் தோன்றியதற்கான வர்க்க பின்னணியைக் கணக்கில் எடுக்காமல் வெறும் மனிதாபிமான

பிரச்சனையாகவே கருதினர். சாதியம் - தீண்டாமை, நிலப்பிரபுத்துவ அமைப்பின் சமூக அவலங்களாகத் திகழ்கின்றன. எனவே, தீண்டாமைக்கு எதிரான. சமூக சீர்திருத்த இயக்கம், நிலத்திற்கான போராட்டம் (நிலச்சீர்திருத்தம்), விவசாய கூலிக்கான போராட்டம் போன்றவற்றுடன் இணைத்து நடத்தப்பட வேண்டும்.

3.216 மே.வங்கம், கேரளா, தமிழகத்தின் கீழத்தஞ்சை மாவட்டம் ஆகிய பகுதிகளின் சமூக சீர்திருத்த இயக்கத்தை இத்தகைய பார்வையுடன்தான் கம்யூனிஸ்ட் இயக்கம் நடத்தி நல்ல மாறுதலை ஏற்படுத்த முடிந்தது என்பது அனுபவம். இருப்பினும், தமிழகத்தில் இத்தகைய வழிமுறையிலான சமூக சீர்திருத்த இயக்கத்தை நமது கட்சி உள்ளிட்ட இடதுசாரி இயக்கங்கள் தொடர்ச்சியான கண்ணோட்டத்தில் நடத்த தவறியுள்ளோம் என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய பலவீனமாகும்.

3.217 இப்பின்னணியில் தீண்டாமைக்கு எதிரான உறுதியான நிலையெடுத்து, சாதிய மோதலுக்கு எதிராக போராடுமாறு நமது கட்சி முடிவு செய்தபோது, நமது அணிகளுக்கு இது புதுமையானதாகவும், சிக்கலானதாகவும் இருந்தது. பல இடங்களில், இப்பிரச்சனையில் தலையிடுவதற்கு கட்சி அணிகள் மத்தியில் தயக்கமும், ஊசலாட்டமும் இருந்தது.

3.218 நமது கட்சிக்குள்ளிருந்த இத்தகைய நிலைமைகளில் மாற்றம் காண்பதற்கு கட்சியின் மாநில செயற்குழுவும், மாநிலக்குழுவும் பல முயற்சிகளை மேற்கொண்டது. கட்சியின் தென்மாவட்டங்களின் செயற்குழு உறுப்பினர் கூட்டத்தை 1997, ஜூலை 16, 17 தேதிகளில் மதுரையில் நடத்தினோம். இக்கூட்டத்தில் நடந்த விவாதம் பயனுள்ளதாக அமைந்தது. கட்சிக்கு சரியான அணுகுமுறை ஏற்படுவதற்கு இக்கூட்டம் பெரிதும் உதவியது. இக்கூட்ட விவாத அடிப்படையில் மாநில செயற்குழு ஒரு அறிக்கையை தயார் செய்து மாநிலக்குழுவிலும் விவாதித்தோம். இப்பிரச்சனைகள் குறித்து தெளிவுபடுத்தி "சாதிய மோதல்கள் - நமது தலையீடுகளும், அனுபவங்களும்" என்ற தலைப்பில் கட்சிக் கடிதம் எண்: 6 வெளியிடப்பட்டது.

3.219 தமிழகத்தில் சாதிய மோதல்களையொட்டி நாம் எடுத்த நிலைபாடும், நடவடிக்கைகளும் இதர அரசியல் கட்சியிடமிருந்து குணாம்சரீதியாக நம்மை பிரித்துக்காட்டியது என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

சாதிய அமைப்புகளின் சவால் - நமது கடமை

3.220 தமிழகத்தில் சாதிய அமைப்புகள் நமது நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வரும் நிலையில் நமது கடமை மேலும் முக்கியத் துவம் பெறுகிறது. சில ஜாதிய அமைப்புகள் சாதி ஆதிக்கத்தையும், சாதி வெறியையும் நிலைநாட்ட தீவிரமாக செயல்படுகின்றன. மறுபுறம் தலித் மக்களிடையேயும் பல்வேறு அமைப்புகள் செயல் படுகின்றன. இவற்றில் சில அமைப்புகள் தீண்டாமை பிரச் சனையை ஒரு சமூக பிரச்சனையாக கருதாமல் சாதிய கண் ணோட்டத்தில் அணுகி தேர்தல் ஆதாயம் கருதி செயல்படு கின்றன. இத்தகைய அமைப்புகள் தலித் மக்களை ஜனநாயக இயக் கங்களிடமிருந்தும், அரசியல் இயக்கங்களிடமிருந்தும் தனிமைப் படுத்த முயலுகின்றன.

3.221 இக்காலத்தில் தீண்டாமைக்கு எதிரான மாநாடுகள், பிரச்சாரம் தலித் மக்களுக்கு எதிரான கொடுமைகள் குறித்து தலையிடுவது போன்ற நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டோம். இதற்கும் மேலாக தீண்டாமை நிலவும் கிராமங்களையும், பகுதிகளையும் கண்டறிந்து அதனை எதிர்த்து நேரடியான நடவடிக்கைகளில் நாம் இறங்க வேண்டும். தீண்டாமை நிலவும் அனைத்து பகுதி களிலும் அதற்கெதிரான நேரடி நடவடிக்கைகளை ஏககாலத்தில் மேற்கொள்வது இயலாமல் இருக்கலாம்.

3.222 ஆயினும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஓரிரு கிராமங்களை தேர்வு செய்து நமது நடவடிக்கைகளை துவக்க வேண்டும். இதன் தாக்கமும், வீச்சும், தீண்டாமை ஒழிப்புக்கான இயக்கத்தை மேலும் தீவிரப்படுத்தும். தீண்டாமை கொடுமைகளுக்கு எதிராக பிரச்சாரமும் தேவை; தலையீடும் தேவை!

"சாதிக் கொடுமைகளை ஒழிப்போம்!

சாதி மோதல்களை தவிர்ப்போம்!

மக்கள் ஒற்றுமையைப் பாதுகாப்போம்"

- என்ற பதாகையை தமிழகத்தில் முன்னெடுத்துச் செல்ல இம் மாநாட்டில் சபதமேற்போம்!

நம் கட்சியின் கடலூர் மாநில மாநாட்டிற்குப்பின் நம் கட்சி எடுத்த சில முக்கிய அரசியல் முடிவுகள்

3.223 மதிமுகவின் திருச்சி மாநாட்டில் நம் கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் சுர்ஜித்தும், மாநிலக்குழுவின் செயலாளரும் கலந்துகொண்டு உரையாற்ற வேண்டுமென்று திரு.கோபால்சாமி வற்புறுத்தினார்.

3.224 கட்சியின் அரசியல் தலைமைக்குழு தோழர்களும், மாநில செயற்குழு தோழர்களும் கலந்துகொண்ட கூட்டத்தில் (சண்டிகர் மாநாட்டிற்குப் பின் டில்லியில் நடந்தது) மதிமுக மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டு உரையாற்றுவது என முடிவு செய்யப்பட்டது.

3.225 அதன்படி தோழர்கள் சுர்ஜித், என்.சங்கரய்யா ஆகியோர் அம்மாநாட்டில் பேசினார்கள். ஆயினும், அம்மாநாட்டில் தனி ஈழத்தை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றியதைத் தொடர்ந்து நம் கட்சியின் மாநில செயற்குழுவின் சார்பில் அப்பிரச்சனையில் நம் நிலையை வேறுபடுத்திக்காட்டி அறிக்கை வெளியிட்டோம். இலங்கைப் பிரச்சனையில் நமது கொள்கையை தெளிவுபடுத்தினோம். அணிகளுக்கு விளக்கிக் கூறினோம்.

3.226 சில மக்கள் பிரச்சனைகளின் மீது, நாமும், ம.தி.மு.க.வும் கூட்டு இயக்கங்களை நடத்தினோம். அந்த இயக்கங்களின்போது, இலங்கைப் பிரச்சனையில் நம்மிரு கட்சிகளுக்கிடையிலிருந்த கருத்து மாறுபாடுகளை பொது மேடைகளில் தவிர்ப்பது என்று நாமும் அவர்களும் முடிவு செய்தோம்.

3.227 எனினும், ம.தி.மு.க. சார்பில் அமெரிக்க ஜனாதிபதிக்கு தனி ஈழம் குறித்து திரு.கோபால்சாமி கடிதம் எழுதியதை அரசியல் ரீதியில் விமர்சனம் செய்து நம் பத்திரிகையில் கட்டுரை வெளியிட்டோம். இக்கட்டுரையை தோழர் கே.வரதராசன் மாநில செயற்குழு சார்பில் எழுதினார்.

3.228 கூட்டு இயக்கங்களின் பிரச்சாரத்தின்போது, ம.தி.மு.க. மத்திய அரசின் தவறான கொள்கைகளை விமர்சிக்கத் தயங்கியது. அக்குறைபாட்டை நாம் அவர்களிடம் தொடர்ந்து சுட்டிக்காட்டினோம். பொதுத்தேர்தலுக்கு முன் மதுரையில் நடைபெற்ற ம.தி.மு.க.வின் தேர்தல் சிறப்பு மாநாட்டிலும் தோழர் சுர்ஜித், தோழர் என்.சங்கரய்யா நம் அணுகுமுறையை விளக்கி பேசினர்.

3.229 திமுக 1996ம் ஆண்டின் பொதுத்தேர்தலுக்கு முன், காங்கிரஸ் கட்சியுடன் கூட்டு சேர வெளிப்படையாக முயற்சித்தது. இதை நாம் விமர்சனம் செய்தோம். தி.மு.க.வின் இந்த ஊசலாட்டத்தைத் தொடர்ந்து நாமும், ம.தி.மு.க.வும் சேர்ந்து தேர்தல் அணியை உருவாக்கினோம். இந்தத் தேர்தல் இயக்கம் மற்றும் அதன் முடிவுகள் குறித்து இந்த அறிக்கையின் முன்பகுதியில் விளக்கப்பட்டுள்ளது.

3.230 தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது; அதேசமயம் மத்தியில் ஐக்கிய முன்னணி ஆட்சியிலும் பங்கேற்றது. த.மா.கா-வும் ஐக்கிய முன்னணி ஆட்சியில் பங்கேற்றது.

3.231 கட்சியின் தமிழ் மாநில செயற்குழு இந்த நிலையை விவாதித்து, இது குறித்து கட்சியின் தலைமைக்குழுவுடன் விவர்தித்தோம். அக்கூட்டத்தில் தி.மு.க., த.மா.கா. ஆகிய கட்சிகள் ஐக்கிய முன்னணி அமைப்பிலும், மத்திய ஆட்சியிலும் பங்கேற்றிருப்பதை வரவேற்பதெனவும் அதே சமயம், நம் கட்சி தமிழகத்தில் திமுக ஆட்சிக்கு ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படுவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

3.232 இந்த முடிவின் அடிப்படையில்தான், நம் கட்சி தமிழகத்தில் தன் அரசியல் நடைமுறைக் கொள்கையை அமலாக்கி வருகிறது.

3.233 ம.தி.மு.க., ஐக்கிய முன்னணி ஆட்சியை ஆதரிக்கவில்லை. காவிரி நதி நீர் பிரச்சனை, இலங்கைப் பிரச்சனை, கச்சத்தீவு போன்றவற்றில் மத்திய ஐக்கிய முன்னணி ஆட்சியை ம.தி.மு.க. கண்டித்தது. இவற்றில் நம் கட்சியின் நிலைபாட்டை வேறுபடுத்திக்காட்டியும் நம் சுயேட்சையான கொள்கைகளை வலியுறுத்தியும் பிரச்சாரம் செய்தோம்.

3.234 தி.மு.க. ஆட்சியின் தவறுகளை நாம் தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறோம். இயக்கங்களையும் மேற்கொண்டோம். இந்நிலையில் உள்ளாட்சி மன்றத் தேர்தல்களிலும், நாமும் ம.தி.மு.க.வும் தேர்தல் உடன்பாடு காண முயற்சித்தோம். உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் ம.தி.மு.க. நம்மிடம் நியாயமாக நடந்துகொள்ளவில்லை என்பது பற்றியும், உள்ளாட்சி மன்றத் தேர்தல் முடிவுகள் பற்றியும் இந்த அறிக்கையில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தல் முடிந்தபின், கூட்டு இயக்கங்களை ம.தி.மு.க.வுடன் இனி நடத்துவதில்லை என்று கோவில்பட்டியில் கூடிய நம் மாநிலக்குழு முடிவு செய்தது.

3.235 இந்தப் பின்னணியில் தான் புதுக்கோட்டை தொகுதி இடைத் தேர்தலில் நாம் தனியாக போட்டியிடுவதென்று முடிவு செய்தோம். புதுக்கோட்டை மாவட்டக்குழு இத்தேர்தலில் கட்சி போட்டியிட வேண்டுமென்ற செயற்குழு ஆலோசனையை ஏற்றுக்கொண்டது. அதன்பின் செயற்குழுவின் ஆலோசனை அரசியல் தலைமைக்குழுவிற்கு தெரிவிக்கப்பட்டது. அரசியல் தலைமைக்குழு அதற்கு அனுமதி அளித்தது.

3.236 மக்களின் உடனடிப் பிரச்சனைகளை முன்வைத்தும், நம் சுயேச்சையான மாற்றுக்கொள்கைகளை வலியுறுத்தியும், மத்திய ஐக்கிய முன்னணியில் தி.மு.க. அங்கம் வகிக்கிறது என்பதை கவனத்தில் வைத்துக்கொண்டும் தேர்தல் இயக்கத்தை நடத்தும்படி நமக்கு கட்சியின் அரசியல் தலைமைக்குழு வழிகாட்டியது.

3.237 புதுக்கோட்டை தொகுதி உபதேர்தல் இயக்கம் குறித்து இந்த அறிக்கையின் முன்பகுதியில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டுள்ளது.

இன்றைய தமிழக அரசியல் நிலை

3.238 திராவிட முன்னேற்றக்கழகத்திற்கும், அ.தி.மு.கழகத்திற்கும் இடையில் அடிப்படை பிரச்சனைகளில் பெரிய வித்தியாசமில்லை. புதிய பொருளாதாரக் கொள்கைகளை இரண்டு கட்சிகளும் ஆதரிக்கின்றன.

3.239 நில உச்சவரம்பு சட்டமான நிலச்சீர்திருத்தம், உழுபவனுக்கே நிலம் என்கிற கொள்கைகளை அமல்படுத்துவதில் இரண்டு கட்சிகளுமே அக்கறையற்ற கொள்கைகளைத் தான் கடைப்பிடிக்கின்றன.

3.240 இலங்கைப் பிரச்சனை, இட ஒதுக்கீடு பிரச்சனை போன்றவைகளிலும் இரு கட்சிகளுக்குமிடையே பெரிய மாறுபாடில்லை. ஆட்சியில் இருக்கும்போது ஒரு அணுகுமுறையும், ஆட்சியில் இல்லாதபோது மற்றொரு அணுகுமுறையும் என இரு கட்சிகளுமே கடைப்பிடித்து வருகின்றன.

3.241 ஆனால் ஜெயலலிதா தலைமையில் அதிமுக ஆட்சி நடந்தபோது மரபுகளை மதியாமை, சட்டத்தை மீறுதல், அதிகார துஷ்பிரயோகம், எதிர்க்கட்சிகளின் ஆலோசனைகளை செவிமடுக்காமை, மாற்றுக் கருத்துக்களைக் கொண்டோரை அவமானப்படுத்துதல், அரசியல் வன்முறை, கொலைகள், தமிழகம் இதுவரைக் கண்டிராத ஊழல், ஊதாரிச் செலவுகள், அரசாங்க சொத்துக்களை அபகரித்தல் - இப்படி அ.தி.மு.க. அரசு மக்களிடையே பெரும் கோபத்தைச் சம்பாதித்துக்கொண்டது. ஜனநாயக சக்திகளை பகைத்துக்கொண்டது. அ.தி.மு.க. அரசின் இந்த எதிர்ப்பு அலையை, தமிழ்மாநிலக் காங்கிரசோடு கூட்டு சேர்ந்து தி.மு.க. வெகுவாகப் பயன்படுத்திக்கொண்டு ஆட்சியைப் பிடித்தது.

தி.மு.க. அரசு

3.242 தி.மு.க. அரசாங்கம் தனிக்கட்சி பெரும்பான்மையுடன் ஆட்சி நடத்திவருகிறது. இந்த அரசுக்கு த.மா.கா., இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் (லத்தீப்) ஆகியவை ஆதரவு அளிக்கின்றன. மத்தியில் ஐக்கிய முன்னணி ஆட்சியில், இக்கட்சி பங்கேற்று வருகிறது. இந்த ஆட்சி, மத்திய அரசின் தாராளவாத பொருளாதாரக் கொள்கையை முழுமையாக ஆதரிக்கிறது.

3.243 அன்னிய கம்பெனிகளுக்கும், சுதேசி பெருமுதலாளிகளின் கம்பெனிகளுக்கும், தொழில்கள் துவங்க எல்லாவித சலுகைகள் வழங்கவும் திமுக. அரசு தயாராக உள்ளது. தமிழ்நாடு மின்வாரிய அமைப்புகளை படிப்படியாக தனியாருக்கு கொடுக்க அரசு திட்டமிட்டு வருகிறது.

3.244 மாநில அரசுக்கு சொந்தமான அரக்கோணம் உருக்கு தொழிலை காண்ட்ராக்ட்டர்களுக்கு கொடுத்துவிட முயற்சிக்கிறது.

3.245 கைத்தறிக்கு கொடுத்த மானிய அளவை 20 சதத்திலிருந்து 10% ஆக குறைத்தது. நாம் இதைக் கண்டித்தோம். கைத்தறியாளர்களின் கிளர்ச்சிக்குப் பிறகே, மீண்டும் 20% மானியம் கொடுக்க முன்வந்தது. டீசல் விலை உயர்வைக் காட்டி பஸ் கட்டணத்தை கடுமையாக உயர்த்தியுள்ளது. நில உடமைக்கு உச்சவரம்பு கட்டும் சட்டத்தை திருத்தி, பயனுள்ள வகையில் நிலச்சீர்திருத்தம் செய்யும் அணுகுமுறை இந்த அரசுக்கு இல்லை.

3.246 பஞ்சாயத்து தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. மாவட்ட பஞ்சாயத்து என்ற மூன்றாவது அடுக்கு தேவையில்லை என்று இந்த அரசு கருதுகிறது. அதற்கான சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் மத்திய அரசு மூலம் கொண்டுவர வேண்டுமென்று இந்த அரசு முடிவு செய்துள்ளது.

3.247 கிராம, பஞ்சாயத்து ஒன்றியங்களுக்கும், நகராட்சிகளுக்கும் அதிக அதிகாரமும், அதிக நிதி வசதிகளும் செய்துதர திமுக அரசு தயங்குகிறது.

3.248 உள்ளாட்சி நிர்வாகங்களில், காண்ட்ராக்டர்கள் மூலம் தாங்கள் சம்பாதிக்கவே, இவற்றில் ஆட்சி செய்யும் முதலாளித்துவ அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் முனைப்பாக செயல்படுகின்றனர். உள்ளாட்சிகளின் மூலம் மக்களுக்கு கிடைக்க வேண்டிய வசதிகள் குறைந்த அளவிலேயே அவர்களுக்கு போய்சேருகின்றன.

3.249 கூட்டுறவு அமைப்புத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. ஆயினும், இத்தேர்தல்களில் ஆளும் கட்சி வெற்றிபெற பல தவறான வழிமுறைகளை பகிரங்கமாக கடைப்பிடித்தது. சென்னை ஜார்ஜ் டவுன் கூட்டுறவு வங்கி, போக்குவரத்துத்தொழிலாளர் கூட்டுறவு சங்கம் போன்றவைகளில் நாம் பெற்ற வெற்றி குறிப்பிடத்தக்கன. மக்களின் தொடர்ச்சியான கண்காணிப்பு, கிளர்ச்சிகளின் மூலமே, கூட்டுறவு அமைப்பின் பலன்களை மக்கள் பெற முடியும் என்ற நிலைமை உள்ளது. பல காவல்நிலைய சாவுகள் இந்த ஆட்

சியில் நடைபெற்றுள்ளன. இத்தகைய பல மரணங்கள் குறித்து நாம் கண்டனம் செய்துள்ளோம்.

3.250 கள்ளச்சாராய விற்பனை பெருமளவில் உள்ளது. காவல்துறை அதிகாரிகளுக்கும், கள்ளச்சாராய தொழிலில் உள்ளவர்களுக்கும் மிக நெருங்கிய உறவு உள்ளது. சமூக விரோதிகளை உருவாக்கு வதும், அவர்களின் கூடாரமாக இருப்பதும் கள்ளச்சாராய களமே! இந்த சமூக விரோதிகள் பெண்களுக்கும் ஆபத்தாக உள்ள னர். கள்ளச்சாராயத்தை எதிர்க்கும் பெண்கள் தாக்கப்படுகின்றனர். பல குடும்பங்கள் வறுமையில் வாடுவது மட்டுமல்ல; குடிவெறி யில் கொலைகளுக்கும் ஆளாகின்றன. நியாயவிலைக் கடைகளின் மூலம் விற்பனை ஆக வேண்டிய பொருட்கள் அனைத்தும் கிடைப்பதில்லை. அரிசி விற்பனை மட்டும் ஓரளவு உண்டு. ஆனால், பொதுவிநியோகத்தில் பல ஊழல்களும், குறைபாடு களும் உள்ளன.

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஊழலற்ற ஆட்சியைத் தருவேன் என தமிழக முதல்வர் அறிவித்தார்.

3.251 ஆனால், நிலைமை இதற்கு தலைகீழாக இருக்கிறது. வேலையில் சேர்க்க வேண்டுமானாலும், லஞ்சம் கொடுக்க வேண்டியுள்ளது. போக்குவரத்துத்துறை முதற்கொண்டு ஆசிரியர் நியமனம், சாலை பராமரிப்பு பணியாளர் தேர்வு வரை கையூட்டு கொடுத்தால்தான் காரியம் ஆகிறது என்ற நிலை உருவாகிவிட்டது. அதேபோல் நகராட்சிகளில், ஊராட்சிமன்றங்களில், பஞ்சாயத்துகளில் ஒப்பந்தப் பணி தருவதிலும் "கமிஷன்" வாங்கப்படுகிறது. இதனால் மன்றங்களில் பதவி பெற்றுள்ள கட்சிகளுக்கு இடையே பெரிய முரண்பாடுகளும், சச்சரவுகளும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன.

3.252 இலவச வேஷ்டி, சேலை வழங்குவதில், திருமண கடன்கள் கொடுப்பதில், விதவை பென்ஷன் தருவதில்கூட ஊழல்கள் அதிகம் நடக்கின்றன.

3.253 திண்டுக்கல் மாவட்டக்குழு இந்த ஊழலை எதிர்த்து வலுவான இயக்கங்கள் நடத்தியது. மற்ற மாவட்டங்களிலும் இதுபோன்ற ஊழல் நடந்தால் கட்சி அமைப்புகள் மக்களிடம் இதை அம்பலப் படுத்தி போராட்டம் நடத்த வேண்டும்.

3.254 குறுவை அறுவடையில், நேரடி கொள்முதல் நிலையங்களின் மூலம், காவிரி டெல்டா மாவட்டங்களில், இதுவரை 3 [illegible] லட் சம் டன்னுக்கு மேல் அரசு நெல் கொள்முதல் செய்துள்ளது. சம்பா பருவத்திலும் இது தொடர்ந்தால் தமிழக அரசிடம் நியாய

விலைக் கடை களுக்கு தானியம் வழங்கிட வசதியான நிலை ஏற்படும்.

3.255 சட்டமன்றத்தில் ஆளும் கட்சியின் கெடுபிடி இல்லை. பிரச்சனைகள் ஏற்படும்போது, அரசு தலையிட ஓரளவு முன்வருகிறது.

3.256 ஊழல் புரிந்துள்ள திரு. லல்லுபிரசாத் யாதவிற்கு முட்டுக் கொடுக்க ஐக்கிய முன்னணியின் வழிநடத்தும் குழுவில் தி.மு.க. முயற்சித்தது.

3.257 அரசியல் அமைப்புச் சட்டத்தின் 356வது பிரிவை நீக்குவதில் நம் கட்சி ஊசலாடுகிறது என்ற அவதூறு குற்றச்சாட்டை சேலத்தில் நடைபெற்ற அதன் மாநாட்டில் தி.மு.க. தலைமை பிரச்சாரம் செய்தது. தி.மு.க.வின் இந்தத் தவறான பிரச்சாரத்தை நம் கட்சி அரசியல் ரீதியில் விமர்சித்துள்ளது.

3.258 மக்கள் பிரச்சனைகளில் நாம் சில வலுவான கருத்துக்களை சொல்கிறபோது சிலவற்றை அமல்படுத்த தி.மு.க. அரசு முன்வருகிறது.

3.259 மக்கள் பிரச்சனையில் தி.மு.க. அரசை எவ்வளவு வற்புறுத்த முடியுமோ, அந்த முயற்சியை தொடர்ந்து நாம் எடுக்க வேண்டும். ஆனாலும், இவையெல்லாம் ஓரளவுக்குத்தான் நடைபெறும். இதில் நமக்கு எந்த பிரம்மையும் இல்லை.

3.260 மத்தியில் நாம் ஆதரிக்கும் ஐக்கிய முன்னணி அரசில் தி.மு.க. பங்கு வகிக்கிறது என்பதையும் நாம் கவனத்தில் இறுத்த வேண்டும். நாம் வெறும் தி.மு.க. எதிர்ப்பு என்றில்லாமல், ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாக செயல்படுவோம். பிரச்சனைகளின் தன்மை, அரசின் நிலைபாடு என்பதைக் கொண்டு நாம் தீர்மானிப்போம்.

அ.இ.அ.தி.மு.க.

3.261 புதுக்கோட்டை தேர்தலுக்குப்பின் கட்சியை பலப்படுத்த பல் வேறு நடவடிக்கைகளை மாவட்ட வாரியாக ஊழியர் கூட்டங்களை சென்னையில் நடத்துவது; பொதுக்கூட்டங்கள், நிதி வசூல், தி.மு.க.வை கண்டித்து அறிக்கைகள் வெளியிடுவது போன்ற நடவடிக்கைகளை இக்கட்சி மேற்கொண்டுவருகிறது.

3.262 வருகிற 1998ஆம் ஆண்டு ஜனவரியில் தன் வெள்ளிவிழா மாநாட்டை திருநெல்வேலியில் நடத்த தீவிர முயற்சிகளில் அக் கட்சி ஈடுபட்டுள்ளது. திரு. திருநாவுக்கரசு தலைமையில் உள்ள போட்டி அ.தி.மு.க.வுக்கு அக்கட்சியில் கீழ்மட்ட அணிகளின் ஆதரவு இல்லை எனத் தோன்றுகிறது. ம.தி.மு.க., ஜனதா கட்சி ஆகியவை அ.தி.மு.க.வுடன் கூட்டணி சேர்ந்திருப்பது அ.தி.மு.க. விற்கு பலம் சேர்க்கிறது.

தமிழ்மாநில காங்கிரஸ்

3.263 இந்த ஆட்சி ஏற்பட்டபின், பல மாதங்களுக்கு த.மா.கா., தி.மு.க. விற்கு முழு ஆதரவு அளித்து வந்தது. சட்டசபையிலும், வெளியி லும் அடக்கமாக இருந்தது. கடந்த சில மாதங்களாக த.மா.கா., தி.மு.க. அரசை கடுமையாக குற்றம்சாட்ட முற்பட்டது.

3.264 தி.மு.க.வும் இதற்கு பதிலளிக்க ஆரம்பித்தது. காமராஜர் ஆட் சியை அமைப்போம் என த.மா.கா. அறிவித்துள்ளது. இது அடுத்த தேர்தலில் தி.மு.க.வை எதிர்ப்பதில்தான் கொண்டுபோய்விடும் என்று அறிந்து, அதற்காக தங்கள் கட்சியை பலப்படுத்துவோம் என்ற நடவடிக்கையில் த.மா.கா. ஈடுபட்டுள்ளது.

3.265 மாநில ஊழியர் கூட்டத்தை நடத்தி, கொள்கை அறிக்கை ஒன்றையும் த.மா.கா. வெளியிட்டுள்ளது. மக்களைச் சந்திக்கும் நிகழ்ச்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். ஆயினும், ராஜ்யசபை தேர்த லில் தாங்கள் ராஜினாமா செய்த 3 இடங்களிலும் தி.மு.க. ஆதரவு டன்தான் வெற்றிபெற முடிந்தது. த.மா.கா. தன்னைச் சார்ந்திருக்க வேண்டும் என்ற நோக்கில் தி.மு.க. முடிவு செய்தது.

3.266 மேலும் எந்த நேரத்திலும் நாடாளுமன்ற தேர்தல் வரலாம். இரண்டு கட்சிகளும் சுமூக உறவில் இருந்தால்தான் எதிர்கால பலன் என்ற எதிர்பார்ப்பிலும் அடிக்கடி சமரசம் செய்துகொள் கின்றன.

3.267 ராஜ்யசபைத் தேர்தலில் திரு. மூப்பனார் போட்டியிடவில்லை. ராஜ்யசபை இடங்களில் ஒன்றை திமுக எடுத்துக்கொண்டு புதுச் சேரி ராஜ்யசபை இடத்தை தங்களுக்கு தரும்படி த.மா.கா. கேட்ட தாகவும், இதை தி.மு.க. ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தெரிகிறது.

3.268 புதுச்சேரி ராஜ்யசபைத் தேர்தலில் தி.மு.க., த.மா.கா. அணியின் மூன்று ஓட்டுகள் கட்சி மாறி காங்கிரசுக்கு கிடைத்துள்ளன.

3.269 த.மா.கா-வின் கொள்கை அறிக்கையில் நிலச்சீர்திருத்தம் பற்றி சிறு குறிப்புக்கூட கிடையாது.

3.270 தமிழக முதலாளித்துவ பத்திரிக்கைகள், வானொலி, தொலைக்காட்சிகள், த.மா.கா-விற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அவர்களின் செய்திகளை பிரசுரித்துவருகின்றன.

3.271 தமிழகத்தில் காமராஜர் ஆட்சியைக் கொண்டுவருவதாகச் சொல்லும் த.மா.கா., இந்தியன் வங்கி ஊழலில் சிக்கியுள்ள பலருக்கு கடன் அளிக்க சிபாரிசு செய்துள்ளது.

3.272 திரு. தேவகவுடா ராஜினாமா செய்தபின், திரு. மூப்பனாரை பிரதமராக வரவிடாமல் நம் கட்சி தடுத்துவிட்டதென்று கடுமையானதொரு பிரச்சாரத்தை த.மா.கா. மேற்கொண்டது. நம்முடைய கட்சி இந்தப் பிரச்சாரத்திற்கு எதிராக, உண்மையான நிலவரங்கள் என்ன என்பதை விளக்க வேண்டிவந்தது. இதேபோன்று இப் பிரச்சனையில் தி.மு.க. துரோகம் செய்துவிட்டது என்று த.மா.கா. பிரச்சாரம் செய்தது. அவர்களுக்குள் கடுமையான சர்ச்சை ஏற்பட்டது. இப்போதுமீண்டும் ஜெயின் கமிஷன் அறிக்கையின் மீது எழுந்த பிரச்சனையில் த.மா.கா. வெளிப்படையாக தி.மு.க.வுக்கு ஆதரவு தராத நிலை மேலும் நெருக்கடியை உருவாக்கியுள்ளது.

ம.தி.மு.க.

3.273 உள்ளாட்சி தேர்தலுக்குப்பின் ம.தி.மு.க, அ.இ.அ.தி.மு.க.வுடன் சந்தர்ப்பவாத கூட்டணி அமைத்துள்ளது. செல்வி. ஜெயலலிதாவுக்கு எதிராக மாநிலம் முழுவதிலும் நடைபயணம் நடத்தி, ஆளுநரிடம் குற்றச்சாட்டு மனு கொடுத்து, உடனடி நடவடிக்கை எடுக்கக்கோரிய ம.தி.மு.க. தலைமை, தற்பொழுது தன் கட்சிக்கு ஆதாயம் தேடுவதற்காக நாடாளுமன்ற, சட்டமன்ற இடங்களைப் பெறுவதற்காக அ.இ.அ.தி.மு.க.வுடன் கூட்டணி அமைத்துள்ளது.

பாட்டாளி மக்கள்-கட்சி

3.274 இனி வரும் தேர்தல்களில் தனித்துப்போட்டியிடமாட்டோம்; ஏதாவதொரு உடன்பாட்டின் அடிப்படையில் தான் போட்டியிடுவோம் என இக்கட்சித் தலைவர் திருராமதாஸ் கூறிவருகிறார். அரசியலில் பலமுறை மாறிமாறி நிலை எடுத்து வருகிறார். ஆனால்; தமிழ் இனவெறி அரசியலில் உறுதியாக இருக்கிறார். இவர் அரசியலில் எந்த நிலை எடுத்தாலும் அவருக்குள்ள சமூகப் பிடிப்பில் சற்று தளர்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இந்தக் கட்சி தலித் எதிர்ப்பு நிலையை கைவிட்டு அவர்களை ஆதரிப்பதாக அறிவித்து வருகிறது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

3.275 தி.மு.க. அணியில் உள்ளது. புதுக்கோட்டை தேர்தல் உட்பட அனைத்து தேர்தல்களிலும் தி.மு.க.வை ஆதரித்தார்கள். தி.மு.க. அரசாங்கத்தின் தவறான கொள்கைகளையும், நடவடிக்கைகளையும் விமர்சிப்பதில் பெரும் தயக்கம் உள்ளது. சென்னையில் நாம் நடத்திய தீண்டாமை ஒழிப்பு மாநாட்டில் அக்கட்சியின் மாநில செயலாளர் தோழர். நல்லகண்ணு கலந்துகொண்டார் என்பதை ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளோம்.

3.276 பல விவாதங்களுக்குப் பிறகு, நம் இரு கட்சிகளும் சேர்ந்து கும்பகோணத்தில் 1997 அக்டோபர் 2ஆம்தேதியன்று தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை நடத்தினோம்.

3.277 மற்றபடி சி.பி.ஐ., சி.பி.ஐ.(எம்) ஆகிய இரண்டு இடதுசாரி கட்சிகளுக்கு இடையே கூட்டு நடவடிக்கைக்காக நாம் தொடர்ந்து முயற்சித்தாலும் இதுவரை வெற்றிபெற முடியவில்லை.

பாரதீய ஜனதா கட்சி

3.278 தொடர்ச்சியாக தன் வேலைகளை அதிகரிக்க முயற்சித்து வருகிறது. இந்து முன்னணி - ஆர்.எஸ்.எஸ். போன்ற அமைப்புகளுடன் சேர்ந்து இந்து வகுப்புவாத உணர்ச்சியை தூண்டிவிட்டு, தன் வகுப்புவாத இயக்கத்தை பலப்படுத்த திட்டமிடுகிறது. பெண்களின் கடவுள் நம்பிக்கையை பயன்படுத்தி விளக்கு பூசை என்ற பெயரில் குத்துவிளக்குகள் கொடுத்து அவர்களை அணிதிரட்டுகிறது. பல பள்ளிகளில் ஆர்.எஸ்.எஸ். பயிற்சி நடத்துகிறது. முதலாளிகளின் ஆதரவும் உண்டு.

3.279 இக்கட்சி, ஜாதிப் பிரமுகர்களை தன்பக்கம் ஈர்க்க முயற்சி எடுக்கிறது. இப்போதெல்லாம் ஸ்தல மக்களின் பிரச்சனைகளை எடுத்து இயக்கம் நடத்த முயற்சிக்கிறது. சில இடங்களில் நாம் மக்கள் பிரச்சனைகளுக்காக இயக்கம் நடத்தினால் அதே பிரச்சனைகளுக்காக பி.ஜே.பி. போட்டியாகவும் நடத்தி மக்களின் கவனத்தை திசைதிருப்ப முயற்சிக்கிறது.

3.280 தமிழகத்தில் வகுப்புவாத சக்தியான பி.ஜே.பி. வளராது என எண்ணுவது தவறானது. அது வளர்ந்து வருகிறது. அறிவு ஜீவிகளைக் கவர அக்கட்சி முயற்சிக்கிறது. பிள்ளையார் ஊர்வலம், கோவில் பூசாரிகள் பிரச்சனை, தர்மகர்த்தா தேர்தல் போன்றவற்றை பயன்படுத்தவும், பி.ஜே.பி. சித்தாந்தத்தையும், அரசியலையும் பரப்புவதற்கும் தீவிரமாக முயல்கிறது. ஆர்.எஸ்.எஸ்.சின் கருவிதான் பி.ஜே.பி. இதன் ஆபத்தை குறைத்து மதிப்பிடக்கூடாது.

3.281 ஆனால் தமிழகத்தில் உள்ள திராவிடக் கட்சிகள் தி.மு.க., அ.தி.மு.க., ம.தி.மு.க. இதன் ஆபத்தை சரியாக பார்க்கவில்லை. தங்களின் ஆட்சி அதிகாரத்துக்காக பி.ஜே.பி.யையும் பயன்படுத்திக்கொள்ளும் சூசகமான கருத்துக்களை சொல்லிவருகின்றன. அ.தி.மு.க. வெளிப்படையாகவே கருத்துக்களை தெரிவிக்கிறது.

இந்திய தேசிய காங்கிரஸ்

3.282 திரு. தங்கபாலு தலைவராக உள்ளார். இவரை மாற்ற முடியாது என்று திரு. கேசரி அறிவித்துவிட்டார். இதனால், வாழப்பாடி,

அன்பரசு, குமரி அனந்தன் போன்றோர் அதிருப்தி அடைந்துள்ளனர்.

3283 திரு. கேசரி தலைமைப் பொறுப்பேற்ற பின்னர், அகில இந்திய காங்கிரஸ் சார்பில் திரு. தவான் ஆலோசனையின்பேரில் தமிழகத்தில் இக்கட்சியை வளர்க்கும் முயற்சி நடைபெற்றுவருகிறது. திரு. கேசரி சென்னை வந்தபோது பெரியார், காமராஜர் பாதையில் தாம் செல்வதாகக் குறிப்பிட்டு தன் கட்சிக்கு ஆதரவு தேடமுற்பட்டுள்ளார்.

முஸ்லிம் லீக்

3284 திரு. லத்தீப் முஸ்லிம் லீ் தி.மு.க. அணியில் உள்ளது; திரு. சமது முஸ்லிம் லீக்கின் நிலைமை தெளிவாக இல்லை.

3285 எந்த முஸ்லிம் லீக்கானாலும் இவை ஏதேனும் ஒரு திராவிட கட்சியுடன் உடன்பாடு வைத்துத்தான் தேர்தல்களில் வெற்றி பெறுகின்றன.

முஸ்லிம் வகுப்புவாத சக்திகள்

3286 தமிழகத்தில் முஸ்லிம் வகுப்புவாத சக்திகள் கலவரங்களைத் தூண்டி, பலாத்காரத்தில் ஈடுபட்டுவருகின்றன. அந்நியநாட்டு பணத்துடன், ஆயுத பயிற்சியும் பெறுவதாகத் தெரிகிறது.

3287 அல் - உல்மா, தமிழக முஸ்லிம் முன்னேற்றக்கழகம் போன்ற அமைப்புகள் திட்டமிட்டு கொலை, கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றன. இதன் மூலம் மதக்கலவரங்களை உருவாக்குகின்றன. பாகிஸ்தான் உளவுத்துறை நிறுவனமான ஐ.எஸ்.எஸ். இந்த தீவிரவாத கும்பல்களுக்கு உதவி செய்துவருவதாகத் தெரிகிறது. நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தில் நடந்த கொலைகளுக்கு இந்த தீவிரவாத கும்பலே காரணம்.

3288 அண்மையில் கோவையில் பணியில் இருந்த காவலரை கொலை செய்ததும் இந்த அதிதீவிர கும்பலேயாகும். அதனால் ஏற்பட்ட கலவரத்தால் கோவை நகரமே ஸ்தம்பித்துவிட்டது. இதைப் பயன்படுத்திக்கொண்டு பாரதீய ஜனதாவும், ஆர்.எஸ்.எஸ். சும் சேர்ந்து கொலையிலும், கொள்ளையிலும் ஈடுபட்டன. இந்த மோதலில் முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டார்கள். மருத்துவ மனையிலேயே மிருகத்தனமான முறையில் பலர் கொல்லப்பட்டார்கள். போலீஸ் துப்பாக்கிச்சூட்டில் இறந்தவர்களையும் சேர்த்து இதுவரை 22 பேர் மாண்டுபோனார்கள். பலர் வெட்டுக் காயங்கள் அடைந்தார்கள். பல கோடி ரூபாய்க்கு பொருட்கள் நாசமாயின; சூறையாடப்பட்டன.

3.289 இடதுசாரி சக்திகளும், ஜனநாயக சக்திகளும் இது விஷயத்தில் மிகமிக கவனமாக இருந்து முஸ்லிம் மத அடிப்படைவாத, தீவிர வாத கும்பல்களையும் தனிமைப்படுத்த வேண்டும். தமிழகத்திலும் மதவெறியைத் தூண்டி, மக்களைப் பிரிக்க இந்த தீவிரவாத கும்பல் வேகமாக செயல்படுவதை மக்களிடம் அம்பலப்படுத்த வேண்டும்.

ஜனதா கட்சி

3.290 திரு. சுப்பிரமணியசாமியும் (ஜனதா கட்சி), அ.தி.மு.க., ம.தி.மு.க. கூட்டில் சேர்ந்துள்ளார்.

அ.தி.மு.க. – ம.தி.மு.க. – ஜனதா கட்சி கூட்டு

3.291 தி.மு.க.வுக்கு எதிரான மக்களின் அதிருப்தியை தனக்குச் சாதகமாகத் திரட்டி தி.மு.க.வை எதிர்ப்பது என்ற ஒரு அம்ச திட்டத்தின் அடிப்படையில் அ.இ.அ.தி.மு.க.வும், அதன் கூட்டாளிகளும் செயல்பட்டு வருகின்றனர். இவர்கள் கூட்டு அப்பட்டமான சந்தர்ப்பவாதம். ஆனால், இந்தக் கூட்டில் அதிமுக அணியினரும், ம.தி.மு.க. அணியினரும் புதுத்தெம்பு பெற்று செயல்பட்டுவருகின்றனர். இந்த அணி பஸ் கட்டண உயர்வு, டீசல் உயர்வு, காவிரி பிரச்சனை போன்ற விஷயங்களில் கூட்டு ஆர்ப்பாட்டம் செய்து வருகிறது.

3.292 மத்திய அரசு சீக்கிரம் கவிழ்ந்துவிடுமென்றும், அப்பொழுது தேர்தலில் பி.ஜே.பி. வெற்றி பெறலாமென்றும், வெற்றி பெற்றால் பி.ஜே.பி.யினால் தி.மு.க. ஆட்சி கவிழ்க்கப்படுமென்றும், மறு தேர்தலில் அ.இ.அ.தி.மு.க. அணி வெற்றி பெறுமென்றும் அக்கட்சியின் அவைத் தலைவர் திரு.நெடுஞ்செழியன் பேசிவருகிறார். சமீபத்தில் திருச்சியில் பேசிய பி.ஜே.பி. தலைவர் அத்வானி நாடாளுமன்றத் தேர்தலில் தம் கட்சி வெற்றி பெற்றாலும், தி.மு.க. அரசைக் கலைக்க மாட்டோம் என்றும், அ.இ.அ.தி.மு.க.வுடன் தேர்தல் உடன்பாடு குறித்து பி.ஜே.பி. இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

3.293 அகில இந்திய காங்கிரஸ் அல்லது தமிழ் மாநில காங்கிரஸ்; தன் கட்சியுடன் தேர்தல் கூட்டணி அமைக்க தன்னை அணுகினால், அது பற்றி பரிசீலிப்பேன் என்று செல்வி ஜெயலலிதா 10.12.97 அன்று கூறியுள்ளார். ஜெயலலிதாவுக்கும் மற்றைய முன்னாளைய அ.தி.மு.க. அமைச்சர்களுக்கும் எதிரான ஊழல் வழக்குகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. வழக்கு விசாரணைகளை தள்ளிப்போட செல்வி ஜெயலலிதா பல சட்ட உத்திகளை கையாளுகிறார்.

நக்சல் குழுக்கள்

3.294 தமிழகத்தில் வினோத் மிஸ்ரா போன்ற சில நக்சல்பாரி குழுக்கள் உள்ளன. பெரம்பலூர் மாவட்டத்தில் ஆயுதமேந்திய சில குழுக்கள் உள்ளன. காங்கேயம் போன்ற பகுதிகளிலும் உண்டு. ஒரு காவல்நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி ஆயுதங்களை எடுத்துச்சென்றுள்ளது. இரகசிய முறையில் பிரச்சாரம் செய்வது நடைபெறுகிறது. நம் கட்சியை கடுமையாக விமர்சித்து வருகிறது. சென்னையை அடுத்த சில இடங்களில் தொழிற்சங்கங்களில் செயல்படுகிறது. இவைகளின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்க வேண்டியுள்ளது. இவை கிளப்பும் அரசியல் சித்தாந்த பிரச்சனைகளுக்கும் நாம் தக்க பதில் சொல்ல வேண்டும். இந்த குழுக்கள் திட்டமிட்டு மெல்ல மெல்ல வளர்ந்து வருகின்றன. முதலில் சாதியை ஒழிக்கும் புரட்சி, பிறகுதான் வர்க்கப் புரட்சி என கூறுகின்றன.

தலித் குழுக்கள்

3.295 பல குழுக்கள் உள்ளன. இவற்றின் கோஷங்களை, அவற்றின் தன்மையைப் பொறுத்து நாம் மதிப்பீடு செய்ய வேண்டியுள்ளது. கருத்து விளக்கமும் கொடுக்க வேண்டியுள்ளது. நக்சல்பாரி நபர்களும் இக்குழுக்களில் ஊடுருவியுள்ளதாகத் தெரிகிறது.

தன்னார்வக் குழுக்கள்

3.296 பல குழுக்கள் பல பெயர்களில் உள்ளன. இவை குறித்து விரிவான, நுணுக்கமான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, இவற்றின் பிரத்யேக தன்மைக்கு ஏற்றவாறு, நம் அணுகுமுறையை உருவாக்க வேண்டியுள்ளது. சில குழுக்கள் நம்மோடு நெருக்கமாக இருக்கவும் விரும்புகின்றன. பல குழுக்கள் நமக்கு எதிராக உள்ளன. மக்களை திசை திருப்ப முயல்கின்றன. பொதுவாக அரசியல் கட்சியின் மீது வெறுப்பு உள்ளவர்கள் தன்னார்வ குழுவில் சேருகின்றனர். அரசாங்க உதவிகளைப் பயன்படுத்தி மக்களைத் திரட்டுகிறார்கள். வெளிநாட்டுப் பணம் பெற்று மக்களுக்கு சில உதவிகள் செய்கிறார்கள்.

3.297 இன்றைய அரசியல் நிலைமையில் தி.மு.க., அ.தி.மு.க., த.மா.கா., ம.தி.மு.க., சி.பி.ஐ. (எம்) என்ற வரிசையில் கட்சிகளின் அரசியல் செல்வாக்கை வரிசைப்படுத்தலாம். நமது கட்சி ம.தி.மு.க.வைவிட பல்வேறு துறைகளிலும் ஸ்தாபன அமைப்புடன் செயல்படுகிறது. ஆயினும், உள்ளாட்சி தேர்தல்கள், புதுக்கோட்டை தொகுதி உப தேர்தல் ஆகியவற்றில் ம.தி.மு.க. பெற்றுள்ள வாக்குகளை கணக்கிலெடுத்துக் கொண்டு இந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. இது

பற்றியும், இதர அனைத்து கட்சிகளின் பலம் குறித்தும் மாநாட்டு பிரதிநிதிகளின் மதிப்பீட்டை அறிந்துகொண்டு, நாம் மேலும் துல்லியமான நிர்ணயிப்புகளுக்கு வர முடியும்.

3.298 நம் கட்சியின் பன்முகப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளினால், தமிழகத்தில் நாம் புறக்கணிக்கப்பட முடியாத ஒரு கட்சி என்ற வரையறுப்பை கடலூர் 15வது மாநில மாநாடு நிர்ணயித்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சியின் அரசியல் இயக்கங்கள், கிளர்ச்சி பிரச்சாரம், வர்க்க, வெகுஜன அமைப்புகளின் நடவடிக்கைகள் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றன. இதனால் கட்சியின் அரசியல் மரியாதை உயர்ந்துள்ளது. இதை அடிப்படையாகக்கொண்டு வருங்காலத்தில் கட்சியின் அரசியல் தலையீட்டையும், சர்வாம்ச பங்குபணிகளையும் பெரிதும் அதிகரித்து, நம் கட்சியின் பலத்தையும், செல்வாக்கையும் மேலும் மேலும் உயர்த்துவதற்கும் பாடுபடுவோம்.

புதுவை யூனியன் பிரதேச அரசியல் நிலைமை

3.299 புதுவையில் கடந்த தேர்தலில் காங்கிரஸ் தோற்று, தி.மு.க., த.மா.கா., சி.பி.ஐ. கூட்டணி அரசு ஆட்சிப் பொறுப்பேற்றது. காங்கிரஸ் ஆட்சியில் இருந்து அகற்றப்பட்டாலும் புதுவை சட்டமன்றத்தில் இன்னும் தனிப்பெருங்கட்சியாக உள்ளது.

3.300 1996ம் ஆண்டு வரை காங்கிரஸ் கட்சி புதுவையில் ஆட்சியில் இருந்தது. மத்தியில் நரசிம்மராவ் தலைமையிலான காங்கிரஸ் அரசு கடைப்பிடித்த அதே பொருளாதாரக் கொள்கையை புதுவையிலும் வைத்தியலிங்கம் தலைமையிலான காங்கிரசும் அமலாக்கியது. நமது கட்சியினுடைய தமிழ் மாநிலக்குழுவின் வழிகாட்டுதலுக்கிணங்க புதுவை மாவட்டக்குழு காங்கிரஸ் அரசின் பொருளாதார கொள்கையையும், மக்கள் விரோத கொள்கையையும் எதிர்த்து தொடர்ச்சியாக இயக்கம் நடத்தியது.

3.301. 1996ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் ஆட்சிப் பொறுப்பேற்ற தி.மு.க., த.மா.கா., சி.பி.ஐ. கூட்டணி அரசு, மத்தியில் ஐக்கிய முன்னணி அரசு கடைப்பிடித்து வரும் அதே பொருளாதார கொள்கையைத்தான் புதுவையிலும் கடைப்பிடித்து வருகிறது. மின் உற்பத்திக்கு தனியார் கம்பெனியுடன் புதுவை அரசு ஒப்பந்தம் போட்டுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்திடம் இருந்து தற்பொழுது ஒரு யூனிட் மின்சாரம் ரூ. 1.17 என்று விலைக்கு வாங்கும் புதுவை அரசு தனியார் கம்பெனிக்கு ஒரு யூனிட்டுக்கு ரூ. 2.50 விலை கொடுக்க ஏற்றுக்கொண்டுள்ளது.

3.302 புதுவையில் தனியார் சுயநிதி மருத்துவக்கல்லூரி, பொறியியற் கல்லூரிகளுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. தனியாரிடம் துப்புரவுப்பணி, தனியாரிடம் துறைமுகம் ஒப்படைப்பு என புதிய பொருளாதாரக் கொள்கையை புதுவை அரசு வேகமாக அமலாக்கி வருகிறது.

3.303 தொழில் துவங்க புதுவை அரசு கூடுதல் சலுகை அளிக்கின்ற காரணத்தினால் புதுவைப் பிரதேசத்தில் கூடுதல் தொழில்கள் துவங்கப்பட்டாலும் வேலைவாய்ப்பு அதிகரிக்கவில்லை. 9 லட்சம் ஜனத்தொகை உள்ள புதுவைப்பிரதேசத்தில் சுமார் 1.5 லட்சம் பேருக்கு (வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தோர்) வேலை இல்லை. பல மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது விவசாயத் தொழிலாளர்களுக்கு புதுவையில் குறைவான கூலி வழங்கப்பட்டுவருகிறது. இதுவரை விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலிச்சட்டம் கொண்டுவரப்படவில்லை. இதைப் போலவே சிறுதொழில்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கும், குறைவான கூலி வழங்கப்பட்டு வருகிறது. இவர்களுக்கும் குறைந்தபட்சக் கூலி சட்டம் கொண்டுவரப்படவில்லை.

3.304 உள்ளாட்சி மன்றத் தேர்தலை நடத்த வேண்டுமென்று மத்திய அரசு வலியுறுத்திய போதிலும், புதிய சட்டப்படி உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலை நடத்தாமல் புதுவை அரசு ஒத்திப் போட்டுவருகிறது.

3.305 காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் இருந்ததைப்போலவே தி.மு.க., த.மா.கா., சி.பி.ஐ. கூட்டணி ஆட்சியிலும் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. லஞ்சமும், ஊழலும் தொடருகின்றன. இந்த அரசின் மக்கள் விரோத கொள்கையினால் மக்கள் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டாலும் புதுவை சிறிய பிரதேசம் என்ற அடிப்படையில் மக்களுக்கு பல சலுகைகள் அளித்து அரசு சமாளிக்க முயற்சிக்கிறது.

3.306 கூட்டணி அரசில் சிபிஐ அங்கமாக உள்ளது. சமீபத்தில் கூட்டணி அரசின் ஒரு சில நடவடிக்கைகளை எதிர்த்து சி.பி.ஐ. இயக்கம் நடத்தியது. அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி மக்களுக்கு சலுகை அளித்து கட்சியைப் பலப்படுத்த சி.பி.ஐ. முயற்சித்து வருகிறது.

3.307 1996 சட்டமன்ற தேர்தலில் தமிழ் மாநிலக்குழு வழிகாட்டுதலுக்கிணங்க ம.தி.மு.க., பா.ம.க., ஜனதாதள கட்சிகளுடன் தொகுதி உடன்பாடு வைத்து நமது கட்சி 3 சட்டமன்ற தொகுதி

களில் போட்டியிட்டது. கடைசி நேரத்தில் உருவான இந்த உடன் பாடு முழுமையாக அமலாகவில்லை.

3.308 புதுவை அரசின் தவறான கொள்கையை எதிர்த்து நமது கட்சி தொடர்ந்து இயக்கம் நடத்தி வருகிறது. கூட்டணி அரசு பொறுப் பேற்றவுடன் நமது கட்சியின் சார்பில் மக்கள் கோரிக்கைகள். அடங்கிய கோரிக்கை பட்டியலை அரசிடம் அளித்தோம். எதிர்க் கட்சி வரிசையில் காங்கிரஸ், அதிமுக இருந்தாலும் இக்கட்சிகள் கூட்டணி அரசின் தவறான கொள்கையினை எதிர்த்து இயக்கம் நடத்துவது கிடையாது. சில எம்.எல்.ஏ.க்களை விலை கொடுத்து வாங்கி, தி.மு.க. கூட்டணி ஆட்சியைக் கவிழ்த்து, காங்கிரஸ் தலைமையில் ஆட்சி அமைக்க காங்கிரஸ் தலைமை முயற்சி செய்தது. இந்த குதிரை வியாபாரத்தை அம்பலப்படுத்தி நமது கட்சியின் சார்பில் பிரச்சாரம் செய்தோம். கூட்டணி அரசு ஆட் சிப் பொறுப்பேற்றவுடன் நமது தலைமையில் இருந்த இந்தியன் காபி ஹவுஸ் தேர்தலை நிறுத்தி இந்த நிறுவனத்தை தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர த.மா.கா. அமைச்சர் எடுத்த முயற்சியை முறியடித்தோம்.

3.309 உள்ளாட்சித் தேர்தலை ஒத்திப்போட வேண்டுமென்ற நோக் கத்துடன் உள்ளாட்சி மன்றங்களில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு திமுக கூட்டணி அரசு இட ஒதுக்கீடு செய்தது. காங்கிரஸ் கட்சி இதை எதிர்த்து வழக்கு தொடுத்து தேர்தல் நிறுத்தப்பட்டுவிட் டது. தேர்தல் நடத்த வேண்டுமென்று நமது கட்சியின் சார்பில் மறியல் போராட்டம் நடத்தினோம்.

3.310 தனியார் சுயநிதி மருத்துவக்கல்லூரி திறக்க புதுவை அரசு திட்டமிட்டபோது அதை எதிர்த்து நமது மாணவர் சங்கம் சார் பில் மாணவர்கள் வலுவான இயக்கம் நடத்தினார்கள். மாணவர், வாலிபர் அமைப்புகளின் சார்பில் 20.9.96 அன்று "பந்த்" போராட் டம் நடைபெற்றது. பந்த் போராட்டத்தை ஆதரித்து நமது கட்சி யின் சார்பில் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்தோம். அரசில் அங்கம் பெற்றாலும் சி.பி.ஐ. தலைமையிலான மாணவர், வாலிபர் சங்கங்களும் பந்த்-ஐ ஆதரிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

3.311 முன்னர்வைத்தியலிங்கம் தலைமையிலான காங்கிரஸ் கட் சியின் மக்கள் விரோதகொள்கையை எதிர்த்து கூட்டு இயக்கம் நடத்த அப்போது சிபிஐ முன்வந்தது. இப்போதுதி.மு.க. கூட்டணி அரசில் இடம் பெற்றிருப்பதால் சி.பி.ஐ. கூட்டு இயக்கத்திற்கு வருவதில்லை.

3.312 மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கையை எதிர்த்து இயக்கம் நடத்த கட்சி அறைகூவல் விடுத்தபோதெல்லாம் புதுவை பிரதேசத்தில் இயக்கம் நடத்தப்பட்டுள்ளது. புதுவை அரசின் மக்கள் விரோத கொள்கையை எதிர்த்தும், மக்கள் பிரச்சனைகளுக்காகவும் நமது கட்சியின் சார்பில் சுயேட்சையான இயக்கத்தைத் தொடர்ந்து நடத்திவருகிறோம்.

3.313 புதுவை யூனியன் பிரதேச தி.மு.க. கூட்டணி அரசு கடைப்பிடிக்கும் தவறான கொள்கையை எதிர்த்து இயக்கம் நடத்துவதில் புதுவை மாவட்ட செயற்குழுவும், மாவட்டக்குழுவும் எடுத்து வரும் முன்முயற்சி குறிப்பிடத்தக்கது.

3.314 புதுவை அரசியல் நிலைமை குறித்து மாவட்ட செயற்குழுவும், மாவட்டக்குழுவும் விவாதித்து பத்திரிகைகளுக்கு அறிக்கை அளிப்பதோடு இயக்கங்களையும் திட்டமிட்டு நடத்திவருகிறது. சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் இல்லையென்றாலும், புதுவையில் நமது கட்சிதான் உண்மையான எதிர்க்கட்சியாக செயல்பட்டு வருகிறது என பத்திரிக்கையாளர்கள் கருத்து தெரிவித்திருக்கிறார்கள்.

3.315 நமது கட்சியின் மரியாதையும், செல்வாக்கும் அதிகரித்துள்ள அளவிற்கு கட்சி மற்றும் வெகுஜன அரங்க வளர்ச்சி இல்லை. கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் வளர்ச்சிக்கு புதுவை மாவட்டக்குழு திட்டமிட வேண்டியுள்ளது.

4.0 தொழிற்சங்க அரங்கம்

4.1 மத்திய – மாநில பொதுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தனியார் துறையிலுள்ள பெரிய – சிறிய ஆலைகள் மற்றும் முறைசாரா தொழில்களின் பல்வேறு பிரிவுகளிலுமாக, மாநிலம் தழுவிய முறையில் தொழிற்சங்க அரங்க பணிகளில் நாம் ஈடுபட்டு வருகிறோம். இவை தவிர மத்தியதர வர்க்க ஊழியர்களின் அனைத்துப் பிரிவுகளிலும் மாநிலம் தழுவிய முறையில் நாம் பணியாற்றுகிறோம். சிஐடியுவுடன் இணைக்கப்பட்ட சங்கங்கள், இணைக்கப்படாமலேயே நமது தொழிற்சங்கத் தலைவர்களால் தலைமை தாங்கப்படும் சங்கங்கள் மத்திய தர வர்க்க அமைப்புகளில் நமது தோழர்களால் தலைமை தாங்கப்படும் சங்கங்கள் மற்றும் நமது தலைமையில் இல்லாத சங்கங்கள் என பல்வேறு மட்டங்களில் தொழிற்சங்க அரங்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

4.2 கடலூர் மாநாட்டிற்குப் பிறகு உள்ள காலத்தை மதிப்பிடு கையில், ஒட்டுமொத்தமாக பார்த்தால் சிஐடியு அமைப்பிலும், இதர அமைப்புகளிலும் நமது பணிகளில் குறிப்பிடத்தக்க முன் னேற்றம் கண்டுள்ளோம். உறுப்பினர் எண்ணிக்கையிலும், நடவடிக்கைகளிலும் இந்த முன்னேற்றம் காண முடிந்துள்ளது.

4.3 ஆட்சியாளர்களின் கொள்கைகளினால் ஏற்பட்டுள்ள தொழில் நலிவு, ஆலை மூடல்கள், இதர பாதிப்புகள், போராடிப் பெற்ற உரிமைகள் மீது தாக்குதல், புதிய பகுதிகளில் தொழிற்சங்கப் பணிகள் விஸ்தரிக்கப்படும்போது தொழிற்சங்க உரிமை கூட மறுக்கப்படுவதும், பெருமளவில் பழிவாங்கப்படுவதும் என்ற நிலை போன்று சிரமமான சூழ்நிலையில்தான் தற்போது தொழிற் சங்க அரங்கப் பணிகளை நடத்த வேண்டியுள்ளது.

4.4 மேலும், சீர்திருத்தவாத தொழிற்சங்க அமைப்புகள் – ஒரு சில மத்தியதர வர்க்க அரங்கங்கள் விதிவிலக்காக இருந்தாலும் – செய லற்றும், பிளவுபட்டும், விரக்தி மனப்பான்மை மேலோங்கியும் நிற்கும் நிலை இந்த காலத்தில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

மாநாடுகளும் பரிசீலனைகளும்

4.5 இந்த நிலையில்தான் நமது முன்னேற்றத்தையும் பலவீனங்களை யும் நாம் பரிசீலிக்க வேண்டியுள்ளது. 1997 மார்ச் முதல் வாரத்தில் சிஐடியுவின் மாநில மாநாடும், அதற்கு முன்னதாக மாவட்ட மாநாடுகளும் நடைபெற்றன. சிஐடியு-வின் பிரிவுகளாக பணி யாற்றி வரும் தொழில்வாரி சம்மேளனங்கள், உழைக்கும் பெண் களின் மாநில – மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கள் மற்றும் மத்தியதர வர்க்க அமைப்புகளின் மாநாடுகள் என முக்கிய அரங் கங்கள் அனைத்திலும் இந்த மூன்று ஆண்டு காலத்தில் மாநாடுகள் நடைபெற்றுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

4.6 இந்த மாநாடுகளில், கடந்த கால பணிகளையும், ஸ்தாபன நிலைமைகளையும் பரிசீலனைக்கு உட்படுத்துகையில் கட்சியின் தொழிற்சங்க அரங்கப்பார்வையின் அடிப்படையில் அந்த பரிசீல னைகளை நடத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்சியாளர்களின் கொள்கைகளை எதிர்த்து

4.7 பொருளாதாரக் கொள்கைகளுக்கு எதிரான இயக்கங்கள் 11 வது பொதுத்தேர்தலுக்கு முந்திய காலத்தில் அனைத்து அரங்கங் களிலுமாக முழு வேகத்தில் நடைபெற்றன. அதன் பிறகு புதிய அரசு ஏற்பட்டபின், அரசின் கொள்கை அறிவிப்புகளுக்கு ஏற்ப

அரங்கவாரியான கிளர்ச்சிகளும், போராட்டங்களும் தான் நடை பெற்றுள்ளன.

4.8 அகில இந்திய அறைகூவலுக்கு ஏற்ப ஸ்பான்சரிங் கமிட்டி, தேசிய மேடை கூட்டமைப்புகள் சார்பில் 1995 மார்ச் மாதத்தில் ஆர்ப்பாட்டம், தந்தி இயக்கம், 1997 பிப்ரவரியில் மறியல் என்று பல இயக்கங்கள் நடைபெற்றுள்ளன. இன்சூரன்ஸ் துறையில் 2 முறை ஒரு நாள் வேலைநிறுத்தங்கள், இருமுறை 2 மணி நேர வெளிநடப்புகள், வங்கித் துறையில் ஒருநாள் வேலைநிறுத்தம், ஒரு முறை 2 நாள் வேலை நிறுத்தம், பேடன்ட் சட்ட திருத்த முயற்சிக்கு எதிராக மருந்து விற்பனை பிரதிநிதிகளின் ஒரு நாள் வேலைநிறுத்தம் என அரசின் கொள்கைகளுக்கு எதிரான வேலை நிறுத்த போராட்டங்கள் நாடு முழுவதும் நடந்ததையொட்டி தமிழகத்திலும் நடைபெற்றன. இந்த இயக்கங்களின் தொடர்ச்சியாக பல நடவடிக்கைகளும் திட்டமிடப்பட்டன. இவை 97 டிசம்பர் முதல் வாரத்தில் அரசியல் நிலைமை காரணமாக ஒத்திவைக்கப்பட்டன.

4.9 மத்திய அரசின் பொருளாதாரக் கொள்கைகளை அப்படியே அதிமுக அரசும் பின்பற்றியது. 1996ல் ஆட்சி மாற்றத்துக்கு பிறகும் இந்த நிலைமையில் மாற்றமில்லை. பொதுத்துறைகளில் தனியார்மயம், ஆலைமூடல்கள் பிரச்சனையில் அரசு தலையிட மறுப்பது, தலையிடும் இடங்களில் தொழிலாளர்களுக்கு பாதகமான முறையிலான தலையீடுகள் என பிரச்சனைகள் தொடர்கின்றன.

4.10 அதிமுக ஆட்சிக் காலத்தில் மாநில அரசு நிறுவனங்கள் விற்பனை முயற்சிக்கு எதிராக காட்பாடி வெடிமருந்து, அரக்கோணம் ஸ்டீல், ராமநாதபுரம் மக்னீசியம், கூட்டுறவு பஞ்சாலைகள் என மாநில வழிகாட்டுதல்களோடு ஸ்தல மட்டத்தில் நமது முன் முயற்சியில் வேலைநிறுத்தங்கள், இயக்கங்கள் நடைபெற்றன. சிஐடியு முன்முயற்சி எடுத்து செயல்பட்டபோது இதர அமைப்பு களையும் ஒன்றிணைக்க முடிந்தது.

4.11 புதிய அரசு வந்த பிறகும் போக்குவரத்து, மின்சாரம் ஆகிய துறைகளில் தனியார் மயத்திற்கெதிராக பிரச்சார இயக்கங்கள், பெருமளவிலான துண்டுப் பிரசுர வினியோகம், மின்வாரியத்தில் 75,000 போஸ்ட் கார்டில் 2 லட்சம் கையெழுத்து இயக்கம் என சிஐடியு-வின் இயக்கங்கள் நடைபெற்றன. இந்த இயக்கங்கள் தொடரும்.

கூட்டு இயக்கங்கள் பற்றி

4.12 அகில இந்திய, தமிழக அரசியலில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாக, முக்கிய பிரச்சனைகள் இருந்தாலும் கூட்டு இயக்

கங்கள் நடைபெறுவதில் கடுமையான சிரமங்கள் உள்ளன. ஸ்தல மட்டத்தில் சில கூட்டு நடவடிக்கைகள் நடைபெறுவது தவிர மாநிலம் தழுவிய இயக்கங்கள் திட்டமிட்டு நடத்த முடியாத நிலை உள்ளது. ஸ்பான்சரிங் கமிட்டி, தேசிய மேடை போன்ற அமைப்புகளைக் கூட தொடர்ச்சியாக செயல்படுத்த முடிய வில்லை. நமது அமைப்புகளும் கூட போதுமான கவனம் செலுத் தாத நிலையும் உள்ளது.

4.13 அரசு போக்குவரத்தில், காவல்துறை அராஜகத்திற்கு எதிராக மாநிலம் தழுவிய போராட்டம் நடைபெற்றது போன்ற திடீர் இயக்கங்கள் கூட்டாக உருவாகிறது. திட்டமிட்டு கூட்டு இயக் கங்கள் உருவாவதற்கு, இதர தொழிற்சங்க அமைப்புகளின் நட வடிக்கைகள் உதவிகரமாக இல்லை. சிஐடியு சம்பந்தப்பட்ட அரங் கங்களில் மட்டுமல்லாது இன்சூரன்ஸ் மற்றும் மருந்துத் துறை யிலும் நமது தோழர்கள் தனி இயக்கங்களாக நடத்தி வருகின் றனர். நமது அமைப்புகளின் வலிமையினால் இந்த இயக்கங்கள் அரங்கம் தழுவிய வலுவான இயக்கங்களாக மாறுகின்றன. வங்கித் துறையில் தனி இயக்கங்கள் நடைபெற்றன. கூட்டு இயக்கங்களும் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன.

சுயேட்சையான இயக்கங்கள்

4.14 மேற்குறிப்பிட்ட பின்னணியில் நமது அமைப்புகள் முன் முயற்சியுடன் சுயேட்சையான பிரச்சார இயக்கங்களையும் சில போராட்டங்களையும் வெற்றிகரமாக நடத்த முடிந்துள்ளது.

4.15 மின் அரங்கம், போக்குவரத்துத்துறை, ரயில்வே, மத்திய பொதுத்துறைகள், கூட்டுறவு பஞ்சாலைகள் என அரசின் கொள்கைகளோடு சம்பந்தப்பட்ட பிரச்சனைகளில் நமது சுயேட் சையான இயக்கங்கள் நல்ல முறையில் நடைபெற்றுள்ளன.

4.16 இன்சூரன்ஸ், வங்கி மற்றும் மருந்து விற்பனை பிரதிநிதிகள் மாநிலம் தழுவிய முறையில் நடத்திய பிரச்சார பயணங்களும், பிரச்சார இயக்கங்களும் இந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட குறிப்பிடத்தக்க நடவடிக்கைகளாகும். இந்த மூன்று இயக்கங் களிலும், ஸ்தல மட்டத்தில் நமது தோழமை தொழிற்சங்க அமைப்புகள் நல்ல முறையில் ஆதரவளித்தன.

முறைசாரா தொழிலாளர் இயக்கம்

4.17 சிஐடியுவின் சார்பில், இந்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட மற்றுமொரு குறிப்பிடத்தக்கதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமான இயக்கம் செப்டம்பர் 9ல் நடைபெற்ற முறைசாரா தொழிலாளர்

களின் மாநிலந்தழுவிய வேலைநிறுத்தமாகும். ஜூலை மாதம் முதல் மாவட்ட வாரியான பிரச்சார இயக்கங்கள், சிறப்பு மாநாடுகள் என முறையான தயாரிப்புகள் செய்யப்பட்டு, ஒரு நாள் வேலைநிறுத்தம் நடைபெற்றபோது 5 லட்சம் தொழிலா ளர்களை பங்கேற்கச் செய்ய முடிந்தது. 1,25,000க்கு உட்பட நமது உறுப்பினர் பலத்தோடு ஒப்பிடுகையில் 5 லட்சம் பேர் பங்கேற்ற வேலைநிறுத்தம் வெற்றிகரமானதாகும்.

4.18 தகுந்த நேரத்தில் பொருத்தமான கோரிக்கை கோஷங்களோடு முன்முயற்சியுடன் செயல்பட்டால் பலன் கிடைக்குமென்பதை இந்த வேலைநிறுத்தம் மீண்டும் எடுத்துக்காட்டியது. 65,000 பிர சுரங்கள், மூன்றரை லட்சம் நோட்டீஸ்கள் வெளியிடப்பட்டன.

'9 மத்திய அரசின் பென்சன் திட்டத்திற்கெதிராக சிஐடியு முன் முயற்சியோடு நடத்தப்பட்ட ஒரு நாள் வேலைநிறுத்தம் (23.02.96) இவ்வாறு, நமக்கு அப்பாற்பட்ட பகுதியினரையும் இணைக்க முடிந்த போராட்டமாகும்.

4.20 பல்வேறு காரணங்களால் கூட்டு நடவடிக்கைகளுக்கான வாய்ப்புகள் பாதிக்கப்படும்போது சரியான முன்முயற்சியோடு நாம் செயல்பட்டால் அடிமட்டத் தொழிலாளர்களை ஒன்றி ணைக்க முடியும் என்பதை இந்த இரண்டு போராட்டங்களும் நிரூபித்தன. அதே நேரத்தில், இந்த இரண்டு போராட்டங்களிலும் நமக்குள்ள வாய்ப்புகள் முழுமையாக பயன்படுத்தப்படவில்லை என்பதே நமது மதிப்பீடாகும்.

4.21 குழந்தை உழைப்பு போன்று, கடந்த காலங்களில் நாம் கவனம் செலுத்தாத பகுதிகளிலும் நாடு தழுவிய விழிப்புணர்வு இயக்கத் தின் பகுதியாக, சிறு அளவில் கவனம் செலுத்த முடிந்துள்ளது.

4.22 உழைக்கும் பெண்கள் பிரச்சனைகளில் சிஐடியு, இன்சூரன்ஸ், வங்கி அரங்கங்களில் ஓரளவு கவனம் செலுத்தி வந்துள்ள போதிலும் தொடர்ச்சியான கவனம் தேவையாகிறது.

4.23 முறைசாரா தொழிலாளர்கள், உழைக்கும் பெண்கள், குழந்தை உழைப்பாளர்கள் ஆகிய அரங்கங்களில் அரசியல் ரீதியான கவனத்தோடு நமது பணிக்ளை திட்டமிட்டு விஸ்தரிக்க வேண் டும். பெருமளவிலான வாய்ப்புகள் உள்ளதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

செயல்பாடுகள் குறித்து

4.24 தொழிற்சங்க அரங்க கடமைகளை நினைவூட்டி தொழிற்சங்க அரங்கப் பணிகளை முறைப்படுத்த கடலூர் மாநாட்டுக்குப்பின்

சற்று கூடுதலான கவனம் செலுத்தப்பட்டதன் விளைவாக மாநில ரீதியிலும், மாவட்டங்களிலும் சிறு முன்னேற்றம் காண முடிந்துள்ளது.

4.25 சிஐடியு மாநில மையத்தின் செயல்பாடுகளில் முன்னேற்றம் காண முடிந்துள்ளது. மாவட்டக் குழுக்களுக்கும் அரங்கவாரியான நடவடிக்கைகளுக்கும் உதவி செய்வதிலும் ஓரளவு முன்னேற்றம் உள்ளது.

4.26 போக்குவரத்து, மின்சாரம், ரயில்வே மற்றும் குடிநீர் வடிகால் வாரியம் போன்ற மாநில அரசுஅமைப்புகளிலும், கட்டுமானம், ஆட்டோ, விசைத்தறி, சுமை தூக்குவோர் என முறைசாரா பகுதி களிலும் கூடுதல் கவனம் செலுத்த முடிந்துள்ளது.

4.27 தொழிற்சங்க அரங்க மாவட்ட மையங்களின் செயல்பாடு களிலும், மாவட்ட சிஐடியு மையங்களின் செயல்பாடுகளிலும் முன்னேற்றம் காணமுடிந்துள்ளது.

4.28 அரசியல் இயக்கங்களில் தொழிலாளர்களை உணர்வுபூர்வமாக பங்கேற்கச் செய்வதில் கூடுதலான முயற்சிகளும், திட்டமிடுதலும் தேவை. அரங்க பத்திரிகைகள் அரங்கவாரியாக திட்டமிடப்பட்ட அரசியல் தொழிற்சங்க வகுப்புகள் என அரசியல்படுத்தும் பணிகள் ஓரளவு நடைபெற்றாலும் கூடுதல் கவனம் தேவைப்படு கிறது. கட்சியை கட்டும்பணி, அரங்கத்திலுள்ள கட்சி தோழர் களின் திட்டமிட்ட பணிகளாக வேண்டும் என்ற நிலை இன்ன மும் உணர்த்தப்படவில்லை. அரசியல் ஸ்தாபன பணிகளில் உள்ள பலவீனங்கள் போக்கப்பட விசேஷ கவனம் செலுத்த வேண்டும். அரங்க பத்திரிகைகளின் உள்ளடக்கத்தை மேம்படுத்தி அவற்றை மேலும் பயனுள்ளதாக மாற்றவேண்டும்.

4.29 தொழிற்சங்கங்களை ஜனநாயகபூர்வமாக இயங்கச் செய்வது ஒரு முக்கிய பிரச்சனை என்கிற உணர்வை முன்னணி ஊழியர் களிடையே உருவாக்க முடிந்துள்ளது. இதை மேலும் வலுப் படுத்தி கீழ் அணிகள் வரை கொண்டு செல்லப்பட வேண்டும். ஆண்டுப் பேரவைகள் நடத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் உண்டு. சங்க வரவு – செலவு கணக்குகள், நிதி நிர்வாகம் என்பது கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய அம்சமாகும். இதற்கான கோட்பாடுகளை உருவாக்கும் நடவடிக்கைகள் மாநில ரீதியாக துவக்கப்பட்டு உள்ளது. ஸ்தல மட்டத்தில் கவனமும், விழிப்புணர் வோடு செயலாற்றுவதும் அவசியமாகிறது.

4.30 விவசாய அரங்கத்திற்கு தொழிற்சங்க அரங்கத்திலிருந்து நிதி உதவி அளிப்பது தொடர்ந்துள்ளோம்.

4.31 1995ல் ரூ 59,875/-, 1996ல் ரூ 87,650/-, 1997ல் ரூ 1,10,115/- என நிதி வழங்கப்பட்டுள்ளது.

4.32 பன்முகப் பணிகளில் கவனம் செலுத்துவது என்ற நோக்கோடு நிவாரண நடவடிக்கைகள், கலைக்குழுக்கள் அமைத்தல் போன்ற பணிகளில் இன்சூரன்ஸ், வங்கி மற்றும் சில சிஐடியு சங்கங்களும் கவனம் செலுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

4.33 தோழர் வி.பி.சி. நினைவு நாளன்று அனைத்து மாவட்டங் களிலும் இரத்ததான முகாம்கள், தோழர் பி.ஆர். நினைவு நாளன்று கண்தான முகாம்கள் என சிஐடியு மாநில மாநாடு செய் துள்ள முடிவுகள் நல்ல வரவேற்பு பெற்றுள்ளது. இதுபோன்ற பன்முகப் பணிகள் தொடர வேண்டும்.

ஊழியர்கள் பற்றி

4.34 ஒட்டுமொத்தமாக தொழிற்சங்க அரங்கத்தில் உறுப்பினர் பலத் திலும், பல்வேறு நடவடிக்கைகளிலும் முன்னேற்றம் இருந்தாலும், போதுமான ஊழியர்கள் இல்லாமை என்பதும், இருக்கின்ற ஊழி யர்கள் அனைவரும் இன்றைய தேவையை உணர்ந்து செயல்படு வதில் பலவீனம் தொடருவதும் மிகுந்த கவனம் தேவையாகின்ற பிரச்சனைகளாகும்.

4.35 கட்சி உறுப்பினர்களில், கணிசமான பகுதியினர் பார்வையா ளர்களாக உள்ள நிலை தொடருகிறது. இதற்கு ஓரளவேனும் தீர்வு காணாமல் நமது ஊழியர் பற்றாக்குறைக்கு தீர்வுகாண இயலாது. தொழிற்சங்க அரங்கில் அனுபவம் பெற்ற தோழர்கள் முழுநேர ஊழியர்களாக செயல்பட முன்வராத நிலையில், பகுதிநேர ஊழி யர்களாகவேனும் பணிகளை பகிர்ந்து செயல்பட வைப்பது மிகமிக அவசியமாகிறது..

4.36 குறிப்பாக முறைசாரா தொழில்களில் பெருமளவிலான விஸ் தரிப்புக்குள்ள வாய்ப்புகளை பயன்படுத்த வேண்டுமானால், இது நிறைவேற்றப்பட்டாக வேண்டும். மாவட்ட வாரியாகவும், அரங்க வாரியாகவும் தொழிற்சங்க அரங்க கட்சித் தோழர்களின் பணி களை பரிசீலித்தும் மதிப்பீடு செய்தும் தகுதியானவர்களுக்கு இந்தப் பொறுப்புகளை அளித்து நிறைவேற்றச் செய்வது மிகவும் அவசியமாகும்.

ஜாதிய மோதல்கள், பிரச்சனைகள்

4.37 ஜாதிய மோதல்கள் அதிகமாகியுள்ள நிலையில் ஜாதிய உணர்வுகள் தொழிலாளர்களுக்கு இடையே வலுப்பெற்று வரும் நிலையை நாம் சந்திக்க வேண்டியுள்ளது.

4.38 தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கு என மத்தியதர வர்க்க அரங்கங்களிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் தனி அமைப்புகள் வலுப்படுத்தப்படுகின்றன. இதர துறைகளில் இருக்கின்ற அமைப்புகளில் ஜாதியப் பார்வையோடு, சங்க நிர்வாகிகள் தேர்வு போன்று பிரச்சனைகள் உருவாகிறது.

4.39 மிகுந்த கவனத்தோடு நாம் செயல்பட வேண்டியுள்ளது. உழைப்பாளி மக்களின் ஒற்றுமை எனும் பொதுவான கோஷம் மட்டும் போதாது. இட ஒதுக்கீடு மற்றும் இதர சட்ட ரீதியான சலுகைகளை, சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவாதப் படுத்துவதிலும் நாம் கவனம் செலுத்தவேண்டும். சமூக ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நமது சங்க உறுப்பினர்களுக்கு உணர்வு ஊட்டுவதிலும் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். தென்மாவட்ட கலவரங்களின்போது, தொழிற்சங்கங்களின் தலையீடே இல்லை என்ற பலவீனத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். ஸ்தல மட்ட பிரச்சனைகளில் உணர்வு பூர்வமாக தலையிடும் நிலையை உருவாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும்.

உறுப்பினர் எண்ணிக்கை

4.40 சிஐடியு-வின் உறுப்பினர் எண்ணிக்கை, சங்கங்கள் ஆண்டு கணக்கு முடித்து அரசுக்கு சமர்ப்பிக்கும் "இ" பாரம் அடிப்படையிலும், அதற்கேற்ப அகில இந்திய மையத்திற்கு இணைப்புக் கட்டணம் செலுத்தியதன் அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படுகிறது. 1993ஆம் ஆண்டில் இது 1,80,020 ஆக இருந்தது.

4.41. 1994ல் 2,02,196 ஆக உயர்ந்தது. 1995ல் ஆண்டின் உறுப்பினர் எண்ணிக்கை 2,28,107 ஆகும். இணைப்பு கட்டணம் முழுமையாக செலுத்தப்பபடாததால் 1996ஆம் ஆண்டின் உறுப்பினர் எண்ணிக்கை இறுதிப்படுத்தப்படவில்லை. பொதுத்தேர்தல், உள்ளாட்சித் தேர்தல்களென தொடர் இயக்கங்கள் காரணமாக முறைசாரா தொழில்களில் உறுப்பினர் சேர்ப்பில் 1996ல் சிறு பாதிப்பு ஏற்பட்டது. 1997ல் இது ச்ரி செய்யப்பட்டு, மேலும் உயர்வு ஏற்படும் நிலை உள்ளது.

4.42 வருடாந்திர கணக்கு முடித்து "இ" பாரங்களை அரசுக்கு சமர்ப்பிப்பதிலும் பதிவேடுகள் பராமரிப்பதிலும் கவனம் செலுத்தாத

நிலை உள்ளது. குறித்த காலத்திற்குள் இணைப்புக் கட்டணம் செலுத்துவதிலும் பலவீனம் உள்ளது. கடந்த காலங்களைவிட முன்னேற்றம் இருந்தாலும், இது முக்கிய பிரச்சனையாகும். 1997ம் ஆண்டு இறுதியிலும் 1996ம் ஆண்டின் உறுப்பினர் எண்ணிக்கையை முழுமையாக அறிந்துகொள்ள முடியவில்லை. இது போன்ற நிலை தவிர்க்கப்பட வேண்டியுள்ளது. இந்த பலவீனங்கள் காரணமாக 1989ம் ஆண்டு அடிப்படையிலான வெரிபிக்கேஷன் நடைபெற்றபோது நமது உறுப்பினர் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையை அரசு ஏற்க மறுத்தது. மீண்டும் வெரிபிக்கேஷனுக்கு அரசு தயாராகி வரும் நிலையில் நாம் கவன்மாக இருக்க வேண்டியுள்ளது.

இதர தொழிற்சங்கங்கள்

4.43. 1989ஆம் ஆண்டு உறுப்பினர் எண்ணிக்கை அடிப்படையில், மத்திய அரசின் வெரிபிக்கேஷனில் தமிழகத்தில் ஐ.என்.டி.யு.சி.க்கு முதலிடமும், சி.ஐ.டி.யு.வுக்கு 2வது இடமும் என முடிவாயிற்று. தொ.மு.ச. பேரவை போன்ற மாநில அமைப்புகளுக்கு வெரிபிக்கேஷன் வாய்ப்பு இல்லை.

4.44 தற்போது ஐ.என்.டி.யு.சி.யில் மூன்று வகையான பிளவுகள் ஏற்பட்டுள்ளன. (இ.காங்., வாழப்பாடி, த.மா.கா.) தொ.மு.ச. பேரவையிலிருந்து எம்.எல்.எப். பிரிந்துள்ளது. அண்ணா தொ.ச. பேரவை மூன்றாக பிளவுபட்டுள்ளது. இந்த அமைப்புகள் நம்மைவிட உறுப்பினர் பலம் குறைந்தவையாகும். பிளவுகள் ஏற்பட்டுள்ள நிலையில் உறுப்பினர் பலம் துல்லியமாக மதிப்பிட இயலாது. இவற்றில் தொ.மு.ச. அமைப்பு திட்டமிட்டு செயல்படும் அமைப்பாகும். ஏ.ஐ.டி.யு.சி.யின் ஸ்தாபன பலத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை என்றே தெரிகிறது. சென்னை சுற்றுப்புறங்களில் தனிநபர்களின் தலைமையில் பல்வேறு பெரிய சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

4.45 சிபிஐ(எம்-எல்) தலைமையிலான ஏ.ஐ.சி.சி.டி.யு. சென்னை சுற்றுவட்டாரம் மற்றும் மாநிலத்தின் சில பகுதிகளில் செயல்பட்டு வருகிறது. திட்டமிட்டு முன்னேற முயற்சித்து வருகிறது. பி.எம்.எஸ். அமைப்பு, கோவை சுற்றுவட்டாரத்தில் காலூன்ற முயன்று வருகிறது. ரயில்வே மற்றும் அரசு துறைகளில் செயல்பட்டு வருகிறது.

4.46 இந்தப் பின்னணியோடு தொழிற்சங்க அரங்கத்தில் கீழ்க்காணும் பிரச்சனைகளில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

- உறுப்பினர் பலத்தை அதிகப்படுத்தும் முறையில் பெரும் தொழில்கள் மற்றும் பொதுத்துறைகளில் கவனம் செலுத்திக் கொண்டே முறைசாரா தொழில்களில் தற்போதுள்ள வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்துவது.
- மத்தியதர வர்க்க அமைப்புகளிலும் கூடுதல் கவனம் செலுத்துவது.
- அரசின் கொள்கைகளுக்கு எதிராக உணர்வூட்டும் பணிகளை தொடருவது;
- கூட்டு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதற்கு கூடுதல் கவனம் செலுத்துவது.
- சமூகக் கொடுமைகளுக்கும், தீண்டாமைக் கொடுமைகளுக்கும் எதிராக உணர்வூட்டும் பணிகளிலும், அந்த பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்கள், ஊழியர்களின் விசேஷ பிரச்சனை களிலும். தனி கவனம் செலுத்தி செயல்படுவது.
- தொழிற்சங்க அரங்க கடமைகள் ஆவண அடிப்படையில், நமது பணிகளை அமைத்துக்கொள்ள விசேஷ கவனம் செலுத் துவது; அமைப்புகளின் ஜனநாயகப்பூர்வ செயல்பாடுகளை உத்தரவாதப்படுத்துவது; வரவு – செலவு பராமரிப்பு – நிதி நிர்வாகத்தை முறைப்படுத்த கவனம் செலுத்துவது.
- ஊழியர்களை பயிற்றுவிப்பது, கட்சி தோழர்களை நமது தேவைக்கேற்ப வேறு அரங்க பணிகளில் குறிப்பாக முறைசாரா தொழில்கள் மற்றும் விவசாய அரங்க பணிகளில் பொறுப் பளித்து பணியாற்றச் செய்வது.
- தொழிலாளர்களுக்கு அரசியல் உணர்வூட்டும் நடவடிக் கைகளில் தொடர் கவனம் செலுத்துவது; அரங்க பத்திரிகை களின் உள்ளடக்கத்தில் முன்னேற்றம் காண்பது.

தொழிற்சங்க - உபகுழு மற்றும் பிராக்ஷன்கள்

4.47 மாநில தொழிற்சங்க உபகுழுவும், போக்குவரத்து, மின்சாரம், ரயில்வே, வங்கி, இன்சூரன்ஸ், மருந்து விற்பனை பிரதிநிதிகள் மற்றும் இதர மத்தியதரவர்க்க அரங்கங்களில் நான்கும் என பத்து பிராக்ஷன்கள் செயல்படுகின்றன.

4.48 மாநில உபகுழு, சிஐடியு சம்பந்தப்பட்ட கொள்கை ரீதியான பிரச்சனைகளை விவாதிப்பது, பொதுவான வழிகாட்டுதல்கள் உருவாக்குவது என்ற பணிகளை செய்கிறது. சிஐடியு-வோடு சம்பந்

தப்பட்ட இதர 3 அரங்கங்களிலுள்ள பிராக்ஷன்கள் அந்த அரங்க தொழிற்சங்கப் பணிகளை விவாதித்து சில வழிகாட்டுதல்களை வழங்குவதோடு, அரங்கில் கட்சி ஸ்தாபன வளர்ச்சி பற்றியும் சில விவாதங்களை நடத்தியுள்ளது. பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மத்தியதர வர்க்க அரங்கங்களிலும் கிட்டத்தட்ட இதே நிலைதான்.

4.49 மாநில பிராக்ஷன் உறுப்பினர்கள் மாவட்டங்களுக்குச் சென்று, அங்கு கட்சியை வலுப்படுத்தும் பணிகளுக்கு உதவி செய்யும் நிலை என்பது இன்னமும் அமலாகவில்லை. இதில் முன் னேற்றம் காண முயலவேண்டும். தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்கவும் வேண்டும்.

4.50 மாநில உபகுழுவைப் பொறுத்தமட்டிலும், கடந்த மாநாட்டுக் குப்பின் தொழிற்சங்க அரங்க கடமைகளை கட்சியின் மாவட்ட செயற்குழு மற்றும் முன்னணித் தோழர்களுக்கு எடுத்துரைக்கும் பணிக்கு திட்டமிடப்பட்டு நிறைவேற்றப்பட்டது மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

4.51 மாநிலத்தில் தொழிற்சங்க அரங்கத்தில் ஒட்டுமொத்தமான தொரு பார்வையை உருவாக்கவும், ஒருங்கிணைக்கவும் அரங்க கடமைகள் ஆவண' அடிப்படையில் முன்னேற்றம் காணவும் மாநில உபகுழுவானது நமது தொழிற்சங்க அரங்கத்தின் அனைத்து பிரிவுகளிலும் உள்ள தோழர்களைக் கொண்டதாக உருவாக்கப்படவேண்டும். பொதுப் பிரச்சனைகள் மற்றும் அரசியல் ஸ்தாபன முடிவுகள் மேற்கொள்ளப்பட்டு அரங்க பிராக் ஷன்கள் மூலமாக அமலாக்குவது என்பது நமது பணிகளை மேலும் வலுப்படுத்த உதவும்.

5.0 விவசாய அரங்கம்

5.1 நமது கட்சியினை பலம் வாய்ந்த புரட்சிகர வெகுஜன கட்சியாக மாற்றிட விவசாய இயக்கத்தை விரிவுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தை கட்சியின் 15வது மாநாடு அழுத்தமாகச் சுட் டிக்காட்டியிருந்தது. அத்துடன் ஏழு அம்சங்கள் வழிகாட்டியாக வும் தெரிவித்திருந்தது.

"விவசாய சங்கத்தையும், விவசாயத் தொழிலாளர் சங்கத்தையும் கட்டி, அதனைப் பலப்படுத்த தவறியது, இன்று தேசிய அளவில் ஜனநாயக இயக்கத்தின் பலவீனத்திற்கு காரணமாகி யுள்ளது. நாட்டு ஜனத்தொகையில் எழுபது சதவீதத்திற்கு அதிகமாக உள்ளடக்கியுள்ள இந்த அரங்கங்களில் ஸ்தாபனங்

களைக் கட்டி வளர்த்தெடுக்காவிடில் இந்த நாட்டு அரசியல் வாழ்க்கையில் நமது கட்சி ஒரு தீர்மானகரமான சக்தியாக விளங்கத் தவறிவிடும்"

– என்று கட்சியின் 15வது மாநில மாநாடு அதன் அறிக்கையில் கூறியுள்ளது.

5.2 கட்சியின் 15வது மாநாட்டின் அரசியல் ஸ்தாபன அறிக்கையில் விவசாய அரங்கம் பற்றிய பகுதியில் இக்காலத்தில், "இவ்வரங்க செயல்பாட்டில் முன்னேற்றம் காண மாநில அளவில் ஓரளவு கடுமையான முயற்சி எடுக்கப்பட்டிருந்தும் கூட முன்னேற்றம் பெரிதாக இல்லை என்பதை கவலையுடன் பரிசீலிக்க வேண்டிய தாகும்" என்று குறிப்பிட்டிருந்தது.

கட்சியின் 15வது மாநில மாநாட்டிற்குப் பிறகு இவ்வரங்கத்தில் நடைபெற்றுள்ள இயக்கப்பணிகள்:

5.3 அகில இந்திய விவசாய சங்கம் மற்றும் விவசாயத் தொழிலாளர் சங்கங்களின் முடிவுப்படி 26.08.96ல் மாநிலம் தழுவிய அளவில் நிலச் சீர்திருத்தத்தை வலியுறுத்தி 21 மாவட்டங்களில் 104 மையங் களில் 5,600 பெண்கள் உட்பட 25,000 பேர் பங்கெடுத்து ஆர்ப் பாட்டம் அரசு அலுவலகங்கள் முன் நடத்தப்பட்டதுடன், ஸ்தல அதிகாரிகள் மூலமாக முதலமைச்சருக்கு மகஜரும் அனுப்பப்பட் டது. இந்த இயக்கம் கோரிக்கைகளை மக்களிடம் விளக்கிக் கூற வும், அரசின் கவனத்திற்கு அவைகளைக் கொண்டுசெல்லவும் உதவியுள்ளது.

நிலத்திற்கான இயக்கம்

5.4 தமிழகத்தில் உபரி நிலம், அரசு தரிசு நிலம், பூமிதான நிலம், பஞ்சமி நிலம், வனத்துறைக்குச் சொந்தமான தரிசு நில்ம், இறால் பண்ணைகளுக்கென வாங்கப்பட்டு தரிசாகப் போடப்பட்டுள்ள நில்ங்களைக் கைப்பற்றி விவசாயம் செய்வதற்கான போராட் டத்தை நடத்தியுள்ளோம். நாகை, கடலூர், மதுரை மாவட்டங் களில் உபரி நிலங்களையும், மதுரை, பெரம்பலூர் மாவட்டங் களில் பஞ்சமி நிலங்களையும் மதுரை, சேலம், தருமபுரி, நெல்லை, தஞ்சை மாவட்டங்களில் அரசு தரிசு நிலங்களையும், 1997 ஆகஸ் டில் கைப்பற்றுவதென்ற முடிவிற்கிணங்க, விவசாயத் தொழிலா ளர்களைத் திரட்டி சுமார் ஆயிரம் ஏக்கருக்கு மேல் கைப்பற்றப் பட்டுள்ளது. இது இக்காலத்தில் நடைபெற்ற குறிப்பிடத்தக்க இயக்கமாகும். மேலும் பரவலாகவும், தொடர்ச்சியாகவும் இப் பிரச்சனையை எடுத்துச்செல்வது நம்முன்னுள்ள முக்கிய கடமையாகும்.

நில மோசடியை எதிர்த்து

5.5 தொடர்ந்து அன்னிய கம்பெனிகளும்,பெரு முதலாளிகளும், ஆளும் கட்சியினரும் தூத்துக்குடி, சிவகங்கை, மதுரை,தருமபுரி மாவட்டங்களிலும் மற்றும் சில மாவட்டங்களில் அதிகாரி களைப் பயன்படுத்தி, ஏழை விவசாயிகளிடம் இருந்த நிலங்களை மோசடியாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களை வாங்கி, குவித் ததைத் தொடர்ந்து கட்சி, விவசாய சங்கம் ஆகியவற்றின் சார்பில் எதிர்த்து இயக்கம் நடத்தி வந்திருக்கிறோம்.

இதன் விளைவாக, இத்தகைய நில மோசடி ஓரளவு தடுத்து நிறுத்தப்பட்டதுடன், அதிமுக ஆட்சி, மக்களால் தூக்கி எறியப்பட்டபின் தூத்துக்குடி, சிவகங்கை மாவட்டங்களில் ஏற் கெனவே நிலத்துக்கு சொந்தக்காரர்களாக இருந்த ஏழை விவ சாயிகளே அந்நிலங்களை சாகுபடி செய்து வருகின்றனர்.

கூலிக்கான இயக்கம்

5.6 விவசாயத் தொழிலாளர்களுக்கான மத்திய சட்டம் கொண்டுவர வேண்டுமென்பதற்காகவும், மாநில அரசு புதிய கூலி நிர்ணயம் செய்வதற்கான கமிஷன் அமைக்கவும் வலியுறுத்தி ஆர்ப்பாட் டம், தர்ணா, உண்ணாவிரதம், மறியல் நடத்தப்பட்டன. பெண் களுக்கு குறைவாகக் கூலி கொடுப்பதை எதிர்த்து விவசாயத் தொழிலாளர்களையும், பெண்களையும் திரட்டி ஆர்ப்பாட் டங்கள், மறியல், வேலைநிறுத்தம் ஆகிய போராட்டங்களை திருச்சி, தஞ்சை, விழுப்புரம், கடலூர், நாமக்கல், கோவை மாவட் டங்களில் நடத்தியுள்ளோம். பெண்கள், கூலிக்கான விசேஷ மாநாடுகளை ஜனநாயக மாதர் சங்கத்துடன் இணைந்து பல மாவட்டங்களில் நடத்தினோம். இது பெண் தொழிலாளர்கள் மத்தியில் பெரும் வரவேற்பை பெற்றது.

எந்திரங்கள் புகுத்துவதை எதிர்த்து

5.7 விவசாயத்தில் நடவு, அறுவடைக்கு எந்திரத்தை புகுத்துவதை எதிர்த்து விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் விவசாயத் தொழிலாளர்கள் சக்தியான போராட்டத்தை நடத்தி, எந்திரத்தை வாபஸ் வாங்கச் செய்துள்ளனர். இப்போராட்டத்தில் துப்பாக் கிச்சூடும் நடந்தது. விவசாயத் தொழிலாளிகள் கைது செய்யப்பட் டுள்ளனர். பின் ஏற்பட்ட உடன்பாட்டில் விவசாய வேலை களுக்கு ஆள் கிடைக்காத இடங்களில், அந்தக் காலத்தில் மட் டும் கிராம நிர்வாக அலுவலர்கள், காவல்துறையினர், விவசாயத் தொழிலாளர்கள், விவசாயிகள் கூட்டம் நடத்தப்பட்டு, அக்கூட் டத்தில் முடிவெடுக்கப்பட்டால் மட்டுமே எந்திரத்தைப் பயன்

படுத்தலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. வி.ச. உபகுழுவும் இதை ஏற்றுள்ளது.

மலைவாழ் மக்கள் இயக்கம்

5.8 வாச்சாத்தி வழக்கைத் தொடர்ந்து நடத்தியதில், இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட ஐ.எப்.எஸ். அதிகாரிகள் உட்பட 266 பேர் கைது செய்யப்பட்டுள்ள வரலாற்று முக்கிய சம்பவம் நடந்திருப்பதுடன், இவ்வழக்கிற்கு பல்வேறு பகுதியினரிடமிருந்து ரூ 50,000/- க்கு மேல் நிதி வந்துள்ளது. மலைவாழ் மக்களுக்கும், அதன் ஒரு பகுதி யாக உள்ள குறும்பர் சமூகத்தினருக்கும், பழங்குடியினருக்கான சான்றிதழ்களுக்காகவும், வனத்துறையினரின் தாக்குதல்களை எதிர்த்தும் தொடர்ந்து இயக்கங்கள் நடத்தப்பட்டு வருகின்றன புரியா குழு சிபாரிசை விளக்கிக் கூறுவதற்கான 250 பேர்கள் கொண்ட மாநில சிறப்பு மாநாடும் நடத்தப்பட்டிருக்கிறது.

இறால் பண்ணை எதிர்ப்பு இயக்கம்

5.9 தமிழகத்தில் உள்ள ஆயிரம் இறால் பண்ணைகளால் ஏற்படும் விளைவுகளை எதிர்த்து தொடர்ந்து பிரச்சாரம் செய்ததுடன் சிறப்பு மாநாடுகளையும் தனியாகவும், சர்வோதய இயக்கத்துடன் கூட்டாகவும் நடத்தி வந்திருக்கிறோம். 1996 ஜனவரி 8ம் தேதியன்று 36 மையங்களில் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்புப்படி இறால் பண்ணைகளை அழிக்க வலியுறுத்தி மறியல் நடத்தப்பட்டது. அதில் 6982பேர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அகில இந்திய கிசான் சபா அனுப்பியுள்ள இறால் பண்ணை குறித்த ஆவணத்தை 1997 அக்டோபர் 3 அன்று கூடிய மாவட்ட செயலாளர் கூட்டத்தில் விவாதித்து அகில இந்திய கிசான் சபா விற்கு நமது மாநிலத்தின் கருத்தைத் தெரிவித்துள்ளோம். இந்த இயக்கத்தின் வாயிலாக மீனவர்களுடன் ஏற்பட்ட தொடர்பைப் பலப்படுத்தி, மீனவர் சங்கத்தை ஆரம்பிக்க வேண்டும் என்கிற முடிவு நிறைவேற்றப்படவில்லை.

கரும்பு விவசாயிகளுக்கு கரும்புக்கு மத்திய – மாநில அரசுகள் கட்டுப்படியான விலையை நிர்ணயிக்கவும், கரும்பு அரவை செய்ததற்குரிய பாக்கி பணம் பல கோடி ரூபாயை ஆலைகள் உரிய காலத்தில் வழங்கவேண்டும் என்பதற்காகவும், வாகன வாடகையை அரசு ஏற்கவேண்டும் என்பதற்காகவும், ஆலை வாரியாக பிரச்சாரம் நடத்தப்பட்டு, ஆர்ப்பாட்டம், தர்ணா, மறியல் போன்ற போராட்டங்கள் நடத்தப்பட்டுள்ளது.

5.11 கூட்டுறவு பால் சொசைட்டி தேர்தலில் தகுதியில்லாதவர்களை வாக்காளர்களாக சேர்த்து தேர்தல் நடத்திட திமுக அரசு போட்ட உத்தரவை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்து, தோழர் கே.வி. பெயரில் தடை உத்தரவு வழங்கப்பட்டது. பின் சில நிபந்தனைகளுடன் தடை நீக்கப்பட்டு, நடைபெற்ற தேர்தலில் வி.ச., வி.தொ.ச.வைச் சேர்ந்த பலர் இயக்குநர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

ஆய்வு

5.12 கட்சியின் அகில இந்திய, மாநில 14வது மாநாடு, அகில இந்திய கிசான் சபா ஆகியவைகளின் முடிவிற்கு இணங்க மாநில அளவில் விவசாயித்தில் ஏற்பட்டுள்ள மாற்றம், இன்றைய சூழலுக்கு ஏற்ற முன்னுரிமை கொடுக்க வேண்டிய பிரச்சனைகள் குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. வி.ச. உபகுழுவால் தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையை மாநில வி.ச., வி.தொ.ச. கமிட்டிகள் அங்கீகரித்தன. இதையொட்டி மாவட்டங்களில் ஸ்தூலமான நிலைகள் பற்றி பரிசீலிக்க ஒரு கேள்வித்தாள் வி.ச. மாநில மையத்தால் தயாரிக்கப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டது. இத்தகைய ஆய்வுகளை தொடர்ந்து நடத்துவதுடன், இதுவரை வந்துள்ள நிர்ணயிப்பையொட்டி பிரதான கோஷங்கள் வரையறுக்கப்பட்டு இயக்கங்களுக்கு திட்டமிட வேண்டியுள்ளது.

ஸ்தாபனம்

5.13 1995 மார்ச்சில் கட்சியின் மாநில மாநாடு நடந்ததற்குப்பின் 1995 நவம்பரில் வி.ச. மாநில 23 வது மாநாடும், அதைத் தொடர்ந்து வட்ட, ஒன்றிய, மாவட்ட மாநாடுகளும், 1996 ஜூனில் மலைவாழ் மக்கள் சங்கத்தின் 2வது மாநில மாநாடும், தொடர்ந்து மலைவாரியாக மாநாடுகளும், 1997 ஏப்ரலில் வி.தொ.ச. 4வது மாநில மாநாடும், தொடர்ந்து வட்ட, ஒன்றிய மாவட்ட மாநாடுகளும் நடந்துள்ளன.

வகுப்பு

5.14 அகில இந்திய விவசாய சங்கத்தின் புதிய விவசாய கொள்கை பற்றி அணிகளுக்கு ரிப்போர்ட் செய்யப்பட்டுள்ளது.

உபகுழு

5.15 13 பேர் கொண்ட உபகுழு இக்காலத்தில் 4 முறை கூடியுள்ளது. இன்னும் கூடுதலாக 6 மாதத்திற்கு ஒரு முறை கூடியிருக்க வேண்டும்.

வி.ச. நிர்வாகிகள்

5.16 கூட்டம் ஒரு முறையும், மாவட்ட செயலாளர்கள் கூட்டம் 4 முறையும் கூடியுள்ளது. இக்கூட்டங்கள் நடத்துவது மாநில முடிவுகளை பரிசீலித்து செயல்படுத்துவதற்கு உதவியளிக்கிறது.

வி.ச. மாநிலக்குழுக் கூட்டம்

5.17 7 முறை கூடியுள்ளது. உறுப்பினர்களில் 90%னர் பங்கேற்றனர்.

வி.ச. மையம்

5.18 தற்போது தோழர்கள் கே.வி., ஜி.வி., வி.ஏ.கே., பி.சண்முகம், எஸ்.திருநாவுக்கரசு ஆக 5 தோழர்கள் மையத்திலிருந்து செயல் பட்டு வருகிறார்கள். இக்காலத்தில் 95ல் 12, 96ல் 20,97ல் 17 ஆக இதுவரை 49 கூட்டங்கள் நடந்துள்ளன. மையத் தோழர்களுக்கு மையத்தில் வேலை திட்டம் தீர்மானிக்கப்பட்டு கூட்டு முடிவு தனிப்பொறுப்பு, அதைக் கண்காணிப்பது என்ற முறையில் செயல்பட்டு வருகிறது.

5.19 மாநில சங்கத்திற்காக சொந்தக் கட்டிடம் கட்டும் பணி துவங்கப்பட்டுள்ளது. தற்போது வி.ச., வி.தொ.ச., மலைவாழ் மக்கள் சங்கம், கரும்பு விவசாயிகள் சங்க அமைப்புகளுடன், பால் உற்பத்தியாளர் சங்கம், அரசு பண்ணைத் தொழிலாளர் சங்கம், பட்டு உற்பத்தியாளர் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இவைகள் தொடர்ந்து செயல்படவில்லை. மீனவர்கள், கொடிக் கால், தென்னை, பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் சங்கம் அமைப்பதென்ற முடிவு நிறைவேறவில்லை.

5.20 வி.ச. மாவட்டக்குழுக்கள் 28 வரை உள்ளன. மாவட்டக்குழுக் கூட்டங்களில் தொடர்ச்சியாக மாநில மையத் தோழர்கள் பங் கேற்கின்றனர். ஆனால், மாவட்டக் குழு செயல்பாடு பெரும் பாலான மையங்களில் குறைவாக உள்ளது.

5.21 வட்ட, ஒன்றியக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், இவைகள் கூடுவதும், உறுப்பினர்கள் கூட்டத்திற்கு வருவதும் மிகவும் பலவீனமாகவே தொடர்ந்து இருந்து வருகிறது. உறுப் பினர்கள் சேர்க்கப்பட்ட இடங்களில் கிளைகள் அமைத்து அதை செயல்பட வைப்பது என்பதில் உள்ள குறைபாடு நீடிக்கிறது.

5.22 15வது மாநாட்டு அறிக்கையில் குறிப்பிட்டபடி ஒரு சில இடங் களில் கிளைகள் அமைத்தும், அவை செயல்படாத நிலை நீடிக்கிறது. வட்ட, ஒன்றிய குழுக்கள் பலப்படுத்தப்பட்டு செயல்படவில்லை.

5.23 உறுப்பினர் பதிவு

வருடம்	வி.ச.	வி.தொ.ச.
1995 – 96	2,48,289	1,32,775
1996 – 97	2,94,639	1,55,385

5.24 நாம் தொடர்ந்து செய்துவரும் பணிகளுக்கு இணங்கவும், உள்ளாட்சித் தேர்தலில் கிராமப்புறங்களில் நமக்குக் கிடைத்த வாக்குகளுக்கு ஏற்பவும் உறுப்பினர் எண்ணிக்கை உயரவில்லை.

5.25 சிஐடியு சார்பில் வி.ச. வளர்ச்சி நிதி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 19 தியாகிகள் தினத்தன்று வழங்கப்பட்டு வருகிறது.

5.26 சி.கே.சி.க்கும், அ.இ.வி.தொ.ச.க்கும் மாநில மையத்திலிருந்து வேலையறிக்கை அனுப்பபட்டு வருகிறது.

5.27 மொத்தத்தில்

- கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து மாநில மையத்தின் முயற்சி காரணமாக விவசாயப் பிரச்சனைகளில் மாநில, மாவட்ட அளவில் கருத்தொருமைப்பாட்டில் முன்னேற்றம் உண்டு.
- ஸ்தல பிரச்சனைகளில் தலையிடுவதில் மாவட்டங்களில் முன்னேற்றம் உண்டு. மாவட்டக்குழு செயல்பாடுகள் எதிர்பார்க்கும் அளவுக்கு இல்லை எனினும், பொதுவான முன்னேற்றம் உண்டு.
- எனினும் மாவட்ட மையங்களிலும், வலுவான தாலுக்காக்களிலும், விவசாய அரங்கிற்கென விசேஷமாக செயல்படும் ஊழியர்கள் தீர்மானிக்கப்பட்டு செயல்படுவது என்பது நடைபெறவில்லை. இது நடைபெறாமல் வேலைகளில் தொடர்ச்சி சாத்தியமில்லை. இது குறித்தும் உடனடியாக எதிர்காலத்தில் உத்தரவாதமான நடவடிக்கை எடுக்கப்படுவது மிகவும் அவசியம்.
- இதேபோல் சேர்த்த உறுப்பினர்களைக் கிளைகளாக்கி செயல்பட வைப்பதை இடைக்கமிட்டிகளின் தொடர்ச்சியான செயல்பாடுதான் உத்தரவாதம் செய்ய முடியும். அதற்கான முயற்சிகள் மிகவும் பலவீனமாக உள்ளது.
- கிராமப்புற கட்சி கிளைகள் சுயேட்சையாக அந்த கிராமங்களில் விவசாய சங்கங்களை செயல்படுத்தி, மக்களைப் பாதிக்கும் கூர்மையான பிரச்சனைக்ளை எடுத்து இயக்கம் நடத்துவது என்பதற்கான் தொடர் முயற்சிகள் தேவைப்படுகிறது.

6.0 வாலிபர் அரங்கம்

தமிழக வாலிபர்கள் பொதுவான தன்மைகள்:

6.1 தமிழகத்தில் மொத்த மக்கள் தொகையில் சரிபாதி அளவிலுள்ள நிலையில் கட்சி கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய பகுதியாக தமிழக வாலிபர்கள் உள்ளனர்.

6.2 திமுக, அதிமுக கட்சிகளின் செல்வாக்கு வாலிபர்கள் மத்தியில் பிரதானமாக உள்ளது. எனினும் கணிசமான பகுதி வாலிபர்கள் மத்தியில் அரசியலற்ற போக்கும் காணப்படுகிறது. தொடர்ச்சியான ஊழல் நடவடிக்கைகள் அரசியலில் கிரிமினல்கள் ஆதிக்கம் இவைகளால் அரசியல் மீது வெறுப்புணர்வும் இளைஞர்கள் மத்தியில் வளர்ந்து வருகிறது.

6.3 கணிசமான பகுதி வாலிபர்கள் ரசிகர் மன்றங்களின்பால் ஈர்க்கப் பட்டுள்ளனர். ரஜினிகாந்த் மீதான மோகம் கடந்த தேர்தலில் அரசியல் ஆக்கப்பட்டு தேர்தலில் பயன்படுத்தப்பட்டது.

6.4 வகுப்புவாத சக்திகள் வாலிபர்களை திரட்ட கூடுதல் கவனம் செலுத்துகின்றன. வாலிபர்கள் மத்தியில் தவறான போக்குகள் ஊக்கம் பெறுவதற்கு திரைப்படங்கள், பத்திரிகைகள், தொலைக் காட்சி பெரிதும் பங்காற்றி வருகின்றன. டிவி. விளம்பரங்கள் நுகர்வு கலாச்சாரமோகத்தையும், பல பத்திரிகைகள் மற்றும் திரைப்படங்கள் பாலியல் உணர்வு வன்முறை வெறியையும் வாலிபர்கள் மத்தியில் தோற்றுவிக்கின்றன.

6.5 இந்நிலையில் வேலை மற்றும் மக்கள் பிரச்சனைகளுக்கான போராட்டங்கள் மூலம் வாலிபர்களை, வாலிபர் சங்கத்தில் திரட்டுவதோடு வாலிபர்களின் சிந்தனையில் இடதுசாரி மனோ பாவத்தை ஏற்படுத்திட சித்தாந்த கலாச்சார போராட்டங்களை கடந்த காலங்களைவிட அதிகமாக மேற்கொள்ள வேண்டும்.

கடந்த மூன்று ஆண்டுகளில் வாலிபர் அரங்கத்தில் நடைபெற்றுள்ள இயக்கங்கள்:

6.6 மாநில அளவில் கடந்த ஆகஸ்ட் 7ம் தேதி வேலையில்லா கால நிவாரணம் உள்ளிட்ட ஐந்தம்ச கோரிக்கைகளுக்காக நடைபெற்ற மறியல் போராட்டம் தமிழகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் அளவில் நடைபெற்றது. 18 ஆயிரம் பேர் கைதாகினர். இது கடந்தகால பங்கேற்பை விட அதிகம். வரும் காலங்களில் விரிவான பிரச்சாரத்தோடு வேலையின்மைக்கு எதிராக இயக்கத்தினை பல வடிவங்களில் தொடர வேண்டும்.

6.7 1995ம் ஆண்டு தமிழக தொழில் வளர்ச்சி – வேலைவாய்ப்பு குறித்து மாற்று கொள்கைகள் உருவாக்கப்பட்டு கரூரில் சிறப்பு மாநாடு நடத்தப்பட்டது. மாவட்டங்களிலும் நடத்திட அறை கூவல் விடப்பட்டது.

6.8 இலவச வேட்டி சேலை ஊழல், தொலை தொடர்பு ஊழல் போன்ற பிரச்சனைகள் முன்னுக்கு வந்தபோது கண்டன இயக்கங்கள் நடத்தப்பட்டது. பொதுவாக வாலிபர்கள் மத்தியில் ஊழல், அரசியலில் கிரிமினல் மயம் உள்ளிட்ட கோபம் வரும் பிரச்சனைகளில் இயக்கம் நடத்துவதில் பலவீனம் உள்ளது. தொடர்ந்து கவனம் செலுத்த வேண்டும். அனைத்து சமூக பிரச்சனைகளில் இயக்கம் நடத்த வேண்டும்.

6.9 தீண்டாமைக் கொடுமையை ஒழிப்போம். ஜாதி மோதலைத் தவிர்ப்போம், மக்கள் ஒற்றுமையை காப்போம் என்ற கோஷங்களை முன்னிறுத்தி தென் மாவட்டங்களில் கலவரம் நடந்த போது. தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறிலிருந்து திருநெல்வேலி நகரம் வரை 1000 வாலிபர்கள் கலந்து கொண்ட நடைபயணம் நடைபெற்றது. திருநெல்வேலியில் நடைபெற்ற மாநில மாநாட்டு பேரணி மக்கள் ஒற்றுமை பேரணியாக நடத்தப்பட்டது. 20,000 பேர் கலந்து கொண்டனர். மாநில மாநாட்டில் அறைகூவலாக விடப்பட்டு தென் மாவட்டங்கள் முழுவதும் சைக்கிள் பிரச்சார பயணம் நடைபெற்றது. சுமார் 400 மையங்களில் தெருமுனை பிரச்சாரம் மற்றும் கூட்டங்கள் நடத்தப்பட்டு சுமார் 600 கிராமங்களுக்குள் சென்று வந்த சைக்கிள் பிரச்சார பயணக்குழுக்கள் தென் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சி கோரியும் தீண்டாமை கொடுமைக்கு எதிராகவும் விரிவான பிரச்சாரத்தை மேற்கொண்டன. ஸ்ரீவில்லிபுத்தூரில் நிறைவு நிகழ்ச்சி நடைபெற்றன.

6.10 தீண்டாமைக் கொடுமைக்கெதிராக போராட வேண்டும் என்ற உணர்வு தலித் வாலிபர்கள் மத்தியில் மேலோங்கியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய அம்சமாகும். இவ்வாலிபர்களை தலித் அமைப்புகள் தவறாக பயன்படுத்துவதைத் தடுத்திட தீண்டாமைக் கொடுமைக்கெதிராக சமரசமற்ற போராட்டத்தை நடத்திட வேண்டும். தீண்டாமைக் கொடுமைக்கெதிராக அனைத்து பகுதி வாலிபர்கள் மத்தியிலும் சித்தாந்த போராட்டத்தை நடத்திடும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். தொழில் வளர்ச்சி மற்றும் விவசாய வேலைவாய்ப்புகளை அதிகப்படுத்திட ஸ்தூலமான கோரிக்கைகளை உருவாக்கி தென் மாவட்டங்களில் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஸ்தல இயக்கங்கள்

6.11 ஸ்தல இயக்கங்கள் நடத்துவதில் கடந்த காலத்தில் இருந்த வேகம் தற்போது குறைந்துள்ளது. மருத்துவ வசதிகளை அதிகப்படுத்தக் கோரி மதுரையில் நடைபெற்ற சாலை மறியல் வீச்சாக நடைபெற்றது. பல இடங்களில் ஸ்தல பிரச்சனைகள் மீது நடத்தப்பட்ட இயக்கங்களுக்கு நல்ல பிரதிபலிப்பு கிடைத்தது. வாலிபர் சங்க ஸ்தாபனம் வேரூன்ற ஸ்தல பிரச்சனைகள் மீதான இயக்கங்கள் காரணமாக இருந்தன என்ற அனுபவத்தினை கணக்கில் கொண்டு ஸ்தல பிரச்சனைகள் மீது இயக்கங்கள் நடத்திட திட்டமிட வேண்டும்.

பங்கேற்பு

6.12 ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற மறியல் போராட்டத்தில் அதிகமாக வாலிபர்கள் பங்கேற்ற போதிலும் நம்முடைய உறுப்பினர் எண்ணிக்கை மற்றும் செல்வாக்கிற்கேற்ப பங்கேற்பு இல்லை. ஸ்தாபன பலம் வலுவாக உள்ள மாவட்டங்களில் பங்கேற்பு குறைவாகவே உள்ளது. எதிர்காலத்தில் குறைந்தபட்சம் 20 சதம் பங்கேற்பை உத்திரவாதப்படுத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பன்முக - கலாச்சார நடவடிக்கைகள்

6.13 மாறி வரும் இளைஞர்களின் சிந்தனைக்கேற்ப அவர்களை வென்றெடுக்கும் வகையில் புதிய முறையிலான செயல்பாடுகள் அவசியமாகின்றன. மாநிலம் முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் டி.ஒய்.எப்.ஐ. இரத்ததான கழகங்கள் துவக்கப்பட்டு இயங்குகின்றன. ஏறத்தாழ பத்தாயிரம் யூனிட்டுகளுக்கு மேல் வாலிபர் சங்க தோழர்களால் இரத்ததானம் செய்யப்பட்டுள்ளது. கடந்த அக்டோபர் 1ல் அரசு அமைப்போடு இணைந்து விழிப்புணர்வு சுடர் ஊர்வலமும், கருத்தரங்கமும் நடத்தப்பட்டது. சென்னை, கோவை, நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களில் போதை பழக்கத்திற்கு எதிராகவும் எய்ட்ஸ் விழிப்புணர்வு இயக்கமும் நடத்தப்பட்டுள்ளன.

6.14 இரத்த தான கழக செயல்பாடு மக்கள் மத்தியில் வாலிபர் சங்கத்திற்கு நன்மதிப்பை ஏற்படுத்தியுள்ளது. நமது அரசியலுக்கு அப்பாற்பட்டு நிற்பவர்களோடு தொடர்பு கொள்ள இப்பணி பயன்படுகிறது. இந்நடவடிக்கைகளை மேலும் முன்னெடுத்து சென்று நகர்புறங்களில் ஸ்தாபனத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சாலை சீரமைப்பு, மரம் நடுதல் போன்ற சமூக ஆக்கப் பணிகள் சில இடங்களில் நடந்துள்ளன. இது சீர்திருத்த நடவடிக்கை என்

கிற பார்வை இன்னும் சில மட்டங்களில் நீடிக்கிறது. சமூக ஆக்கப் பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்துவது என்பது மிக அவசியம். நம்போன்ற பின்தங்கிய நாடுகளில் இப்பணி முக்கியமானதாகும்.

6.15 ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 500 மையங்களில் பொங்கல் விளையாட்டு விழாக்கள் நடத்தப்படுகின்றன. கலை– நிகழ்ச்சிகளும், போட்டிகளும் பல வாலிபர்களை ஈடுபடுத்தி நடத்தப்படுகின்றன. இதுபோன்று மேலும் சில வடிவங்களை கண்டறிந்து கலாச்சார விழாக்கள், கலை – இலக்கிய நிகழ்ச்சிகள் நடத்திட கவனம் செலுத்திட வேண்டும்.

ஸ்தாபனம்

உறுப்பினர் பதிவு:

6.16 1995ல் 5,56,466, 1996ல் 4,49,440, 1997ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்ப்பு இன்னும் இறுதிப்படுத்தப்படவில்லை. தொடர்ந்து உறுப்பினர் எண்ணிக்கையில் சீரான வளர்ச்சி இருந்து வந்தது. 1996ம் ஆண்டில் பதிவில் தொய்வு ஏற்பட்டிருந்தும் முயற்சி எடுத்த ஒன்பது மாவட்டங்களில் புதுப்பித்தலை முடிக்க முடிந்துள்ளது. வெகுஜன உறுப்பினர் சேர்ப்பு முறை பரவலாக அமுலாக்கப்படவில்லை. மாநில அளவில் ஏற்றத்தாழ்வான வளர்ச்சியுள்ளது. மொத்த உறுப்பினர் எண்ணிக்கையில் வடசென்னை, தென் சென்னை, மதுரை மாநகர், கோவை கிழக்கு, கன்னியாகுமரி மாவட்டங்களில் மட்டும் 50 சதம் உள்ளனர். இதர மாவட்டங்களிலும் உறுப்பினர் சேர்ப்பில் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது.

மாநில மையம்:

6.17 கடந்த மாநாட்டின்போது தோழர்கள் ரவீந்திரன், பாக்கியம், குணசேகரன் ஆகியோர் மையத்தில் செயல்பட்டனர். தோழர்கள் ரவீந்திரன், பாக்கியம் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு பொறுப்புகளிலிருந்து விடுவிக்கப்பட்டபின் தோழர்கள் குணசேகரன், மகேந்திரன் இருவர் மட்டுமே மைய வேலைகளை செய்ய வேண்டியவராகி உள்ளனர்.

6.18 மைய வேலைகளை கவனித்துக் கொண்டு மாவட்டங்களுக்கு உதவுவது சிரமமாக உள்ளது. உடனடியாக இன்னொருவரை மாநில மையத்திற்கு கொண்டுவர வேண்டும். தொடர்ந்து நான்காவதாக ஒருவரை மையத்திற்கு கொண்டுவர முயற்சிக்க வேண்டும்.

மாவட்டக்குழு இடைக்கமிட்டி கிளைகள்:

6.19 மாவட்ட பிராக்ஷன்கள் மூலம் கட்சியின் மாவட்டக் குழுக்கள் வாலிபர் அரங்கத்திற்கு வழிகாட்டி வருகின்றன.

6.20 கடந்த மாநாட்டின்போது நீலகிரி தவிர அனைத்து மாவட்டத்திலும் மையத்திலிருந்து ஒரு முழுநேர ஊழியராவது செயல்பட்ட நிலைமை இருந்தது. தற்போது சில மாவட்ட மையங்களில் முழு நேர ஊழியர் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. ஸ்தாபன பலமிக்க மாவட்டங்களான வடசென்னை, தென்சென்னை, மதுரை மாநகர் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் இரண்டு முழுநேர ஊழியர்களும், தஞ்சை, புதுக்கோட்டை, ராமநாபுரம், நீலகிரி, தேனி, கடலூர், ஈரோடு, தருமபுரி கிழக்கு ஆகிய மாவட்டங்களில் குறைந்தபட்சம் ஒரு முழுநேர ஊழியராவது மாவட்ட மையத்திலிருந்து செயல்படுவதை உறுதிப்படுத்த வேண்டும். உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஸ்தாபன கடமைகளும் அதிகரித்துள்ள நிலையில் கிளைகளை உயிரோட்டமாக இயக்கிட இடைக்கமிட்டிகளை பலப்படுத்திட மாவட்ட மையத்தை பலப்படுத்த வேண்டும்.

6.21 தற்போது 252 இடைக்கமிட்டிகள் செயல்பட்டு வருகின்றன. பங்கேற்பு குறைவாக இருப்பினும், இடைக்கமிட்டி கூட்டங்கள் நடத்துகிற நடைமுறை தற்போது பரவலாக்கப்பட்டுள்ளது. 10,000க்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட இடைக்கமிட்டிகளில் கிளைகளை செயல்பட வைக்க, மேலும் விரிவு படுத்த ஒரு முழுநேர ஊழியர் செயல்பட வைக்க வேண்டும். ஆண்டு தோறும் புதிய கிளைகள் வலுபெற்றபொழுது பல பழைய கிளைகள் விடுபடுகின்றன. கிளை செயல்பாட்டில் முன்னேற்றம் கண்டு கிளைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

உறுதிப்படுத்துதல்:

6.22 சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள் அனைவரையும் கிளை அளவில் ஒருங்கிணைப்பது, தொடர்ந்து பலமான தொடர்புகளை வைத்துக் கொள்வது, இயக்கங்களில் பங்கேற்க வைப்பது போன்ற அனைத்திலும் பலகீனம் நீடிக்கிறது. பதிவை குறிப்பிட்ட காலத்தில் முடிக்காததும் கூட உறுதிப்படுத்துதல் பணி நடைபெறாமல் இருப்பதற்கு முக்கிய காரணம். குறிப்பிட்ட காலத்திற்குள் பதிவை முடித்து உறுதிப்படுத்துதலுக்கு மாவட்டக் குழுக்களிலும், பிராக்ஷன்களிலும் எதிர்காலத்தில் திட்டமிடவேண்டும்.

நிதி நிலைமை:

6.23 மாநில மையத்திற்கு சந்தா ஈவைத் தவிர வேறு வருவாய் இல்லை. மாவட்ட, வட்ட நிலையும் இதுதான். தொடர்ச்சியான

இயக்கங்கள் நடைபெறுகின்றன. கடந்த ஆண்டில் மாநிலக்குழு அலுவலக கட்டிட நிதி வசூல் செய்யப்பட்டு ரூபாய் 4,95,000க்கு நிலம் வாங்கப்பட்டுள்ளது. மாநில மைய நிதியில் ஒரு பகுதியும், இளைஞர் முழக்கம் சந்தா பணமும் முறைகேடாக செலவு செய்யப்பட்டதால் மாநில மையம் தற்பொழுது ரூ 1,00,000 வரை கடனில் உள்ளது. கட்சி மாநிலக்குழு வழிகாட்டுதலின் பேரில் தற்பொழுது கணக்குகள் முறையாக பராமரிக்கப்படுகின்றன. முறைகேட்டில் ஈடுபட்ட முன்னாள் தலைவர், செயலாளர் பேரில் கட்சியில் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

6.24 கோவை, சென்னை, தூத்துக்குடி, நெல்லை போன்ற மாவட்டங்களில் வளர்ச்சி நிதி பல நிகழ்ச்சிகள் மூலம் வசூலிக்கப்படுகிறது. எனவே, அனைத்து மட்டங்களிலும் இவ்வரங்க நிதி தேவை குறித்து கவனித்து வழிகாட்ட வேண்டியுள்ளது.

கட்சியின் வழிகாட்டுதலும் கட்சியை கட்டும் பணியும்:

6.25 கட்சிக்குள் அதிக அளவில் புதிய உறுப்பினர்களைக் கொண்டு வருவதற்கான வாய்ப்புள்ள அரங்கம் என்ற வகையில் கட்சி கட்டும் பணிக்கு இந்த அரங்கத்தில் கூடுதல் முக்கியத்துவம் கொடுத்து கவனம் செலுத்திட வேண்டியுள்ளது. மாநில பிராக்ஷன் முறையாக கூடியுள்ளது. மாவட்ட பிராக்ஷன்களில் சில மாவட்டங்களைத் தவிர இப்பணி குறித்து விரிவாக திட்டமிடப்படுவதில்லை. நடைமுறை வேலைகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. சில ஆண்டுகளுக்கு முன்பு குமரி மாவட்டம் தக்கலையில் நடைபெற்ற பயிற்சி முகாமில் வாலிபர் அரங்கில் கட்சி கட்டும் பணி குறித்து விவாதிக்கப்பட்டு சில ஆலோசனைகள் உருவாக்கப்பட்டன. எனினும் இவை அமலாக்கப்படவில்லை. வாலிபர் சங்க இயக்கங்களில் அதிக அளவில் புதிய வாலிபர்களின் தொடர்பும், பங்கேற்பும் உள்ள நிலையில் கட்சி கட்டும் பணி திட்டமிட்டு தீவிரமாக மேற்கொள்ளப்படவேண்டும். இது நடைபெறாவிட்டால் அரும்பாடுபட்டு திரட்டப்பட்ட புதிய வாலிபர்களை இழக்க நேரிடும். இப்பணியை செய்திட இடைக் கமிட்டிகளுக்கு மாவட்ட பிராக்ஷன்கள் உதவி செய்திட வேண்டும்.

அரசியல் படுத்துதல்:

6.26 வாலிபர் அரங்கில் அரசியல் படுத்தும் பணி கட்சி மேற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான பணிகளில் ஒன்றாகும். எந்தளவு அரசியல் தத்துவார்த்த பயிற்சி அளிக்கின்றோமோ அந்த அளவே முன்னேற்றம் காண முடியும். இடைப்பட்ட காலத்தில் மாநில, மாவட்ட அளவில் வகுப்புகள் தொடர்ந்து நடத்தப்

படவில்லை. தற்போது இடைக்கமிட்டி அளவில் ஊழியர்களுக்கு வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. இடைக்கமிட்டி வாரியாக வகுப்புகள் நடத்துவதும், முன்னுக்கு வரும் அரசியல் பிரச்சனைகளில் பேரவை கூட்டங்கள், கருத்தரங்குகள் நடத்துவது, பிரசுரங்கள் வெளியிடுவது, மாவட்ட மாநில பயிற்சி முகாம் நடத்துவது, சேர்த்த உறுப்பினர்களை உறுதிப்படுத்தவும், மேலும் அமைப்பை விரிவுபடுத்தவும் இப்பணிகளை தொடர்ந்து செய்ய வேண்டியுள்ளது.

6.27 தமிழகத்தில் நடைபெற்ற சமூக சீர்திருத்த இயக்கத்தின் பாரம்பரியம், சுதந்திரப் போராட்டத்தின் பாரம்பரியம், சுதந்திரத்திற்காகவும், சுதந்திரத்திற்குப் பிறகு மக்கள் நலன்களுக்காகவும் போராடி வரும் இடதுசாரி இயக்கத்தின் போராட்ட பாரம்பரியம் போன்ற முற்போக்கு அம்சங்களை உள்ளடக்கிய இளைஞர் அமைப்பாக வாலிபர் சங்கத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

6.28 அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகள் ஆழமாகி வரும் இன்றைய சூழலில் வாலிபர்களை அணிதிரட்ட வேண்டிய பணி முன்னைக் காட்டிலும் முக்கியத்துவம் பெறுகிறது. பல்வேறு பாதிப்புக்குள்ளான வாலிபர்களைத் திரட்ட நாம் முயற்சிக்கின்ற இந்த வேலையில் சாதிய வகுப்பவாத சக்திகளும் முனைப்பு காட்டுகின்றன. கடந்த ஆண்டுகளில் வாலிபர் அரங்கிலிருந்து கட்சி பணிக்கு பல தோழர்கள் வந்துள்ளனர். இந்த அரங்கிற்கு கட்சி கூடுதல் கவனம் செலுத்தி தமிழகத்தில் வலுவான வாலிபர் இயக்கத்தை உருவாக்க வேண்டும்.

7.0 மாதர் அரங்கம்

7.1 தமிழகத்தில், கடந்த மூன்றாண்டுகளில், மத்திய, மாநில அரசுகளின் பொருளாதாரக் கொள்கைகள், ஒட்டுமொத்தமாக மக்களைக் கடுமையாக பாதித்தாலும், பெண்களின் தாழ்ந்த சமூக அந்தஸ்தும், அவர்களுக்கு எதிரான பாரபட்ச நோக்கும், பாதிப்பை அவர்கள் மீது கூடுதலாக சுமத்துகிறது. குறிப்பாக, வறுமை, வேலைவாய்ப்புகள் சுருங்குதல் - திரட்டப்படாத துறையில் ஈடுபடுவது அதிகரித்தல், வன்முறை ஆகியவை முக்கிய பிரச்சனைகளாக உருவெடுத்துள்ளன.

7.2 மூன்றாண்டுகளில், பத்மினி, பிரேமானந்தா உள்ளிட்ட பல வழக்குகளை வெற்றிகரமாக சந்திக்க முடிந்திருக்கிறது. பொதுவாகவே, பெண்கள் மீதான வன்முறை என்றால், அதில் ஜனநாயக மாதர் சங்கம் தலையிடும் என்ற நம்பிக்கையைப் பெரும்பாலான மாவட்டங்களில் உருவாக்க முடிந்துள்ளது.

7.3 குடும்ப வன்முறை சம்பவங்களை எடுப்பதில் மேலும் முன்னேற்றம் தேவைப்படுகிறது; மற்றவற்றிலும், பகுதி மக்களின் பங்கேற்புடன் இணைத்து இயக்கம் நடத்துவதில் கூடுதல் முன்முயற்சி எடுக்கப்பட வேண்டியுள்ளது.

7.4 பெண் சிசுவதை, தமிழகத்தின் பல மாவட்டங்களில், கவலைக்குரிய போக்காகப் பரவி வருகிறது. இதில் கே.பி.ஜானகியம்மாள் ட்ரஸ்ட் மூலம் எடுக்கப்பட்ட மிகச் சிறு அளவிலான முயற்சி தவிர, வேறு எதுவும் இல்லாத நிலை நீடிக்கிறது.

7.5 அரசியல் வன்முறையைப் பொறுத்தமட்டில், லீலாவதி படுகொலை ஒரு அதிர்ச்சியளிக்கும் சம்பவமாக நடந்துள்ளது. இதில் மாதர் சங்கம் நடத்திய அனைத்து போராட்டங்களிலும், பிரச்சாரங்களிலும், தடையை மீறிய ஊர்வலத்திலும், அரசியல் கிரிமினல் மயமாக்கப்படுவது, வலுவாகக் கண்டிக்கப்பட்டது. மற்ற பல மாதர் அமைப்புகளையும், இக்கருத்துக்குக் கொண்டுவர முடிந்தது.

7.6 ஒருபுறம், அரசியல் வன்முறை, பெண்களைப் பொது வாழ்க்கைக்கு வரவிடாமல் சுருக்கும் அம்சமாக இருந்தாலும், மறுபுறம், இதை மீறி உள்ளாட்சி அமைப்புகளில் தேர்வு பெற்று வந்துள்ள பெண்களை ஊக்கப்படுத்தும், பயிற்றுவிக்கும் பொறுப்பும் உள்ளது. அதில், ஒரு சிறு முயற்சியாக, 7 தென்மாவட்டங்களைச் சேர்ந்த நமது பெண் கவுன்சிலர்களுக்கு, வகுப்பு எடுக்கப்பட்டது.

7.7 இத்துடன் தொடர்பான இன்னொரு அம்சமாக, பாராளுமன்றம் வரை 33% இட ஒதுக்கீட்டுப் பிரச்சனையையும் பார்க்க வேண்டியுள்ளது. 10,000 பெண்கள் பங்கேற்ற ஆகஸ்ட் 4 மறியல் போராட்டத்தில் பொது விநியோக முறை, விவசாயத் தொழிலாளர் பாதுகாப்பு மசோதா ஆகியவற்றுக்கு பெண்கள் மத்தியில் கிடைத்த வரவேற்பைப் போல், இப்பிரச்சனைக்குக் கிடைக்கவில்லை. அரசியல் அதிகாரத்தில் நிர்வாகத்தில் பெண்களைப் பங்கேற்க வைக்கும் இப்பிரச்சனையின் முக்கியத்துவத்தைக் கூடுதலாக கொண்டுபோக வேண்டியிருக்கிறது.

7.8 சாதிய வன்முறை சம்பவங்களில், ஆரம்பத்திலேயே தலையிட முடியவில்லை என்றாலும், அக்டோபர் 2ந்தேதி நடைபெற்ற மாதர் சங்க இயக்கம் ஒரு குறிப்பிடத் தகுந்த இயக்கமாகும்.

7.9 தூத்துக்குடி, ஒட்டன்சத்திரத்தில் தலித் பெண்கள் மாநாடுகளும் இக்காலத்தில் நடந்துள்ளன. தலைநகரிலுள்ள மற்ற மாதர் அமைப்புகளுக்கு, ஒரு சரியான பார்வையைக் கொடுப்பதற்காக,

அவர்களையும் இணைத்து நடத்தப்பட்ட தீண்டாமை ஒழிப்புக் கருத்தரங்கும் பயனுள்ளதாக இருந்தது.

7.10 மேலவளவில், பாதிக்கப்பட்ட பெண்களை சந்தித்து ஆறுதல் கூறியதோடு, ரூ.6000/-க்கான அரிசி வழங்கப்பட்டது. அவர்களது கோரிக்கைகள், முதல்வரிடம் அளிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்த தலையீடு தேவைப்படுகிறது.

7.11 வன்முறை அதிகரிப்புக்கு ஒரு காரணமான கலாச்சார சீரழிவை எதிர்த்து அவ்வப்போது நமது தலையீடு உள்ளது. மாற்றுக் கருத்துக்களை, பத்திரிகைகள், தொலைக்காட்சி வாயிலாக எடுத்து வைக்கும் வாய்ப்புகளையும் பயன்படுத்தி வருகிறோம்.

7.12 புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாக நுகர்பொருள் கலாச்சாரம், பெண்கள் மீதான வன்முறையை அதிகரிக்கிறது என்ற அரசியல் அம்சம், பரவலாகக் கொண்டுபோகப்பட வேண்டியுள்ளது.

7.13 அணிதிரட்டப்படாத துறையில் பெண் தொழிலாளர்கள் பிரச்சனைகளை எடுப்பதில், தொழிற்சங்க அரங்குடன் ஒருங்கிணைப்பு தேவைப்படுகிறது.

7.14 கிராமப்புறப் பெண்கள் பிரச்சனைகளை எடுப்பதில் அபிவிருத்தி உண்டு கட்சியின் வழிகாட்டுதலுடன், வி.தொ.ச. உடன் இணைந்து இயக்கங்கள் நடைபெறுகின்றன. பெண்களின் கூலி பற்றிய சிறப்பு மாநாடு, இக்காலகட்டத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சியாகும்.

7.15 வறுமை மற்றும் விலை உயர்வு பிரச்சனைகளில் பல நூதன இயக்கங்கள் நடைபெறுகின்றன. இதையொட்டி, பொதுவிநியோக முறை, சீர்குலைவை எதிர்த்தும், நியாய விலையில் முறையாக உணவுப்பொருட்கள் மக்களுக்குக் கிடைக்கவும், ஜனநாயக மாதர் சங்கம் தொடர்ந்து போராடி வருகிறது.

7.16 ஸ்தாபனத்தைப் பொறுத்த வரை, சென்ற மாநாட்டில் 1.5 லட்சமாக இருந்த உறுப்பினர் எண்ணிக்கை, தற்போது 2.5 லட்சமாக உயர்ந்துள்ளது.

7.17 ஆனால், நாம் நடத்தும் இயக்கங்களில் பெண்களின் பங்கேற்பு, சதவீத அளவில் அதிகரிக்கவில்லை. அனைத்து அரசியல், பொருளாதாரப் பிரச்சனைகளும் அவர்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்தவை என்பதை இன்னும் எளிமையாகக் கொண்டு போக வேண்டியுள்ளது.

7.18 ஏற்பட்டுள்ள செல்வாக்கை, ஸ்தாபனமாக மாற்றுவதில் தொடர்ந்து பலவீனம் நீடிக்கிறது.

7.19 மாவட்டக் குழுக்கள் ஓரளவு சுயமாக இயங்குகின்றன. இடைக் கமிட்டி / கிளைகளை இயங்க வைப்பதில் கூடுதல் கவனம் தேவைப்படுகிறது

7.20 மாதர் அரங்கில் செயல்பட, முழுநேர ஊழியர்களை எடுப்பதில் முன்னேற்றம் தேவை.

7.21 எடுக்கப்பட்ட ஊழியர்களும், குடும்பப் பொறுப்பு – இயக்கப் பொறுப்பு என்ற இருவித வேலைப்பளுவையும் சுமக்க வேண்டிய சிரமத்தைக் கணக்கில் எடுத்து, அவர்கள் வேலைகள் திட்ட மிடப்பட வேண்டும். அவர்களைப் பயிற்றுவித்து வளர்ப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

7.22 மாதர் இயக்கத்தின் வெகுஜனத்தன்மையை உத்தரவாதப்படுத்து கிற முயற்சி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது. பிரச்சனைகள் வரும்போது, மாநில செயற்குழு தலையிட்டு சரி செய்கிறது. இன் னும் இதுகுறித்த சரியான புரிதல், கீழ் மட்டம் வரை, கட்சி சார் பிலும், மாதர் அரங்க சார்பிலும் தேவைப்படுகிறது.

7.23 குறிப்பாக, கட்சி அலுவலகத்திலிருந்து மாதர் சங்கம் செயல் படுவது போன்றவை தவிர்க்கப்பட வேண்டும்.

7.24 மாதர் அரங்க மாநில பிராக்ஷன் முறையாகக் கூடுகிறது. சமீப காலத்தில் கட்சி கட்டும் பணிக்கு அதிக முக்கியத்துவம் அளிக் கப்படுகிறது.

7.25 கட்சியில் பெண்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. கட்சி நிகழ்ச்சிகளில் பெண்கள் பங்கேற்பும் அதிகரித்துள்ளது. மாவட் டக்குழுக்கள் / செயற்குழுக்களில் பெண்கள் கூடுதலாக வந்துள் ளது, வரவேற்கத் தகுந்த அம்சம். கட்சியின் மாநிலக்குழு வழி காட்டுதல்படி, பெண்களுக்குத் தனி கிளைகள் அமைக்கப்பட்ட தில் பொதுவான முன்னேற்றம் உண்டு

7.26 மாவட்ட பிராக்ஷன் உறுப்பினர்கள், கட்சி பொறுப்பாளர்களு டன் இணைந்து, பெண்கள் கிளைகளை கவனிப்பதில், ஏற்றத்தாழ் வாக அபிவிருத்தி உண்டு.

7.27 பேரவை / கமிட்டி கூட்டங்கள் / கிளை செயலாளர் கூட்டங் களை, பெண்களும் கலந்து கொள்ளும்விதத்தில் / பொருத்தமான நேரத்தில் நடத்துவது தேவையாக உள்ளது.

7.28 பெண்களைப் பற்றிய நிலப்பிரபுத்துவப் பார்வை குறித்த அம்சங்கள், கட்சிப் பாடத்திட்டத்தில் இன்னும் இணைக்கப்படாதது, பெரும் குறைபாடே. இதை அமல்படுத்துவது, கட்சி இயக்கங்களில் பெண்கள் பங்கேற்பை முழுமையாக்க உதவும். கட்சிக்குள் நிலவும் ஆணாதிக்கப் போக்கைக் களையவும் உதவும்.

மார்க்சிசம் ஒரு அறிமுகம்

மாதர் சங்கம் - வெகுஜன அமைப்பு

என்பது குறித்த ஒரு நாள் வகுப்பு கட்சி பெண் உறுப்பினர்களுக்கு 12 மாவட்டங்களில் 1996ல் நடத்தப்பட்டது. பல புதிய விபரங்களை தெரிந்துகொள்ள முடிந்தது என்பது பங்கெடுத்த பெண்களின் அனுபவம்.

7.29 மாநில பிராக்ஷனில் பாடத்திட்டம் வகுத்தபடி 1997ம் ஆண்டில் நான்கு பாடத் திட்டத்தில் இரண்டு நாள் வகுப்புகள் நடத்தப்பட்டன. மாநிலத்தில் 6 மையங்களில் நடந்த இந்த வகுப்பில் மாவட்ட பிராக்ஷன்களின் உறுப்பினர்கள், இடைக்கமிட்டி, பெண்கள், முக்கிய ஊழியர்கள் 412 பேர்கள் பங்கு கொண்டனர். பெண்கள் தனிக்கிளைகளை 2 மாதத்திற்கு ஒருமுறை இயங்க வைக்கும் ஏற்பாடு இந்த வகுப்பின் நோக்கமாகும்.

7.30 1997 செப்டம்பர் 13ல் கோவையில் கூடிய மாநில மாதர் அரங்க பிராக்ஷன் கமிட்டி, வகுப்புகள் பற்றி பரிசீலனை செய்தது. அதில் கிடைத்த அனுபவங்கள் அடிப்படையில் வருங்காலத்தில் செயல்பட வேண்டும்.

7.31 எதிர்காலக் கடமைகள்

- உறுப்பினர் சேர்ப்பை அதிகரிப்பது; இடைக்கமிட்டி / கிளைகளை இயங்க வைப்பதில் முன்னேற்றம் காண்பது.

வெகுஜனத்தன்மையை அனைத்து மட்டங்களிலும் மாதர்சங்க செயல்பாடுகளில் உத்தரவாதப்படுத்த முயற்சி எடுப்பது.

பாலின சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு, நுகர்பொருள் கலாச்சார எதிர்ப்பை உள்ளடக்கிய ஒரு மாற்று முற்போக்கு ஜனநாயகக் கலாச்சாரத்தை முன்வைத்து, சமூக சீர்திருத்த இயக்கம், கட்சியின் வழிகாட்டுதலோடு, வர்க்க, வெகுஜன அமைப்புகளுடன் இணைந்து நடத்துவது.

கள்ளச்சாராயப் பிரச்சனைகளை எடுப்பதில் கவனம் செலுத்துவது.

- மக்களை பாதிக்கும் அடிப்படை உணவு பிரச்சனையை முன் வைத்து, பொதுவிநியோக முறையை இணைத்து, வலுவான இயக்கம் நடத்துவது.

8.0 மாணவர் அரங்கம்

தமிழக கல்விச் சூழல்

8.1 14 வயதுக்குற்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் கட்டாய இலவச ஆரம்பக் கல்வி என்பது இன்னும் கனவாகவே உள்ளது. பள்ளிக் கல்வி மற்றும் உயர் கல்வி வாய்ப்பு சற்று அதிகரித்திருந் தாலும் இவற்றில் மத்திய, மாநில அரசுகளின் பங்கு இல்லை என்றே சொல்லலாம். தனியார் கொள்ளையடிப்பதற்கு ஏதுவாக சுயநிதி கல்வி முறை என்ற ஜனநாயக விரோத கொள்கை சட்ட பூர்வமாக்கப்பட்டுள்ளது. ஏழை, நடுத்தர மக்கள் சுயநிதி கல்லூரி களில் கட்டாய நன்கொடை கொடுத்து சேர இயலாதபோது மேல்தட்டு மக்கள் சுயநிதி கல்லூரிகளை தங்களுக்கு கிடைத்த ஒரு வாய்ப்பாக கருதுகிறார்கள். பணம் உள்ள ஒரு பகுதியினர் ஓரளவு வேலைவாய்ப்புள்ள கல்வியைப் பெறுவது, இன்னொரு பகுதியினர் வேலைவாய்ப்பு அரிதாகிப்போய்விட்ட கல்வியை பெறவேண்டும் என்ற இரட்டை நிலை உருவாகியுள்ளது.

மாணவர் அமைப்புகள்

8.2 பொதுவாக எல்லா அரசியல் கட்சிகளுக்கும், மாணவர் அமைப்புகள் உள்ளன. ஆனால் எஸ்.எப்.ஐ. தவிர பிற எந்த அமைப்பும் தொடர்ந்து அமைப்புரீதியாக செயல்படுவதில்லை. மாண்வர் பேரவை தேர்தலின்போது மட்டும் சில அமைப்புகள் தலைகாட்டுகின்றன. ஏ.பி.வி.பி. (பிஜேபி) தமிழகத்தில் சில கல்வி நிலையங்களில் உள்ளது. தன்னை வலுப்படுத்திக் கொள்ள தொடர்ந்து முயற்சிக்கிறது. பல மாவட்டங்களிலும், மாநகரங்களி லும் முழுநேர ஊழியர்களைக் கொண்டு செயல்படுகிறது. தலித் மாணவர்கள் தலித் அமைப்பின் கீழ் செயல்படுவது பெருகி வரு கிறது. பொதுவாக திராவிடக் கட்சிகளுக்கு மாணவர்களிடம் செல்வாக்கு இருந்தபோதிலும் கணிசமான பகுதி மாணவர்கள் எந்தக் கட்சியையும் சாராத நிலையில் உள்ளனர்.

எஸ்.எப்.ஐ.ன் செயல்பாடுகள்

8.3 கல்விக் கட்டண உயர்வு, கல்வி உதவித்தொகை மற்றும் அவ்வப்போது எழும் பிரச்சனைகளுக்காகவும், கல்வி வியா பாரத்தை எதிர்த்தும் போராடுவதோடு, அரசியலற்ற மாணவர் திரள் மத்தியில் நமது ஊழியர்கள் செயல்படுவதற்கு அரசியல் பயிற்சி அளிப்பதற்கும் தொடர்ந்து முயற்சித்து வருகிறோம்.

8.4 ஒவ்வொரு கல்வியாண்டின் துவக்கத்தில் மாநில பயிற்சி முகாம் தொடர்ந்து நடத்தப்படுகிறது. இவ்வாண்டு திருவள்ளூர் மாவட்டம் சோழவரத்தில் நடந்த ஒன்பது நாள் அரசியல் வகுப்பு நமது ஊழியர்களை நம்பிக்கையோடு செயல்படச் செய்திட உதவியது.

8.5 தமிழக கல்விப் பிரச்சனைகளை முன்வைத்தும், பொதுத் தேர்தலின்போதும் கொள்கை ரீதியில் தேர்தலைச் சந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி குற்றப்பத்திரிகை என்ற தலைப்பிலும், உலக அழகிப் போட்டியின்போதும், தென் மாவட்டங்களில் ஏற்பட்ட கலவரங்களையொட்டியும் நான்கு பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. இவைகள் மாணவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்றன.

8.6 மாநிலத்தில் இரு முனைகளில் இருந்து துவக்கப்பட்ட "கல்விப் பாதுகாப்பு பிரச்சாரப் பயணம்" அதனைத் தொடர்ந்து சென்னையில் நடைபெற்ற பேரணி, மாணவர் மறியல் ஆகியன கல்விப் பிரச்சனையை மாணவர்கள், மக்கள் மத்தியில் எடுத்துச்செல்ல உதவியது.

8.7 சுயநிதிக் கல்வி நிலையங்கள் தமிழகத்தில் பெருகுவதைத் தடுக்க இயலவில்லை. கேரளா போல் இங்கே தடுத்து நிறுத்த முடியவில்லை என்பது உண்மைதான். ஆனால் அங்கு போராட்டம் பெரும் இயக்கமாகி பிரதான கட்சியின் போராட்டமாக மாறி விடுகிறது. ஓரளவுக்கேனும் சுயநிதிக் கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கைக்கு கல்வித் தகுதியும், இட ஒதுக்கீடும் பார்க்கப் படுவதற்கு தமிழகத்தில் நடைபெற்ற மாணவர் இயக்கமும் முக்கிய காரணமாகும். நமது மாணவர் சங்கம் நடத்திய இயக்கம் வீண் போகவில்லை. நடப்பு ஆண்டில் சுயநிதிக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை ஓரளவு ஒழுங்குபடுத்தப்பட்டதற்கு நமது மாணவர் சங்கம் கடந்த காலங்களில் நடத்திய போராட்டமும் நிர்பந்தமாக அமைந்தது. சுயநிதிக் கல்லூரிகள் திறப்பதை எதிர்க்கின்ற அதே நேரத்தில் திறக்கப்பட்ட கல்லூரிகளை ஒழுங்குபடுத்தும் போராட்டத்தையும் நடத்த வேண்டும். இப்பிரச்சனையை மாணவர்கள் பிரச்சனை என்று மட்டும் பார்க்காமல் சமூகப் பிரச்சனையாகப் பார்க்க வேண்டும்.

8.8 கல்விக் கட்டணங்கள், தேர்வுக் கட்டணங்கள் உயர்த்தப்படுவதற்கு எதிராக மாணவர் சங்கம் போராடி வருகிறது. நெல்லை மனோன்மணியம் பல்கலைக் கழகத்தில் தேர்வுக் கட்டணம் உயர்த்தப்பட்டபோது இதை எதிர்த்துப் போராடி ஓரளவு வெற்றியும் பெற்றது.

மாணவர்கள் மத்தியில் கட்சிப் பணி

8.9 1988லிருந்து கடந்த 10 ஆண்டுகாலமாக நமது மாணவர் சங்கம் அறைகூவல் விட்டால் மாநிலம் முழுவதும் மாணவர்கள் போராட்டத்தில் கலந்துகொள்ளும் நிலைமை தமிழகத்தில் உருவாகியுள்ளது. கல்விப் பிரச்சனைகளில் மாணவர் சங்கம் தொடர்ந்து நடத்திய ஏராளமான போராட்டங்களை உதாரண மாகச் சொல்லலாம். இந்திய மாணவர் சங்கம் என்ற நமது அமைப்பு மாணவர்கள் மத்தியில் அறிமுகமாகியுள்ளது. செல் வாக்கும் அதிகரித்துள்ளது. இருப்பினும், மாணவர் சங்க உறுப்பி னர் சேர்ப்பிலும், கட்சிக்கு மாணவர்களைக் கொண்டுவருவதிலும் முன்னேற்றம் இல்லை. தேக்கம் நீடிக்கிறது.

8.10 மாணவர் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்த மாணவர்களை கட்சியில் சேர்த்து கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளைகளை உருவாக்காததால் ஒரு ஆண்டில் மாணவர் சங்கத்தில் சேரும் மாணவர்கள் அடுத்த ஆண்டில் விடுபட்டு விடுகின்றனர். தொடர்ச்சியாக வேலை செய்ய அரசியல் உணர்வுள்ள கட்சி உறுப்பினர்கள் இல்லை. இதனால் மாணவர் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையிலும் பல மாவட்டங்களில் ஸ்திரமற்ற தன்மையும் தொடர்ந்து நீடிக்கிறது.

	1992	1995	1996
கோவை	15,001	2,170	1,440
மதுரை	12,893	2,107	4,266
சேலம்	10,833	2,833	5,800
சென்னை	4,500	3,351	3,407
திருச்சி	5,100	2,200	2,250

8.11 மேற்கண்ட மாவட்டங்களில் மாணவர்கள் மத்தியில் கட்சிப் பணி திட்டமிட்டு நடக்காததால் மாணவர் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கை உயர்வதும் வீழ்வதுமாக உள்ளது. கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளை அமைத்து செயல்படுகின்ற தஞ்சை, விருதுநகர், கடலூர், நெல்லை மாவட்டங்களில் ஓரளவிற்கு ஸ்திரத்தன்மையுள்ளது.

	1992	1995	1996
தஞ்சாவூர்	8,600	10,297	10,551
விருதுநகர்	6,040	5,578	4,821
கடலூர்	5,608	4,724	4,125
நெல்லை	3,500	6,044	6,150

முக்கிய கல்வி மையங்களில் பலகீனமான நிலைமை

8.12 தமிழகத்தில் அதிகமான மாணவர்கள் உள்ள சென்னை, கோவை, மதுரை, திருச்சி, சேலம் ஆகிய மாவட்டங்களில் நமது மாணவர் சங்கம் பலகீனமான நிலையில் உள்ளது. நமது கட்சி ஸ்தாபனம் பலமாக உள்ள சென்னை, கோவை, மதுரை போன்ற மாவட்டங்களில் மாணவர் சங்கம் பலகீனமாகவே உள்ளது. இந்த மாவட்டங்களில் மாணவர் சங்கத்தைப் பலப்படுத்தி கணிசமான மாணவர்களை கட்சிக்கு கொண்டு வருவதன் மூலமே தமிழகத்தில் மாணவர் இயக்கம் பலமடைய முடியும்.

கட்சி அமைப்பு

8.13 மாநிலத்தில் ஏழு மாவட்டங்களில் மாவட்ட பிராக்ஷன்களும், ஒரு ஆலோசனைக் குழுவும் செயல்பட்டு வருகின்றன. மாவட்டத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் 12 மாவட்டங்களில் முழு நேர ஊழியர்கள் உள்ளனர். இம்மாவட்டங்களில் ஓரளவிற்கு மாணவர் சங்க வேலையும் மாணவர்கள் மத்தியில் கட்சி வேலையும் நடைபெறுகின்றன. மாவட்டத்திற்கு ஒருவர் என்ற அடிப்படையில் எல்லா மாவட்டங்களிலும் முழுநேர ஊழியர்களை ஏற்பாடு செய்வது இவ்வியக்கத்தில் உடனடித் தேவையாக உள்ளது.

8.14 மாநகரங்கள், முக்கிய கல்வி மையங்கள், பல்கலைக் கழகங்கள் உள்ள பகுதிகளில் எல்லாம், சில முழுநேர ஊழியர்களை பணியில் ஈடுபடுத்த வேண்டும். இப்பகுதிகளில் கட்சி சிறப்பு, கவனம் செலுத்த வேண்டும். ஆந்திராவில் ஐதராபாத் நகரத்தில் 12ம், கர்நாடகத்தில் பெங்களூர் நகரத்தில் 7ம் என மாணவர் சங்கத்தில் முழுநேர ஊழியர்கள் பணியாற்றி வருகின்றனர். இது இந்த மாநிலங்களில் மாணவர் சங்க ஸ்தாபனத்தில் பெரும் வீச்சை ஏற்படுத்தி உள்ளது. தமிழகத்திலும், சென்னை, கோவை, மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட முழுநேர ஊழியர்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

8.15 மாணவர் அரங்கத்தில் முழுநேர ஊழியர்களாக பணியாற்ற முன்வரும் தோழர்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. வாய்ப்புள்ள மாவட்டங்களில் மாவட்ட பிராக்ஷன்கள் அமைத்து நெருக்கமாக இருந்து மாவட்ட செயற்குழு வழிகாட்ட வேண்டியுள்ளது. இவ்வரங்கத் தோழர்கள் புதியவர்கள், அவர்களிடம் தயக்கம் இருக்கும். இவர்களை கட்சி மையம்தான் அழைத்து ஆலோசனைகளை வழங்கிட வேண்டும்.

8.16 சில மாவட்டங்களில் இவ்வரங்கத்திற்கு பண உதவி செய்தால் எல்லாம் முடிந்துவிட்டது என்ற நிலை உள்ளது. இதனால் அப் படிப்பட்ட மாவட்டங்களில் முன்னேற்றம் காண இயலவில்லை. கட்சியின் மாவட்ட செயற்குழு மாவட்டக் குழுக்களில் விவா தித்து இவ்வரங்கப் பணியில் முக்கியத்துவம் பற்றி கட்சி கமிட் டிகளுக்கு வலியுறுத்தப்படவில்லை.

கட்சிப்பணிகள்

8.17 மாணவர் சங்கத்தில் முன்னணியில் உள்ள மாணவர்களை கட்சி யில் சேர்த்து கல்லூரி, பள்ளிகள் அளவில் கட்சிக் கிளைகள் அமைத்து செயல்படும் சில மாவட்டங்களில் முன்னேற்றம் காண முடிந்துள்ளது. மாணவர் சங்க முன்னணி ஊழியர்களுக்கு மாவட்ட அளவில் ஆண்டுதோறும் பயிற்சி முகாம் நடத்தி கட்சி கிளைகள் உருவாக்கி அக்கிளைகளை கட்சி மாவட்ட செயற்குழுவே மாணவர் சங்க மாவட்ட பிராக்ஷன் மூலம் இயக்க வேண்டும். ஆண்டுதோறும் ஒரு பகுதி மாணவர்கள் வெளியேறுவதால் புதிய தோழர்களை கிளைக்குள் கொண்டுவந்து தொடர்ச்சியான செயல் பாட்டை உத்தரவாதம் செய்ய வேண்டும். சில மாவட்டங்களில் கல்வி நிலைய அளவில் கட்சிக் கிளைகள் அமைக்கப்படவில்லை. 50ல் இருந்து 100 மாணவர்கள் சில மாவட்டங்களில் பிரதேச கிளைகளில் கட்சி உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றனர். ஆனால் அவர்கள் பயிலும் கல்லூரிகளில் மாணவர் சங்க கட் சிக் கிளைகளில் இல்லை.

8.18 குமரி மாவட்டத்தில் பெரும்பாலான கல்வி நிலையங்களில் மாணவர் சங்கத்திற்கும் கட்சிக்கும் செல்வாக்குள்ளது. சமீபகாலத் தில் மாணவர் சங்க உறுப்பினர்கள் எண்ணிக்கையும் உயர்ந்துள் ளது. பல கல்வி நிலையங்களில் கட்சிக் கிளைகள் அமைக்கும் வாய்ப்புள்ளது. ஆனால் கட்சிக் கிளைகள் இன்னும் அமைக்கப் படவில்லை.

8.19 இதனால் அப்படிப்பட்ட கல்லூரிகளில் மாணவர் சங்க மற்றும் கட்சிப் பணி பற்றி கட்சிக்கிளைகள் விவாதிக்க முடியாத நிலை உள்ளது. பிரதேசங்களில் கட்சிக் கிளைகளில் உள்ள மாணவர்கள் கல்லூரி அளவில் சேர்த்து அவர்களை செயல்படுத்த வைக்க வேண்டும்.

ஊழியர் பிரச்சனை

8.20 மாற்று ஏற்பாட்டை உத்தரவாதப்படுத்தாமல் மாணவர் சங்கத் தில் பணியாற்றும் ஊழியர்களை வேறு அரங்கத்திற்கு மாற்று வதால் மாணவர் அரங்க வேலையில் தொய்வு ஏற்படுகிறது. இவ்

வரங்கத்தில் வேலை செய்யும் தோழர்களை வேறு வேலைகளுக்குப் பயன்படுத்துவதாலும் சில மாவட்டங்களில் இவ்வரங்க வேலையில் தொய்வு ஏற்படுகிறது. மாணவர் அரங்க ஊழியர்களின் வேலையில் அந்த அரங்கத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

கல்வி பிரச்சனையில் இயக்கம்

8.21 கல்வி வியாபாரமாக்கப்படுவது இன்று முக்கியப் பிரச்சனையாக எழுந்துள்ளது. இது ஒரு சமூக பிரச்சனையாக உருவாகியுள்ளது. இப்பிரச்சனை மீது மாணவர்களைத் திரட்டுவதில் மாணவர் சங்கம் முக்கிய பங்காற்ற வேண்டும். அதேநேரத்தில் கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளும் கல்விப் பிரச்சனையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

8.22 கல்விப் பிரச்சனைகளுக்காக மாணவர்களைத் திரட்டி இயக்கம் நடத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டிருப்பினும் மாணவர் சங்க அமைப்பை உறுதிப்படுத்துவதிலும், விரிவுபடுத்துவதிலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

9.0 கலை - இலக்கிய அரங்கம்

9.1 கலை - இலக்கியம் கோடிக்கணக்கான மக்களை ஈர்க்கும் சக்தி படைத்தது. அதனாலேயே அதன்மூலம் ஒரு கருத்தைச் சொல்லும்போது அது பரந்துபட்ட மக்களைச் சென்றடைகிறது. சில தனித்தன்மைகளோடு துடிப்பாய்ச் செயல்படும் இந்த வாகனத்தை வென்று அதன்மீது பயணித்திட ஒவ்வொரு சமூக - அரசியல் இயக்கமும் முயன்றே வந்திருக்கின்றன. சமூக சீர்திருத்த இயக்கம் ஆனாலும் ச்ரி, சுதந்திரப் போராட்ட இயக்கம் ஆனாலும் சரி இதனை வலுவாகப் பயன்படுத்தியிருக்கின்றன. திராவிட இயக்கம் வளர்ந்ததற்கு இதுவும் ஒரு காரணம் என்பது தெரிந்ததே. இந்த நிலையில், உழைப்பாளி மக்களின் அரசியல் அமைப்பாம் மார்க்சிஸ்ட் கட்சி இதனைத் தனது உன்னத நோக்கத்திற்காக மேலும் வலிமையோடு பயன்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

9.2 கலை - இலக்கியத் துறையில் ஆற்றல் உடைய, ஆர்வமிக்க கட்சி உறுப்பினர்கள் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தில் இணைந்து பணியாற்றி வருகின்றனர். கலை - இலக்கியம் என்பது வாழ்விலிருந்து உதித்தது. வாழ்வைக் கண்டு சொல்வது; அதனை மென்மேலும் முன்னுக்கு கொண்டுசெல்ல உதவுவது என்பதைத் தனது கோட்பாடாகக் கொண்டிருக்கிற வெகுஜன அமைப்பு

தமுஎச சாதி - மத - இனவெறியை எதிர்ப்பது, பெண்ணடிமைத் தனத்தை எதிர்ப்பது, மூடநம்பிக்கைகளை எதிர்ப்பது போன்றவை அதன் லட்சியங்கள். புதிய சமுதாயம் படைக்க முயலும் உழைப் பாளி வர்க்கத்திற்கு உறுதுணையாக இருப்பது அதன் அச்சாணி. இதற்கேற்ற கலை - இலக்கியங்களைப் படைப்பதும், இதற்கு எதி ரான கலை - இலக்கியங்களை அடையாளம் காட்டுவதும், கலை - இலக்கியவாதிகளின் நியாயமான உரிமைகளுக்குக் குரல் கொடுப்பதும் அதன் முக்கியமான பணிகளாக உள்ளன. இத் தோடு எழுத்தாளர்கள் என்பதால் தாய்மொழிப் பற்றும் இயல்பா கவே வருகிறது. தமிழ்மொழிக்கு உரிய இடம் கேட்டுக் குரல் கொடுக்கிறது.

தமுஎசவின் கடந்த மூன்று ஆண்டு காலப் பணியைக் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம்:

படைப்புத் தொழில் :

9.3 சிறுகதைத் துறையில் தமுஎசவினர் தொடர்ந்து அழுத்தமான தடம்பதித்து வருகின்றனர். ஆனந்த விகடன், கல்கி, இந்தியா டுடே, புதிய பார்வை போன்ற பிரபல மான ஏடுகள் கூட தமுஎசவின ரின் சிறுகதைகளைக் கேட்டு வாங்கிப்போடுகிற நிலை ஏற்பட் டுள்ளது. தொடர்கதை மற்றும் நாவலில் சிலரே ஈடுபட்டிருந்தா லும் சில தரமான படைப்புகள் வெளிவந்து உள்ளன. நல்ல சில கவிதைத் தொகுப்புகளும் இந்தக் காலத்திற்குச் சொந்தமானவை. தமுஎசவினரின் படைப்புகள் சில வற்றிற்கு வெளிவட்டாரத்தவ ரின் இலக்கியப் பரிசுகளும் கிடைத்துள்ளன. இலக்கிய விமர்சனத் துறையிலும் சில புதிய வரவுகள் உண்டு. "செம்மலர்" மற்றும் 'வண்ணக்கதிர்' அநேகமாக தமுஎசவினரின் சிறுகதைகளை மட் டும் கொண்டதாக வெளிவருகிறது. தமுஎசவினரின் சிறுகதை களைக் கொண்ட "தொடரும் வெளிச்சம்" எனும் மூன்றாவது தொகுப்பு வெளிவந்துள்ளது.

இலக்கியப் பரிசுத் திட்டங்கள் :

9.4 கவிஞர்களை ஊக்குவிக்க "செல்வன் கார்க்கி நினைவுப் பரிசு" திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் ஒருசிறந்த கவிதை நூலுக்கு ஆயிரம் ரூபாய் பரிசு தரப்படுகிறது. நாவலாசிரியர்களை உற்சாக மூட்ட 'பெருமாயி - குப்பண்ணன் பரிசுத்" திட்டத்தின் கீழ் ஆண்டு தோறும் ஒரு சிறந்த நாவலுக்கு ரூ.5000/- பரிசு தரப்படுகிறது. தற் பொழுது "குன்றக்குடி அடிகளார் நினைவு பரிசு "திட்டம்" ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. அதன்படி ஆண்டுதோறும் தமிழ் வளர்ச் சிக்கு உதவிடும் ஒரு சிறந்த நூலுக்கு ரூ.5000 பரிசு வழங்கப்படும்.

கலை - இலக்கிய முகாம்கள் :

9.5 வேலூர் அருகே வள்ளிமலையில் கலைப் பயிலரங்கம், புதுச்சேரியில் சிறுகதைப் பயிலரங்கம், திருப்பரங்குன்றத்தில் கவிதைப் பயிலரங்கம் என்று மாநில அளவிலும், பிராந்திய அளவிலும் இலக்கிய முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளன. திருச்சி குணசீலத்தில் 1996 நவம்பரில் நடத்தப்பட்ட மூன்று நாள் இலக்கிய முகாம் குறிப்பிட்டுச்சொல்லப்பட வேண்டியது. மாநிலம் முழுவதும் இருந்து 185 பேர் கலந்து கொண்ட இந்த முகாமில் ஒவ்வொரு வகுப்பிற்கும் குழு விவாதம் நடத்தப்பட்டு அதற்கு தொகுப்புரை வழங்கியது என்பது பெரிதும் பயனுள்ளதாக இருந்தது.

கலை இரவுகள் :

9.6 கலை இரவுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 1996-97 ஓராண்டில் மட்டும் கிட்டத்தட்ட நாற்பது கலை இரவுகள் நடைபெற்றுள்ளன. இவற்றிற்கு ஆயிரம் முதல் ஏழாயிரம் பேர் வரை வருகிறார்கள். இத்தனை ஆயிரம் பேரைத் திரட்ட முடிவது நிச்சயம் ஒரு சாதனையே. இங்கே மதவெறி எதிர்ப்பு - சாதிவெறி எதிர்ப்பு, மூடநம்பிக்கை எதிர்ப்பு, மாதர் விடுதலை, தமிழ் வளர்ச்சி போன்ற முற்போக்கு செய்திகளைக் கொடுக்க முடிகிறது. பொதுவான அரசியலையும் அலச முடிகிறது. ஆனால் மார்க்சிஸ்ட் கட்சி அரசியலை நேரடியாகக் கொண்டுபோக இது பொருத்தமான மேடை அல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. இதனைத்தொடர்ந்து வெற்றிகரமாக நடத்திட புதிய குறுநாடகங்களையும், இசைப்பாடல்களையும் உருவாக்க வேண்டியுள்ளது.

திரைப்படக் கலை:

97 1995 டிசம்பரில் திண்டுக்கல்லில் பாரதிராஜா திரைப்படங்கள் பற்றிய மூன்று நாள் ஆய்வரங்கம் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. தமிழ்த்திரைப்பட உலகத்திற்குள் தமுஎச பிரபலமாக இது பெரிதும் உதவியது. ஆண்டுதோறும் சிறந்த மூன்று தமிழ்த் திரைப்படங்கள் தேர்வு செய்யப்பட்டு அதற்கு தமுஎச விருது வழங்கப்பட்டு வருகிறது. மோசமான படங்களை விமர்சனம் செய்வதோடு, இப்படிச் சிறந்த படங்களுக்கு விருது தருவது என்பது தமிழ்த்திரைப்பட உலகில் நமது ஆக்கபூர்வமான தலையீடாக அமைகிறது.

தமிழ் வளர்ச்சி இயக்கம் :

9.8 1997 பொங்கல் வாரத்தை தமுஎச தமிழ் வளர்ச்சி வாரமாகக் கொண்டாடியது. மாநிலத்தின் பல பகுதிகளிலும் கருத்தரங்குகள்

நடத்தப்பட்டன. மா்நில அளவிலான "அறிவியல் தமிழ் விவாத அரங்கம்" திருச்சியில் நடத்தப்பட்டது. தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளையும் மத்தியில் ஆட்சி மொழி களாக்கக்கோரியும், தமிழகத்தில் தமிழுக்கு உரிய இடம் கேட்டும் சென்னையில் 1997 மார்ச்சில் சிறப்பானதொரு "கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்" நடத்தப்பட்டது. மாநிலம் முழுவதிலிருந்து நானூறுக்கும் மேற்பட்டவர்கள் வந்து கலந்து கொண்டனர். இதன் தாக்கத்தால் சென்னையில் உள்ள முப்பதுக்கும் மேற்பட்ட சிறிய தமிழ் வளர்ச்சி அமைப்புகள் இணைந்து தமிழ் மேம்பாட்டு ஒருங்கிணைப்பு குழு ஒன்றினை உருவாக்கியுள்ளன. இதனை உருவாக்குவதில் தமுஎச பெரும் முன்முயற்சி எடுத்தது. இந்த அமைப்பின் சார்பில் தமிழக அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன. கட்சி நடத்திய தமிழ் வளர்ச்சி இயக்கத்திலும் தமுஎச பேச்சாளர்கள் பங்கேற்றுள்ளனர். திருமங்கலத்தில் உள்ள தியாகி விஸ்வநாததாசின் இல்லத்தை நினைவுச் சின்னமாக்கக் கோரி விடாது போராடி அதில் வெற்றியும் பெற்றது குறிப்பிடத்தக்கது.

மக்கள் ஒற்றுமை பேண :

99 தென்மாவட்டங்கள் சாதிக் கலவரத்தால் வெந்தபோது மக்களின் மனசாட்சியைத் தட்டியெழுப்ப தமுஎச முனைந்தது. முதல்முறை இது வெடித்தபோது சாத்தூர், விருதுநகர் போன்ற நகரங்களில் உண்ணாவிரதம் நடத்தப்பட்டது. இரண்டாம் முறை வெடித்த போது சாத்தூர், விருதுநகர், பாளையங்கோட்டை, கோவில்பட்டி, தூத்துக்குடி, மதுரை, புதூர், நாகமலை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கலை இரவுகளில் இந்தப் பிரச்சனை நமது நோக்கில் வலுவாக முன்வைக்கப்பட்டது. கலை இரவு என்கிற வடிவத்தின் மூலம் பெருந்திரளான மக்களிடம் எரியும் பிரச்சனைகளையும் தைரியமாக முன்வைக்க முடியும் என்பது உணரப்பட்டது. அடித்தட்டு மக்களின் சமூகப் பிரச்சனைகளை அரசியல் கட்சிகளே கையில் எடுக்க வேண்டும் என்றும், அதேநேரத்தில் சாதிச் சங்கங்களில் இருப்போரைத் தங்கள் கட்சிகளின் நிர்வாகப் பொறுப்புகளில் கொண்டு வரக்கூடாது என்றும் வேண்டுகோள் ஒன்று தமுஎச சார்பில் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் பிரபல கலை - இலக்கியவாதிகளுக்கு அனுப்பப்பட்டது. இதனை வரவேற்று த.மா.கா. தலைவர் ஜி.கே.மூப்பனார், பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ், குன்றக்குடி அடிகளார், வல்லிக்கண்ணன், தி.க.சி. ஆகியோரிடமிருந்து கடிதங்கள் வந்தன. மதுரையில் தீண்டாமை ஒழிப்பு மாநாட்டினை தமிழக அரசு நடத்தியபோது மனிதச் சங்கிலி இயக்கத்தில் தமுஎச பங்கேற்றது. துண்டுபிரசுரம்

ஒன்றும் மாநாட்டிற்கு வந்தோரிடையே விநியோகிக்கப்பட்டது. திருப்பரங்குன்றத்தில் தீபம் ஏற்றும் பிரச்சனையில் இந்து வகுப்பு வாதிகளை எதிர்த்து தமுஎச உறுதியாக போராடியது.

9.10 இந்தப் பணிகளுக்கு மத்தியில் 1996 மார்ச்சில் தமுஎசவின் 7வது மாநாடு மதுரை புறநகர் திருப்பரங்குன்றத்தில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது. ஆங்காங்கே தமுஎச படைப்பாளிகளின் நூல் அறிமுக விழாக்களும் நடத்தப்படுகின்றன. எனினும், இது போதுமானதல்ல. நூல் விற்பனையிலும் இன்னும் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது. "செம்மலர்" விற்பனையிலும் தமுஎச கிளைகள் மேலும் அக்கறை காட்ட வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

9.11 தமுஎச உறுப்பினர் எண்ணிக்கையானது மாநில மாநாட்டு ஆண்டின்போது கூடுவதும் பிறகு குறைவதுமாக உள்ளது. படைப்பாளிகள் - ஆர்வலர்கள் என்று சுமார் நாலாயிரம் பேர் இதில் அங்கம் வகிப்பதாகக் கூறலாம். மாவட்டம்தோறும் நாடகக் குழுக்கள், இசைக்குழுக்கள் உள்ளன. எனினும், இவற்றில் தொடர்ந்து செயல்படுபவை என்பவை சிலவாகத்தான் உள்ளன. இவற்றை இயக்குவிக்க முடியுமானால் முற்போக்கு கலாச்சாரத்தை முன்னெடுத்துச் செல்ல நல்ல கலைப்படைப்புகள் கிட்டும்.

9.12 தமுஎசவிற்கு வழிகாட்டுதல் தர கட்சியின் மாநில உபகுழுவும், மாநில பிராக்ஷனும் உள்ளன. அவ்வப்பொழுது, அவை கூடி முக்கிய பிரச்சனைகளுக்கும், எதிர்கால பணிகளுக்கும் ஆலோசனை வழங்குகின்றன. இன்னும் இத்துறையில் கட்சி கவனம் செலுத்தினால் முற்போக்கு சிந்தனைகளை மக்கள் மத்தியில் விரிவாகப் பரப்பிட முடியும். விரிந்த முற்போக்குத் தளமே மார்க்சிஸ்டுகளை உருவாக்குவதற்கான அஸ்திவாரம் என்பது நாம் அறிந்ததே.

10.0 வழக்கறிஞர்கள் அரங்கம்

10.1 வழக்கறிஞர்கள் அரங்கத்தில் அகில இந்திய வழக்கறிஞர் சங்கம் என்ற அகில இந்திய அமைப்பின் அங்கமாக தமிழ்நாட்டில் இந்த சங்கத்தின் மாநிலக்குழுவும் சென்னை, மதுரை, சேலம், குமரி ஆகிய மாவட்டங்களில் மாவட்டக் குழுக்களும் செயல்பட்டு வருகின்றன. மற்ற பல மாவட்டங்களில் மாவட்டக் குழுக்கள் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

10.2 1995 ஆகஸ்ட் மாதத்தில் இவ்வமைப்பின் அகில இந்திய 5வது மாநாடு சென்னையில் நடைபெற்றது. கட்சி உதவியுடன் இவ்

வரங்கத் தோழர்கள் அகில இந்திய மாநாட்டை வெற்றிகரமாக நடத்தினார்கள். ஜனநாயக உரிமைகளைப் பாதுகாக்கவும், மதச் சார்பின்மையை பேணிக் காத்திடவும், காவல்துறையின் அத்து மீறல்களை எதிர்த்தும், ஜனநாயக பிரச்சனைகளுக்காக சட்டத் துறையைச் சார்ந்த உறுப்பினர்களை அணிதிரட்டுவதற்காகவும் இந்த அரங்கத்தில் நமது கட்சி வழக்கறிஞர்கள் பணியாற்றி வருகின்றனர்.

10.3 இச்சங்கத்தின் சார்பாக, முன்னாள் முதலமைச்சர் தன்னுடைய வளர்ப்பு மகன் திருமணத்திற்கு அரசு இயந்திரத்தை தனக்காக பயன்படுத்தியபொழுது உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப் பட்டது. குடிநீர் மற்றும் மின்சார விநியோகம் மக்களுக்கு தடைப்படாமல் இருப்பதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது.

10.4 வாச்சாத்தி, ஆதிவாசி மக்களுக்காகவும், சிதம்பரம் பத்மினிக் காகவும் வழக்கு தொடுக்க இவ்வரங்கத் தோழர்கள் உதவி செய் தார்கள். மேலும் சின்னாம்பதியில் வனத்துறை அதிகாரிகள் அத்து மீறல், ராமேஸ்வரத்தில் மீனவப் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமையை போன்று காவல்துறையினர் கொடுமை இழைத்த பல பிரச்சனைகளிலும், மேலும் மதுரை தோழர் லீலாவதி படு கொலை வழக்கிலும் நமது கட்சி வழக்கறிஞர்கள் உதவிசெய்து வருகிறார்கள்.

10.5 மனித உரிமைகளைப் பாதுகாக்கும் போராட்டத்தில் வழக்கறி ஞர்களை பெருமளவில் ஈடுபடுத்த இவ்வரங்கத்தின் மூலம் கூடுத லான முயற்சிகளை வரும் காலத்தில் எடுக்க வேண்டும். மதுரை யில் உயர்நீதிமன்ற கிளை திறக்க வேண்டும் என நமது தோழர்கள் முன்முயற்சியில் இயக்கங்களும், மதுரையில் மாநாடும் நடைபெற்றது.

10.6 மாநிலத்தில் உள்ள 25,000 வழக்கறிஞர்களில் 2000 வழக்கறி ஞர்கள் நமது சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். மாநில ஃபிராக்ஷன் மூலம் இவ்வரங்கத்திற்கு கட்சி வழிகாட்டி வருகிறது.

10.7 100க்கும் மேற்பட்ட கட்சி உறுப்பினர்கள் இவ்வரங்கத்தில் உள் ளனர். பல மாவட்டங்களில் கட்சிக் கிளைகள் உள்ளன. இன்னும் சில மாவட்டங்களில் கிளை அமைக்கும் வாய்ப்பிருக்கிறது.

10.8 கட்சிக்கு அப்பாற்பட்ட ஜனநாயக உணர்வு கொண்ட வழக் கறிஞர்களையும் திரட்டி வழக்கறிஞர்கள் இயக்கத்தை மேலும் முன்னெடுத்துச் செல்ல கட்சியின் மாவட்டக்குழுக்கள் உதவிட வேண்டியுள்ளது. இவ்வரங்கம் பலப்படுவதன் மூலம் கட்சி மற்றும்

வெகுஜன அமைப்புகளுக்கு பல வகையில் உதவிட வாய்ப் புள்ளது.

கட்சி ஸ்தாபனம்

11.1 இன்றைய அரசியல் பொருளாதார, சமூக சூழலில் கட்சியின் முடிவுகளையும், கடமைகளையும் அமலாக்கிட வலுவான கட்சி ஸ்தாபனம் அத்தியாவசியமான தேவையாக உள்ளது. கடந்த மூன்றாண்டுகளில் நாம் மேற்கொண்ட சரியான அரசியல் நிலைபாடுகளாலும், நாம் நடத்திய இயக்கங்களாலும் தமிழகத்தில் நமது கட்சியின் மரியாதையும், செல்வாக்கும் உயர்ந்துள்ளது. அதேசமயம், கட்சியின் வெகுஜன செல்வாக்கு உயர்ந்த அளவுக்கு கட்சி ஸ்தாபன வளர்ச்சி அமையவில்லை. இம்மாநாட்டில் நாம் அதற்கான காரணங்களை பரிசிலித்து, இப்போதுள்ள நிலையை மாற்றி, வெகுஜன புரட்சிக்கட்சியைக் கட்டும் பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

11.2 கடலூரில் நடைபெற்ற கடந்த மாநில மாநாடு கீழ்க்கண்ட எதிர்கால கடமைகளை தீர்மானித்தது:

- இடைக்கமிட்டிகளையும், கிளைகளையும் செயல்படும் அமைப்புகளாக உருவாக்குவது;
- வர்க்க - வெகுஜன அமைப்புகளின் மாவட்ட மையங்களைப் பலப்படுத்துவது
- மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் கட்சி கல்விக்கான உத்தரவாதமான ஏற்பாடுகளைச் செய்வது;
- நமது கட்சியின் ஏடுகளான தீக்கதிர், செம்மலர், மார்க்சிஸ்ட், பீப்பிள்ஸ் டெமாக்ரசி ஆகியவற்றின் விற்பனையை அதிகப்படுத்துவது;
- பெண்கள் மீது தொடுக்கப்படும் தாக்குதல்களை எதிர்த்து கட்சி முன்கை எடுத்து போராடுவது;
- தாழ்த்தப்பட்டோர், சிறுபான்மையோர், பெண்கள் ஆகியோரை கட்சிக்குள் அதிக அளவில் கொண்டுவருவது;
- கட்சிக் கல்விக்காக நிரந்தரப் பள்ளி ஏற்பாடு செய்வது;
- முதலாளித்துவ தத்துவத்திற்கு எதிராகவும், திராவிட கட்சிகளின் இனவாத திருகலுக்கு எதிராகவும், நமது வலுவான கொள்கைப் பிரச்சாரத்தை நடத்துவது;
- கட்சிக்குள் எழும் அந்நிய வர்க்க கருத்துக்களை களைந்தெறிய தொடர்ந்து நடவடிக்க்க எடுப்பது;

- பிரிவினை, வகுப்புவாத, ஜாதிய சக்திகளை முறியடிக்க அனைத்து ஜனநாயக மதச்சார்பற்ற சக்திகளையும் ஒன்றுதிரட்டுவது;
- காட் ஒப்பந்த எதிர்ப்பு இயக்கத்தை வலுவாக நடத்துவது;
- தொடர்ந்து சுயேச்சையான இயக்கங்களுக்கு திட்டமிடுவது;
- ஸ்தல பிரச்சனைகளில் கவனம் செலுத்தி மக்களைத் திரட்டி இயக்கங்கள் நடத்துவது;
- கிராமப்புறங்களில் ஸ்தாபனத்தை விரிவுபடுத்த தொடர் முயற்சி எடுப்பது;
- கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கையை உயர்த்த தொடர்ச்சியான முயற்சி எடுப்பது;

மேற்கண்ட கடமைகளை நிறைவேற்றியதில் கிடைக்கும் படிப்பினைகள் என்ன என்று பரிசீலிப்பதே இந்த அறிக்கையின் முக்கியமான நோக்கமாகும்.

மாநிலக்குழு

11.3 கடந்த மாநாட்டில் 83 பேர் கொண்ட மாநிலக்குழு தேர்வு செய்யப்பட்டது. தோழர் ஏ.என். இயற்கை எய்தினார். தோழர்கள் டிரவீந்திரன், அபாக்கியம் ஆகியோர் கட்சிக் கட்டுப்பாடு தொடர்பாக மாநிலக்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டனர். தற்போது 80 பேர் மாநிலக்குழு உறுப்பினர்களாக செயல்பட்டு வருகின்றனர்.

11.4 கட்சியின் மாநில குழு கடந்த 34 மாதங்களில் 18 முறை கூடியுள்ளது. மாநில செயற்குழு 51 முறை கூடியுள்ளது. இரண்டு முறை மாவட்ட செயலாளர்கள் கூட்டம் கூட்டப்பட்டது. ஒரு முறை கட்சி மாவட்ட செயலாளர்கள் மற்றும் வி.ச., வி.தொ.ச. மாவட்ட செயலாளர்களின் கூட்டுக் கூட்டம் நடத்தினோம்.

11.5 மாநில அளவில் பிரச்சார இயக்க பொதுக்கூட்டங்கள் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு மாநிலக்குழு உறுப்பினர்கள் மற்ற மாவட்டங்களுக்கு சென்று நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்கள்.

11.6 மாநிலக்குழு உறுப்பினர்கள் மாநிலக்குழு கூட்டத்திற்கு வருகை சராசரி 90% இருந்தது.

11.7 மிகப்பெரும்பான்மையான அரசியல் முடிவுகள் மாநிலக் குழுவில் விவாதித்து முடிவு செய்யப்படுகின்றன. இருப்பினும், உள்ளாட்சி தேர்தலில் மதிமுக, அதிமுகவுடன் பல மாவட்டங்களில் உடன்பாடு வைத்துக்கொண்டது பற்றி மாநிலக்குழு பரிசீலித்திருந்த அடிப்படையில், புதுக்கோட்டை இடைத்தேர்தலில்

மதிமுகவுடன் உடன்பாடு தேவையில்லை; தனித்து போட்டியிட லாம் என்று மாநில செயற்குழு முடிவெடுத்து அமல்படுத்தியது.

11.8 அவ்வப்பொழுது எழும் அரசியல் நிலைமையில் நமது கட்சி யின் அணுகுமுறையை உருவாக்குதல், தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்க இயக்கத்திற்கு திட்டமிடுதல், சட்டமன்ற - பாராளு மன்ற தேர்தல் மற்றும் உள்ளாட்சி தேர்தலில் வேட்பாளர்களை தேர்வு செய்தல், தேர்தல் பரிசீலனை, கூட்டுறவு சங்க தேர்தல், தீக்கதிர் விற்பனை மற்றும் தீக்கதிர் சம்பந்தப்பட்ட பல முடிவுகள், கட்சி உறுப்பினர் பதிவு, தொழிற்சங்க அரங்க பணிகள், நெறிப் படுத்தும் இயக்கம், மதுரையில் தோழர் லீலாவதி படுகொலையை கண்டித்து இயக்கம் மற்றும் குடும்ப பாதுகாப்பு நிதி வசூல் செய் தல், தென்மாவட்ட ஜாதிக்கலவரம் மற்றும் தீண்டாமை ஒழிப்பு இயக்கத்திற்கு திட்டமிடுதல், மேலவளவு படுகொலை போன்ற பல்வேறு முக்கிய அரசியல் ஸ்தாபன பிரச்சனைகள் குறித்து மாநி லக்குழுவில் விவாதித்து முடிவு செய்து அமலாக்கி இருக்கிறோம்.

11.9 மாநிலக்குழுவில் செயற்குழுவின் வேலையறிக்கை அவ்வப் போது வைக்கப்பட்டாலும் வேலையறிக்கை பற்றி பரிசீலிக்க மாநிலக்குழு எதிர்காலத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

11.10 பெரும்பான்மையான மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்ட செயலாளர்களாக மற்றும் மாவட்டத்தில் பல பொறுப்புகளை நிறைவேற்றுபவர்களாக உள்ளனர். இன்னும் சில மாநிலக்குழு உறுப்பினர்கள் வர்க்க, வெகுஜன அரங்கங்களின் மாநில மைய பொறுப்புகளை நிறைவேற்றி வருகிறார்கள். மாவட்டங்களில் உள்ள மாநிலக்குழு உறுப்பினர்களை மற்ற வேலைகளுக்கு பயன் படுத்துவதில் சிரமம் உள்ளது. இருப்பினும், மாவட்டங்களில் ஓரளவிற்கு மாற்று ஏற்பாடு செய்து சில மாநில அளவிலான வேலைகளுக்கு மாநிலக்குழு உறுப்பினர்களைப் பயன்படுத்திட திட்டமிட வேண்டியுள்ளது.

11.11 மாநில செயற்குழு, மாநிலக்குழு உறுப்பினர்கள் வேலைப்பிரிவினை

1) என்.சங்கரய்யா - மாநில செயலாளர், மாநில மையம் சட்டமன்ற அரங்க பொறுப்பு

2) பி.ஆர்.பரமேஸ்வரன் - மாநில மையம், கல்விக்குழு, மார்க்சிஸ்ட் மாத இதழ், கலை - இலக்கிய பிரசுரம், டாக்டர் அண்ணாஜி நினைவு மருத்துவமனை, தபால்-தந்தி அரங்கம்.

3) என்.வரதராஜன் - மாநில மையம், மதுரை மாநகர், தேனி, மாவட்டக்குழுக்கள் பொறுப்பு, தீக்கதிர் நிர்வாகம், தீக்கதிர் சப் - கமிட்டி, ஆசிரியர் அரங்க பிராக் ஷன் பொறுப்பு.

4) கே.ரமணி - நீலகிரி மாவட்ட பொறுப்பு, தொழிற்சங்க அரங்கம்

5) ஜி.வீரய்யன் - வி.தொ.ச. அரங்கம், விழுப்புரம், தஞ்சாவூர், திருவாரூர், மாவட்டக் குழுக்கள் பொறுப்பு.

6) கே.வரதராசன் - வி.ச.அரங்கம், தருமபுரி (வடக்கு), தருமபுரி (தெற்கு), திண்டுக்கல் மாவட்டக் குழுக்கள் பொறுப்பு, கலை - இலக்கியம், மாதர் அரங்க சப்-கமிட்டிகள், கல்விக்குழு

7) டி.லட்சுமணன் - மாநில மையம், விருதுநகர், மதுரை புறநகர், நாகை மாவட்டக்குழுக்கள் பொறுப்பு, கல்விக்குழு, அரசு ஊழியர் அரங்க பிராக்ஷ்ன்.

8) வி.மீனாட்சி சுந்தரம் - மாநில மையம், தீக்கதிர் ஆசிரியர்.

9) ஏ.கே.பத்மநாபன் - தொழிற்சங்க அரங்கம், வேலூர், காஞ்சிபுரம், மாவட்டக் குழுக்கள் பொறுப்பு, மின் அரங்கம், மருத்துவ பிரதிநிதிகள் பிராக்ஷன்.

10) டி.கே.ரங்கராஜன் - தொழிற்சங்க அரங்கம், தென் சென்னை, சேலம் மாவட்டக்குழுக்கள் பொறுப்பு, ரயில்வே, போக்குவரத்து, வங்கி அரங்க பிராக்ஷன்.

11) ஜி.ராமகிருஷ்ணன் - மாநில மையம், கடலூர், திருச்சி, கரூர் மாவட்டக் குழுக்கள் பொறுப்பு, கல்விக்குழு, வாலிபர், மாணவர், அறிவியல், வழக்கறிஞர் பிராக்ஷன் கள் பொறுப்பு, ஆராய்ச்சி மையக்கிளை.

12) ஏ.சௌந்தரராஜன் - தொழிற்சங்க அரங்கம், வட சென்னை, திருவள்ளூர் மாவட்டக் குழுக்கள் பொறுப்பு, போக்குவரத்து அரங்கம்

13) பி.சம்பத் - சிதம்பரனார் மாவட்ட செயலாளர், நெல்லை, குமரி மாவட்டக்குழுக்கள் பொறுப்பு.

14) கே.தங்கவேல் - கோவை (கிழக்கு) மாவட்ட செயலாளர், கோவை (மேற்கு), பெரியார் மாவட்டக்குழுக்கள் பொறுப்பு.

11.12 மாவட்டங்களில் ஸ்தாபன தேவை எழும்போது இதர மாவட்டங்களுக்கும் சென்று மாநில செயற்குழு உறுப்பினர்கள் உதவி வருகின்றனர். கீழ்க்காணும் மாநிலக்குழு உறுப்பினர்கள் மாநில ரீதியான அரங்கங்களுக்கு பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர்.

1) கே.முத்தையா - கலை - இலக்கிய சப் கமிட்டி
2) ஏ.அப்துல்வகாப் - தீக்கதிர் பொதுமேலாளர், இராமநாதபுரம் மாவட்டக்குழு பொறுப்பு, மதுரை புறநகர் மாவட்டக்குழு பணிகள்
3) கே.வைத்தியநாதன் - சிஐடியு, மாநில மையம்
4) பி.எம்.குமார் - சிஐடியு மாநில மையம், பாண்டிச்சேரி மாவட்டக்குழு பொறுப்பு
5) பாப்பா உமாநாத் - மாதர் சங்க மாநில மையம்
6) மைதிலி சிவராமன் - மாதர் சங்க மாநில மையம்
7) உ.வாசுகி - மாதர் சங்க மாநில மையம்
8) சுதா - மாதர் சங்க மாநில மையம்
9) து.ஜானகிராமன் - மின் அரங்கம், தணிக்கைக்குழு
10) பி.விராமதாஸ் - ரயில்வே அரங்கம்
11) எஸ்.ஏ.பெருமாள் - தீக்கதிர் நிர்வாகம்
12) வி.பரமேஸ்வரன் - தீக்கதிர் மதுரை மையம் (பொறுப்பாசிரியர்)
13) அருணன் - தீக்கதிர், செம்மலர், தமுஎச
14) ஜி.உதயகுமார் - தீக்கதிர் நிர்வாகம் - சென்னை
15) சு.பொ.அகத்தியலிங்கம் - சென்னை தீக்கதிர் (பொறுப்பாசிரியர்)
16) என்.சீனிவாசன் புதுக்கோட்டை மாவட்டக்குழு பொறுப்பு, தணிக்கைக்குழு
17) ஏ.லாசர் - பசும்பொன் மாவட்டக்குழு பொறுப்பு, மதுரை புறநகர் மாவட்ட செயலாளர்

18) ஜி.ரத்தினவேலு - திருச்சி மாவட்டக்குழு செயலாளர், தணிக்கைக்குழு

19) எஸ்.ஸ்ரீதர் - திருச்சி மாவட்டக்குழு பணிகள், பெரம்பலூர் மாவட்டக்குழு பொறுப்பு

20) பாலு - கல்விக்குழு, அறிவியல் அரங்கம்

21) எம்.ஆர்.அப்பன் - அரசு ஊழியர் அரங்க பிராக்ஷன்களுக்கு உதவி, டாக்டர் அரங்கம்

22) பி.சண்முகம் - வி.ச. மையம்

23) எஸ்.திருநாவுக்கரசு - வி.ச.மையம்

24) ஆர்.ஜவஹர் - மாநில மையம்

25) வி.ஏ.கருப்புசாமி - மாநில கண்ட்ரோல் கமிஷன், வி.ச.அரங்கம்

11.13 பிற மாநிலக்குழு உறுப்பினர்கள் மாவட்டத்திலிருந்து பணியாற்றுகிறார்கள்

1) உரா.வரதராசன் - தென்சென்னை

2) கா.சின்னையா – -

3) பி.செல்வசிங் - வடசென்னை

4) கே.கிருஷ்ணன் - "

5) ஜி.மணி - திருவள்ளூர்

6) டி.கிருஷ்ணராஜ் - காஞ்சிபுரம்

7) கே.ஆர்.சுந்தரம் - வேலூர்

8) டி.ஆர்.புருஷோத்தமன் - "

9) ஆர்.ராமமூர்த்தி - விழுப்புரம்

10) கே.பாலகிருஷ்ணன் - கடலூர்

11) சி.கோவிந்தராஜன் - "

12) என்.ஆர்.ராமசாமி - "

13) பி.சங்கரன் - பாண்டிச்சேரி

14) எம்.செல்லமுத்து - திருவாரூர்

15) என்.கோவிந்தராஜன் - "

16) வி.தம்புசாமி - நாகை

17) ஆர்.சி.பழனிவேல் - தஞ்சாவூர்

18) பெரி.குமாரவேல் - புதுக்கோட்டை

19) ஜி.குமார் - கரூர்

20) கே.கருணாகரன் - நாமக்கல்

21) பி.தர்மலிங்கம் - சேலம்

22) கே.எம்.ஹரிபட் - தருமபுரி (தெற்கு)

23) கே.துரைராஜ்	-	ஈரோடு
24) கே.சி.கருணாகரன்	-	கோவை (மேற்கு)
25) யு.கே.வெள்ளியங்கிரி	-	"
26) எம்.நஞ்சப்பன்	-	"
27) சி.கோவிந்தசாமி	-	கோவை (கிழக்கு)
28) என்.வாசு	-	நீலகிரி
29) பி.கே.கருப்புசாமி	-	திண்டுக்கல்
30) எஸ்.ஏ.தங்கராஜ்	-	"
31) வி.குமாரவேல்	-	"
32) பாலபாரதி	-	திண்டுக்கல் மாவட்டக்குழு, மாதர் அரங்கம்
33) கே.ராஜப்பன்	-	தேனி
34) பி.மோகன்	-	மதுரை மாநகர்
35) என்.நன்மாறன்	-	
36) எம்.என்.எஸ். வெங்கட்ராமன்	-	விருதுநகர்
37) எம்.அர்ஜுனன்	-	சிவகங்கை
38) எம்.கருப்புராஜா	-	ராமநாதபுரம்
39) வி.பழனி	-	நெல்லை
40) எஸ்.நூர்முகம்மது	-	குமரி
41) ஜே. ஹேமச்சந்திரன்	-	குமரி, தொழிற்சங்க அரங்கம்

11.14 தோழர் உரா.வரதராசன் மத்திய தொழிற்சங்கப் பணிக்காக டில்லியிலிருந்து பணியாற்றும் பொறுப்பை ஏற்றுள்ளார்.

மாநில செயற்குழு

11.15 தமிழ்நாடு அரசியல் நிலைமை பற்றி அவ்வப்போது விவாதித்து கட்சியின் அணுகுமுறையை உருவாக்கி வருகிறது.

11.16 கட்சியின் கருத்தினை அறிக்கைகளாக பத்திரிகைகளுக்கு வெளியிடுவதோடு தேவைப்படுகின்றபொழுது கட்சி சார்பில் இயக்கத்திற்கும் திட்டமிட்டிருக்கிறது.

11.17 சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலில் நமது அணுகுமுறையை உருவாக்குவது, வேட்பாளர் தேர்வு, தேர்தல் பரிசீலனை ஆகிய அம்சங்கள் குறித்து செயற்குழு விவாதித்து மாநிலக்குழுவின் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளது.

11.18 பிற அரசியல் கட்சிகளுடன் தொடர்பு கொண்டு பேசுவது என்பது அமலாகி வருகிறது. இதில் சிபிஐ தலைவர்களை சந்தித்து விவாதிப்பதற்கு முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

11.19 அரசியல் தலைமைக்குழுவுடன் ஆலோசனை பெற வேண்டிய பிரச்சனைகளில் ஆலோசனை பெற்று மாநில செயற்குழு முடிவு எடுத்து அமலாக்கி வருகிறது.

11.20 மத்தியக்குழு முடிவின்படி 1997, ஜூலை 15-30 இரண்டுவார காலம் புதிய பொருளாதார கொள்கை எதிர்ப்பு இயக்கத்திற்கு திட்டமிட்டது.

11.21 மாவட்டக்குழுக்கள் எழுப்பும் பிரச்சனைகளுக்கும், மாவட்டங் களில் இருந்தும் அரங்கங்களில் இருந்தும் மையத்திற்கு வரும் கடிதங்களுக்கும் மாநில செயற்குழுவில் விவாதித்து வழிகாட்டி வருகிறது. இருப்பினும் இன்னும் கூடுதல் கவனம் தேவைப் படுகிறது.

11.22 திண்டுக்கல், நாகை, தருமபுரி, முகவை, திருச்சி, புதுக்கோட்டை, சென்னை, கோவை மற்றும் பல மாவட்ட செயற்குழு உறுப் பினர்கள் மற்றும் அம்மாவட்டங்களில் உள்ள மாநிலக்குழு உறுப் பினர்களை மாநில மையத்திற்கு அழைத்து பல அரசியல் ஸ்தாபன பிரச்சனைகளை விவாதித்து வழிகாட்டியிருக்கிறது.

11.23 அரங்கங்களில் இருந்தும், மாவட்டங்களில் இருந்தும் தனிப் பட்ட முறையில் தோழர்கள் எழுதும் கடிதங்கள், புகார் மீது மாநில செயற்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

11.24 தென்மாவட்ட ஜாதிக்கலவரம் குறித்தும், தீண்டாமை ஒழிப்பு இயக்கம் பற்றியும் தொடர்ச்சியாக பலமுறை செயற்குழுவில் விவாதித்திருக்கிறது.

11.25 தென்மாவட்டங்க்ளில் தொடர்ந்து நடைபெற்ற ஜாதிக் கல வரங்கள் குறித்து விவாதிக்க தென்மாவட்ட செயற்குழு உறுப் பினர்கள் கூட்டம் மதுரையில் கூட்டப்பட்டது.

11.26 முக்கியமான அரசியல் தீர்மானங்களை / முடிவுகளை மொழி பெயர்த்து மத்தியக்குழுவிற்கு அனுப்புவதில் முன்னேற்றமிருப்பி னும், கூடுதல் கவனம் தேவைப்படுகிறது.

11.27 மாநில செயற்குழு பல கூட்டங்களில் தீக்கதிர் பற்றி விவா தித்து வழிகாட்டி இருக்கிறது.

11.28 மாவட்டக்குழுக்களோடு நெருக்கமாக இருந்து கட்சி ஸ்தாபன பணிகளுக்கு உதவி வருகிறோம். இது ஸ்தாபனத்தை கட்டும் பணிக்கு பெரிதும் உதவியுள்ளது.

11.29 அவ்வப்பொழுது அரங்கங்க்ளின் உபகுழு ரிப்போர்ட்டுகளை மாநில செயற்குழுவில் பரிசீலித்து வழிகட்டி வருகிறது. அரசு

ஊழியர் சங்கம், வாலிபர் அரங்கம், வி.ச., வழக்கறிஞர் அரங்கம், மாணவர் அரங்கம், மாதர் அரங்கம் ஆகிய அரங்கங்கள் குறித்து மாநில செயற்குழு விவாதித்து வழிகாட்டி இருக்கிறது. இதில் சிலவற்றை மாநிலக்குழுவிற்கு விவாதத்திற்கு எடுத்துச் செல்ல இயலவில்லை. எதிர்காலத்தில் இதற்காக மாநில செயற்குழு கூடுதல் நேரம் ஒதுக்கி அனைத்து அரங்கங்கள் பற்றியும் விவா தித்து. மாநிலக்குழுவிற்கு அறிக்கை அளித்து விவாதித்து அரங்கங்களுக்கு வழிகாட்ட வேண்டியுள்ளது.

11.30 பீப்பிள்ஸ் டெமாக்ரசி மற்றும் ஐ.என்.என்.க்கு கட்டுரை, அன் றாட செய்திகள் அனுப்புவதில் இன்னும் முறையான ஏற்பாடு செய்யப்படவில்லை. இதற்குத் தகுந்த ஊழியர் ஏற்பாடு தேவைப் படுகிறது.

11.31 மாநிலக்குழு அலுவலகத்தில் தோழர் ஜவஹர் உட்பட 8 தோழர்கள் பணியாற்றி வருகிறார்கள். மாநில மையத்தின் ஏராள மான பணிகளையும், மாநிலக்குழு, மாநில செயற்குழு எடுக்கும் முடிவுகளையும் அமலாக்கிட, மாவட்டங்களுக்கு அரங்கங்களுக்கு உதவி செய்திடவும், மேலும் மூன்று அல்லது நான்கு மாநிலக்குழு உறுப்பினர்கள் கட்சியின் மாநில மையத்தில் இருந்து செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற கடந்த மாநில மாநாட்டு முடிவு அமலாக்கப்படவில்லை.

11.32 34 மாவட்டக்குழுக்களுக்கும் பல வர்க்க, வெகுஜன அரங்கங் களுக்கும் உதவி செய்ய மேலும் சில மாநிலக்குழு உறுப்பினர்கள் மாநில மையத்தில் இருந்து வேலை செய்யும் ஏற்பாடு உடனடி தேவையாக உள்ளது.

மாநில மையம்

11.33 தோழர் உமாநாத் அரசியல் தலைமைக்குழுவிற்கு தேர்வு செய் யப்பட்ட பிறகு மாநில செயற்குழுவிலிருந்து விடுவிக்கப்பட்டார்.

11.34 தோழர்கள் என்.எஸ்., ஏ.என்., பி.ஆர்.பி., என்.வி., டி.எல்., வி.எம்.எஸ்., ஜி.ஆர். ஆகிய தோழர்களைக் கொண்ட மையம் தீர் மானிக்கப்பட்டது. மாநில மையத்தில் உள்ள தோழர்கள் அன்றா டம் கூடி எழுகிற அரசியல், ஸ்தாபன பிரச்சனைக்ள் குறித்து விவாதிக்கும் முறை உள்ளது. முக்கியமான பிரச்சனையாக இருந் தால் சென்னையில் உள்ள மாநில செயற்குழு உறுப்பினர்களுக்கு தகவல் கொடுத்து மையத்திற்கு அழைத்து விவாதிப்பதுண்டு.

11.35. பல அரங்கங்களுக்கும் மற்றும் மாவட்டங்களுக்கும் உதவிக்காக செல்கின்றபோது ஒரு சில நாட்களில் ஒரு செயற்குழு உறுப்பினர்

கூட மையத்தில் இல்லாத நிலையும் ஏற்பட்டது. இது தவிர்க்கப் பட வேண்டும். மாநில செயற்குழு மற்றும் மாநிலக்குழு முடிவு களை அமலாக்குவதுதான் மாநில மையத்தின் பணி; மாநில மையம் என்பது மாநில செயற்குழுவிற்கு மேலான ஒரு அமைப் பல்ல என்பது, மாநிலக்குழுவில் தெளிவுபடுத்தப்பட்டது. மாவட்ட மையங்களும் இந்த அடிப்படையில்தான் செயல்பட வேண்டும் என்று மாவட்டக்குழுக்களுக்கும் வழிகாட்டப்பட்டுள்ளது.

11.36 சட்டமன்றத்தில் நமது பணி

- தற்பொழுது சட்டமன்றத்தில் தோழர் மணி செயல்பட்டு வருகிறார்.
- நமது கட்சி சார்பில் நமது கொள்கை நிலைபாட்டில் இருந்து கருத்து தெரிவிக்க, தலையிட தோழர் மணி அவர்களுக்கு மாநில மையம் உதவி செய்து வருகிறது.
- ஒரு உறுப்பினராக இருந்தாலும் பெரும்பாலான பிரச்சனைகளில் பேசுவதற்கு தோழர் மணிக்கு வாய்ப்பு கிடைத்துவருகிறது. இந்த வாய்ப்பை தோழர் மணியும் பயன்படுத்தி வருகிறார்.
- விளவங்கோடு சட்டமன்றத் தொகுதியில் இருந்தும், மாநிலத்தின் மற்ற பகுதிகளில் இருந்தும் வரும் கடிதங்களை அரசிடம் பிரதி நிதித்துவப்படுத்தும் பணியினையும் தொடர்ந்து நமது சட்ட மன்ற உறுப்பினர் நிறைவேற்றி வருகிறார்.

கட்சிக் கல்வி

ஆசிரியர் பயிற்சி

11.37 கடலூரில் நடந்த கட்சியின் 15வது மாநில மாநாட்டில் பிரதி நிதிகள் பேசியபோது கட்சிக் கல்வி பற்றி மாநிலக்குழு மேலும் கவனம் செலுத்த வேண்டும். இதுவரை செய்த ஏற்பாடுகள் போதாது; இனியும் இதில் முன்னேற்றம் தேவை. கட்சிக் கல்வி நடத்த ஒரு நிரந்தரப் பள்ளி தேவை போன்ற கருத்துக்கள் தெரி விக்கப்பட்டன.

11.38 இதைக் கருத்தில் கொண்டு கட்சிக் கல்வி பணிகளை தொடர்ந்து நிறைவேற்றிட பாடங்களை எடுப்பதற்கான ஆசிரியர் களுக்கான பயிற்சி பட்டறை ஒன்று 1995 ஜூலை 22, 23, 24 ஆகிய நாட்களில் தஞ்சையில் நடத்தப்பட்டது. இந்த பயிற்சிப்பட்டறை யில் 70 பேர் கலந்துகொண்டார்கள்.

11.39 இந்தப் பயிற்சி பட்டறையைக் கூட மேலும் திட்டமிட்டு நடத்தியிருக்கலாம் என்ற கருத்தும் வந்தது. இந்தப் பயிற்சி பட்

டறையில் கலந்துகொண்ட ஆசிரியர்களை கட்சிக் கல்விக்கு தொடர்ந்து செயற்குழு பயன்படுத்தி வருகிறது.

மாவட்டங்களில் கட்சிக் கல்வி ஏற்பாடுகள்

11.40 அதன் அடிப்படையில் மாவட்டங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பி வகுப்புக்கு ஏற்பாடுகள் செய்யும்படி கேட்கப்பட்டது.

11.41 முதல் கட்டமாக விழுப்புரம், திருவள்ளூர், தென்சென்னை, நாகப்பட்டினம், மதுரை (புறநகர்) ஆகிய மாவட்டங்களில் வகுப்புகள் நடந்தன. இரண்டாவது கட்டமாக மதுரை நகர், வடசென்னை, காஞ்சிபுரம், சேலம், பாண்டிச்சேரி, நீலகிரி மாவட்டங்களில் வகுப்புகள் நடத்தப்பட்டன.

11.42 மூன்றாவது கட்டமாக கோவை, ஈரோடு, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர், நெல்லை, பெரம்பலூர் மாவட்டங்களில் வகுப்புகள் நடந்தன.

11.43 வகுப்புகளில் வருகையை அதிகரிக்க வேண்டும் என்பதற்காக இடைக்கமிட்டி வாரியாகக்கூட வகுப்புகள் நடத்தப்பட்டன. சில மாவட்டங்களில் மாலை நேரங்களில் கூட நடத்தப்பட்டது. ஆயினும், வகுப்புகளில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கையில் சராசரியாக 30% உறுப்பினர்களே கலந்துகொண்டார்கள். சில இடங்களில் அது 20% வருகையாக இருப்பது கவலையளிக்கும் நிலையாக உள்ளது. வருகையை அதிகரிப்பதற்கு மாவட்டக்குழுக்கள் தனி கவனம் செலுத்தி மேலும் இதில் எப்படி முன்னேற்றம் காண முடியும் என்பதை பரிசீலிக்க வேண்டும். அதற்கான நடைமுறையைக் கையாள. வேண்டும்.

அரங்கங்களுக்கான கட்சிக் கல்வி

11.44 தீக்கதிர், மாணவர், மாதர் மற்றும் விசேச அரங்கங்களில் உள்ளவர்களுக்கு கட்சிக் கல்வி நடத்தப்பட்டது.

வகுப்புக்கான பாடக் குறிப்புகள்:

மத்தியக்குழு வெளியிட்ட

1. மார்க்சிய தத்துவமும், அரசியல் பொருளாதாரமும்
2. இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் ஒரு வரலாற்று சுருக்கம்
3. வர்க்கப் போராட்டமும், தேச ஒற்றுமையும்
4. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நடைமுறை தந்திரம்.
5. கட்சி ஸ்தாபன கோட்பாடு

- என்ற பாடக்குறிப்புகளை தமிழில் ஒவ்வொரு பாடக் குறிப்பும் 5000 பிரதிகள் வீதம் வெளியிடப்பட்டது.

11.45 இந்தப் பாடக் குறிப்புகள் மீது வகுப்புகள் நடத்தப்பட்டன. அதோடு, கட்சித் திட்டம், திராவிட இயக்க வரலாறு, தேசிய சர்வ தேசிய பொருளாதாரம் பற்றியும் வகுப்புகள் நடத்தப்பட்டன.

வகுப்பு எடுக்கும் ஆசிரியர்களைப் பயன்படுத்துவது

11.46 மாவட்டக்குழுக்களோ, அரங்கங்களோ, வகுப்புகளுக்கான ஏற்பாடுகள் செய்து, மாநில மையத்தோடு தொடர்புகள் கொள்ளும்போதெல்லாம் ஆசிரியர்களை ஏற்பாடு செய்து கொடுக்கப் பட்டது. மாவட்டக்குழுக்களும் அவர்களைப் பயன்படுத்தினார்கள். ஆனால் சில நேரங்களில் ஆசிரியர்கள் குறித்த தேதியில் வகுப்புகளுக்கு போக இயலாத நிலையும், கடைசி நேரத்தில் இது பற்றி தகவல் கொடுப்பதும், சில சிரமங்களை உண்டு பண்ணியது.

தொடர்ச்சியாக மாவட்டங்களில் வகுப்பு நடத்தாமை

11.47 சில மாவட்டங்களில் முதல் கட்ட வகுப்புகள்கூட நடைபெறவில்லை. மேலும், சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தல்களும், உள்ளாட்சி மன்ற, கூட்டுறவு தேர்தல்களும் அடுத்தடுத்து நடந்ததால் மாவட்டக்குழுக்களால் கட்சி கல்விக்கான ஏற்பாடுகளில் கவனம் செலுத்த இயலவில்லை. ஆகவே, வகுப்புகள் தொடர்ச்சியாக நடைபெறவில்லை.

அனுபவம்

11.48 மத்தியக்குழு காட்டிய வழியில் காலையில் வகுப்புக்குறிப்பு பற்றி விளக்கி மாலையில் குழு விவாதங்களும் நடத்தி அதன் மீது அவர்களைப் பேச வைத்து, பிறகு அதற்கு விளக்கம் தரும் முறை என்பது பயனுள்ளதாக இருந்தது. சில அரங்கங்களில் இதை அமல்படுத்தியபோது வகுப்புக்கு வந்தவர்கள் பயனுள்ளதாக இருந்ததாகச் சொன்னார்கள். இந்த முறையை மாவட்டக் குழுக்கள் எதிர்காலத்தில் நடத்தும் வகுப்புகளிலும் கடைப்பிடிக்க வேண்டும்.

11.49 கட்சி அணிகளுக்கும், வெகுஜன வர்க்க அமைப்புகளுக்கும் மேலும் கட்சிக் கல்வியை தொடர்ந்து வழங்க வேண்டும். இது ஒரு பெரிய அரசியல் கடமையாகும். கட்சி அணிகளின் அரசியல் பயிற்சிக்கு இன்றுள்ளதைவிட பன்மடங்கு பணிகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்டக் குழுக்களும் திறமை வாய்ந்த தோழர்களை கட்சிக் கல்விப் பணிக்கு பயன்படுத்த வேண்டும்.

கட்சிக்கல்விக்கான நிரந்தரப்பள்ளி

11.50 கடந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட இந்த முடிவு பல காரணங்களால் அமலாகவில்லை. நிரந்தரப் பள்ளிக்கான சாத்தியக்

கூறுகள் குறித்து அடுத்துவரும் மாநிலக்குழு விவாதித்து முடிவு செய்வது பொருத்தமாக இருக்கும்.

சுய கல்வி

11.51 எல்லா பிரச்சனைகளிலும் வகுப்பு எடுப்பது இயலாது. கட்சி அளிக்கும் கட்சிக் கல்வியை அடிப்படையாக வைத்துக்கொண்டு கட்சித் தோழர்கள் மார்க்சிய - லெனினிய அடிப்படைத் தத்துவங்களை / நூல்களை சுயமாக படிக்க முயற்சிக்க வேண்டும்.

11.52 மேலும், தேசிய அளவிலும், நமது மாநில அளவிலும் எழும் பல்வேறு பிரச்சனைகள் குறித்து கட்சியின் சார்பில் பல பிரசுரங்கள் வெளியிட்டு வருகிறோம். பிற தனியார் பதிப்பகங்களும் ஏராளமான முற்போக்கு கருத்துடைய நூல்களை வெளியிட்டு வருகின்றன. கட்சியின் பிரசுரங்களைப் படிக்கும் பழக்கம் குறைந்து விடக்கூடாது. எனவே, சுய கல்விக்கு கட்சித் தோழர்கள் கூடுதல் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கட்சி இலக்கியங்களை படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

ஊழியர் பயிற்சி

11.53 கிளைச் செயலாளர்களில் இருந்து மாவட்ட செயற்குழு வரை எல்லா மட்டத்திலும் மாநாடுகளில் தேர்வு செய்யப்பட்ட தோழர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தை உருவாக்க வேண்டும். ஒவ்வொரு மாநாட்டிலும் புதிய குழுவை தேர்வு செய்கிறோம். இத்தேர்வுக்குப் பிறகு அவர்கள் வகிக்கும் பொறுப்பை நிறைவேற்ற அப்பணிகளில் அவர்களுக்கு பயிற்சி அளிப்பது அவசியமான பணியாகும். இது குறித்து கட்சியின் மத்திய கல்விக்குழுவின் உதவி மற்றும் ஆலோசனையுடன் ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியுள்ளது. இதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புக்கள்

11.54 உள்ளாட்சித் தேர்தல் முடிந்த பிறகு கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற பிரதிநிதிகளுக்கு உதவி செய்வதற்கு மாநில உள்ளாட்சி உபக்குழு அமைக்கப்பட்டது. உபக்குழுவின் ஆலோசனை அடிப்படையில் உள்ளாட்சி மன்றங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர்களுக்கான பயிற்சி முகாம் நாகர்கோவிலில் நடைபெற்றது.

11.55 உள்ளாட்சி மன்றங்களில் நடைமுறையில் சந்தித்து வரும் பிரச்சனைகள் குறித்து இதில் விவாதிக்கப்பட்டது. உள்ளாட்சி மன்றங்களுக்கு அதிக அதிகாரம், கூடுதல் நிதி ஆதாரம் தேவை என்ற

தீர்மானம் நிறைவேற்றப்பட்டு மாநில அரசின் கவனத்திற்கு கொண்டுசெல்லப்பட்டது.

11.56 பல மாவட்டங்களில் உபக்குழு அமைத்து மாவட்டத்திலுள்ள பிரதிநிதிகளுக்கு வழிகாட்டப்பட்டுவருகிறது.

11.57 உள்ளாட்சி அமைப்புக்களுக்கு அதிக அதிகாரம் வழங்குவது குறித்து பரிசீலனை செய்ய சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் பெறும் கட்சிகளின் உறுப்பினர்களைக்கொண்ட குழுவை மாநில அரசு அமைத்துள்ளது.

11.58 இதுவரை மாநில உபக்குழு 4 முறை கூடியுள்ளது. நமது உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் அன்றாடம் சந்திக்கும் பிரச்சனைகளுக்கு அவ்வப்போது போதுமான வழிகாட்டுதல்களைத் தர இயலவில்லை. எதிர்காலத்தில் உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகளுக்கு உரிய வழிகாட்ட வேண்டியுள்ளது.

அரசியல் கிளர்ச்சிப் பிரச்சாரம்

11.59 அவ்வப்போது எழக்கூடிய அரசியல் நிலைமைக்கேற்ப கட்சியின் மத்தியக்குழுவும், மாநிலக்குழுவும் நடைமுறைக் கொள்கையை உருவாக்குகிறது. நமது நடைமுறைக் கொள்கைகளையும், அரசியல் நிலைபாட்டையும் ஆளும் வர்க்கத்தின் மக்கள் விரோதக் கொள்கைகளையும் மக்கள் மத்தியில் எடுத்துச் செல்ல விரிவான கிளர்ச்சிப் பிரச்சாரம் நடத்த வேண்டுமென கடந்த மாநில மாநாடு சுட்டிக்காட்டியது.

11.60 கடந்த மூன்றாண்டுகளில் பொதுக்கூட்டங்கள், தர்ணா, ஆர்ப்பாட்டம், தெருமுனைப் பிரச்சாரம் ஆகிய வடிவங்களில் மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்துள்ளோம். அரசியல் நிலைபாடு குறித்து பிரசுரங்களும் வெளியிட்டுள்ளோம்.

11.61 இருப்பினும் நமது பிரச்சாரம் முழுமையாக மக்களைச் சென்றடைந்ததாகக் கூற முடியாது. கட்சிக் கடிதங்கள் உட்பட 39 பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருந்தாலும் குறைவான எண்ணிக்கையிலேயே பிரசுரங்கள் வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்ட பிரசுரங்களைக்கூட விற்பனை செய்ய பெரும்பாலான மாவட்டங்களில் போதுமான ஏற்பாடுகள் இல்லை. எதிர்காலத்தில் இக்குறைபாடு போக்கப்பட வேண்டும்.

11.62 நமது அரசியல் நிலைபாட்டை விளக்க பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டிருந்தாலும், பல நேரங்களில் இவைகள் சம்பிரதாயமாகவே நடந்துள்ளன. பொதுக்கூட்டங்களில் மக்களைப் பங்

கேற்க வைக்க போதுமான ஏற்பாடுகள் இல்லை. தெருமுனைக் கூட்டங்கள் நமது பிரச்சாரத்தை எடுத்துச்செல்ல உதவியுள்ளது. இருப்பினும், இன்னும் பரவலாக, எல்லா பிரச்சனைகளிலும் தெருமுனைப் பிரச்சார வடிவத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

11.63 பொதுக்கூட்டம் மற்றும் தெருமுனைக்கூட்ட பிரச்சாரத்தில் ஈடுபடக்கூடிய தோழர்களுக்கு அவ்வப்போது கட்சி மேற்கொள்ளும் அரசியல் நிலைபாட்டை விளக்கி பேச்சுக்குறிப்பு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன.

11.64 மத்திய - மாநில அரசுகளின் தவறான கொள்கைகளையும், வகுப்புவாத, ஜாதிய இயக்கங்களின் தவறான அணுகுமுறைகளையும், மேற்கண்ட பிரச்சனைகளில் நம்முடைய மாற்றுத் திட்டத்தையும் மக்கள் மத்தியில் விரிவாக எடுத்துச்செல்ல வலுவான அரசியல் கிளர்ச்சிப் பிரச்சாரத்திற்கு வருங்காலத்தில் திட்டமிட வேண்டும். அது கட்சி மற்றும் வெகுஜன அமைப்புக்களின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

மாவட்டக்குழுக்கள்

11.65 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு நாமக்கல், கோவை (கிழக்கு), தருமபுரி (வடக்கு), பெரம்பலூர், தேனி, திருவாரூர் ஆகிய 6 புதிய மாவட்டக்குழுக்கள் உருவாக்கப்பட்டன. தற்பொழுது மொத்தம் 34 மாவட்ட குழுக்கள் செயல்பட்டுவருகின்றன.

11.66 மாவட்ட மையங்கள் செயல்படுவதில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இன்னும் சில மாவட்டங்களில் மைய செயல்பாட்டில் முன்னேற்றம் தேவைப்படுகிறது.

11.67 மக்கள் பிரச்சனைகளின் மீது மாவட்ட அளவில் இயக்கம் நடத்துவதில் முன்முயற்சி அதிகரித்துள்ளது. காவல்நிலைய சாவு போன்று மனித உரிமை பறிக்கப்படுகின்றபோது மாவட்டக் குழுக்களின் தலையீடு குறிப்பிடத்தக்கது. இதிலும் இன்னும் சில மாவட்டங்களில் போதுமான முன்முயற்சி இல்லை. பத்மினி பிரச்சனையில் கடலூர் மாவட்டக்குழுவின் தொடர்ச்சியான தலையீடு, வாச்சாத்தி ஆதிவாசி மக்கள் பிரச்சனையில் தருமபுரி மாவட்டத்தின் தலையீடு, தென் மாவட்ட ஜாதிய மோதல் பிரச்சனைகளில் தூத்துக்குடி, நெல்லை, விருதுநகர் மாவட்டங்களின் முன்முயற்சி போன்று கடந்த மூன்றாண்டுகளில் மாவட்டக்குழுக்களின் தலையீட்டினால் மாநிலத்தில் கட்சியின் மரியாதை உயர்ந்துள்ளது. இப்படிப்பட்ட முன்முயற்சி தொடர வேண்டும்.

11.68 அரசியல் இயக்கம் சம்பந்தமான மாநிலக்குழு முடிவுகளை அமலாக்குவதில் மாவட்டக்குழுக்களின் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

11.69 மாவட்ட செயற்குழு கூட்டுத் தலைமையாக - கருத்தொற்றுமை, செயல் ஒற்றுமையை உருவாக்குவதில் பல மாவட்டங்களில் முன் னேற்றம் தேவைப்படுகிறது.

11.70 சில மாவட்டக்குழுக்களில் எழுத்துப்பூர்வமான வேலை அறிக் கைகள் வைத்து விவாதிக்கப்படுகிறது. பெரும்பாலான மாவட் டக்குழுக்கள் மாநிலக்குழுவிற்கு எழுத்துப்பூர்வமான ரிப்போர்ட் அனுப்புவது குறைவாக உள்ளது.

11.71 கட்சியின் மாநிலக்குழு மற்றும் வெகுஜன அரங்க மாநிலக் குழுக்கள் அனுப்பும் சுற்றறிக்கைகளை படித்து அதன்படி கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளுக்கு - வேலைகளுக்கு திட்டமிட்டுக் கொடுக்கக்கூடிய முறையான ஏற்பாடு சில மாவட்டங்களில் இல்லை.

11.72 வேலைப்பளு காரணமாக மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் இடைக்கமிட்டிகளுக்கும், அரங்கங்களுக்கும் உதவி செய்வதில் தொய்வு உள்ளது. மாவட்ட செயற்குழு உறுப்பினர்களே எல்லா இடைக்கமிட்டி மற்றும் அரங்கங்களுக்கும் பொறுப்பு என்பதற் குப் பதிலாக, சில மாவட்டக்குழு உறுப்பினர்களுக்கும் பொறுப் புக்களை பிரித்துக்கொடுக்க வேண்டும். உபக்குழு, பிராக்ஷன் களை இயக்குவதற்கு மாவட்டக்குழுவும் செயற்குழுவும் தனி கவனம் செலுத்த வேண்டும்.

11.73 மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள்தான் நேரடி நிர்வாகி களாக உள்ள அரங்கங்கள், இடைக்கமிட்டிகளுக்கு கவனம் செலுத்துவதுபோல் மற்ற அரங்கங்களுக்கும், இடைக்கமிட்டி களுக்கும் கவனம்செலுத்துவது அவசியமாகும்.

11.74 வரவு - செலவு கணக்கு பராமரிப்பதில் மாவட்டக்குழுக்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது இருப்பினும் சில மாவட்டங்களில் இதற்கான சரியான ஏற்பாடு இல்லை. மாநில தணிக்கைக்குழு, கணக்கு பராமரிப்பு குறித்து கொடுத்துள்ள ஆலோசனைகளை விரைவில் இறுதிப்படுத்தி அமலுக்குக்கொண்டுவர வேண்டும்.

இடைக்கமிட்டிகள்

11.75 "இடைக்கமிட்டிகள் பலப்படுத்த வேண்டும்" என்று முடி வெடுத்த கடந்த மாநில மாநாடு இக்கமிட்டிகளின் செயல்முறை குறித்து கீழ்க்கண்டவாறு மதிப்பீடு செய்தது:

"பல இடைக்கமிட்டிகளில் முழுநேர ஊழியர்கள் இல்லாதது, கூட்டாக வேலை செய்வதற்கு பதிலாக ஓரிரு ஊழியர்கள் மட்டுமே வேலைகளை சுமக்கும் நிலை, நிதிப்பற்றாக்குறை இவைகளினால் வெகுஜன அரங்கங்களுக்கு உதவி செய்வதில், கட்சிக் கிளைகளை இயக்க வைப்பதில் இடைக்கமிட்டிகள் சிரமப்படுகின்றன."

"கிளைகளுக்கு அடுத்ததாக மக்களோடு நெருக்கமாக இருப்பது இடைக்கமிட்டி என்பதை மனதில் வைத்து இடைக்கமிட்டி செயல்பாட்டில் மேலும் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது."

11.76 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு இந்த மூன்றாண்டுகளில் இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இடைக்கமிட்டிகளை பலப்படுத்துவோம் என்று கடந்த மாநில மாநாடு எடுத்த முடிவு இன்னும் அமலாகவில்லை.

11.77 கடந்த மாநாட்டின்போது 284 ஆக இருந்த இடைக்கமிட்டிகளின் எண்ணிக்கை, தற்போது 358 ஆக உயர்ந்துள்ளது. தேவையையொட்டி வட்டக்குழுக்கள் ஒன்றியக்குழுக்களாகவும், நகரக் குழுக்களாகவும், சில மாவட்டங்களில் புதிய இடைக்கமிட்டிகள் பிரிக்கப்பட்டுள்ளன. கட்சி விரிவாக்கத்திற்கு இது பயனுள்ளதாக இருக்கும் என்றாலும், சில இடங்களில் தகுதியான இடைக்கமிட்டி செயலாளர், போதுமான கிளைகள், வேலை செய்யும் ஊழியர்கள் - இவைகளையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் பிரித்ததால் சில இடைக்கமிட்டிகள்திணறுகின்றன.

11.78 கடந்த மூன்றாண்டுகளில் இடைக்கமிட்டிகள் மக்கள் பிரச்சனைகளில் சுயேச்சையான இயக்கங்கள் நடத்துவதில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பல இடைக்கமிட்டிகளுக்கு புதிய அலுவலகங்கள் உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அளவிலான இயக்கங்களை அமலாக்க இடைக்கமிட்டிகள் ஓரளவிற்கு முயற்சி எடுக்கின்றன.

11.79 குறிப்பிட்ட சில இடைக்கமிட்டிகளைத் தவிர பெரும்பாலான இடைக்கமிட்டிகளில் நிதிப் புற்றாக்குறை பெரும் பிரச்சனையாக உள்ளது.

11.80 செயல்படும் இடைக்கமிட்டி மையங்களை உருவாக்க இயலாமல் ஓரிரு ஊழியர்கள் மட்டுமே செயல்படும் நிலைமை இடைக்கமிட்டிகளில் உள்ளது.

11.81 இப்படிப்பட்ட சிரமத்தில் இடைக்கமிட்டிகள் செயல்பட்டு வருவதால் கட்சியின் மாநிலக்குழு அல்லது அரங்க மாநிலக் குழுக்கள் எடுக்கும் முடிவுகள் சரியாக அமலாக்கப்படுவதில்லை.

11.82 இடைக்கமிட்டி உறுப்பினர்களுக்கு வேலை பிரிவினையில் கிளை பொறுப்பு பிரித்துக்கொடுக்கப்பட்டாலும் கிளைகளை இயக்குவதில் பல இடைக்கமிட்டிகளின் முயற்சி போதுமானதல்ல.

11.83 பத்திரிக்கை, பிரசுர விற்பனை, வெகுஜன அமைப்புகளுக்கு உதவி செய்வது ஆகிய பணிகளில் முன்னேற்றம் ஏற்பட மாவட்டக்குழுக்கள் உதவி செய்ய வேண்டும்.

11.84 போக்குவரத்து, மின்வாரிய அரங்க இடைக்கமிட்டிகளின் செயல்பாட்டில் ஓரளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அரங்க இடைக்கமிட்டிகளின் கீழ்செயல்படும் கட்சி உறுப்பினர்கள் பிரதேச கிளைகளிலும் உறுப்பினர்களாக இருந்து பிரதேச கட்சி வெகுஜன அரங்க வேலைகளில் பங்கேற்க வேண்டும் என்ற கடந்த மாநாட்டின் முடிவு மிகக்குறைவாகவே அமலாகியுள்ளது.

11.85 போக்குவரத்து மற்றும் மின் அரங்கத்தில் அனுபவமுள்ள தோழர்கள் கட்சி இடைக்கமிட்டிகளுக்கும் உதவி செய்ய வேண்டும்.

11.86 இடைக்கமிட்டி மாநாடுகளில் பிரதிநிதிகள் வருகை 30%, 50%, 75% என ஏற்றத்தாழ்வாக இருந்துள்ளது. திட்டமிட்டு முயற்சி எடுத்த இடைக்கமிட்டிகளின் வருகையில் முன்னேற்றமுள்ளது.

11.87 "இடைக்கமிட்டிகளை பலப்படுத்துவோம்" என்ற முடிவினை அமலாக்குவதே கட்சி மற்றும் வர்க்க, வெகுஜன அமைப்புகளின் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

கட்சிக் கிளைகள்

11.88 "கட்சியின் ஒட்டுமொத்த செயல்பாட்டில் பெரும் வீச்சு உருவாக வேண்டுமெனில் அதன் அஸ்திவாரமாக உயிரோட்டமுள்ள கிளை செயல்பாடு அமைய வேண்டும்" என கடந்த மாநில மாநாடு கிளை செயல்பாட்டின் முக்கியத்துவம் குறித்து சுட்டிக் காட்டியது. கடந்த மாநாட்டின்போது 7034 ஆக இருந்த கிளைகள் எண்ணிக்கை தற்போது 7893 ஆக உயர்ந்துள்ளது.

11.89 கடந்த மாநாட்டிற்குப் பிறகு நமது கட்சி சந்தித்த பொதுத் தேர்தல் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் கட்சிக் கிளைகள் தேர்தல் பணியாற்றியுள்ளது. ஒருபகுதி கிளைகள் ஸ்தல பிரச்சனைகள் மீது இயக்கங்கள் நடத்தியுள்ளன. கட்சி வளர்ச்சி நிதிக்

காக மாநில அளவில் ஒரு நாள் உண்டியல் வசூல் செய்ய வேண்டுமென்று மாநிலக்குழு முடிவு செய்தது. மாநிலம் முழுவதும் கட்சிக் கிளைகள் உண்டியல் வசூல் மூலம் சுமார் ரூ. 10 லட்சம் வசூல் செய்து மாநில மையத்திற்கு அளித்துள்ளன. கட்சி அவ்வப்போது நடத்தும் ஊர்வலம், ஆர்ப்பாட்டம், பேரணி போன்ற இயக்கங்களுக்கு கட்சி உறுப்பினர்களை கிளைகள் திரட்டியுள்ளன.

1190 மேற்கண்ட பணிகளை கிளைகள் செய்திருந்தாலும் கடந்த மாநாட்டிற்குப் பிறகு கிளைகள் செயல்பாட்டில் சிறிது முன்னேற்றம் மட்டுமே ஏற்பட்டுள்ளது.

1191 கடலூரில் நடைபெற்ற 15வது மாநில மாநாட்டு அறிக்கையில் "ஒரு காலத்தில் பிரதானமாக அரசியல் மற்றும் தொழிற் சங்க அமைப்பை மட்டும் சார்ந்திருந்த கிளைகள் இன்று அரசியல், தொழிற்சங்கம், விவசாய சங்கம், வாலிபர், மாணவர், மாதர் அமைப்புகள், கலை - இலக்கியம், அறிவியல் என்று பன்முகப் படுத்தப்பட்ட பிரச்சனைகளில் தலையிட்டு பல்வேறு தொடர்ச்சியான வேலைகளுக்கு ஈடுகொடுக்க வேண்டியிருக்கிறது. இப்பணிகளில் கிளைக்கு, குறிப்பாக கிளைச் செயலாளர்களுக்கு பெரும் பொறுப்பு உள்ளது."

-இம்முடிவு பெரும்பாலும் அமலாகவில்லை.

1192 மாநில அளவில் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் எடுக்கும் எல்லா முடிவுகளையும் ஈடுகொடுத்து அமலாக்கும் அளவிற்கு கிளைகள் இல்லை. இதற்கு பிரதானமான காரணம், கிளை செயல்பாட்டில் உள்ள குறைபாடுதான். ஓரளவிற்கு அரங்க கிளைகள் மாதமொருமுறை அல்லது தேவைப்படுகின்றபோது கூடுகின்றன. பெரும்பாலான கிளைகள் புதுப்பித்தலுக்காக கூடும் நிலையே இப்போதும் தொடர்கிறது. இதில் முறிப்பை உருவாக்கி கிளைகள் அனைத்தும் மாதம் ஒருமுறை கூடுவதை உத்தரவாதப்படுத்தினால் மட்டுமே கிளைகள் செயல்பாட்டில் முன்னேற்றம் ஏற்படும்.

கிளைச் செயலாளர்கள்

1193 கிளை செயல்பாட்டில் முக்கிய அம்சம் கிளைச் செயலாளர்களின் பங்கு. கிளை செயலாளர்களில் கணிசமான பகுதியினர் தங்களின் முக்கியமான பாத்திரத்தைப் போதுமான அளவிற்கு நிறைவேற்ற முடியவில்லை. இது குறித்து மேல்கமிட்டிகள் எடுத்த முயற்சியும் போதுமானதல்ல.

11.94 கட்சிக் கிளைகளில் ஏதாவது ஸ்தாபன பிரச்சனை ஏற்பட்டால், இணக்கமின்மை ஏற்பட்டால் உடனுக்குடன் இடைக்கமிட்டி தலையிடாதபோது கிளை ஸ்தம்பித்துவிடுகிறது.

11.95 சால்கியா பிளீனம் சுட்டிக்காட்டிய அடிப்படையில் கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை கூட்டி அதில் கிள்ளச் செயலாளர்களுக்கு அரசியல் மற்றும் ஸ்தாபன முடிவுகளை ரிப்போர்ட் செய்வதோடு கிளைகளின் செயல்பாடு பற்றியும் விளக்கி முன்னேற்றம் காண வேண்டியுள்ளது. நமது கட்சி அரசியலை கிளைகளுக்கு எடுத்துச்செல்லும் கருவியாக கிளைச் செயலாளர்கள் கூட்டத்தை பயன்படுத்த வேண்டும் என்ற முடிவு அமலாகவில்லை. தற்பொழுது பல மாவட்டங்களில் கிளைச் செயலாளர்கள் கூட்டம் முறையாக கூட்டப்படுவதில்லை. கூட்டினால் கிளைச்செயலாளர்கள் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் கலந்துகொள்ளும் பேரவையாக நடத்தப்படுகிறது. கிளைச் செயலாளர்கள் கூட்டத்தில் விளக்கவுரையாற்றுவதற்கான குறிப்பினை இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை மாநில செயற்குழு தயாரித்து அனுப்ப வேண்டும் என்ற முடிவு நிறைவேறவில்லை. எதிர்காலத்தில் ரிப்போர்ட் செய்வதற்கான குறிப்பை மாநில செயற்குழு தயாரித்து மாவட்டங்களுக்கு அனுப்ப வேண்டும்.

11.96 கட்சி உறுப்பினர்கள்

	பி.எம்.	சி.எம்.	மொத்தம்
1995	53,395	17,044	70,439
1996	57,062	17,674	74,736
1997	55,841	13,951	69,792

11.97 1995ம் ஆண்டைவிட 1996ல் 3297 கட்சி உறுப்பினர் எண்ணிக்கை உயர்ந்தது. 1997 புதுப்பித்தலில் 4944 குறைந்தது. கடந்த மூன்று ஆண்டுகளில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை 647 குறைந்துள்ளது. கடந்த காலங்களில் கட்சி உறுப்பினர்கள் புதுப்பித்தலிலும், சேர்ப்பதிலும் நாம் தாராளமாக இருந்திருக்கிறோம். மத்தியக்குழுவின் நெறிப்படுத்தும் இயக்க ஆவணத்தின்படி கீழ்க்கண்ட நான்கு முக்கிய அம்சங்களின் அடிப்படையில் இந்த ஆண்டு புதுப்பித்தல், சேர்த்தல் பணி நடைபெற வேண்டும் என மாநிலக்குழு முடிவு செய்தது.

11.98 கிளைக் கூட்டத்தில் கலந்து கொள்வது, லெவி முறையாக் செலுத்துவது, ஏதாவது ஒரு வர்க்க, வெகுஜன அமைப்புகளில்

உறுப்பினராக இருந்து செயல்படுவது, கட்சியின் அன்றாட இயக்கங்களில் பங்கேற்பது.

11.99 இந்த ஆண்டு ஓரளவிற்கு கட்சி உறுப்பினர்கள் புதுப்பித்தல், பதிவு முறையாக நடந்திருக்கிறது. ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் சேரும் துணைக்குழு உறுப்பினர்களை வளர்த்தெடுப்பதில் போதுமான முயற்சி இல்லாததாலும், பழைய உறுப்பினர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளித்து அவர்கள் விடுபடாமல் பாதுகாக்காததாலும் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை உயரவில்லை.

11.100 கட்சியின் மரியாதையும், செல்வாக்கும் அதிகரிக்கும் காலத்தில் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை உயராததற்கான காரணங்களை அறிந்து, கட்சியின் அனைத்து மட்டங்களிலும் இப்பணியில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

11.101 தஞ்சையில் நடைபெற்ற 14வது மாநில மாநாடு "கட்சி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பகுதி தோழர்கள்தான் கட்சி வேலைகளில் பங்கேற்கிறார்கள்" என்று சுட்டிக்காட்டியது. கடந்த ஆறு ஆண்டுகளில் இதில் போதுமான முன்னேற்றமில்லை. நெறிப்படுத்தும் ஆவணம் சுட்டிக்காட்டுவதுபோல் கட்சி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் வேலை கொடுத்து அந்த வேலையை அந்த உறுப்பினர் செய்கிறாரா என்று பரிசீலிக்காததால் பெரும்பான்மையான கட்சி உறுப்பினர்களையும், அமைப்புச் சட்டப்படியான கடமைகளையும், உரிமைகளையும் உணரவைத்து பணியில் இறக்கிவிடுவதன் மூலமே அவர்களின் பங்கேற்பை அதிகரிக்க முடியும்; தேக்கத்தையும் உடைக்க முடியும்.

11.102 கடந்த மாநில மாநாட்டிற்குப் பிறகு பெண்கள் கட்சி உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. பெண்களின் பங்கேற்பும் அதிகரித்துள்ளது. தாழ்த்தப்பட்ட மக்களை கட்சிக்குள் கொண்டு வருவதிலும் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. தொழிலாளர்களை கூடுதலாக கட்சிக்குள் கொண்டுவருவதற்கும், சிறுபான்மையோரை வென்றெடுப்பதற்கும் கூடுதல் முயற்சி தேவைப்படுகிறது.

கட்சி கட்டும் பணி

11.103 அகில இந்திய அளவிலும் மாநில அளவிலும் நமது கட்சியின் சுயேச்சையான அரசியல் அணுகுமுறையினால் கட்சியின் செல்வாக்கும் மரியாதையும் அதிகரித்துள்ளது. தமிழகத்தில் மனித உரிமைகளை பாதுகாக்க நமது கட்சி நடத்திய வீரம்மிக்க போராட்டத்தை பத்திரிக்கைகள் பாராட்டியுள்ளன. இவையனைத்தும் தமிழகத்தில் நமது கட்சியை விஸ்தரிக்க நல்ல வாய்ப்

பினை உருவாக்கியுள்ளது. இருப்பினும், இது கட்சி விஸ்தரிப்பில் பிரதிபலிக்காததற்கும் கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை உயராததற்கும், புதிய பகுதிகளுக்கு செல்ல இயலாததற்கும் என்ன காரணம் என்று இம்மாநாடு விவாதிக்க வேண்டும்.

11.104 கட்சி கட்டும் பணியில் அனைத்து மட்ட கமிட்டிகளுக்கும் பொறுப்பு உள்ளது. என்றாலும், மக்களோடு நெருக்கமாக உள்ள இடைக்கமிட்டிகளும், கிளைகளும்தான் இதில் கூடுதல் முன் முயற்சி எடுக்க வேண்டும். கட்சி விஸ்தரிப்பிற்கு தடையாக உள்ள அம்சங்கள் பற்றி 15வது கட்சி காங்கிரஸ் தீர்மானம் கீழ்க் கண்டவாறு கூறுகிறது:

"தத்துவார்த்த போராட்டங்களில் நாம் அடையும் வெற்றியைப் பொறுத்தே கட்சியின் எதிர்கால விஸ்தரிப்பு உள்ளது என்பதை கட்சி முழுமையும் உணர வேண்டும். இதற்கு கட்சி உறுப்பி னர்களின் அரசியல் ஸ்தாபன உணர்வை உயர்த்த வேண்டும்."

"கட்சி உறுப்பினர்களின் அரசியல் ஸ்தாபன உணர்வு குறைவாக இருப்பது, பல கிளைகளின் செயல்பாட்டில் உள்ள குறை பாடுகள் போன்றவை கட்சி விஸ்தரிப்பு முயற்சிகளுக்கு தடையாக உள்ளன."

11.105 வர்க்க, வெகுஜன அரங்கங்களின் வர்க்க போராட்டத்தையும் மற்றும் வெகுஜன போராட்டத்தையும் தொடர்ந்து நடத்துவது; இதன் மூலம் ஏற்படும் தொடர்பை வைத்து புதிய பகுதியினரை கட்சிக்குள்கொண்டுவருவது இடைவிடாது நடைபெற வேண்டும். இப்பணியை செய்யும் அளவிற்கு கட்சி உறுப்பினர்களின் அரசியல், தத்துவார்த்த, ஸ்தாபன உணர்வை உயர்த்துவது ஆகி யவை கட்சி முன் உள்ள இன்றைய உடனடி கடமையாகும். மொத் தத்தில் அன்றாட கட்சி வேலைகளில் கட்சி கட்டும் பணிக்கு முன்னுரிமை கொடுத்து கட்சி விஸ்தரிப்பிற்கு திட்டமிட வேண்டும்.

முழு நேர ஊழியர்கள்

11.106 முழுநேர ஊழியர்களுக்கு மாநிலக்குழு தீர்மானித்துள்ள ஊதியம் இன்னும் பல மாவட்டங்களில் வழங்கப்படவில்லை. ஊதியத்தை உத்தரவாதப்படுத்தும் அதே நேரத்தில் அவர்களு டைய வேலையையும் பரிசீலிக்க வேண்டும் என்று மாநிலக் குழுவில் முடிவு செய்தோம்.

11.107 ஓரர்ண்டிற்கு முன்பு மாநிலம் முழுவதும் முழு நேர ஊழி யர்களின் ஊதியம் பற்றியும், முழுநேர ஊழியர்களின் வேலை

பற்றியும் மாவட்டங்களில் இருந்து தகவல் சேகரித்து மாநிலக்குழு பரிசீலித்து கீழ்வரும் ஒரு ஊதிய கொள்கையை முடிவு செய்தோம்.

11.108 அனைத்து முழுநேர ஊழியர்களுக்கும் மாத அலவன்ஸ் ரூ. 1600 என நிச்சயிப்பது. திருமணமாகாத தோழர்களுக்கு ரூ. 1200 என நிச்சயிப்பது. திருமணமாகாத முழுநேர ஊழியர்களுக்கு குடும்ப பொறுப்பு இருக்குமானால் ரூ. 1600 வழங்கலாம்.

11.109 முழுநேர ஊழியர்கள் அனைவருக்கும் நகராட்சி பகுதிகளில் வீட்டு வாடகை அலவன்ஸ் ரூ. 400ம், மற்ற பகுதிகளில் ரூ. 200ம் கொடுப்பது, கடன் பெற்று வீடு கட்டியுள்ள ஊழியர்களுக்கு மேற் காணும் வீட்டு வாடகை அலவன்ஸை வழங்க வேண்டும். சொந்த வீடு வைத்துள்ள ஊழியர்களுக்கு நகராட்சிப் பகுதிகளில் ரூ. 200ம், பிற பகுதிகளில் ரூ. 100ம் கொடுக்க வேண்டும்.

11.110 முழு நேர ஊழியர்களின் குழந்தைகளுக்கு கல்வி உதவித் தொகையாக மாதம் ஒன்றுக்கு 8ம் வகுப்பு வரை ரூ. 100ம், 8ம் வகுப்புக்கு மேல் கல்லூரி படிப்பு வரை ரூ. 200ம் வழங்கலாம். ஒரு முழு நேர ஊழியர் குடும்பத்தில் 2 குழந்தைகளுக்கு இந்த உதவித் தொகை வழங்குவது. இம்முடிவு குடும்பக்கட்டுப்பாடு குறித்து அரசு கூறும்கருத்தினை ஒட்டி எடுக்கப்பட்டதல்ல. கட்சியின் நிதியாதாரத்தை கவனத்தில் கொண்டு இரு குழந்தைகள் என்ற எண்ணிக்கை நிச்சயிக்கப்பட்டுள்ளது.

11.111 ஆண்டுக்கு ஒருமுறை மாத அலவன்ஸ் தொகையை துணி அல வன்ஸாக வழங்குவது.

11.112 மனைவியும், கணவரும் முழு நேர ஊழியர்களாக பணியாற் றினால் இருவருக்கும் முழு அலவன்ஸ் கிடைக்க ஏற்பாடு செய் வது. ஆனால் வீட்டுவாடகை அலவன்ஸ், கல்வி உதவித் தொகை ஒருவருக்கு மட்டுமே வழங்கப்படும்.

11.113 முழு நேர ஊழியர்களது அலவன்ஸ் மாவட்டங்களில் மையப் படுத்திக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும். தற்போது பாதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் மையப்படுத்தப்பட்டு அலவன்ஸ் வழங்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களிலும் அம்முறையை அம லுக்கு கொண்டுவர கவனம் செலுத்த வேண்டும்.

11.114 ஒரு தோழரை முழு நேர ஊழியராக்கும்போது மாநில செயற் குழுவின் அங்கீகாரம் பெற வேண்டும். அப்படி முழுநேர ஊழி யரை எடுக்கும்போது அவர் ஓர் ஆண்டு காலம் பயிற்சி பெறுபவ ராக நிர்ணயிப்பது; ஓராண்டுக்குப்பின் பரிசீலனை செய்து அதன் பின்னரே முழுநேர ஊழியராக அங்கீகரிக்க வேண்டும். அவருக்கு

பயிற்சி காலத்தில் முழுநேர ஊழியருக்கான அலவன்ஸ் வழங்கப்பட வேண்டும்.

11.115 மாவட்டக்குழுக்கள் முழுநேர ஊழியர்களது தகுதி பரிசீலனையை 6 மாத காலத்திற்குள் முடித்து முழுநேர ஊழியர்களது பட்டியலை மாநிலக்குழுவிற்கு அனுப்பி வைத்திட வேண்டும்.

11.116 காலம் தாழ்த்தாமல் இந்த ஊதியத்தை வழங்க மாவட்டக் குழுக்கள், அரங்கங்கள் முயற்சி எடுக்க வேண்டும். தொடர்ந்து கவனித்து மாவட்டக்குழுக்களுக்கு வழிகாட்ட வேண்டிய பொறுப்பு மாநில குழுவிற்கு உள்ளது.

11.117 முழுநேர ஊழியர்கள் வேலை பற்றி சில மாவட்டங்களில் முழுநேர ஊழியர்கள் கூட்டம் நடத்தி பரிசீலனை செய்யப்பட்டுள்ளது. எல்லா மாவட்டங்களிலும், அரங்கங்களிலும் பணியாற்றும் முழுநேர ஊழியர்களின் வேலையை பரிசீலிக்க மாவட்டக்குழுக்கள் திட்டமிட வேண்டியுள்ளது. முழுநேர ஊழியர்கள் அரசியலாக வளரவும் கட்சி உதவி செய்ய வேண்டும். இதில் முழுநேர ஊழியர்களின் சுயமுயற்சியும் முக்கியமானது.

நெறிப்படுத்தும் இயக்கம்

11.118 மத்தியக்குழுவின் நெறிப்படுத்தும் இயக்க ஆவணத்தின் அடிப்படையில் தமிழகத்தின் நிலைமைக்கேற்ப நெறிப்படுத்தும் இயக்க ஆவணத்தை மாநிலக்குழுவில் இறுதிப்படுத்தினோம். அதனடிப்படையில் மாவட்டங்களில் கட்சி அணிகளுக்கு ரிப்போர்ட் செய்தோம். அனைத்து மாவட்டக்குழுக்களிலும், மாவட்டத்தில் நெறிப்படுத்தும் இயக்கத்தை அமலாக்குவது குறித்தும் விவாதித்து மாவட்ட ஆவணங்கள் இறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

11.119 கட்சிக்குள் உருவாகியுள்ள அந்நிய வர்க்க கருத்துக்களைக் களைந்து கட்சியின் புரட்சிகரத் தன்மையைப் பாதுகாத்து, பலப்படுத்தி கட்சிக்கு புதுத்தெம்பூட்டுவதே நெறிப்படுத்தும் இயக்கத்தின் நோக்கம்.

11.120 மத்தியக்குழுவின் நெறிப்படுத்தும் இயக்க ஆவணத்தை தமிழ்நாட்டுக்கு பொருத்திப் பார்த்து தமிழ்நாட்டில் கட்சியில் உருவாகியுள்ள தவறான போக்குகளை கண்டறிந்து அவைகளை போக்குவதற்கான வழிகாணும் வகையில் மாநிலக்குழு ஒரு ஆவணம் தயாரித்து கட்சிக்கடிதமாக வெளியிட்டதோடு, மாநிலம் முழுவதும் இதில் உள்ள முக்கிய அம்சங்களை ரிப்போர்ட் செய்திருக்கிறோம். மத்தியக்குழு மற்றும் மாநிலக்குழு ஆவணங்களின் அடிப்படை

யில் மாவட்டக்குழுக்கள் விவாதித்து இறுதிப்படுத்தியிருப்பது கட்சி அணிகள் மத்தியில் நல்ல நம்பிக்கையை உருவாக்கியுள்ளது.

மாநிலக்குழு ஆவணத்தில் உள்ள முக்கிய அம்சங்கள்

11.121 வகுப்புவாத சக்திகளை எதிர்த்து உறுதியாக இயக்கம் நடத்த வேண்டும். இந்து மத அடிப்படைவாதத்திற்கு எதிராக பிரச்சாரம் செய்கிறபோது, இந்து மதத்திற்கு எதிராகவோ, இந்து மக்களுக்கு எதிராகவோ நாம் செயல்படுவதாக அபிப்பிராயம் உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சிறுபான்மை முஸ்லிம் பழமைவாதமும் சமீபத்தில் தன்னுடைய செயல்பாடுகளை அதிகரித்துள்ளது. இந்த போக்கினை எதிர்த்தும் நாம் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

11.122 தமிழகத்தில் 50 ஆண்டுகால சுதந்திரத்திற்குப் பிறகும் தீண்டாமை கொடுமை பல வடிவங்களில் நீடித்து வருகிறது. தீண்டாமை கொடுமை நீடிப்பதுதான் ஜாதிய மோதலுக்கு அடிப்படை காரணம். “தீண்டாமைக்கொடுமையை ஒழிப்போம், ஜாதி மோதலை தடுப்போம், மக்கள் ஒற்றுமையைப் பாதுகாப்போம்”என்ற கோஷத்தை கட்சி முன்வைத்தது. தீண்டாமை கொடுமையை எதிர்த்து போராடுகின்றபோது கட்சிக்குள்ளும் அப்படிப்பட்ட வேறுபாடு இருக்கக்கூடாது.

11.123 தமிழகத்தில் பெரியாருக்குப் பிறகு திராவிடக் கட்சிகள் தீண்டாமைக் கொடுமை எதிர்ப்பினை கைவிட்டுவிட்டன. கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கு தீண்டாமை கொடுமையை எதிர்த்து இயக்கம் நடத்திய பாரம்பரியம் உண்டு. தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துக்கொண்டே மறுபக்கம் வர்க்க கோரிக்கைகளின் அடிப்படையில் இரண்டு பகுதி மக்கள் (தாழ்த்தப்பட்ட மற்றும் இதர பிற்படுத்தப்பட்ட உழைப்பாளிகள்) மத்தியிலும் நாம் ஒற்றுமையை உருவாக்க முயற்சிக்க வேண்டும்.

11.124 தமிழகத்தில் தீண்டாமை ஒழிப்பு மாநாடு நடத்தி மாநிலம் முழுவதும் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்து போராடுவது.

11.125 தமிழகத்தில் தமிழ் மொழி, இனம், கலாச்சாரம், மாநில சுயாட்சி போன்ற பிரச்சனைகளில் திராவிட இயக்கங்கள் இனவாத அடிப்படையில் ஒரு திருகலை மேற்கொள்கின்றன என்பதை நாம் கவனத்தில் வைத்துக்கொண்டு அப்பிரச்சனைகளில் நமது சரியான அணுகுமுறையை முன்னெடுத்துச்செல்ல வேண்டும்.

11.126 பிராந்திய முதலாளித்துவ கட்சிகளுடன் தேர்தல் உடன்பாடு, கூட்டு இயக்கம் நடத்தக்கூடிய அதேநேரத்தில், அரசியல் மற்றும் பல்வேறு பிரச்சனைகளில் மற்ற முதலாளித்துவ கட்சிகளிட

மிருந்து நம்மை வேறுபடுத்திக்காட்டும் சுயேச்சையான இயக்கத்தை வலுவாக நடத்தி நமது தனித்தன்மையைப் பாதுகாக்க வேண்டும்.

11.127 தேர்தலின்போது தமிழகத்தில் நாடாளுமன்ற சந்தர்ப்பவாதம் ஆங்காங்கு சில இடங்களில் தலைதூக்கியதை கடந்த தேர்தல் காலத்தில் பார்க்க முடிந்தது.

11.128 கடந்த பொதுத்தேர்தலின்போது வேட்பாளர் தேர்வு மற்றும் போட்டியிடும் தொகுதிகளை தேர்வு செய்வதிலும் இப்போக்கு சில மாவட்டங்களில் தலைதூக்கியது என்பதை பரிசீலித்து இப்படிப்பட்ட தவறான போக்குகளை எதிர்காலத்தில் களைய வேண்டும்.

11.129 கடந்த காலங்களில் வெற்றி பெற்ற மற்றும் போட்டியிட்ட தொகுதிகளில் கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளைக் கட்டி வளர்க்க போதுமான அளவு முயற்சிக்கவில்லை.

11.130 சட்டமன்ற, நாடாளுமன்ற, உள்ளாட்சி மன்றங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் தோழர்களுக்கு பயிற்சி அளித்து கட்சியைக் கட்டும் பணிக்கு உள்ள முக்கியத்துவத்தை உணர்த்தி அவர்களை செயல்பட வைக்க வேண்டும்.

11.131 கட்சிக்குள்ளும் கட்சித் தலைமை தாங்கும் வெகுஜன அமைப்புக்குள்ளும் கோஷ்டிகள் சேர்க்கும் போக்கு ஒரு சில மாவட்டங்களில் காணப்பட்டது. இத்தவறான போக்குகளை களைய வேண்டும்.

11.132 கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளில் வரவு - செலவு கணக்கு முறையாக பராமரிக்கப்பட வேண்டும். சம்பந்தப்பட்ட கமிட்டிகளில் வரவு - செலவு கணக்கு வைத்து பரிசீலித்து அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆண்டுதோறும் உள்தணிக்கைக்குழு வரவு - செலவு கணக்குகளை தணிக்கை செய்ய வேண்டும்.

11.133 முழுநேர ஊழியர்களின் ஊதியம், அவர்களின் செயல்பாடு குறித்து மாநிலக்குழு பரிசீலிக்க வேண்டும் (முழுநேர ஊழியர்கள் பற்றி தனித் தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது).

11.134 கட்சி உறுப்பினர்கள் மற்றும் கிளைச் செயலாளர்களின் செயல்பாடு குறித்தும், கிளை செயல்பாடு குறித்தும் விவாதித்து செயல்பாட்டில் முன்னேற்றம் காண வேண்டும். உறுப்பினர் பதிவு குறித்து கட்சியின் விதிகளை கறாராக அமலப்படுத்துவதுடன் உறுப்பினர் சேர்ப்பு பணியை உரிய காலத்தில் முடிக்க வேண்டும். மாதாமாதம் லெவி வசூல் செய்வதில் கவனம் செலுத்த வேண்டும்.

11.135 பரவலாக வெகுஜனங்களிடம் சென்று நிதி வசூல் செய்யும் முறையையே முக்கியமாக கடைப்பிடிக்க வேண்டும். அதோடு வர்த்தகர்கள், பிரமுகர்களிடமும் நிதி வசூலிக்கலாம்.

11.136 மூடப்பழக்க வழக்கங்களுக்கும், பத்தாம்பசலித்தனமான மத, ஜாதிய நடைமுறைகளுக்கும் எதிராக கட்சித் தோழர்கள் பிரச்சாரம் செய்வதோடல்லாமல் தங்களின் சொந்த வாழ்க்கையிலும் அமல்படுத்த வேண்டும். முதற்கட்டமாக, மத, ஜாதிய ரீதியிலான சடங்குகளை மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் வரை நடத்தக் கூடாது என்பதை கறாராக அமல்படுத்திட வேண்டும். கீழே உள்ள அணிகளிடம் இப்படிப்பட்ட சடங்குகளை தவிர்க்க வேண்டுமென்று பிரச்சாரம் செய்து இவற்றைத் தவிர்க்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

11.137 கட்சிக்குள் ஏற்படுகிற ஆணாதிக்கப் போக்குகளுக்கு எதிராக கருத்து பிரச்சாரம் எல்லா மாவட்டங்களிலும் எடுத்துச் செல்லப் பட வேண்டும்.

11.138 நமது ஊழியர்களை அரசியல் ரீதியில், தத்துவார்த்த ரீதியில் வளர்த்தெடுப்பதில் ஒரு முக்கியமான பகுதி கட்சிக் கல்வியாகும். புதிய உறுப்பினர்களை பயிற்றுவிக்கவும், பழைய தோழர்களுக்கு மறுபயிற்சி அளிக்கவும் தமிழகத்தில் கட்சி கல்விக்கு திட்டமிட வேண்டியுள்ளது.

11.139 அரசியல் கல்வி என்பது வகுப்புடன் நின்றுவிடக்கூடாது. சுயகல்வி, விவாதங்களில் பங்குபெறுவது, பேரவைக் கூட்டங்களிலும், பொதுக்கூட்டங்களிலும் பங்கேற்பது, பிரச்சாரம் மற்றும் இயக்கங்களில் பங்கேற்பது என்பதும் கட்சிக் கல்விக்குள் அடங்கும் என்று கட்சியின் மத்தியக்குழுவின் ஆவணம் வலியுறுத்தியுள்ளது. இதை நடைமுறைப்படுத்த வேண்டும்.

11.140 தமிழகத்தில் நமது அரசியலை கட்சி அணிகளிடமும், மக்களிடமும் எடுத்துச்செல்ல தீக்கதிர் நாளிதழ் பங்காற்றி வருகிறது. தீக்கதிர் விற்பனையை அதிகப்படுத்துவது.

11.141 செம்மலர், மார்க்சிஸ்ட் ஆகிய இலக்கிய, தத்துவார்த்த மாத இதழ்களை சிறப்பாக நடத்துவதோடு விற்பனையை அதிகப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

11.142 கட்சி பிரசுரங்களை அதிக அளவில் வெளியிடுவதற்கும் விற்பனை செய்வதற்கும் திட்டமிட வேண்டும்.

11.143 “வெகுஜன அமைப்புகள்” பற்றிய கட்சியின் 1980ம் ஆண்டின் மத்தியக்குழுவின் ஆவணத்தின்படி வெகுஜன அமைப்புகளுக்கு வழிகாட்ட வேண்டும்.

11.144 கட்சியின் எல்லா மட்டத்திலும் கூட்டு செயல்பாட்டை உத்தரவாதப்படுத்துவதற்கும், தன்னிச்சைப் போக்கை களைவதற்குமான முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும். கூட்டுத் தலைமையும், தனிப்பொறுப்பும் அமலாக்கப்பட வேணடும். ஜனநாயக மத்தியத்துவம் என்ற ஸ்தாபன கோட்பாட்டை அமலாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

11.145 உபகுழுக்கள், பிராக்ஷன்கள் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடி விவாதிப்பதை உத்தரவாதப்படுத்த வேண்டும். இவை சம்பந்தப்பட்ட அரங்கங்களில் கட்சியைக் கட்டுவதற்கான நடவடிக்கைக்கு திட்டமிடவும் அவ்வரங்கில் கட்சிக் கொள்கையினைக் கொண்டு செல்ல திட்டமிடவுமான பணியை மேற்கொள்ள வேண்டும்.

11.146 தமிழகத்தில் கட்சியின் நெறிப்படுத்தும் இயக்க ஆவணத்தில் முக்கிய அம்சங்கள் மேலே விளக்கப்பட்டுள்ளன.

11.147 நெறிப்படுத்தும் இயக்கத்தின் ஒரு பகுதியாக கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகளின் மாவட்டக்குழு உறுப்பினர்கள் வரையிலும், சட்டமன்றத்திலும், உள்ளாட்சி அமைப்புகளிலும் தேர்ந்தெடுக்கப்பட்ட கட்சி பிரதிநிதிகளும் கட்சி புதுப்பித்தலின் போது வருமானம், சொத்து கணக்கை அளிக்க வேண்டுமென்று மத்தியக்குழு முடிவு செய்துள்ளது. இம்முடிவு நமது கட்சியின் மரியாதையை உயர்த்தியுள்ளது. இதை அமலாக்க நாம் ஏற்பாடு செய்யு வேண்டும்.

கம்யூனிச நெறி

1.148 சமீப காலத்தில் கட்சியின் பல மட்டத்தில் பொறுப்பில் உள்ள சில தோழர்கள் மீது பல காரணங்களுக்காக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. வரவு - செலவு கணக்கில் முறைகேடு, தனிப்பட்ட முறையில் ஒழுக்கக்கேடு, கோஷ்டிபூசல் போன்ற தவறான போக்குகளில் ஈடுபட்ட தோழர்கள் மீது கட்சி நடவடிக்கை எடுத்திருக்கிறது.

11.149 மேற்கண்ட தவறுக்காக இரண்டு மாநிலக்குழு உறுப்பினர்கள் மீதும் சில மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பல மாவட்ட தோழர்கள் மீதும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

11.150 இப்படிப்பட்ட பிரச்சனைகளில் கட்சி கறாராக முடிவெடுக்க வேண்டுமென்று மத்தியக்குழு நிறைவேற்றிய நெறிப்படுத்தும் ஆவணம் குறிப்பிட்டுள்ளது.

11.151 புதிய பொருளாதாரக்கொள்கை உருவாக்கி உள்ள நுகர்வு கலாச்சாரம் கட்சி அணிகளையும் பாதிக்கும் என மத்தியக்குழு வின் நெறிப்படுத்தும் ஆவணம் சுட்டிக்காட்டியுள்ளது. மேற் கண்ட தவறான போக்கு கட்சி அணிகளுக்கு வராமல் தடுப்பதும், தவறான போக்குகள் உருவானால் கட்சி உறுதியாக தலையிடு வதும் அவசியமானது.

கட்சியும் வெகுஜன அமைப்புகளும்

11.152 "வெகுஜன அரங்கங்கள் பற்றி" என்ற மத்தியக்குழு ஆவணத் தின் அடிப்படையில் தமிழகத்தில் நமது செயல்பாடு உள்ளதா என்பதை பரிசீலித்து கடந்த மாநாடு இப்பிரச்சனை குறித்து கீழ்க் கண்டவாறு மதிப்பீடு செய்தது.

"நமது மாநிலத்திலும் இருவகை திரிபுகளும் உண்டு.

எனினும், முதல் வகை திரிபு - அதாவது வெகுஜன ஸ்தாபனங்கள் கட்சியின் உப அமைப்பாக கருதி செயல்படும் போக்கு மேலோங்கியுள்ளது."

11.153 மேற்கண்ட மதிப்பீட்டின் அடிப்படையில் இரண்டு திரிபு களையும் களைய போதுமான முயற்சி எடுக்கப்படவில்லை. கட் சியை கலந்தோலோசிக்காமல் தன்னிச்சையாக செயல்படுவது மற்றும் வெகுஜன அமைப்புகளை கட்சியின் துணை அமைப்புகள் போல் நடத்துவது ஆகிய இரண்டு திரிபுகளையும் களைய ஒவ் வொரு வெகுஜன அமைப்பின் மாநில உபக்குழு மற்றும் மாநில பிராக்ஷனிடம் இருந்து அறிக்கை பெற்று மாநிலக்குழுவில் விவாதித்து அரங்கங்களுக்கும், மாவட்டக்குழுக்களுக்கும் வழி காட்ட வேண்டியுள்ளது.

வரவு - செலவு கணக்கு

11.154 கட்சியின் ஒவ்வொரு மாநிலக்குழு கூட்டத்திலும் வரவு - செலவு கணக்கு பரிசீலனைக்கு வைக்கப்படுகிறது. ஆண்டுக்கு ஒரு முறை கட்சியின் மாநில தணிக்கைக்குழு மாநிலக்குழு வரவு - செலவு கணக்கை தணிக்கை செய்து அறிக்கை அளிக்கிறது. அந்த பரிந்துரைகளை மாநில செயற்குழு விவாதித்து அமலாக்கி வரு கிறது. குறிப்பாக, கணக்காளர், காசாளர் ஆகிய இரண்டு பணி யையும் ஒருவரே செய்யக்கூடாது என்ற தணிக்கைக்குழுவின் பரிந்

துறையின் அடிப்படையில் மாநில மையத்தில் தனித்தனி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

11.155 மத்தியக்குழுவின் முடிவிற்கிணங்க ஆண்டுதோறும் மாவட்டக்குழுக்களின் கணக்கு உள்ளிட்ட மாநிலக்குழு வரவு - செலவு கணக்கை மத்தியக்குழுவிற்கு அனுப்பி வருகிறோம்.

11.156 மத்தியக்குழுவின் முடிவின் அடிப்படையில் மாவட்டங்களில் வரவு - செலவு கணக்கு பராமரிக்க வேண்டுமென்பதற்காக மாவட்டச் செயலாளர், வரவு - செலவு கணக்கு பராமரிப்பாளர் கூட்டத்தை மாநில அளவில் கூட்டி வழிகாட்டுதல் அளித்திருக்கிறோம்.

11.157 இன்னும் சில மாவட்டங்களில் வரவு - செலவு கணக்கு பராமரிக்க சரியான முறை கடைப்பிடிக்கப்படவில்லை. கட்சி மற்றும் வெகுஜன அமைப்புகள் எவ்வாறு வரவு - செலவு கணக்கு பராமரிக்க வேண்டுமென்று மாநில தணிக்கைக்குழு அளித்த அறிக்கையை பரிசீலித்து அதன் மீது கருத்துகூற மாவட்டங்களுக்கு அனுப்பியிருக்கிறோம்.

